https://telegram.me/aedahamlibrary

சிக்கலான நூற்கண்டு

கருஞ்சிவப்பில் ஒரு புலனாய்வு

சர் ஆர்தர்
இக்னேஷியஸ் கோனாண்டைல்

ஷெர்லக் ஹோம்ஸ் அறிமுகமான முதல் துப்பறியும் நாவல்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சிக்கலான நூற்கண்டு

கருஞ்சிவப்பில் ஒரு புலனாய்வு

சர் ஆர்தர் இக்னேஷியஸ் கோனான்டைல்
தமிழில்
சிவ முருகேசன்

சந்தியா பதிப்பகம்
சென்னை -83

https://telegram.me/aedahamlibrary

உள்ளே...

ஷெர்லக்ஹோம்ஸ்: துப்பறியும் இலக்கியத்தின் நுழைவு வாயில்
சர் ஆர்தர் இக்னேஷியஸ் கோனான்டைல்
ஒரு சிவப்பு நிறத் தேடல்
பாகம் 1
உய்த்துணர்தல் என்னும் விஞ்ஞானம்
லாரிஸ்ட்டன் தோட்டத்தின் மர்மம்
காவலர் ஜான் ரான்ஸ் சொல்லப் போவது என்ன?
விளம்பரத்தால் வந்த பார்வையாளர்
டோபியாஸ் கிரக்சன் 'தன்னால் என்ன முடியும்' என்று காட்டுகிறார்:
இருளில் ஓர் ஒளி
ஒரு சிவப்பு நிறத் தேடல்
பகுதி - 2
துறவிகளின் நாடு மாபெரும் உவர் நிலப் பரப்பு
உட்டாவின் மலர்
ஜான் ஃபெர்ரியர் புனிதருடன் பேசுகிறான்
உயிருக்கு பயந்து ஓட்டம்
பழிவாங்கும் தேவதைகள்
ஜான் வாட்சன், M.D. அவர்களின் நினைவுக் குறிப்பிலிருந்து
முடிவு

https://telegram.me/aedahamlibrary

ஷெர்லக்ஹோம்ஸ்:
துப்பறியும் இலக்கியத்தின் நுழைவு வாயில்

துப்பறியும் கதை என்றாலே 'ஷெர்லக் ஹோம்ஸ்' தான் நமக்கு நினைவுக்கு வரும். இந்தக் கதாபாத்திரம் அறிமுகமான நாவல்தான் A Study in Scarlet என்ற சர் ஆர்தர் இக்னேஷியஸ் கோனான்டைல் எழுதிய நாவல். அதுவே அவரது முதல் துப்பறியும் கதை. இந்த நாவலுக்கு அவர் வைத்த முதல் பெயர் A Tangled Skein '. இந்த நாவல் முதலில் 'பீட்டன்ஸ் கிறிஸ்மஸ் ஆண்டு இதழ்' என்ற இதழிலும் பிறகு 1888இல் நூலாகவும் வெளிவந்தது. துப்பறியும் நாவலில் பூதக்கண்ணாடி இடம்பெற்றதும் இந்த நாவலில் தான். இந்த நாவலே 'சிக்கலான நூற்கண்டு' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு சந்தியா பதிப்பகம் மூலம் வெளிவருகிறது.

இலக்கிய உலகில் இரண்டு மருத்துவர்கள் எழுத்தாளர்களாகி உலகப் புகழ்பெற்றார்கள். ஒருவர் ரஷ்யாவின் ஆண்டன் செகாவ்; சிறுகதைகளாலும் நாடகங்களாலும் அறியப்பட்டவர். இன்னொருவர் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த கோனான்டைல்; துப்பறியும் இலக்கியத்தின் முன்னோடி.

கோனான்டைல் ஸ்காட்லாந்தின் எடின்பர்க் நகரில் 1859ஆம் ஆண்டில் பிறந்தவர். 'எடின்பர்க்'கை எடின்பரோ என்று உச்சரிப்பார்கள் ஆங்கிலேயர்கள். எடின்பரோ நகரமே ஒரு மர்ம பிரதேசம் போலத்தான் தோற்றமளிக்கும். கோட்டை கொத்தளங்களும் பழைய சிறைச்சாலைகளும் நிறைந்த ஊர் எடின்பர்க். மாயா ஜாலங்கள் நிறைந்த 'ஹாரி பாட்டர்' படைப்புகளை இந்த நகரத்தில்தான் உருவாக்கினார் ஜே கே ரௌலிங். 'அவர் எங்கள் உணவகத்தில் அமர்ந்துதான் தனது நூல்களை எழுதினார்' என்று அறிவித்து ஓர் உணவகம் எடின்பர்க் சுற்றுலா பயணிகளை வசப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆங்கில நாவலாசிரியர் சர் வால்டர் ஸ்காட் ஊரும்

https://telegram.me/aedahamlibrary

இதுவே. பொதுவாக இங்கிலாந்துக்காரர்களுக்கு ஸ்காட்லாந்துக்காரர்களை பிடிக்காது. அந்தஸ்தில் ஸ்காட்லாந்து தரம் தாழ்ந்தது. ஆனால் இலக்கியத்தில் ஸ்காட்லாந்துக்காரர்கள் கொடிகட்டி பறக்கிறார்கள்.

1876ஆம் ஆண்டு எடின்பர்க் பல்கலைக் கழக மருத்துவப் பள்ளியில் சேர்ந்து கோனான்டைல் மருத்துவம் பயின்றார். செகாவ் போலவே படிக்கும்போதே கதைகள் எழுதத் தொடங்கினார். 'சாசசா பள்ளத்தாக்கின் மர்மங்கள் (1879) என்பது அவர் எழுதிய முதல் நாவல். அது ஒரு பேய்க்கதை. 'ஓர் அமெரிக்கனின் கதை' என்ற அவரது இரண்டாவது நாவல் 1880ஆம் ஆண்டு வெளியானது.

1881இல் மருத்துவப் பட்டம் பெற்று கோனான்டைல் ஆப்ரிகாவுக்குச் செல்லும் கப்பலில் மருத்துவராகச் சேர்ந்தார். 1885இல் எம்டி பட்டம் பெற்றார். தன்னிடம் சிகிச்சை பெற்ற நோயாளியின் தங்கையை மணந்து கொண்டார். 1886ஆம் ஆண்டு 'சிக்கலான நூற்கண்டு' வெளியானது. இதைத் தொடர்ந்து 'Sign of Four ' நாவல் பிரசுரமானது. பிறகு 'The Adventures oof Sherlock Homes ' சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டார். பிறகு வியன்னா சென்று கண் மருத்துவத்தில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று லண்டனுக்கு வந்து பணியாற்றினார்.

கோனான்டைல் பல சரித்திரக் கதைகளும் எழுதியுள்ளார். 'பாஸ்கர் வில்லிஸின் 'வேட்டை நாய்' இவரது மூன்றாவது நாவல். இதைத் தொடர்ந்து 1905இல் The Valley of Fear என்ற நாவல் வெளிவந்தது. இவர் பல நாடகங்களும் எழுதியுள்ளார்.

துப்பறியும் நாவல் கலையில் மன்னனாகப் புகழ்பெற்ற கோனான்டைல் உளவியல் ஆய்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தனது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் இறையுணர்வுல் திளைத்து ஆன்மிக நூல்களை எழுதிக் குவித்தார். விதி யாரை எங்கு சேர்க்கும் என்பதை படைத்தவன் மட்டுமே அறிவான். படைப்பாளியும் விதிவிலக்கல்ல. தனது 71ஆவது வயதில் 1930ஆம்

https://telegram.me/aedahamlibrary

ஆண்டில் மாரடைப்பால் உயிர் துறந்தார் கோனான்டைல். இவர் படைத்த ஷெர்லக் ஹோம்ஸ் மட்டும் உயிர்ப்போடு வாழ்கிறார்.

ஷெர்லக் ஹோம்ஸின் நாவல்கள் அனைத்தையும் பேரா. சிவ முருகேசன் தமிழில் மொழிபெயர்த்து வருகிறார். விரைவில் வெளிவரும்.

சந்தியா நடராஜன்
12, அக்டோபர் 2020

###

https://telegram.me/aedahamlibrary

சர் ஆர்தர் இக்னேஷியஸ் கோனான்டைல்

சர் ஆர்தர் இக்னேஷியஸ் கோனான்டைல், ஒருதிறமை மிக்கக் கதைசொல்லி. ஸ்காட்லாந்தின், எடின்பர்க் நகரில் மே மாதர் 1859&ஆம் ஆண்டில் பிறந்த இவர் 1868-ல் தனது 9-வது வயதில் ஏசு சபையினரால் நடத்தப்படும் மாணவர்களை அடுத்த நிலைக்குத் தயார் செய்யும் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அந்த இடம் ஸ்டோனிஹர்ட்ஸ் என்ற ஊரில் இருந்தது. பின் அதே ஊரிலுள்ள ஸ்டோனி ஹர்ட்ஸ் கல்லூரியில் சேர்ந்து 1875-வரைத் தன் கல்லூரிக் கல்வியைத் தொடர்ந்தார்.

அதன்பின் 1876-ஆம் ஆண்டில் எடின்பர்க் பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியில் சேர்ந்து மருத்துவம் பயின்றார். மருத்துவம் பயிலும்போதே கதைகள் எழுதத் தொடங்கினார். “சா சசா பள்ளத்தாக்கின் மர்மங்கள்’’ (The Mystery of Sasassa Velley) என்பதுதான் அவர் எழுதிய முதல் புதினம். ‘சேம்பர்ஸ் எடின்பர்க் சஞ்சிகையில்’ 1879&ல் அவர் எழுதிய புதினம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தெற்கு ஆப்பிரிக்கப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த, ஒளிரும் கண்களையுடைய ஒரு பேயின் கதைதான் ‘சாசசா பள்ளத்தாக்கின் மர்மங்கள்’ என்ற அவருடைய முதல் புதினம். அவர் எழுதிய இரண்டாவது கதை “ஓர் அமெரிக்கனின் கதை” என்பது. இக்கதையை லண்டன் சொசைட்டி 1880&ஆம் ஆண்டு வெளியிட்டது.

1881ஆம் ஆண்டு மருத்துவப்பட்டம் பெற்ற கோனான் டைல் ஆப்பிரிக்க மேற்குக் கடற்கரையோரம் பயணம் மேற்கொள்ளும் ‘மாயும்பா’ என்ற கப்பலில் மருத்துவராக நியமிக்கப்பட்டார். 1885ஆம் ஆண்டில் எம்.டி பட்டம் பெற்ற கோனான்டைல் தன்னிடம் சிகிச்சைபெற்ற ஒரு நோயாளியின் சகோதரியை மணந்து கொண்டார். அதற்கு அடுத்த ஆண்டில் ‘ A study in scarlet’ (ஒரு சிவப்பு நிறத் தேடல்) என்ற கதை வெளி வந்தது. அந்தக் கதையில்தான்

https://telegram.me/aedahamlibrary

“ஷெர்லக் ஹோம்ஸ்” என்ற பாத்திரத்தையும், அவருடைய உதவியாளரான ‘வாட்சன்’ என்ற பாத்திரத்தையும் முதன் முதலாக அறிமுகம் செய்தார். அந்தக் கதை தான் அவர் எழுதிய முதல் துப்பறியும் கதை. அந்தக் கதையில் தான் பூதக் கண்ணாடி ஒரு துப்பறியும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது, ‘ ‘A study in scarlet’’ என்பதற்கு கோனான்டைல் வைத்த பெயர் ‘A Tangled Skein’ என்பதாகும். (சிக்கல் விழுந்த நூற்கண்டு) அந்தக் கதை 1887&ல் ‘Beeton’s Christmas Annual’ என்ற ward lock & co பிரசுரித்த சஞ்சிகையில் வெளிவந்தது. 1888&ல் அந்தக் கதை புத்தகமாக வெளியிடப்பட்டது.

‘A study in scarlet’&ஐத் தொடர்ந்து The ‘Sign of Four’ (1890) வெளிவந்தது. அதைப் பிரசுரம் செய்தவர்கள் Lippincott’s Monthly Magazine என்ற சஞ்சிகையை நடத்துபவர்கள். ஷெர்லக்ஹோம்ஸ் இந்தக் கதையில் இரண்டாவது முறையா இடம்பெறுகிறார். ‘Sign of four’ & என்ற கதையைத் தொடர்ந்து “The Adventures of Sherlock..mes’ -&- என்ற நூல் வெளிவந்தது. இது ஒரு சிறுகதைத் தொகுப்பு. வாட்சன் என்ற கதாபாத்திரம் நேரில் கதை சொல்வதுபோல் அனைத்துக் கதைகளும் அமைந்துள்ளன. தன்மை, முன்நிலை, படக்கை என்ற முறைகளுள் தன்மையைப் பயன்படுத்தி கதை எழுதுகிறார் கோனான்டைல். அதிக அளவில் பயன்படுத்தப்பட்ட கதா&’பாத்திரம் என்று ‘ஷெர்லக்ஹோம்ஸ்’ கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார்.

வியன்னா சென்று கண் மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்ற கோனான்டைல் 1890ல் ஒரு கண் மருத்துவராக லண்டன் நகரில் பணியாற்றினார். 1888-லிருந்து 1906ஆம் ஆண்டு வரை பல சரித்திரக் கதைகளையும் கோனான்டைல் எழுதியுள்ளார். பல விமர்சகர்கள்

https://telegram.me/aedahamlibrary

அவற்றை சிறந்த சரித்திரக் கதைகள் என்று புகழ்ந்துள்ளார்கள். ‘பாஸ்கர் வில்லிஸின் வேட்டை நாய்’ (The Hound of Baskervilles) என்பது கோனான்டைல் எழுதிய மூன்றாவது திகில் நாவல். ‘The Strand’ என்ற சஞ்சிகையில் இந்தக் கதை ஒரு தொடர் கதையாக வெளிவந்தது.

பி.பி.சி நடத்திய அதிகம் விரும்பும் புதினம் என்ற வரிசையில் ‘பாஸ்கர் வில்லிஸ்ஸின் வேட்டை நாய்’ என்ற புதினம் இடம் பெற்றுள்ளது. 2003&ல் இதே புதினம் அதிகம் நேசிக்கப்பட்டப் புதினமாகப் பெயர் பெற்றுள்ளது. இது தொடர் ஒலிபரப்பும், ஒளி பரப்பும் செய்யப்பட்டுள்ளது.

கோனான்டைல் ஏராளமான சிறுகதைகள், புதினங்கள் போன்றவற்றை எழுதியுள்ளார். ‘The valley of Fear’ (1905) (அச்சம் நிறைந்த பள்ளத்தாக்கு) என்பது நான்காவதாக எழுதப்பட்ட புதினம். கோனான்டைல் ஒரு சில நாடகங்களையும் எழுதியுள்ளார். Waterloo, The House of Temperley, The Speckled Band - போன்றவை அவரால் எழுதப்பட்ட நாடகங்களில் சில.

1873-ல் கோனான்டைல் மனோதத்துவ ஆய்வுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார். (Psychical Research Society) அது முதற்கொண்டு அவர் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டவராக மாறிவிட்டார். The Vital Message (1919), Spiritualism and Rationalism (1920), The wandering Spiritualist (1921), The case of spirit Photography (1922), Memories and Adventures (1924), The History of Spiritualism (1926), Our African winter (1929), The Edge of the unknown (1930) போன்றவை அவர் எழுதிய ஆன்மீகப் புத்தகங்கள்.

1930-ஆம் ஆண்டு அவரது 71&வது வயதில் கோனான்டைல் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார். தேர்ந்த ஒரு கதைசொல்லி என்பதாலும், காலத்தால் வெல்ல முடியாத ஷெர்லக்ஹோம்ஸைப் படைத்தவர்

https://telegram.me/aedahamlibrary

என்பதாலும் வாசகர்களின் உள்ளங்களில் அவர் என்றும் நிலைத்து நிற்கிறார்.

###

https://telegram.me/aedahamlibrary

ஒரு சிவப்பு நிறத் தேடல்

https://telegram.me/aedahamlibrary

பாகம் 1

1878ஆம் ஆண்டில் நான் லண்டன் பல்கலைக் கழகத்தில் M.D. பட்டம் பெற்றேன். அதன் பிறகு இராணுவத்தில் பணிபுரியும் எண்ணத்தில், இராணுவ அறுவை சிகிச்சை நிபுணருக்கான பயிற்சி பெறுவதற்கு 'நெட்லி' என்ற இடத்திற்குச் சென்றேன். பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பிறகு ஐந்தாவது 'நார்த்தம்பர்லான்ட் ஃயூசிலியர்ஸ்' என்ற இராணுவப் பிரிவில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவராகப் பணியமர்த்தப்பட்டேன். நான் சேர்ந்த இராணுவப் பிரிவு அப்போது இந்தியாவில் பணிபுரிந்து வந்தது. நான் என்னுடைய படைப்பிரிவில் சேர்வதற்கு முன்பாகவே இரண்டாம் ஆப்கான் யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. பம்பாய் துறைமுகத்தில் நான் வந்திறங்கிய போதே, எனது படைப்பிரிவினர் எதிரிகளின் எல்லைக்குள் வெகு தூரம் முன்னேறிச் சென்றுவிட்டனர் என்பதை அறிந்து கொண்டேன். என்னைப் போன்று, என்னுடன் வந்த சக இராணுவ அதிகாரிகளுடன் ஆப்கானிஸ்த்தானின் 'கண்டஹார்' என்ற இடத்திற்குப் பத்திரமாக வந்து சேர்ந்தேன். என் படைப்பிரிவினர் அங்கு தான் இருந்தனர். அவர்களுடன் சேர்ந்து கொண்டு, என்னுடைய அலுவல்கள் என்னவென்று தெரிந்து கொண்டேன்.

எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் பலருக்கு பெருமைகளையும், பதவி உயர்வுகளையும் பெற்றுத் தந்தன. ஆனால் எனக்கு மட்டும் துரதிஷ்டங்களையும், பேரிடர்களையுமே பெற்றுத் தந்தன. 'மைவான்ட்' என்ற இடத்தில் நடைபெற்ற போர் என்னுடைய தோள்பட்டை எலும்பை சிதறடித்து விட்டது. ஜூஸைல் தோட்டாவால் தாக்கப்பட்டு நான் தோள்பட்டைப் பகுதியில் காயமடைந்தேன். அது மட்டுமின்றி என்னுடைய 'சப்கிளேவியன்' தமனியும் சேதமடைந்துவிட்டது.

https://telegram.me/aedahamlibrary

கொலை பாதக காஸிக்களின் கைகளில் நான் சிக்காமல் என்னைக் காப்பாற்றியவன் என் வேலையாள் 'மர்ரே' என்பவன். சமயோஜிதமாக செயல்பட்டு, குதிரைகளுக்கு மத்தியில் என்னைத் தள்ளிவிட்டு என் உயிரைக் காப்பாற்றினான். நான் பத்திரமாக பிரிட்டிஷ் அணிக்குத் திரும்பிவிட்டேன்.

தாங்க முடியாத உடல் வலியாலும், அனுபவித்தத் துயரங்களாலும், காயமடைந்த வீரர்களுடன் நானும் ஒருவனாக பெஷாவர் நகரில் செயல்பட்டு வந்த இராணுவ முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டேன். பெஷாவர் முகாமில் ஓரளவு உடல் நலம் தேறி, நடக்கும் அளவுக்கு வந்துவிட்டேன். ஆனால் வயிற்று வலியுடன் கூடிய ஜுரத்தில் விழுந்துவிட்டேன். மிகவும் உடற்சோர்வுற்ற என்னை, இனி ஒரு நிமிடம் கூட தாமதிக்கக் கூடாது என்ற எண்ணத்தில், மருத்துவக் குழுவினர் இங்கிலாந்திற்குத் திருப்பி அனுப்பிவிட்டனர். 'ஓரன்ட்டிஸ்' என்ற கப்பலில் ஏறி நான் மீண்டும் 'போர்ஸ்மவுத்' துறைமுகம் வந்து சேர்ந்தேன். ஒன்பது மாதங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு அரசாங்கம் எனக்கு அனுமதியளித்தது.

பெயர் சொல்லுமளவுக்கு இங்கிலாந்தில் எனக்கு ஒரு உறவினர் கூட இல்லை என்றாலும் தென்றலைப் போன்ற சுதந்திரம் இருந்தது. நாளொன்றுக்கு 11 ஷில்லிங் 6 பென்ஸ் எனக்கு உதவித் தொகையாகக் கிடைத்தது. உயிர் வாழப் போதுமானதாக அது எனக்கு கை கொடுத்தது. அலைந்து திரியும் மற்றவர்களைப் போல நானும் லண்டன் மாநகர் வந்து சேர்ந்தேன். ஸ்ட்ரேன்ட் என்ற இடத்தில் ஒரு தனியார் விடுதியில் தங்கியிருந்தேன். எந்த அளவுக்கு செலவு செய்ய வேண்டுமோ அதை விட சற்று தாராளமாகச் செலவழித்தேன். நீண்ட நாட்கள் தனியார் விடுதியில் தங்கியிருக்க முடியாதென்பதை உணர்ந்து கொண்டேன். ஒன்று நகரத்தை விட்டு ஏதாவதொரு கிராமப்புறத்திற்குச் சென்றுவிட வேண்டும்; அல்லது என்னுடைய வாழ்க்கை முறையை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். நான் பின்னால் சொன்னதைத்

https://telegram.me/aedahamlibrary

தேர்ந்தெடுத்தேன். தனியார் விடுதியில் தங்கியிருப்பதைத் தவிர்த்து செலவு அதிகமில்லாத வேறு ஓர் இடத்தைப் பார்ப்பது என்று தீர்மானித்தேன்.

'கிரைட்டீரியன் பார்' என்ற தேநீர் விடுதி போன்ற ஓரிடத்தில் வந்து நின்று கொண்டு, நடப்பவைகளை கவனித்தேன். யாரோ தோள் பட்டையில் தட்டுவது போன்று உணர்ந்தேன். தட்டியது என்னுடைய நண்பன் தான். பார்ட்ஸ் என்ற மருத்துவமனையில் எனக்கு உதவியாளனாக, காயங்களுக்குக் கட்டுப் போடும் பணியில் இருந்தவன். லண்டன் போன்ற பெரிய நகரத்தில் தெரிந்த ஒருவனைப் பார்ப்பது மனதிற்கு இதமாக இருந்தது. 'ஹால்போர்ன்' உணவு விடுதிக்கு சாப்பிட வரும்படி அவனுக்கு அழைப்பு விடுத்தேன். என் அழைப்பை ஏற்றுக்கொண்டு அவன் சாப்பிட என்னுடன் புறப்பட்டு வந்தான். என் நண்பனின் பெயர் 'ஸ்டாம்ப் ஃபோர்ட்.'

"நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய், வாட்சன்?" என்று என்னை அவன் கேட்டான். "நீ ஒல்லியா இருக்கிறாய்; அதே சமயம் 'நட்' போன்று உறுதியாகவும் இருக்கிறாய்" - அவன் மேலும் தொடர்ந்தான்.

போகும் இடம் வருவதற்குள் நான் என் கதையை என் நண்பனுக்குச் சுருக்கமாகச் சொல்லி முடித்தேன். "நீ இப்போது எங்கு தங்கியிருக்கிறாய்" என்று அவன் என்னிடம் கேட்டான். "தங்குவதற்கு வசதியான, அதே சமயத்தில் வாடகை குறைவான ஓர் இடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று நான் அவனுக்குப் பதில் சொன்னேன்.

"இப்படிக் கேட்பது நீ இரண்டாவது ஆள்".

"அப்படியென்றால் யார் அந்த முதல் நபர்-?".

"மருத்துவமனையில் இருக்கும் வேதியியல் சோதனைக் கூடத்தில் ஒருவர் இருக்கிறார். அவர் தான் என்னிடம், எனக்கு உதவியாக, என் வாடகையை பங்கிட்டுக் கொள்ள ஒருவர் வேண்டும் என்று கூறினார்."

https://telegram.me/aedahamlibrary

“இதுபோன்ற ஒருவரைத் தான் நானும் தேடிக் கொண்டிருக்கிறேன்.”

நண்பன் ஸ்டாம்ப் ஃபோர்ட் என்னை வினோதமாக நோக்கினான். “உனக்கு ஷெர்லக்ஹோம்ஸ் என்பவரைப் பற்றித் தெரியுமா-? ஆனால் உனக்கு நெருக்கமாக எப்போதும் உன்னுடன் இருக்க மாட்டார்” என்றான் நண்பன்.

“அவரால் என்ன பாதகம்.”

“அவருக்கு எதிராகச் சொல்லும்படி ஏதும் இல்லை. ஆனால் அவருடைய போக்கு மற்றவர்களுக்கு விந்தையாக இருக்கும். மற்றபடி அவர் மிகவும் நல்ல மனிதர்.”

“மருத்துவக் கல்லூரியில் பயில்பவரோ-?.”

“அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. உடற்கூறு தொடர்பான விஷயங்கள் அவருக்கு மிக நன்றாகத் தெரியும். அவர் சிறந்த ஒரு வேதியியல் நிபுணர். எனக்குத் தெரிந்து மருத்துவமனையில் அவருக்கு எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் மருத்துவம் கற்பிக்கும் பேராசிரியர்கள் கூட வியந்து போகும் அளவுக்கு அவருக்கு விஷயங்கள் தெரியும்.”

“நீங்கள் என்ற செய்கிறீர்கள் என்று நீ அவரைக் கேட்ட தில்லையா-?”

“எந்தச் செய்தியையும் அவ்வளவு சுலபமாக அவரிடமிருந்து வாங்கிவிட முடியாது.”

“நான் அவரைச் சந்திக்க விரும்புகிறேன். அதுபோன்ற அமைதியான, நன்கு கற்றறிந்த ஒருவருடன் தங்குவதற்குத்தான் நான் ஆசைப்படுகிறேன். ஆப்கானிஸ்தானத்தில் நான் பட்டதெல்லாம் போதும். உன்னுடைய நண்பரை எப்படி எங்கு சந்திக்கலாம்-?” என்று ஸ்டாம்ப்ஃபோர் டைக் கேட்டேன்.

“அவர் இப்போது வேதியியல் ஆய்வுக்கூடத்தில்தான் இருப்பார். ஒன்று அவர் வாரக் கணக்கில் எங்கும் போக

https://telegram.me/aedahamlibrary

மாட்டார்; அல்லது அதிகாலை மூன்று மணியிலிருந்து, இரவு நேரம் வரை ஏதாவது பணி செய்து கொண்டிருப்பார். உனக்கு விருப்பமிருந்தால் பகல் உணவிற்குப் பின் நேரே சென்று அவரை சந்திக்கலாம்".

ஹாஸ்போர்ன் உணவு விடுதியிலிருந்து மருத்துவமனை ஆய்வுக்கூடம் செல்வதற்குள் என்னுடன் தங்கப்போகும் நபர் பற்றிய பல விவரங்களை எனக்கு விரிவாக எடுத்துக் கூறினான் நண்பன் ஸ்டாம்ப்ஃபோர்ட்.

"உனக்கு ஒத்துப் போகவில்லை யென்றால், நீ என்னிடம் குறை சொல்லக் கூடாது. மருத்துவமனை ஆய்வுக் கூடத்தில் அவரைச் சந்தித்து, நான் அவரிடமிருந்து தெரிந்து கொண்டவை மிகவும் குறைவு. எதற்கும் நான் எந்த விதத்திலும் பொறுப்பாக முடியாது" என்று மிகுந்த எச்சரிக்கையுடன் பேசினான் நண்பன்.

"சொல்ல முடியாததை சொல்ல முடியாது" என்று சிரித்துக் கொண்டே சொன்ன நண்பன், "ஹோம்ஸ் மிகவும் அறிவியல் சார்ந்தவராகக் காணப்படுகிறார். எதையும் மற்றவர்களுக்குக் கொடுத்துப் பார்த்து, அதன் விளைவுகளை ஆய்வு செய்பவராக இருக்கிறார். கேடு விளைவிக்க வேண்டுமென்று அவர் அதைச் செய்யவில்லை. அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் காரணமாக அப்படிச் செய்கிறார். ஒன்றை செய்ய வேண்டுமென்று நினைத்தால் அதைத் தனக்குத் தானே கூட செய்து பார்த்து விடுவார். அவருக்கு வேண்டிய தெல்லாம் சரியான விஷயங்கள்" என்று ஹோம்ஸ் பற்றி மேலும் தொடர்ந்தான் நண்பன்.

"அது நல்லது தான்".

"ஆனால் அது மிகையாகக் கூடச் செய்யப்படலாம். அறிந்து கொள்ளும் ஆவலில் எதை ஆய்வு செய்ய வேண்டுமோ அதை அறுவை சிகிச்சை அரங்கினுள் ஒரு குச்சியால் குத்தினால் அது எல்லை மீறிப் போய் விடும்".

"சிராய்ப்புகள் எந்த அளவுக்கு ஓர் இறந்த உடலில் உண்டாக்கப்படுகின்றன என்பதைக் கண்டறிய அவர்

https://telegram.me/aedahamlibrary

இறந்த உடலைக் கீறிப் பார்த்தார். அதை நான் என் இரு கண்களாலும் பார்த்தேன்” நண்பன் தொடர்ந்து பேசினான்.

“அப்படியிருந்தும் நீ அவரை மருத்துவம் பயிலும் மாணவர் இல்லை என்கிறாய்”.

நண்பன் தொடர்ந்து பேசினான். “அவருடைய நோக்கம் என்ன என்பது கடவுளுக்குத் தான் தெரியும். இதோ நாம் அவர் இருக்கும் இடத்திற்கு வந்துவிட்டோம். இனி நீ தான் உன் மனதில் பட்டதைச் சொல்ல வேண்டும்.”

நாங்கள் ஒரு குறுகிய சந்தில் திரும்பி, பக்கக் கதவுகள் வழியாக மருத்துவமனைக்குள் சென்றோம். அந்த இடம் எனக்குப் பழக்கமானதுதான். கருங்கற்களால் கட்டப்பட்ட படிக்கட்டுகளில் ஏறி, நீண்ட தாழ்வாரம் வழியாக உள்ளே சென்றோம். மருத்துவமனையின் வேதியியல் ஆய்வுக்கூடம் ஒரு கோடியில் இருந்தது.

ஆய்வுக்கூடம் மிக உயரமான ஓரிடத்தில் இருந்தது. எங்கு பார்த்தாலும் சீசாக்கள் நிரம்பியிருந்தன. அங்கொன்றும், இங்கொன்றுமாக அகன்ற மேஜைகள் போடப்பட்டிருந்தன. அவற்றின் மீது குடுவைகளும், சோதனைக் குழாய்களும், புன்சன் விளக்குகளும் இருந்தன. புன்சன் விளக்குகளிலிருந்து நீலநிற ஜுவாலை வெளிவந்து கொண்டிருந்தது. ஒரே ஒரு மாணவர் மட்டும் குனிந்து ஏதோ பணியில் ஈடு பட்டிருந்தார். எங்கள் காலடி ஓசை கேட்டதும் அவர் துள்ளிக் குதித்து “கண்டுபிடித்துவிட்டேன், கண்டுபிடித்து விட்டேன்” என்று கூறிக்கொண்டே எங்களை நோக்கி ஓடி வந்தார். அவர் கையில் சோதனைக் குழாய் ஒன்று இருந்தது. “இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபினை வீழ்படிவாக்கும் ரீஏஜென்ட் ஒன்றை நான் கண்டுபிடித்து விட்டேன். அந்த ரீஏஜென்ட் ஹீமோகுளோபினைத் தவிர வேறு எதையும் வீழ்படி வாக்காது” என்றார் அவர். தங்கப் புதையல் கூட அவர் முகத்தில் அப்படியொரு மகிழ்ச்சியை ஏற்படுத்தி யிருக்காது.

https://telegram.me/aedahamlibrary

“வாட்சன், இவர் தான் ஷெர்லக்ஹோம்ஸ்” என்று எனக்கு ஹோம்ஸ்&ஜ அறிமுகம் செய்து வைத்தான் என் நண்பன் ஸ்டாம்ப்ஃபோர்ட்.

“எப்படி இருக்கிறீர்கள்--?” என்று கேட்டு என் கைகளைப் குலுக்கினார் ஹோம்ஸ். “நீங்கள் ஆப்கானிஸ்தான் சென்று வந்துள்ளீர்கள் என்று நினைக்கிறேன்” என்று என்னைப் பார்த்தவுடன் கூறினார் ஹோம்ஸ்.

“எப்படி அவ்வளவு சரியாகக் கூறினீர்கள்-?” என்று நான் வியப்புடன் அவரைக் கேட்டேன். “அது பற்றி நான் பின்னால் கூறுகிறேன். ஹீமோகுளோபின் பற்றித்தான் நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். என்னுடைய கண்டுபிடிப்பின் முக்கியத்துவத்தை உங்களால் உணர முடிகிறதா-?” என்று என்னைக் கேட்டார் ஹோம்ஸ்.

“வேதியியலில் ஆர்வத்தைத் தூண்டும் ஒரு கண்டுபிடிப்பு தான் இது. ஆனால் இதனால் என்ன பயன் விளையப் போகிறது” என்று நான் கேட்டேன்.

“மருத்துவ ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் இது ஒரு பயனுள்ள கண்டுபிடிப்பு. இரத்தக் கறைகளை கண்டுபிடிக்க உதவும் ஒரு மாபெரும் பரிசோதனை இது” என்று கூறிய ஹோம்ஸ் என் சட்டைக் காலரைப் பிடித்திழுத்துக் கொண்டு, ஆர்வத்தால் அவர் சோதனை நடத்திய மேஜைக்குச் சென்றார்.

“புது ரத்தம் எடுத்து சோதித்துப் பார்க்கலாம்” என்று கூறிய ஹோம்ஸ் தன் விரலை ஒரு ஊசியால் குத்தி இரத்தம் வரவழைத்து அதனை ஒரு பிப்பெட்டில் சேகரித்தார். “இப்போது இதனுடன் சிறிது தண்ணீர் சேர்ப்போம். இரத்தத்தின் சிவப்பு நிறம் தெரியாது. கலப்பற்ற நீர் போன்று தான் தெரியும். தண்ணீரில் கலந்துள்ள இரத்தத்தின் அளவு ஒரு மில்லியன் பங்கிற்கு, ஒரு பங்கு தான். அதனால் தண்ணீரில் கலந்துள்ள இரத்தம் தெரியவில்லை” என்று கூறிய ஹோம்ஸ் வெள்ளை நிறமான படிகங்களை தண்ணீருடன் சேர்த்தார். உடனே

https://telegram.me/aedahamlibrary

நீரில் பழுப்பு நிற வீழ்படிவுகள் உருவாகி விட்டன. அது கண்ணாடிக் குடுவையில் நன்றாகத் தெரிந்தது.

ஹா! ஹா! என்று கை கொட்டிய ஹோம்ஸ் ஒரு சிறு குழந்தை மகிழ்ச்சியடைவதைப் போல் மகிழ்ச்சியடைந்து “இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்-?--” என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

“ஒரு கவனத்தை ஈர்க்கும் சோதனை தான்” என்று கூறி அவரை நான் ஆமோதித்தேன்.

“அழகு! அழகு! முன்பு செய்யப்பட்ட ‘குயாக்கம்’ (Guia cum) சோதனை மிகவும் குழப்பமானது. அது போலத்தான் இரத்த சிவப்பணுக்களை நுண்ணோக்கியின் மூலம் ஆய்வு செய்யும் சோதனையும். இரத்தக் கறை பட்டு நீண்ட நேரம் ஆகியிருந்தால் பின்னால் சொன்ன சோதனை பயன் தராது. நான் கண்டுபிடித்த சோதனை இரத்தக்கறை பட்டு நீண்ட நேரம் ஆகியிருந்தாலும் பலன் தரும். இரத்தக் கறை புதிதாக இருந்தாலும், முன்பே ஏற்பட்டதாக இருந்தாலும் பலன் தரும். இந்தப் பரிசோதனை மட்டும் முன்பே கண்டு பிடிக்கப்பட்டிருந்தால் இன்று நடமாடிக் கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருப்பார்கள்.” ஹோம்ஸ் தொடர்ந்து பேசினார்.

“உண்மைதான்” என்றேன் நான்.

“குற்ற வழக்குகள் நீண்ட நாட்களாகத் தொங்கிக் கொண்டிருப்பது அவற்றை சரியானபடி நிரூபணம் செய்ய முடியாததால் தான். குற்றம் சாட்டப்பட்டவனின் துணிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. அவற்றில் பழுப்பு நிறக் கறைகள் காணப்படுவதாக வைத்துக் கொள்வோம். அவை உண்மையிலேயே இரத்தக் கறை தானா? சேற்றுக் கறையா? துரு ஏற்படுத்திய கறையா? அல்லது பழச்சாறு ஏற்படுத்திய கறையா என்று முன்பு உறுதியாகக் கூறிவிட முடியாது. நம்பகமான பரிசோதனை முன்பு இல்லை. இப்போது “ஷெர்லக்ஹோம்ஸ் பரிசோதனை”

https://telegram.me/aedahamlibrary

வந்துவிட்டது. ஏற்பட்டிருப்பது இரத்தக் கறைதானா என்று கண்டுபிடிப்பதில் இனி எந்தவித சிரமமும் இல்லை" என்று கூறினார் ஹோம்ஸ்.

பேசும்போது அவரது கண்களில் மின்னொளி தென்பட்டது. ஹோம்ஸ் பவ்வியமாகத் தலை குனிந்தார். ஏதோ கைதட்டும் பார்வையாளர்கள் இருப்பதைப் போன்று நினைத்துக் கொண்டார்.

"உங்களை நிச்சயமாகப் பாராட்ட வேண்டும்" என்றேன் நான்.

"பல வழக்குகளை என்னால் உதாரணமாகக் காட்ட முடியும். சென்ற ஆண்டு ஃப்ரான்க்ஃபர்ட்டில் நடைபெற்ற வான்பிஸ்காப் என்பவனின் வழக்கு. அவனுக்கு நிச்சயமாக தூக்குத் தண்டனை கிடைத்திருக்கும், பிராட்ஃபோர்டைச் சேர்ந்த மேசன் என்பவனின் வழக்கும் அதே போன்றது தான். தகாத வழியில் பேர்போன முல்லரின் வழக்கும் அப்படிதான். மான்ட்பெல்லியரைச் சேர்ந்த லீஃபீவர், நியூ ஆர்லியன்ஸ் பகுதியைச் சேர்ந்த சாம்சன் போன்றவர்களும் தகுந்த ஆதாரமின்மை காரணமாகத்தான் தப்பித்தார்கள்." குற்ற வழக்குகளை அடுக்கிக் கொண்டே போனார் ஹோம்ஸ்.

"தாங்கள் கிரிமினல் வழக்குகளின் நாட்காட்டி போன்று பேசுகிறீர்கள், இந்த வழக்குகள் தொடர்பான பத்திரிகை ஒன்றைத் தாங்கள் தொடங்கலாம். 'காவல் துறையின் காலம் சென்ற வழக்குகள்" என்று அந்தப் பத்திரிகைக்குப் பெயர் சூட்டலாம்" என்று கருத்து தெரிவித்தான் நண்பன் ஸ்டேம்ப்ஃபோர்ட்.

"அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் ஒரு பத்திரிகையாக அது இருக்கும்" & என்று குறிப்பிட்ட ஹோம்ஸ், ஊசியால் குத்திய இடத்தில் ஒட்டப்பட்டிருந்த பிளாஸ்ட்டரைப் பாய்த்தெறிந்தார். "நான் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நச்சுத் தன்மையுடைய இரசாயனப் பொருட்களோடு நான் பழகிக் கொண்டிருக்கிறேன்" என்றார் ஹோம்ஸ். அவர்

https://telegram.me/aedahamlibrary

பேசியபோது அவருடைய கைகளில் பல இடங்களில் பிளாஸ்டர் ஒட்டிய அறிகுறிகளும், அமிலங்களால் உண்டான வடுக்களும் இருப்பதை நான் கவனித்தேன்.

“நாங்கள் இங்கு ஒரு வேலை நிமித்தமாக வந்தோம்.” என்று கூறிய ஸ்டாம் ஃபோர்ட் ஒரு முக்காலியில் அமர்ந்து கொண்டு எனக்கும் உட்கார ஒரு முக்காலியைக் காட்டினான்.

“உங்களோடு சேர்ந்து தங்குவதற்கும், வாடகையைப் பகிர்ந்து கொள்வதற்கும் ஒருவரை அழைத்து வந்துள்ளேன்” என்றான் ஸ்டேம் ஃபோர்ட்.

தங்கப் போகும் வீட்டை என்னுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைந்தவர் போல் காணப்பட்டார் ஷெர்லக் ஹோம்ஸ். “பேக்கர் தெருவில் உள்ள ஒரு வீட்டின் மீது நான் ஒரு கண் வைத்துள்ளேன். அது நமக்குப் பொருத்தமானதாக இருக்குமென்று நினைக்கிறேன். நான் புகைப்பிடிப்பதை நீங்கள் பொருட்படுத்த மாட்டீர்கள் என்று நம்புகிறேன்” என்றார் ஹோம்ஸ்.

“நானும் புகை பிடிப்பவன் தான்” என்றேன் நான். “மிகவும் நன்று. நான் பல இரசாயனப் பொருட்களை என்னைச் சுற்றிலும் வைத்திருப்பேன். சில பரிசோதனைகளையும் அவற்றை வைத்து செய்து பார்ப்பேன். அது உங்களுக்கு இடையூறாக இருக்குமா-?” என்றார்.

“எந்த விதத்திலும் எனக்கு அது இடையூறாக இருக்காது.” என்றேன் நான்.

தன்னுடைய குறைபாடுகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தார் ஹோம்ஸ். “சில சமயங்களில் நான் நாட்கணக்கில் பேசாமலேயே இருப்பேன். அதைப் பற்றியெல்லாம் நீங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பின்னால் சரியாகி விடுவேன். நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள். ஒருவன் தன்னிடமுள்ள கெட்ட பழக்கங்களை மற்றவருக்குச் சொல்ல வேண்டும். முன்பே அப்படித் தெரிவிப்பது தான் சேர்ந்து ஒரே வீட்டில் வாழப்போகும் நமக்கு நல்லது” என்றார் ஹோம்ஸ்.

https://telegram.me/aedahamlibrary

அவர் குறுக்கு விசாரணை செய்வதைப் பார்த்து நான் சிரித்து விட்டேன். பின் என்னுடைய பழக்க வழக்கங்கள் பற்றி அவருக்கு எடுத்துக் கூறினேன்.

“நான் ஓர் ஆண் நாய்க்குட்டி வைத்திருக்கிறேன். எனக்கு சப்தம் பிடிக்காது. ஏனெனில் எனது நரம்புகள் பலகீனமானவை. நான் கண்ட நேரத்தில் எழுந்திருப்பேன். நான் ஒரு சோம்பேறி. இவைதான் தற்போதைக்கு என்னிடமுள்ள தீய பழக்கங்கள்” என்றேன் நான்.

“சப்தம் என்பதில் வயலின் வாசிப்பதையும் நீங்கள் சேர்த்துக் கொள்வீர்களா? என்று கேட்டார் ஹோம்ஸ்.

“அது வாசிப்பவரைப் பொறுத்தது. நன்றாக வயலின் வாசித்தால் அது தெய்வீகமாக இருக்கும். இல்லையென்றால்....” நான் அவர் கேள்விக்குப் பதில் சொன்னேன்.

ஹோம்ஸ் சிரித்தார். “எல்லாம் நல்லபடியாக முடிந்துவிட்டது. வீட்டைச் சென்று பார்த்துவிட்டு, அது உங்களுக்குப் பிடித்திருந்தால், அதையே ஏற்பாடு செய்து கொள்ளலாம்” & என்றார் ஹோம்ஸ்.

“எப்போது நாம் வீட்டைச் சென்று பார்க்கலாம்?” & என்றேன்.

“நாளை மதியம் இங்கு வாருங்கள். நாம் இருவரும் ஒன்றாகச் சென்று வீட்டைப் பார்த்துவிட்டுப் பின் பேசி முடித்துவிடலாம்.”

“சரியாக மதியம் கிளம்பிவிடலாம்” என்று கூறி அவரோடு கை குலுக்கி விடைபெற்றுக் கொண்டேன்.

ஹோம்சை அவருடைய சோதனைச் சாலையில் வேதிப் பொருட்களுடன் விட்டுவிட்டு, நான் தங்கியிருந்த தனியார் விடுதிக்கு நானும் என் நண்பன் ஸ்டேம்ஃபோர்டும் கால்நடையாகக் கிளம்பினோம். போகும்போது நான் என் நண்பனிடம் கேட்டேன், “நான் ஆப்கானிஸ்தானிலிருந்தது அவருக்கு எப்படித் தெரியும்-?”

https://telegram.me/aedahamlibrary

“அதுதான் அவரது சிறப்பான குணம். அவர் எப்படி விஷயங்களைக் கண்டுபிடிக்கிறார் என்பதை அறிய பலர் ஆவலுடன் உள்ளனர்”.

“மிகவும் விந்தையாக உள்ளது. எங்கள் இருவரையும் இணைத்து வைத்ததற்கு நான் உனக்குத் தான் நன்றி கூற வேண்டும். மனித இனத்தின் சரியான ஆய்வு மனிதன் தான்.”

“நீ அவரை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவர் ஒரு சிக்கலான மனிதர். நீ அவரைப் புரிந்து கொள்வதற்கு முன் அவர் உன்னைப் புரிந்து கொண்டு விடுவார்” என்று சொல்லிய நண்பன் என்னிடமிருந்து விடைபெற்றான்.

###

https://telegram.me/aedahamlibrary

உய்த்துணர்தல் என்னும் விஞ்ஞானம்

மறுதினம் அவர் ஏற்பாடு செய்திருந்தது போல் நாங்கள் 221 B, பேக்கர் தெருவிற்குச் சென்றோம். வீட்டில் வசதியான இரு படுக்கை அறைகள் இருந்தன. காற்றோட்டமான ஒரு ஹால் இருந்தது. ஹாலில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மேலும் அங்கு இரு ஜன்னல்கள் இருந்தன. இரண்டு பேர் பகிர்ந்து கொள்வதால் வாடகையும் கட்டுபடியாகக் கூடிய படி இருந்தது. வீட்டு உரிமையாளரிடம் பேசி முடித்து உடனே உள்ளே சென்று விட்டோம். அன்று மாலையே நான் என்னுடைய விடுதிக்குச் சென்று எனது பொருட்களை எடுத்து வந்து விட்டேன். மறுநாள் காலை ஷெர்லக் ஹோம்ஸ் அவருடைய பொருட்களை எடுத்து வந்து விட்டார். அவரது பொருட்களில் பல அட்டைப் பெட்டிகள் இருந்தன. சில தட்டுமுட்டுச் சாமான்களும் இருந்தன. அடுத்த ஓரிரு தினங்களில் எதை எதை எங்கு வைக்க வேண்டுமோ அதை அதை அந்தந்த இடங்களில் வைத்தோம். பின் வசதியாக வந்த இடத்தில் நிலை கொண்டு விட்டோம்.

சேர்ந்து வாழ்வதற்கு ஹோம்ஸ் அப்படியொன்றும் கடுமையான மனிதராக இல்லை. அவர் மிகவும் அமைதி யானவராக இருந்தார். அவருடைய பழக்க வழக்கங்களில் ஓர் ஒழுங்கு முறை இருந்தது. எங்குச் சென்றாலும் இரவு பத்து மணிக்குள் அவர் திரும்பி வீட்டிற்கு வந்து விடுவார். நான் காலையில் எழுவதற்குள், காலை உணவை முடித்துக் கொண்டு வெளியே சென்று விடுவார். சில சமயங்களில் அவர் தன்னுடைய வேதியியல் ஆய்வுக் கூடத்திலேயே தங்கி விடுவார். சில சமயங்களில் விலங்குகளை கூறிட்டுப் பார்க்கும் சோதனைக் கூடத்தில் தங்கி விடுவார். மிக அபூர்வமாக அவர் நீண்ட நடைப்பயிற்சி மேற்கொண்டு நகரின் கீழான பகுதிகளுக்குச் சென்று விடுவார். அவருடைய சக்திக்கு

https://telegram.me/aedahamlibrary

மீறிய செயல் என்று ஏதுவுமேயில்லை. சில சமயங்களில், யாரிடமும் ஒன்றும் பேசாமல் களைத்துப் போய் உட்கார்ந்து விடுவார்; ஒரு வார்த்தை கூட பேச மாட்டார். நான் கூட அவர் ஏதாவது போதை பொருட்களுக்கு அடிமையாகி யிருப்பாரோ என நினைத்தேன். ஆனால் அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அவருடைய வாழ்க்கை முறை பற்றித் தெரிந்தவர்களுக்கு அது நன்றாகத் தெரியும்.

நாட்கள் செல்லச் செல்ல ஹோம்ஸ்&ஐப் புரிந்து கொள்ள வேண்டும். நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் எனக்குள் ஏற்பட்டது. வெளித் தோற்றத்திற்கு அவர் ஒரு விந்தையான மனிதர்தான். அவரது உயரம் ஆறடிக்கு மேல் இருக்கும். ஒல்லியான உருவம். அவருடைய கண்கள் எவற்றையும் ஊடுறுவிப் பார்க்கும் நான் என்னுடைய மந்த குணம் காரணமாக அவரை சரியாகப் பார்ப்பதில்லை. அவருடைய மூக்கு கழுகினுடைய மூக்கு போன்று இருக்கும். கரங்களில் மைக்கறை அல்ல மற்ற இரசாயனப் பொருட்களின் கறை படிந்திருக்கும். ஆனால் அவரது கரங்கள் தொடுவதற்கு மென்மையானவை.

எந்த அளவுக்கு அவர் என் ஆர்வத்தைத் தூண்டினாரோ அந்த அளவுக்கு அவரைப் புரிந்து கொள்ள நான் முயற்சித்தேன் என்று சொல்ல முடியாது. சுற்றுச் சூழல் சரியாக அமையாவிடில் என்னால் எங்கும் வெளியே செல்ல இயலாது. எனது உடல் நிலை அதற்கு இடம் கொடுக்காது-. என்னுடைய தனிமையைத் தகர்க்கும் அளவுக்கு நண்பர்கள் என்று சொல்லிக் கொள்ள யாரும் எனக்கு இல்லை. இப்படிப்பட்ட சூழலில் என் நண்பர் திரு. ஷர்லக் ஹோம்ஸ் என்னதான் செய்கிறார் என்று பார்ப்பதில் நான் ஆர்வமுடையவனாக இருந்தேன்.

ஹோம்ஸ் மருத்துவம் பயிலும் ஒரு மாணவர் இல்லை. அறிவியல் பட்டம் பெறுவதற்குத் தன்னைத் தயார் செய்து கொண்டிருப்பவராகவும் அவரைப் பார்த்தால் தெரியவில்லை. ஆனால் சில துறைகளில் அவருக்கிருந்த ஞானம் வியப்பூட்டும். எதையும் கூர்ந்து நோக்கி ஒரு

https://telegram.me/aedahamlibrary

முடிவுக்கு வருவதுதான் அவரது இயல்பு. எந்த ஒரு மனிதனும், தனக்கென்று ஒரு தனி ஆர்வம் இல்லாவிட்டால், ஒரு நோக்கம் இல்லாவிட்டால், எதையும் அந்த அளவுக்குக் கூர்ந்து நோக்க மாட்டான்.

ஞானம் இருந்த அளவிற்கு ஹோம்ஸ் இடம் அஞ்ஞானமும் இருந்தது. தற்கால இலக்கியம், தத்துவம், அரசியல் போன்றவைப் பற்றி அவருக்கு எதுவுமே தெரியாது. தாமஸ் கார்லைல் பற்றிக் கேட்டால், அவர் என்ன செய்தார், அவர் எதில் வல்லவர் என்று ஹோம்ஸ் திரும்ப நம்மிடம் கேட்பார். கோப்பர் நிக்கஸ் பற்றியும், சூரியக் குடும்பம் பற்றியும் ஹோம்ஸ்&க்கு எதுவுமே தெரியாதென்பது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. 19&ஆம் நூற்றாண்டின் எந்த ஒரு நாகரீகமான மனிதனுக்கும் கோப்பர்நிக்கஸ் பற்றியும், சூரியக் குடும்பம் பற்றியும் கண்டிப்பாகத் தெரிந்திருக்கும்.

“நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா?” என்று என் முகத்தில் தெரிந்த வியப்பு குறித்து ஹோம்ஸ் கேட்டார். “எனக்குத் தெரியும். ஆனால் உடன் மறந்துவிடுவேன்” என்றார் ஹோம்ஸ்.

“மறந்துவிடுவீர்களா?” என்றேன் வியப்பு மேலிட.

ஹோம்ஸ் இப்போது விளக்கமளித்தார். “மனித மூளை ஒரு மேன் மாடச் சிறு அறை என்று நான் நினைக்கிறேன். அதனுள் நீங்கள் பலவகையான தட்டுமுட்டுச் சாமான்களைப் போட்டு அடைத்து வைக்கிறீர்கள். ஒரு முட்டாள், அதனுள் போட்டு வைத்துள்ள ஒரு பொருளை உடனே எடுத்துவிட முடியாது. தனக்குத் தேவையான பொருள், தேவையற்ற ஒரு பொருளுடன் சேர்ந்து மாட்டிக் கொண்டுள்ளது-. திறமையான ஒரு மனிதன் மூளை என்ற மேல் மாடத்தில் எதைப் போட வேண்டுமோ, அதைத்தான் போடுவான். எல்லாவற்றையும் தாங்கும் நெகிழ்ச்சித் தன்மையுடையது நம் மூளை என்று நினைப்பது தவறு. எந்த ஒரு புதிய விஷயத்தைத் திணித்தாலும், பழைய விஷயங்கள் மறந்து போய்விடும். எனவே மூளைக்குள்

https://telegram.me/aedahamlibrary

எது தேவையோ அதை மட்டும்தான் சேமித்து வைக்க வேண்டும்.”

“சூரியக் குடும்பத்தைப் பற்றிக் கூடவா தெரிந்து வைத்துக் கொள்ளக் கூடாது-?” என்றேன் நான்.

“அதனால் எனக்கு ஆகப் போவது ஒன்றுமில்லை. நாம் சூரியனைச் சுற்றி வருகிறோம் என்று நீங்கள் கூறுகிறீர்கள். சூரியனைச் சுற்றாமல் சந்திரனைச் சுற்றி வந்தாலும் ஒரு செப்புக் காசு கூட நஷ்டமாகி விடாது” என்றார் ஹோம்ஸ்.

எனக்கும் அவருக்குமிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையை நான் ஒரு கணம் நினைத்துப் பார்த்தேன். அதிலிருந்து என்ன முடிவுக்கு வரலாம் என்று சிந்தித்தேன். ‘தனது நோக்கத்தை நிறைவேற்றும் அறிவையே நான் என் மூளையில் இருத்திக் கொள்வேன்’ என்று ஹோம்ஸ் சொல்கிறார். அதனால் அவர் மூளைக்குள் சேமித்து வைத்திருப்பது அவருக்குத் தேவையான அறிவு மட்டுமே என்ற முடிவுக்கு நான் வந்தேன். ஒரு பென்சிலை எடுத்து அவருக்குத் தெரிந்தது எது, தெரியாதது எது என்று பட்டியலிட்டேன்.

1. இலக்கிய அறிவு - இல்லை

2. தத்துவ அறிவு - இல்லை

3. வானநூல் அறிவு - இல்லை

4. அரசியல் அறிவு - ஓரளவுக்கு உண்டு

5. தாவரவியல் அறிவு - மாறுபட்டது. பெல்லடோனோ, அபின், நச்சுத் தன்மையுடைய பொருட்கள் போன்றவை பற்றி பொதுவாக அறிந்து வைத்திருக்கிறார். தோட்டக்கலை பற்றி எதுவுமே தெரியாது.

6. மண்ணியல் அறிவு - சிறிதளவு. எந்த மண் எந்த இடத்திற்குரியது என்று நன்றாகத் தெரியும். நடைப்பயிற்சி முடிந்தவுடன் காற் சட்டையில் காணும் கறை பற்றி நன்கு தெரியும். லண்டன் நகரில் எந்த இடத்தில் அந்தக்

https://telegram.me/aedahamlibrary

கறைபட்டிருக்கும் என்று துல்லியமாகச் சொல்லி விடுவார்.

7. வேதியியல் அறிவு - ஏராளம்

8. உடற் கூறு பற்றிய அறிவு - மிகத் துல்லியமானது. ஆனால் வகைப்படுத்தப்படாதது.-

9. பரபரப்பூட்டும் / மண எழுச்சியைத் தூண்டும் இலக்கிய அறிவு - ஏராளம். எந்த நூற்றாண்டில் எது நடந்தது என்று சொல்லிவிடுவார்.

10. வயலின் வாசிக்கத் தெரியும்.

11. நல்ல சிலம்பாட்டக்காரர், குத்துச் சண்டை வீரர், வாட்போர் வீரர்.

12. இங்கிலாந்து நாட்டின் சட்ட திட்டங்கள் பற்றி நன்கு அறிந்திருப்பவர்.

அவருடைய திறமைகள், பலகீனங்கள் பற்றி இவ்வளவு தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டுமா என்று நினைத்து, நான் எழுதிய பட்டியலை நெருப்பில் போட்டு விட்டேன்.

அவருடைய வயலின் வாசிப்புத் திறமை பற்றிய உண்மைகளை நான் மறைத்து விட்டேன். ஹோம்ஸ் மிக நன்றாக வயலின் வாசிப்பார். கடினமான இராகங்களைக் கூட நன்றாக வாசிப்பார். நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க "மேன்டல்சன்ஸ் லீடர்" போன்றவற்றையும், வேறு சில கடினமான இராகங்களையும் எனக்கு வாசித்துக் காண்பித்தார். ஆனால் அவர் எப்போதாவதுதான் தன் வயலினை எடுத்து வாசிப்பார்; நாற்காலியில் நன்றாக சாய்ந்து கொண்டு, கண்களை மூடிக் கொண்டு, முழங்கால்களின் குறுக்காக வயலினை வைத்துக்கொண்டுதான் வாசிப்பார். சில சமயங்களில் அதிலிருந்து சோகமான இராகங்கள் வெளிவரும்; சில சமயங்களில் மகிழ்ச்சியான இராகங்கள் வெளிவரும். என்ன இராகத்தை அவர் இசைப்பார் என்பது அவர் இருக்கும் மனநிலையைப் பொறுத்தது. எனக்குப் பிரியமான இராகங்கள் சிலவற்றை அவர் வாசிக்காமல்

https://telegram.me/aedahamlibrary

விட்டிருந்தால் நான் அவருடைய தனி ஆவர்த்தனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்திருப்பேன். எனக்குப் பிரியமானவற்றையும் அவர் வாசிப்பார்.

நான் அவருடன் தங்கியிருந்த முதல் வாரத்தில் அவரைத் தேடி யாரும் வரவில்லை. என்னைப் போன்றே அவருக்கும் நண்பர்கள் இல்லையோ என்று நினைத்தேன். அதன் பிறகு அவரைத் தேடி சமுதாயத்தின் பல படிநிலைகளிலிருந்தும் மனிதர்கள் வந்தார்கள். எலிமுகத் தோற்றம் உடைய, கருமையான விழிகள் கொண்ட ஒருவர் ஹோம்ஸ்-ஐத் தேடி வந்தார். ‘லெஸ்ட்ரேட்’ என்று எனக்கு அவரை அறிமுகம் செய்து வைத்தார் ஹோம்ஸ். ஒரே வாரத்தில் மூன்று அல்லது நான்கு முறை அந்த மனிதர் ஹோம்ஸ்&ஐத் தேடி வந்தார். ஒரு நாள் நாகரீகமான உடையணிந்த இளம்பெண் ஒருத்தி ஹோம்ஸ்ஜத் தேடி வந்தாள்; வந்தவள் அரைமணி நேரத்திற்கும் மேல், அவருடன் பேசிக் கொண்டிருந்தாள். அதே நாள் மதியம் நரைத்த முடியுடன் ஒரு மனிதர் வந்தார். பார்ப்பதற்கு தலைச் சுமையாக பொருட்கள் கொண்டு வந்து விற்கும் யூதர் போன்று காணப்பட்டார். அதன் பிறகு அரைகுறையாக ஆடையணிந்த ஒரு மூதாட்டி அவரைப் பார்க்க வந்தாள். வேறு ஒரு நாள் வெண்ணிற முடிகொண்ட, தொடர்வண்டி நிலையத்தில் பணி செய்யும் சுமைதூக்கும் தொழிலாளி ஒருவன் தன்னுடைய சீருடையில் வந்திருந்தான். இதுபோன்று வர்ணிக்க முடியாத தனி நபர்கள் யார் யாரோ அவரைப் பார்க்க வந்தார்கள். அப்படி யாராவது அவரைப் பார்க்க வந்தால், நாங்கள் உட்கார்ந்திருக்கும் இடத்தைக் கொஞ்ச நேரம் விட்டுக் கொடுக்குமாறு ஹோம்ஸ் என்னிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்வார். நான் என் படுக்கை அறைக்குச் சென்று விடுவேன். அவ்வாறு நடந்து கொள்வதற்குத் தன்னை மன்னிக்கும்படி என்னைக் கேட்டுக் கொள்வார் ஹோம்ஸ். நாங்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் அறை தான் அவருடைய அலுவல் அறை. அவரைத் தேடி அங்கு வருபவர்கள் அவருடைய வாடிக்கையாளர்கள். இதைப் பற்றி வெளிப்படையாகக்

https://telegram.me/aedahamlibrary

கேட்டு விட வேண்டும் என்று நினைத்த நான் ஏனோ கேட்கவில்லை.

என் நினைவு சரி எனில், மார்ச் 4-ஆம் நாள், வழக்கத்திற்கு மாறாக, காலையில் முன்பே நான் எழுந்துவிட்டேன். ஷெர்லக் ஹோம்ஸ் தனது காலை உணவை இன்னும் முடிக்கவில்லை. வீட்டு உரிமையாளருக்கு என்னுடைய பழக்க வழக்கங்கள் அத்துபடியாகி விட்டன. நான் வழக்கமாக அருந்தும் காலை காப்பி அதுவரை தயாராகவில்லை. நான் காத்திருப்பதை வீட்டு உரிமையாளருக்குத் தெரிவிக்க மணி அடித்தேன். பிறகு மேஜை மீதிருந்த சஞ்சிகை ஒன்றை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன். வீட்டு உரிமையாளர் கொண்டு வந்து கொடுத்த 'டோஸ்ட்'-ஐ ஹோம்ஸ் அசை போட்டுக் கொண்டிருந்தார். சஞ்சிகையில் வெளிவந்திருந்த பல தலைப்புகளில் ஒன்று என் கவனத்தை ஈர்த்தது.

"வாழ்க்கைப் புத்தகம்" என்ற தலைப்பில் வெளிவந்திருந்த கட்டுரைதான் என் கவனத்தை ஈர்த்தது. எதையும் நன்றாகக் கூர்ந்து கவனிக்கும் ஒரு மனிதன் தன் அன்றாட வாழ்வில் எதையும் விட்டுவிட மாட்டான் என்று கட்டுரையில் எழுதப்பட்டிருந்தது. நுண்ணறிவும், அபத்தமும் கலந்த ஒரு கலவையாக அக்கட்டுரை எனக்குப் பட்டது. கட்டுரை ஆசிரியர் "வஞ்சகம்" என்பது மறைக்க முடியாத ஒன்று என்றும், ஒருவரது முகத்தைப் பார்த்தே அதைக் கண்டுபிடித்துவிடலாம் என்றும் எழுதியிருந்தார். யூக்ளிட் என்ற வடிவியல் அறிஞரின் திறமையையும், வஞ்சகத்தையும் முகத் தோற்றத்திலிருந்தே தெரிந்து கொண்டு விடலாம் என்று கட்டுரை ஆசிரியர் எழுதியிருந்தார்.

தர்க்க சாத்திரத்தில் நிபுணராக இருக்கும் ஒருவன், ஒரு சொட்டு நீரை வைத்துக் கொண்டு அது அட்லாண்டிக் கடலிலிருந்து வந்ததா நயாகரா நீர் வீழ்ச்சியிலிருந்து வந்ததா என்று சொல்லிவிடுவான். உய்த்துணர்தல் என்பதும், அலசி ஆராய்தல் என்பதும் பொறுமையுடன் சிந்தித்துப் பெறப்படுபவை. எங்கே எதைப் பார்ப்பது என்று

https://telegram.me/aedahamlibrary

உய்த்துணர்பவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு மனிதனின் விரல் நகங்கள், சட்டையிலிருக்கும் கைப்பகுதி, அவனது காலணிகள், அணிந்திருக்கும் காற்சட்டை, கட்டைவிரல், அவன் முகத்தில் தெரியும் உணர்வுகள் போன்றவற்றைக் கொண்டு அந்த மனிதன் எப்படிப்பட்டவன் என்பதைக் கண்டுபிடித்து விடலாம். விசாரணை மேற்கொண்டிருப்பவனுக்கு மேற் சொன்னவை உதவியாக இருக்குன்று கட்டுரை விளக்கியிருந்தது.

“சொல்லுதற்கரிய பிதற்றல்” என்று கூறி அந்தப் பத்திரிகையைத் தூக்கி எறிந்தேன் நான். “எனக்குத் தெரிந்து இது போன்ற ஒரு குப்பையை நான் கண்டதில்லை” & என்று மேலும் கூறினேன்.

“என்ன இது?” என்றார் ஹோம்ஸ்.

பத்திரிகையில் வெளிவந்திருக்கும் கட்டுரையை, சாப்பிடப் பயன்படுத்தும் ஒரு கரண்டியால் சுட்டிக்காட்டி, “நீங்கள் இந்தக் கட்டுரையைப் படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்; படித்ததற்கு ஆதாரமாக ஆங்காங்கே அடையாளங்கள் செய்துள்ளீர்கள். கட்டுரை நன்கு எழுதப்பட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. இருந்தாலும் படிக்கும் போது இக்கட்டுரை, எனக்கு எரிச்சலூட்டுகிறது. நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, எதையும் பார்க்காமல் ஆசிரியர் இக்கட்டுரையை எழுதியுள்ளார். முரண்பாடுகள் நிறைய இருக்கின்றன. செயல்படுத்தக் கூடியதாக எதுவும் இல்லை. இதில் உள்ளவை எதிலும் உண்மையில்லை. நான் ஆயிரம் ரூபாய் பந்தயம் கட்டுகிறேன்” என்றேன் நான்.

“பந்தயத்தில் நீங்கள் கண்டிப்பாகத் தோற்று விடுவீர்கள்” அந்தக் கட்டுரையை எழுதியதே நான்தான்” என்றார் ஷெர்லக் ஹோம்ஸ்.

“நீங்களா?”

“நான் கட்டுரையில் எழுதியிருக்கும் உய்த்துணர்தல் என்பது மிகவும் சாத்தியமானது தான்.”

https://telegram.me/aedahamlibrary

“எப்படி சாத்தியமானது”.

“நான் ஒரு பணியைச் செய்து கொண்டிருக்கிறேன். அந்தப் பணியை நான் மட்டும் தான் செய்கிறேன். நான் என்னைத் தேடி வருபவர்களுக்குத் தக்க அறிவுரை வழங்கும் ஒரு துப்பறியும் நிபுணன். துப்பறிதல் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். இந்த லண்டன் மாநகரில் அரசு சார்ந்த துப்பறியும் நிபுணர்களும், அரசுசாரா துப்பறியும் நிபுணர்களும் நிறையவே இருக்கிறார்கள். தாங்கள் செய்து கொண்டிருக்கும் பணியில் தவறேதும் செய்துவிட்டால் இவர்கள் என்னிடம் வருவார்கள். நான் என்னுடைய அனுபவத்தை வைத்துக் கொண்டு, அவர்களுக்கு வழிகாட்டுவேன். குற்றங்கள் பற்றிய விவரங்களை எல்லாம் நீங்கள் உங்கள் விரல் நுனியில் வைத்திருந்தால், குற்றம் எப்படி நடந்தது என்று கூறிவிட முடியும். ‘லெஸ்ட்ரேட்’ ஓர் ஊர் அறிந்த துப்பறியும் நிபுணர். கள்ள ஆவணம் தொடர்பான ஒரு வழக்கில் அவர் என் உதவியை நாடி வந்தார்” என்று பேச்சை நிறுத்தினார் ஹோம்ஸ்.

“மற்றவர்களைப் பற்றி நீங்கள் ஒன்றும் சொல்ல வில்லையே-?” என்றேன் நான்.

“அவர்கள் தனியார் துப்பறி-யும் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்படுவார்கள். எல்லோரும் ஏதாவது ஒரு சில சங்கடங்களில் மாட்டிக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் சொல்வதை நான் கேட்கிறேன். என் ஆலோசனைகளை அவர்கள் கேட்கிறார்கள். பணம் என் பைக்கு வந்துவிடுகிறது” என்றார் ஹோம்ஸ்.

“மற்றவர்களால் முடியாததை, நீங்கள் வெளியில் எங்கும் செல்லாமல் இங்கிருந்துகொண்டே செய்து விடுவீர்களா? சிக்கலான முடிச்சுகளாக இருந்தாலும் அவற்றை அவிழ்த்து விடுவீர்களா?” என்று நான் ஹோம்ஸ் இடம் கேட்டேன்.

“சரியாகச் சொன்னீர்கள். அப்படிப்பட்ட உள்ளுணர்வு எனக்குள் இருக்கிறது. ஏதாவது சிக்கலான வழக்குகள்

https://telegram.me/aedahamlibrary

எப்போதாவது வரும். அப்போது நான் நேரில் சென்று பார்க்க வேண்டியிருக்கும். என்னிடம் ஒரு விசேட ஞானம் இருக்கிறது. அந்த அறிவு, காரியங்களை ஒளிமயமாக்கி விடும். உங்களால் வெறுத்தொதுக்கப்பட்ட அந்த உய்த்துணரும் தன்மை எனக்கு மிகவும் உறுதுணையாக இருக்கிறது. நடைமுறை சாத்தியமாக எனக்குக் கை கொடுக்கிறது. கூர்ந்து நோக்குதல் என்பதுகூட எனக்கு இரண்டாம் பட்சம்தான். நான் முதன் முதலில் உங்களை சந்தித்த போது, நீங்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து வருகிறீர்களா என்று சரியாகக் கேட்டேன் அல்லவா?" என்றார் ஹோம்ஸ்.

"நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்."

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து தான் வருகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். என்னுடைய எண்ண ஓட்டங்களால் அது சாத்தியமாகிவிட்டது. எனது எண்ண ஓட்டம் இந்தப் பாதையில் தான் பயணித்தது. நீங்கள் ஒரு மருத்துவர்; இராணுவத்தைச் சேர்ந்தவர்; எனவே ஓர் இராணுவ மருத்துவர். உங்கள் முகம் கருத்துக் காணப்பட்டதால் ஏதோ ஒரு வெப்ப மண்டல நாட்டிலிருந்துதான் வருகிறீர்கள் என யூகித்தேன். கருமை நிறம் உங்களுக்கு இயல்பாக உள்ளதல்ல. நீங்கள் அதிகம் சிரமப்பட்டுள்ளீர்கள் என்பதையும் உங்கள் முகம் காட்டிக் கொடுத்தது. உங்கள் இடது கையில் அடிபட்டுள்ளது. ஏனென்றால் நீங்கள் இடது கரத்தை விறைப்பாக வைத்திருந்தீர்கள். ஓர் ஆங்கில இராணுவ மருத்துவர் வேறு எங்கு பணிபுரியச் சென்றிருக்க முடியும்-? நிச்சயமாக அது ஆப்கானிஸ்தான் தான். அங்கு தான் போர் நடந்து கொண்டிருக்கிறது. அதனால் தான் அந்த முடிவுக்கு வந்தேன். என் முடிவைக் கேட்டு நீங்கள் ஆச்சரியப்பட்டீர்கள்."

"நீங்கள் சொன்னபிறகு எல்லாம் எளிமையாகப் புரிகிறது. என்றேன் புன்முறுவலுடன். "நீங்கள் எனக்கு எட்கர் ஆலன் போ&வினுடைய டியூப்பின் என்ற பாத்திரத்தை

https://telegram.me/aedahamlibrary

ஞாபகப்படுத்துகிறீர்கள். கதைகளில் தான் அத்தகைய பாத்திரங்கள் வருமென்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.”

ஷெர்லக் ஹோம்ஸ் எழுந்திருந்து, தன்னுடைய புகைக்கும் குழாயைப் பற்ற வைத்துக் கொண்டார். “டியூப்பினோடு என்னை ஒப்பிட்டுப் பெருமைப்படுத்தி விட்டீர்கள். என்னுடைய கணிப்பில் டியூப்பின் கூட எனக்கு ஒருபடி கீழானவன் தான். அவன் ஒரு மேதை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு அவள் ஒரு மேதையல்ல”

“கபோரியோ&வின் கதைகளை நீங்கள் படித்ததுண்டா? ‘லீகாக்’ ஒரு நல்ல துப்பறியும் நிபுணன் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?” என்று நான் கேட்டேன்.

என் கேள்வியைக் கேட்டு ஹோம்ஸ் ஏளனமாகச் சிரித்தார். பின் கோபமாக என்னிடம் “லீகாக் மோசமான தவறுகளைச் செய்பவன். ஒரே ஒரு குணம்தான் அவனிடம் பாராட்டும் படி உள்ளது. அது அவனிடமுள்ள ஆற்றல். கபோரியாவின் புத்தகம் என்னை நொந்துபோக வைத்துவிட்டது. அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி ஒரு கைதியை எப்படி அடையாளம் காண்பது என்பதுதான். லீகாக் அதற்கு எடுத்துக்கொண்ட அவகாசம் ஆறுமாதங்கள். நானாக இருந்திருந்தால் 24 மணி நேரத்தில் அந்தப் பணியைச் செய்திருப்பேன். கபோரியோ&வின் புத்தகம் ஒரு துப்பறியும் நிபுணன் எதையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கும் ஒரு புத்தகம்” என்றார் ஹோம்ஸ்.

பேச்சை வேறு திசைக்கு மாற்ற வேண்டும் என்று நினைத்தேன். ஜன்னல் வழியாகப் பார்த்தபோது, சாலையில் நடப்பவன் ஏதோ ஒரு வீட்டைத் தேடுகிறான் என்று அறிந்து கொண்டேன். அவன் கையில் ஒரு நீலநிறக் கடித உறை ஒன்று வைத்திருந்தான். கண்டிப்பாக அதில் ஏதோ ஒரு செய்தி இருக்க வேண்டும் என்று நான் நினைத்தேன்.

https://telegram.me/aedahamlibrary

“நீங்கள் அந்த கடற்படை சார்ஜென்ட்டைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?” என்று என்னைக் கேட்டார் ஹோம்ஸ். என் மனதில் உள்ளதை அப்படியே சொல்லிவிட்டார் அவர்.

அந்த மனிதன் சாலையைக் கடந்து வந்துவிட்டான். எங்கள் வீட்டின் கீழ்ப்புறத்தில் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. அவன் மேலே ஏறி வரும் ஓசையும் கேட்டது.

“ஷெர்லக் ஹோம்ஸ் என்பவருக்காக” என்று சொல்லி அந்த மனிதன் கடிதத்தை ஹோம்ஸ் இடம் கொடுத்தான். நீங்கள் என்ன வேலை பார்க்கிறீர்கள் என்று கேட்டார் ஹோம்ஸ். “கமிஷனராக வேலை பார்க்கிறேன். என்னுடைய சீருடையைத் தைப்பதற்காகக் கொடுத்துள்ளேன். நான் ஒரு சார்ஜென்ட். கடற்படையின் காலாட்படைப் பிரிவில் பணிபுரிகிறேன்” என்று கூறி இரண்டு குதிகால்களையும் சேர்த்து வைத்து கையைத் தூக்கி ஒரு வணக்கம் தெரிவித்துவிட்டுப் போய்விட்டான் அந்த மனிதன்.

###

https://telegram.me/aedahamlibrary

லாரிஸ்ட்டன் தோட்டத்தின் மர்மம்

நடைமுறை சாத்தியமான கோட்பாடுகளை மட்டும் தான் என் நண்பர் ஹோம்ஸ் யோசிக்கிறார். இதை நான் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். அலசி ஆராயும் அவருடைய திறமையை நான் மதிக்க வேண்டும். முன் கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட சம்பவங்களாக இருக்குமோ என்ற சந்தேகத்தை நான் இப்போது மறந்துவிட்டேன். அவரை நான் பார்த்த போது, அந்த சார்ஜென்ட் கொண்டு வந்து கொடுத்த கடிதத்தைப் படித்து முடித்திருந்தார் ஹோம்ஸ்.

“வந்திருப்பவன் கடற்படையில் பணிபுரியும் சார்ஜென்ட் என்று எப்படிக் கண்டுபிடித்தீர்கள்” என்று நான் ஹோம்ஸ்ஜக் கேட்டேன். நீங்கள் என் எண்ண ஓட்டத்தைக் கலைத்து விட்டீர்கள் என்று சொன்ன ஹோம்ஸ் “அவன் கடற்படையில் ஒரு சார்ஜென்ட் என்பது உங்களுக்குத் தெரியாதா?” என்று என்னைக் கேட்டார்.

“உண்மையில் எனக்குத் தெரியாது” என்று நான் கூறினேன்.

“அது மிகவும் சுலபம். இரண்டும், இரண்டும் சேர்ந்தால் நான்கு என்று சொல்வது எவ்வளவு சுலபமோ அது போன்று தான் இதுவும். அந்த சார்ஜென்ட் சாலையைக் கடந்து வரும் போது அவன் கையில் நீல நிறத்தில் நங்கூர அடையாளம் பச்சை குத்தப்பட்டிருப்பதைப் பார்த்தேன். கன்னத்திலிருந்த கிருதாவைப் பார்த்து அவன் இராணுவத்தில் பணிபுரிகிறான் என்று கண்டுபிடித்தேன். இராணுவ முறைப்படி அவன் கிருதா வைத்திருந்தான். நங்கூரச் சின்னம் கடற்படைக்குரியது. அவன் ஓரளவு சுய கௌரவம் உடையவனாகக் காணப்பட்டான். அவன் தன் கைப்பிரம்பை சுழற்றும் முறையிலிருந்து அவன் கடற்படையில் ஒரு கௌரவமான பதவியில் உள்ளவன் என்பதை என்னால் யூகிக்க முடிந்தது. அவன் சார்ஜென்ட்

https://telegram.me/aedahamlibrary

என்பதை இவற்றைக் கொண்டு கண்டுபிடித்துவிட்டேன்” ஹோம்ஸ் பேசி முடித்தார்.

“ஆச்சரியம்” என்று வியந்தேன் நான்.

“குற்றவாளிகள் யாருமில்லை என்று சற்றுமுன் தான் கூறினேன். நான் சொன்னது தவறு” என்று கூறிய ஹோம்ஸ் அந்த சார்ஜென்ட் கொண்டுவந்து கொடுத்த கடிதத்தை என் முன் நீட்டினார்.

நான் கடிதத்தை வாங்கி உரக்கப் படித்தேன். கடிதத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

“அன்பிற்குரிய திரு. ஷெர்லக் ஹோம்ஸ் அவர்களுக்கு, இரவு நடக்கக் கூடாத சம்பவம் ஒன்று நடந்து விட்டது. பிரிக்ஸ்டன் சாலையில் உள்ள, எண் 3, லாரிஸ்டன் தோட்டம் என்ற இடத்தில் நடந்த சம்பவம் இது. ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த காவலர் நள்ளிரவு இரண்டு மணிக்கு, வீட்டினுள் விளக்கு எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்துள்ளார். காலியாக இருக்கும் வீடு என்பதால் ஏதோ அசம்பாவிதம் நடந்துள்ளது என்று யூகித்திருக்கிறார். கதவு திறந்தேயிருந்தது. வெற்றிடமாக இருந்த முன் அறையில் ஒரு கனவானின் உடல் கிடந்தது. அவர் உடையில் வைத்திருந்த அறிமுக அட்டையில் ஈநோக் ஜெ. டிரப்பர், கிளீவ்லன்ட், ஓஹியோ, யு.எஸ்.ஏ என்று அச்சிடப்பட்டிருந்தது. திருட்டு ஏதும் நடக்கவில்லை. அறையில் இரத்தக் கறை இருந்தது; ஆனால் இறந்து கிடந்த மனிதர் மீது எந்தக் காயமும் இல்லை. அவர் எப்படி அங்கு வந்தார் என்பது தெரியவில்லை. சம்பவம் ஒரு பெரிய மர்மமாக இருக்கிறது. தாங்கள் பகல் 12 மணிக்கு முன்பாக இங்கு வந்தால் என்னைப் பார்க்கலாம். நீங்கள் வரும் வரை நான் எந்தப் பொருளையும் தொடாமல் இருக்கிறேன். உங்களால் வர இயலாவிட்டால் நான் முழு விவரங்களையும் பின்னால் தருகிறேன். நீங்கள் உங்கள் ஆலோசனையை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் உண்மையுள்ள
டோபியாஸ் கிரக்சன்.”

https://telegram.me/aedahamlibrary

“கிரக்சன் ஸ்காட்லன்ட் யார்டில் உள்ள ஒரு திறமையான துப்பறியும் நிபுணர். அவரும் லெஸ்ட்ரேடும் கூட்டாளிகள். லெஸ்ட்ரேடும் ஒரு துப்பறியும் நிபுணர்தான். இருவரும் துரிதமாகச் செயல்படுபவர்கள்; பலசாலிகள். ஆனால் சம்பிரதாயமாகச் செயல்படுபவர்கள். ஒருவர் கத்தியை மற்றவர் வைத்திருப்பார். பொறாமை குணம் உடையவர்கள். கொலையை மோப்பம் பிடித்துவிட்டால் அவர்களுக்குள் நான், நீ என்று போட்டி ஏற்படும்” என்றார் ஹோம்ஸ்.

“ஒரு நிமிடம் கூட நாம் தாமதிக்கக் கூடாது. நான் சென்று ஒரு வாகனத்திற்கு ஏற்பாடு செய்யட்டுமா?” என்று ஹோம்ஸ்-ஐக் கேட்டேன்.

“போகலாமா, வேண்டாமா என்று யோசிக்கிறேன்” என்றார்.

“ஹோம்ஸ் நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த ஒரு சந்தர்ப்பம் இது” என்றேன் நான்.

“நண்பரே, இதில் எனக்கு என்ன வந்தது? நான் சென்று துப்பறிந்து உண்மையைக் கண்டுபிடிப்பதாக வைத்துக் கொள்வோம். அதற்கான நல்ல பெயரை கிரக்சனும், லெஸட்ரேடும் தட்டிச் சென்று விடுவார்கள். நான் அதிகார பூர்வமற்ற ஒரு மனிதன் தானே?” என்றார் ஹோம்ஸ் சலித்துக் கொண்டே.

“ஆனால் அவர் உதவி செய்யும்படி உங்களைக் கெஞ்சுகிறார்” என்றேன் நான்.

“ஆம். நான் அவரைவிடத் திறமைசாலி என்று கிரக்சன் நம்புகிறார். ஆனால் ஒரு மூன்றாவது மனிதருக்கு எதையும் விட்டுக் கொடுக்க மாட்டார். என்ன இருந்தாலும் நாமும் சென்று பார்க்கலாம். என்னுடைய வழியில் நான் முயன்று பார்க்கிறேன். அவர்களால் ஒன்றும் முடியவில்லையென்றால், நான் அவர்களைப் பார்த்து சிரிப்பதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு” என்றார் ஹோம்ஸ்.

தனது ஓவர்கோட்டை எடுத்து அணிந்து கொண்டு புறப்படத் தயாரானார் ஹோம்ஸ். என்னைப் பார்த்து

https://telegram.me/aedahamlibrary

“உங்களது தொப்பியை எடுத்துக்கொண்டு புறப்படுங்கள்” என்றார்.

“நானும் உடன் வர வேண்டுமென்று விரும்புகிறீர்களா?”

“உங்களுக்கு வேறு வேலையில்லை என்றால் நீங்களும் உடன் வாருங்கள்” என்றார் ஹோம்ஸ். பிரிக்ஸ்ட்டன் சாலையை நோக்கி நாங்கள் புறப்பட்டுச் சென்றோம்.

வானம் மேகமூட்டமாக இருந்தது. வீடுகளின் கூரைகளில் பனி மூடியிருந்தது. என் நண்பர் ஹோம்ஸ் வயலினில் உள்ள கிரீமோனா, ஸ்டிராடிவேரியஸ், அமெடி போன்ற வகைபாடுகள் பற்றியும் அவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகள் குறித்தும் ஏதேதோ பேசிக்கொண்டே வந்தார். நான் அமைதியாக இருந்தேன். மந்தமான வானிலை எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

“நீங்கள் எதைப்பற்றியும் யோசித்ததாகத் தெரியவில்லை” என்று கூறி ஹோம்ஸின் வயலின் பற்றிய நுண்ணாய்வுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தேன்.

“எந்தப் புள்ளி விவரமும் இல்லை; போதிய சாட்சியங்களும் இல்லை. அவை இல்லாமல் நாம் ஒரு முடிவுக்கு வந்தால், முடிவு ஒரு தலைப்பட்சமாகப் போய்விடும்” என்றார் ஷெர்லாக் ஹோம்ஸ்.

“புள்ளி விவரங்கள் விரைவில் உங்களுக்குக் கிடைக்கும். இது தான் பிரிக்ஸ்ட்டன் சாலை. அதுதான் இறந்தவரின் உடல் இருக்கும் வீடு” என்று ஹோம்ஸ் வீட்டைக் காண்பித்தேன். “நிறுத்து, நிறுத்து” என்று ஒரு நூறு கஜத்திற்கு முன்னதாகவே கோச் வண்டியை நிறுத்தும்படி வண்டிக்காரனுக்குக் கட்டளை பிறப்பித்தார் ஹோம்ஸ். அங்கிருந்து சம்பவம் நடந்த வீடு வரை நாங்கள் இருவரும் நடந்தே சென்றோம்.

லாரிஸ்ட்டன் தோட்டத்தின் 3ஆம் இலக்கமுடைய வீடு கெட்ட சகுனம் பிடித்த வீடாகவும், அச்சுறுத்தும் வீடாகவும் காட்சியளித்தது. அந்த வீடு அதைப்போன்ற நான்கு வீடுகளில் ஒன்று. பிரிக்ஸ்ட்டன் சாலையிலிருந்து பின்னால் சற்று தள்ளி இருந்தது. நான்கு வீடுகளில்

https://telegram.me/aedahamlibrary

இரண்டில் குடியிருந்தார்கள். இரு வீடுகள் காலியாக இருந்தன. மூன்று அடுக்கு ஜன்னல்கள் வீடுகளில் காணப்பட்டன. வாடகைக்கு விடப்படும் என்ற அட்டையும் தொங்கிக் கொண்டிருந்தது. முன்பக்கத் தோட்டம் வீடுகளை சாலையிலிருந்து பிரித்தது. வீடுகளுக்கிடையே ஒரு குறுகலான நடைபாதை இருந்தது. நடைபாதை களிமண்ணாலும், கப்பிக் கற்களாலும் உருவாக்கப் பட்டிருந்தது. அந்த இடம் சற்று சரிவான இடம். இரவு முழுவதும் பெய்த மழைநீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. தோட்டத்தைச் சுற்றியிருந்த மதில்சுவர் மூன்றடி உயரத்திற்கு செங்கற்களால் உருவாக்கப்பட்டிருந்தது. மரத்தாலான சுற்றுவேலி மதில்சுவரின் மீது காணப்பட்டது. அந்த மதில் சுவரில் சாய்ந்தபடி ஒரு காவலர் நின்று கொண்டிருந்தார். உள்ளே ஒன்று காத்திருந்தது.

ஹோம்ஸ் உடனடியாக வீட்டினுள் சென்று என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்வார் என்று நான் எதிர்பார்த்தேன். எனது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக ஷெர்லக் ஹோம்ஸ் நடை பாதையைப் பார்த்தார். தரையைப் பார்த்தார். வளர்ந்திருந்த புற்களைப் பார்வையிட்டார். இரண்டு முறை சற்று நிதானித்தார். ஒரு முறை தான் பார்வையிட்டவற்றில் திருப்தியடைந்தது போல் புன்முறுவல் செய்தார். பல காலடிகள் அந்தக் களிமண்ணில் தென்பட்டன. காவல் துறையினர் உள்ளே செல்வதும், வெளியே வருவதுமாக இருந்ததால் எவ்வளவு பேர் அந்த இடத்திற்கு வந்து சென்றனர் என்பதை கணிக்க முடியவில்லை. என்னால் காண முடியாத ஒன்றை என் நண்பர் ஹோம்ஸ் கண்டுபிடித்து விட்டார் என்பதை என்னால் உணர முடிந்தது. வீட்டின் வாயிலில் வெண்மை நிறமுகத்துடனும், செம்மை நிறத் தலை முடியுடனும் கூடிய உயரமான ஒரு நபர் கையில் ஒரு நோட்டுப் புத்தகத்துடன் எங்களை வரவேற்றார். நண்பர் ஹோம்ஸ் உடன் கைகுலுக்கிய அவர் ‘தங்கள் வருகைக்கு மகிழ்ச்சி’ என்று கூறிவிட்டு “நான் எதையும்

https://telegram.me/aedahamlibrary

தொடவில்லை. அப்படியே வைத்துள்ளேன்” என்று கூறினார்.

‘ஒன்றைத் தவிர’ என்றார் ஹோம்ஸ் நடைபாதையைக் காட்டிய படியே. “ஒரு எருமைக் கூட்டம் நடந்து சென்றிருந்தால் கூட இவ்வளவு மோசமாக நடைபாதை பாதிக்கப்பட்டிருக்காது. கிரக்சன், நீங்கள் ஒரு முடிவுக்கு வந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன் என்றார் ஹோம்ஸ்.

“செய்ய வேண்டிய வேலைகள் வீட்டினுள் நிறைய இருக்கின்றன. என்னுடன் பணிபுரியும் லெஸ்ட்ரேட் இங்கு தான் இருக்கிறார். இந்த வழக்கில் அவரைத் தான் நான் நம்பியிருக்கிறேன்” என்றார் கிரக்சன் என்ற அந்தத் துப்பறியும் நிபுணர்.

மனம் ஒவ்வாதவர்போல் தன் புருவங்களை உயர்த்திய ஹோம்ஸ், கிரக்சனிடம் இவ்வாறு கூறினார். “நீங்களும், லெஸ்ட்ரேடும் இருக்கும்போது ஒரு மூன்றாவது மனிதருக்கு இங்கு என்ன வேலை இருக்கப் போகிறது?”

கிரக்சன் தன் கைகளைத் தேய்த்துக் கொண்டே “எங்களால் முடிந்தவை அனைத்தையும் நாங்கள் செய்துவிட்டோம். ஆனால் இது ஒரு தனித் தன்மையுடைய, விந்தையான வழக்கு. இதில் உங்களுக்கு ஆர்வம் இருக்குமென்று நினைக்கிறேன்” என்றார்.

“நீங்கள் வண்டியிலா வந்தீர்கள்?” என்று கிரக்சனைப் பார்த்துக் கேட்டார் ஹோம்ஸ்.

“இல்லை” என்றார் கிரக்சன்.

“லெஸ்ட்ரேட் எப்படி வந்தார்?”

“அவரும் வண்டியில் வரவில்லை” என்று சொன்னார் கிரக்சன்.

“நாம் இப்போது வீட்டினுள் செல்வோம்” என்று சொல்லிய ஹோம்ஸ் கிரக்சனுடன் வீட்டினுள் நுழைந்தார்.

புழுதி நிறைந்த ஒரு நடைபாதை அலுவல் அறைக்கும், சமையல் அறைக்கும் எங்களைக் கொண்டு சென்றது.

https://telegram.me/aedahamlibrary

வீட்டினுள் இரண்டு கதவுகள் இருந்தன. ஒரு அறையின் கதவு திறக்கப்படாமலேயே வெகுநாட்கள் இருந்திருக்க வேண்டும். மற்றொரு கதவு சாப்பாட்டுக கூடத்திற்குச் செல்லும் கதவு. சாப்பாட்டுக் கூடத்தில் தான் அந்தத் துயரச் சம்பவம் நடந்திருக்க வேண்டும். ஹோம்ஸ் சம்பவம் நடந்த அறைக்குள் சென்றார். நானும் அவரைப் பின் தொடர்ந்தேன்.

துயரச் சம்பவம் நடைபெற்ற அறை சற்றுப் பெரிதாக, சதுர வடிவில் இருந்தது. நாற்காலிகள் போன்ற எந்தவித சாமான்களும் அங்கு இல்லாத காரணத்தால் அறை மிகப் பெரிதாக காட்சியளித்தது. சுவரில் அசிங்கமான, ஓவியம் போன்ற ஒரு காகிதம் ஒட்டப்பட்டிருந்தது. அதில் பூஞ்சணம் படிந்திருந்தது. காகிதத்தின் பெரும்பகுதி பிய்ந்து அதிலேயே தொங்கிக் கொண்டிருந்தது. ஒட்டப்பட்டிருந்த மஞ்சள் பசை வெளியே தெரிந்தது. கதவின் எதிர்ப்புறம் குளிர் காய்வதற்கான கணப்பு தென்பட்டது. கணப்பைச் சுற்றிலும் சலவைக் கல் போன்ற ஒரு விதக் கல் பதிக்கப்பட்டிருந்தது. அந்த அறையில் இருந்தது ஒரே ஜன்னல். அதன் கதவுகளில் புழுதி படர்ந்து பழுப்பு நிறமாகக் காட்சியளித்தது.

இதையெல்லாம் நான் பின்னால் தான் நோட்டம் விட்டேன். தற்போது என் கவனமெல்லாம் தனியாகக் கிடந்த அந்த உடல் மீது தான். அந்த மனிதரின் கண்கள் கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தன. இறந்து கிடந்த அந்த மனிதருக்கு 43 அல்லது 44 வயதிருக்கலாம். அகன்ற தோள்களையுடைய, ஒல்லியும் தடிமனும் இல்லாத ஓர் உருவம். தலைமுடி கருமை நிறமாகக் காணப்பட்டது. கோட்டும், அதன் மீது வெயிஸ்ட் கோட்டும் அணிந்திருந்தார். கைகளை விரித்துக் கொண்டு படுத்திருந்தார். அவர் விழுந்த கிடந்த இடத்திற்கருகில் உயரமான ஒரு தொப்பி காணப்பட்டது. கால்கள் ஒன்றுடன் ஒன்று பின்னப் பட்டிருந்தன. இறப்பதற்கு முன் துன்பத்தை அனுபவித்திருக்க வேண்டும். கடுமையான அவருடைய முகத்தில் கலவரத்திற்கான அறிகுறிகள் தென்பட்டன. வெறுப்பும் முகத்தோற்றத்தில் தெரிந்தது.

https://telegram.me/aedahamlibrary

குறுகலான நெற்றியும், நீண்ட தாடையும், சப்பையான மூக்கும் வாலில்லா மனிதக்குரங்கு போன்ற ஒரு தோற்றத்தை அவருக்குக் கொடுத்தன. நான் சாவைச் சந்தித்துள்ளேன். ஆனால் இவ்வளவு பயங்கரமான ஒரு சாவை இதற்குமுன் நான் கண்டதில்லை. அதுவும் லண்டன் மாநகரில், ஒரு பிரதான சாலையில் இது போன்றதொரு சாவை நான் கண்டதில்லை.

ஒல்லியான, மரநாய் போன்ற தோற்றமுடைய லெஸ்ட்ரேட் வாயிற்படியில் நின்று கொண்டு என்னையும், ஹோம்ஸ் அவர்களையும் வரவேற்றார்.

“இந்த வழக்கு ஒரு கலக்கத்தை ஏற்படுத்தும்; இது போன்றதோர் வழக்கை நான் சந்தித்ததில்லை” என்றார் லெஸ்ட்ரேட்.

“எந்தத் தடையமும் இல்லை” என்றார் கிரக்சன்.

“எதுவுமே இல்லை” என்று அதை ஆமோதித்தார் லெஸ்ட்ரேட்.

இறந்து கிடந்த மனிதரின் உடலருகே சென்ற ஹோம்ஸ் அந்த உடலை நன்கு கூர்ந்து கவனித்தார். உடலின் அருகே இரத்தம் சிதறியிருந்ததைப் பார்த்த ஹோம்ஸ் “இறந்துபோனவரின் உடலில் காயங்கள் ஏதுமில்லை என்பதை உறுதி செய்து விட்டீர்களா?” என்று கேட்டார்.

“நிச்சயமாக” என்று இரண்டு துப்பறியும் நிபுணர்களும் ஒரே குரலில் சொன்னார்கள்.

அப்படியென்றால் அந்த இரத்தம் வேறு ஒரு இரண்டாம் நபருடையது; கொலைகாரனின் இரத்தம்; கொலையென்று ஒன்று நடந்திருந்தால். உட்ரெக்ட் என்ற இடத்தில் 1934ஆம் ஆண்டில் வான் ஜேன்சன் என்பவர் இறந்து போன சம்பவத்தை இந்தச் சம்பவம் எனக்கு ஞாபகப்படுத்துகிறது. உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா கிரக்சன்?” என்று கிரக்சனைப் பார்த்துக் கேட்டார் ஹோம்ஸ்.

“இல்லை” என்றார் கிரக்சன்.

https://telegram.me/aedahamlibrary

“அந்த வழக்கை நன்றாகப் படித்துப் பாருங்கள். சூரியனுக்குக் கீழ் நடக்கும் சம்பவங்களில் புதிதாக நடப்பதற்கு இடமில்லை. எல்லாம் முன்பே நடந்துள்ளவைதான்” என்றார் ஹோம்ஸ்.

பேசிக் கொண்டிருக்கும் போதே ஹோம்ஸ்&இன் விரல்கள் இறந்து போன மனிதரிடம் வேறு ஏதாவது தடயங்கள் காணப்படுகின்றனவா என்று ஆராய்ந்தன. கடைசியாக இறந்து போனவரின் உதடுகளை முகர்ந்து பார்த்தார் ஷெர்லக் ஹோம்ஸ். அது மட்டுமில்லாமல் இறந்து போனவரின் காலணிகளின் அடிபாகத்தைப் பார்வையிட்டார்.

“இறந்து போனவரை யாரும் அசைத்துப் பார்க்கவில்லையே?” என்றார் ஹோம்ஸ்.

“நாங்கள் பரிசோதனை செய்வதற்கான, அதற்குத் தேவையான அசைவுகளைத் தான் செய்தோம். வேறு ஒன்றும் அதிகமாகச் செய்துவிடவில்லை” என்று இரு துப்பறியும் நிபுணர்களும் கூறினார்கள்.

“வேறு ஒன்றும் பார்ப்பதற்கில்லை. உடலை சவக்கிடங்கிற்கு எடுத்துச் சென்று விடலாம்” என்றார் ஹோம்ஸ்.

உடலை தூக்கிச் செல்ல ‘ஸ்ட்ரெச்சர்’ ஒன்று கிரக்சனிடம் இருந்தது. தூக்கிச் செல்ல நான்கு ஆட்களும் இருந்தனர். ஆணைக்கிணங்க இறந்த மனிதரின் உடலை அவர்கள் வந்து தூக்கிச் சென்றனர். ஸ்ட்ரெச்சரைத் தூக்கும் போது மோதிரம் ஒன்று தரையில் உருண்டோடியது. வலிந்து அதையெடுத்த லெஸ்ட்ரேட் ஆச்சரியத்துடன் பார்த்தார்.

“ஒரு பெண்ணின் திருமணமோதிரம். இங்கு ஒரு பெண் இருந்திருக்கிறாள்” என்று வியப்பு மேலிடக் கத்தினார் லெஸ்ட்ரேட். லெஸ்ட்ரேட் அந்த மோதிரத்தைத் தன் உள்ளங்கையில் வைத்திருந்தார். நாங்கள் அனைவரும் அவர் அருகில் சென்று அதைப் பார்த்தோம். அந்த மோதிரம் ஒரு பெண்ணின் கையை அலங்கரித்த மோதிரம்தான் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

https://telegram.me/aedahamlibrary

“இந்த மோதிரம் வழக்கை மேலும் சிக்கலாக்குகிறது.” ‘இது முன்பே சிக்கலாகிவிட்ட வழக்கு. கடவுளுக்குத்தான் வெளிச்சம்‘ என்றார் கிரக்சன்.

இந்த மோதிரம் வழக்கை எளிமையாக்கவில்லையா? இதையே பார்த்துக் கொண்டிருந்தால் எதையும் புதிதாகத் தெரிந்து கொண்டுவிட முடியாது. இறந்து போனவரின் சட்டைப் பையில் என்னென்ன பொருட்கள் இருந்தன-?” என்று கேட்டார் ஷெர்லக் ஹோம்ஸ்.

மாடிப்படிகளில், கீழ்ப்படியில் இருந்த பொருட்களை சுட்டிக்காட்டி “இதோ இருக்கின்றன அந்தப் பொருட்கள். ஒரு தங்கத்தால் ஆன கைக்கடிகாரம்; லண்டன் பராட் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டது; ஒரு தங்கச் சங்கிலி; முகவரி அட்டை சேமித்து வைக்கும் ஒரு தோல் பை; ஒரு தங்க ஊசி & வேட்டை நாயின் தலைச் சின்னத்துடனும், இரத்தினங்கள் பதித்த கண்களுடன் காணப்பட்டது. E.J.D என்ற முகவரி அட்டை; (யூனோக் ஜெ. டிரப்பர் என்பதன் சுருக்கம்) சில்லறையாக ஏழு பவுண்ட் 11 பென்ஸ் நாணயங்கள். பொக்கேஷியோவின் ‘டெக்கமரான்’ என்ற புதினம் (பாக்கெட் பதிப்பு); அதன் முதல் பக்கத்தில் ஜோசப் ஸ்டேகர்சன் என்ற பெயர் காணப்பட்டது. இரண்டு கடிதங்கள்; ஒன்று E.J. டிரப்பர் என்பவருக்கும் மற்றது ஜோசப் ஸ்டேகர்சன் என்பவருக்கும் எழுதப்பட்டது.”

“எந்த விலாசத்திற்கு எழுதப்பட்டது-?” என்று கேட்டார் ஹோம்ஸ். அமெரிக்கன் எக்ஸ்சேஞ்ஜ், ஸ்ட்ரேண்ட் என்ற விலாசத்திற்கு எழுதப்பட்டது. குயான் நீராவிக் கப்பல் கம்பெனி; லிவர்பூல் என்ற பெயரும் காணப்பட்டது. அதிர்ஷ்டம் கெட்ட இந்த மனிதர் நியூயார்க் நகருக்குப் புறப்பட இருந்தார். ஆனால் புறப்படுவதற்கு முன் அவருக்கு இந்த கதி நேர்ந்துவிட்டது”

“யார் இந்த ஸ்டேகர்சன் என்று விசாரித்து விட்டீர்களா?” என்றார் ஹோம்ஸ்.

https://telegram.me/aedahamlibrary

“பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்துள்ளேன். எங்கள் சிப்பந்திகளில் ஒருவரை அமெரிக்கன் எக்ஸ்சேஞ்சுக்கு அனுப்பியுள்ளேன். அவர் இன்னும் திரும்பவில்லை” என்றார் கிரக்சன்.

“கிளீவ்லன்டுக்கு, செய்தி அனுப்புவீர்களா-?” என்றார் ஹோம்ஸ்.

“இன்று காலையில் தந்தி அனுப்பியுள்ளேன்” என்றார் கிரக்சன்,

“தந்தியில் எந்தவிதமான வாசகங்களைப் பயன்படுத்தியுள்ளீர்கள்?”

“இருக்கும் சூழ்நிலையை விளக்கி, எங்களுக்கு எந்த வகையில் உதவி செய்ய முடியும் என்று கேட்டிருக்கிறோம்.”

“எது முக்கியம் என்று உங்களுக்குத் தோன்றுகிறதோ அதைப் பற்றிக் குறிப்பிட்டு ஏதும் செய்தி அனுப்பவில்லையா?”

“நான் ஸ்டேகர்சன் என்பவரைப் பற்றிக் கேட்டிருந்தேன்.”

“அவ்வளவு தானா? இந்த வழக்கு எங்கு ஊசலாடுகிறது என்பதைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா-? நீங்கள் மறுபடியும் தந்தி அனுப்புவீர்களா?”

“எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லி விட்டேன்” என்று அதிகார தோரணையில் பதில் சொன்னார் கிரக்சன்.

ஹோம்ஸ் தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டார். எதையோ சொல்ல முயற்சித்தார்; அதற்குள் வேறு அறையிலிருந்த லெஸ்ட்ரேட் அங்கு வந்துவிட்டார். தனக்குள் திருப்தியடைந்தவராக லெஸ்ட்ரேட் பேச ஆரம்பித்தார்.

“கிரக்சன், நான் மிக முக்கியமான ஒரு செய்தியைக் கொண்டு வந்துள்ளேன். சுவற்றில் எழுதப்பட்டிருந்த ஒரு

https://telegram.me/aedahamlibrary

வாசகத்தை நாம் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டோம். அதை நான் கண்டு பிடித்துவிட்டேன்"

லெஸ்ட்ரேடின் கண்கள் ஒளி வீசின. முக்கியமானதோர் செய்தியைக் கொண்டு வந்தது குறித்து அவருக்கு உள்ளுக்குள் மகிழ்ச்சி. 'இங்கே வந்து பாருங்கள்' என்று அறைக்குள் அழைத்தார் லெஸ்ட்ரேட். "அங்கேயே நின்று கொண்டு பாருங்கள்" என்று கூறிவிட்டு, ஒரு தீக்குச்சியை எடுத்துத் தன் காலணிகளில் ஒன்றின் மீது உரசி "அந்தச் சுவற்றைப் பாருங்கள்" என்றார்.

சுவற்றில் ஓவியம் போன்று இருந்த ஒரு காகிதம் பிய்ந்து தொங்கிக் கொண்டிருந்தது என்று நான் முன்பு குறிப்பிட்டேன். அது கிழிந்து தொங்கிக் கொண்டிருந்த காலியிடத்தில் இரத்தச் சிவப்பு நிறத்தில் 'RACHE' என்று எழுதப்பட்டிருந்தது.

"இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார் லெஸ்ட்ரேட். "இந்த வாசகம் வெளிச்சம் அதிகம் படாத ஓரிடத்தில் இருந்ததால் அதை நாம் தவற விட்டு விட்டோம். கொலையாளி அதைத் தன் சொந்த இரத்தத்தில் எழுதியிருக்கிறான் அல்லது எழுதியிருக்கிறாள். எனவே தற்கொலை என்பது அடிபட்டுப் போகிறது. எதற்காக அந்த வாசகம் ஒரு மூலையில் எழுதப்பட்டுள்ளது? அதை நான் இப்போது சொல்கிறேன். அருகில் இருக்கும் மெழுகுத் திரியைப் பாருங்கள். அந்த மூலையில் வெளிச்சம் அப்போது நன்கு வந்தது. அதனால் கொலையாளி அந்த மூலையில் வாசகத்தை எழுதியிருக்கிறான் அல்ல எழுதியிருக்கிறாள்." பேசி முடித்தார் லெஸ்ட்ரேட்.

"அதற்கு என்ன பொருள்? நீங்கள் என்ன கண்டு பிடித்தீர்கள்?-" என்று லெஸ்ட்ரேடைக் கேட்டார் கிரக்சன்.

"என்ன பொருள் என்றா கேட்கிறீர்கள். அதை எழுதியவர் "Rachel" என்ற ஒரு பெண்ணின் பெயரை எழுத முயற்சித்திருக்க வேண்டும். முழுவதுமாக எழுதி

https://telegram.me/aedahamlibrary

முடிப்பதற்குள் ஏதோ இடர்ப்பாடு ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த வழக்கு முடியும் போது “RACHEL” என்ற பெண் இதில் தொடர்புடையவளாக இருப்பாள் என்பது உங்களுக்குத் தெரியவரும். நீங்கள் இப்போது சிரிப்பீர்கள். திருவாளர் ஹோம்ஸ் அவர்களே. நீங்கள் அதி புத்திசாலியாக இருக்கலாம். ஆனால் பழைய வேட்டை நாய், வேட்டை நாய் தான்” என்று தன் பேச்சை முடித்தார் லெஸ்ட்ரேட்.

பொங்கி வந்த சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்து விட்டார் ஹோம்ஸ். “நீங்கள் தான் அந்த வாசகத்தைக் கண்டு பிடித்தீர்கள் திரு. லெஸ்ட்ரேட். கொலையில் தொடர்புடைய மற்றொருவர் அதை எழுதியிருக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். சம்பவம் நடந்த இடத்தை நான் இன்னும் சரியாகப் பார்க்கவில்லை. நீங்கள் அனுமதியளித்தால் இப்போது உள்ளே சென்று பார்த்து வருகிறேன்” என்றார் ஹோம்ஸ்.

அவ்வாறு சொல்லிக் கொண்டே அளக்கும் நாடாவையும், பூதக் கண்ணாடியையும் தன் சட்டைப் பையிலிருந்து வெளியே எடுத்தார் ஷெர்லக் ஹோம்ஸ். அந்த இரண்டு கருவிகளையும் வைத்துக் கொண்டு சம்பவம் நடந்த அறையை ஆய்வு செய்யத் தொடங்கினார். சில சமயங்களில் நின்றார்; பின் நடந்தார்; சில சமயங்களில் குனிந்தார்; மூன்றாம் நபர்களான நாங்கள் இருக்கிறோம் என்பதை மறந்து தன் காரியத்திலேயே முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் ஹோம்ஸ். அளக்கும் நாடாவை வைத்துக்கொண்டு பல இடங்களில் அளந்து பார்த்தார். ஓரிடத்தில் சாம்பல் நிறமுள்ள தூசியைத் தரையிலிருந்து சேகரித்து ஒரு உறையில் வைத்துக் கொண்டார். கடைசியாகத் தன் பூதக் கண்ணாடியின் உதவியோடு சுவரில் எழுதப்பட்டிருந்த வாசகத்தை நன்கு ஆய்வு செய்தார். தன் வேலையில் திருப்தியடைந்தவராக அளக்கும் நாடாவையும், பூதக் கண்ணாடியையும் திரும்பவும் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டார்.

https://telegram.me/aedahamlibrary

“புத்திசாலித்தனம் என்பது சிரத்தை எடுத்துக் கொள்வது என்று பலர் சொல்கிறார்கள். அது ஒரு மோசமான விளக்கம். ஆனாலும் அது துப்பறியும் தொழிலில் நன்கு வேலை செய்கிறது-” என்றார் ஹோம்ஸ்.

லெஸ்ட்ரேடும், கிரக்சனும் தொழில்முறை சாரா துப்பறியும் நிபுணரான ஷெர்லக் ஹோம்ஸ் எடுத்துக் கொண்ட முயற்சியை ஆர்வத்துடனும், சற்று வெறுப்புடனும் கவனித்தார்கள். ஹோம்ஸ் மேற்கொண்ட ஒவ்வொரு சிறு செயல்பாடும், நடைமுறை சாத்தியமான ஒரு தீர்வுக்குத்தான் என்பதை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

“ஐயா, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?” என்று ஹோம்ஸ்&ஐ லெஸ்ட்ரேடும், கிரக்சனும் ஒரே சமயத்தில் கேட்டார்கள்.

“உதவி செய்தால் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய வெகுமதியை நான் திருடிக் கொண்டவனாகி விடுவேன். இந்த வழக்கில் கூடியவரை குறுக்கிடாமல் இருக்கவே நான் விரும்புகிறேன். உங்கள் விசாரணை எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டுதான் உங்களுக்கு நான் உதவ முடியும். இறந்தவரின் உடலை முதலில் பார்த்த காவலரை நான் பார்க்க வேண்டும். அவருடைய விலாசத்தை எனக்குத் தர முடியுமா” என்று என்று கேட்டார் ஹோம்ஸ்.

லெஸ்ட்ரேட் தன் குறிப்பேட்டைப் பார்த்து ஜான் ரான்ஸ் என்றார். “அவர் இப்போது பணிமுடிந்து சென்று விட்டார். அவரை 46, ஆட்லிகோர்ட், கென்னிங்டன் பார்க்கேட் என்ற முகவரியில் பார்க்கலாம்” என்று மேலும் கூறினார் லெஸ்ட்ரேட்.

ஹோம்ஸ் காவலரின் முகவரியைக் குறித்துக் கொண்டார்.

“மருத்துவர் ஐயா, நீங்களும் என்னுடன் வாருங்கள். நாம் சென்று அந்தக் காவலரை சந்தித்துப் பேசுவோம்” என்று என்னிடம் கூறிய ஹோம்ஸ், லெஸ்ட்ரேடையும்,

https://telegram.me/aedahamlibrary

கிரக்சனையும் பார்த்து “கொலை நடந்துவிட்டது. கொலையாளி ஓர் ஆண். அவன் ஆறடி உயரம் இருப்பான்; அவனுடைய பாதங்கள் உருவத்திற்குத் தக்க இருக்காது; சற்று சிறிதாக இருக்கும். கூர்மையான முனையுடையப் காலணிகளுக்குப் பதில் அவன் சதுர வடிவ காலணிகளை அணிந்திருப்பான். அவன் திருச்சிராப்பள்ளி சுருட்டைப் பிடிக்கும் பழக்கமுடையவன். தான் கொலை செய்யப் போகும் நபருடன் அவன் தன் வண்டியில் இங்கு வந்துள்ளான். அவன் வந்த குதிரை வண்டியில் ஒரு குதிரை மட்டுமே பூட்டப்பட்டிருந்தது. அக்குதிரையின் கால்களில் கட்டப்பட்டிருந்த லாடங்களில் மூன்று லாடங்கள் பழையவை. முன்காலில் இருந்த ஒரு லாடம் மட்டும் புதியது. கொலையாளியின் முகம் செக்கச் சிவந்த முகம். அவனது வலது கரத்தில் இருந்த விரல் நகங்கள் மிகவும் நீளமானவை. இந்தக் குறிப்புகள் உங்களுக்கு மிகவும் உதவி கரமாக இருக்கும்” என்றார்.

லெஸ்ட்ரேடும், கிரக்சனும் அவநம்பிக்கையுடன் புன்னகை பூத்தார்கள்.

“கொலை நடந்தது ஆண் மகன் ஒருவனால் என்றால், கொலை எவ்வாறு செய்யப்பட்டது?” என்று கேட்டார் லெஸ்ட்ரேட்.

“விஷம்” என்றார் ஷெர்லக் ஹோம்ஸ். மற்றுமொரு செய்தி லெஸ்ட்ரேட் அவர்களே. “RACHE” என்றால் ஜெர்மன் மொழியில் “பழிவாங்குதல்” என்று பொருள். நீங்கள் செல்வி ரேச்சலைத் தேடிக்கொண்டு உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள்.

மற்ற இரு துப்பறியும் நிபுணர்களும் வாய்பிளந்து நிற்க, அந்த இடத்தை விட்டுக் கிளம்பி விட்டார் ஷெர்லக் ஹோம்ஸ்.

###

https://telegram.me/aedahamlibrary

காவலர் ஜான் ரான்ஸ் சொல்லப் போவது என்ன?

எண். 3, லாரிஸ்ட்டன் தோட்டத்திலிருந்து நாங்கள் புறப்படுவதற்கு மதியம் 2 மணி ஆகிவிட்டது. பக்கத்திலிருந்த தந்தி அலுவலகம் சென்ற ஷெர்லக் ஹோம்ஸ், நீண்ட ஒரு தந்தியை யாருக்கோ அனுப்பி வைத்தார். பின் ஒரு கோச் வண்டியை அழைத்து, கோச் வண்டியை ஓட்டுபவனிடம் லெஸ்ட்ரேட் கொடுத்த விலாசத்தை அளித்து, அந்த விலாசத்திற்கு எங்களை அழைத்துச் செல்லும்படிப் பணித்தார்.

“முதல் நிலை சாட்சியம் என்பது இந்த வழக்கில் ஏதுமில்லை. உண்மையில் இந்த வழக்கு பற்றிய சிந்தனைதான் என் மனதில் ஓடிக் கொண்டிருக்கிறது. இன்னும் நாம் அறிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது” என்றார் ஹோம்ஸ்.

“திரு. ஹோம்ஸ், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதில் அந்த அளவுக்குத் தெளிவாகத் தாங்கள் இல்லை” என்றேன் நான்.

“எந்தத் தவறும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறேன் நான். வீட்டின் பக்க விளிம்பில் வண்டிச் சக்கரத்தின் தடங்கள் பதிந்திருப்பதை நான் கவனித்தேன். நேற்று வரை மழை ஏதும் பெய்யவில்லை. சம்பவம் நடந்த இரவுதான் மழை பெய்துள்ளது. எனவே வண்டிச் சக்கரப் பதிவுகள் சம்பவம் நடந்த இரவுதான் ஏற்பட்டிருக்க வேண்டும். குதிரைக் குளம்புகள் ஏற்படுத்திய பதிவுகளில் சற்று வித்தியாசம் காணப்பட்டது. ஒரு குளம்பு நன்றாகப் பதிந்துள்ளது; மற்ற மூன்று குளம்புகளும் சரியாகப் பதியவில்லை. எனவே ஒரு குளம்பில் லாடம் புதிதாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும். வண்டி இரவுதான் வந்திருக்கிறது. கிரக்சன் சொன்னது சரிதான். இரண்டு நபர்கள் அந்த வண்டியில் வந்திருக்கின்றனர்” என்றார் ஹோம்ஸ்.

https://telegram.me/aedahamlibrary

“இது யாரும் கண்டுபிடித்து விடக்கூடிய விஷயம் தான். வந்த மனிதனின் உயரத்தை எதை வைத்துக் கண்டு பிடித்தீர்கள்?” என்று நான் கேட்டேன்.

“ஒரு உயரமான மனிதன் எந்தச் சிரமமும் இன்றி நான்கரை அடி தூரத்தைத் தாண்ட முடியும். தோட்டத்தில் அந்த மனிதன் ஏற்படுத்தியத் தடயத்தைப் பார்த்தேன். அவன் சதுர வடிவிலான ‘டோ’ கொண்ட காலணிகளை அணிந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். எல்லாம் நாம் நடைமுறை வாழ்க்கையில் பார்ப்பதுதான்” என்று சொன்ன ஹோம்ஸ், வேறு ஏதாவது உங்களை ஆச்சரியப்படுத்துகிறதா என்று கேட்டார்.

“அந்த மனிதனின் கைவிரல் நகங்கள் பற்றியும், அவன் புகைத்தது திருச்சிராப்பள்ளி சுருட்டு என்றும் கூறினீர்கள். அது எப்படி?” என்று நான் கேட்டேன்.

“சுவற்றில் எழுதப்பட்டிருந்த “RACHE” என்ற வாசகம் தன் விரலை இரத்தத்தில் தோய்த்து எழுதப்பட்ட வாசகம், வாசகம் எழுதப்பட்டிருந்த இடத்தில் சிராய்ப்பு ஏற்பட்டிருந்ததை என் பூதக் கண்ணாடியில் பார்த்தேன். நகம் வெட்டப் பட்டிருந்தால் அந்த சிராய்ப்பு ஏற்பட வாய்ப்பில்லை. நான் தரையிலிருந்து ஒருவித சாம்பலை சேகரித்து, அதை ஓர் உறையினுள் வைத்துக் கொண்டதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். அந்தச் சாம்பல் திருச்சிராப்பள்ளி சுருட்டிலிருந்து வந்ததுதான். வேறு எந்த சுருட்டிற்கும் அந்த மாதிரியான சாம்பலை உண்டாக்கும் குணம் கிடையாது. சுருட்டு வகைகள் உருவாக்கும் சாம்பல் குறித்து நான் ஒரு கட்டுரையே எழுதியிருக்கிறேன். நான் பெருமைக்காகச் சொல்லவில்லை; எந்த வகைச் சுருட்டு எந்தவகையான சாம்பலை உண்டாக்கும் என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். இது போன்ற விஷயங்களிலிருந்துதான், நான் கிரக்சன், லெஸ்ட்ரேட்

https://telegram.me/aedahamlibrary

போன்றவர்களிடமிருந்து வேறுபடுகிறேன்” என்று விளக்கமளித்தார் ஹோம்ஸ்.

“அந்த மனிதனின் முகம் செக்கச் சிவப்பு நிறத்தில் இருந்திருக்க வேண்டும் என்று கூறினீர்களே; அது எப்படி--?” என்று கேட்டேன்.

“அப்படித்தான் அவன் முகம் இருந்திருக்க வேண்டும். நீங்கள் சரியான கேள்வியைத்தான் கேட்டீர்கள். இந்த சந்தர்ப்பத்தில் அதற்கான விடையை என்னால் கூற முடியாது” என்றார் ஹோம்ஸ்.

எனக்குத் தலை சுற்றியது. நினைத்துப் பார்க்க மர்மம் மேலும் அதிகமாகிக் கொண்டே சென்றது. சம்பவம் நடந்த வீட்டில் இரண்டு நபர்கள் இருந்துள்ளார்களா? அது-வும் காலியாக இருந்த வீட்டில்! வண்டிக்காரன் என்ன ஆனான்? விஷம் அருந்தும்படி ஒருவன் மற்றவனை எப்படிக் கட்டாயப்படுத்த இயலும்? தரையில் சிந்தியிருந்த இரத்தம் எப்படி வந்திருக்க முடியும்? இந்தக் கொலை மூலமாகத் திருட்டு நடைபெறவில்லை என்றால் கொலைகாரனின் நோக்கம் வேறு என்னவாக இருக்கும்? வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னால் ஜெர்மன் மொழியில் “ஸிணீநீலீமீ” என்ற சொல்லை அந்த இரண்டாவது மனிதன் ஏன் எழுதியிருக்க வேண்டும்? ஒன்றை ஒன்று பொருத்திப் பார்க்கவே என்னால் முடியவில்லை.

என்னை ஆமோதிப்பவர் போல் நண்பர் சிரித்தார்.

“இந்த வழக்கின் சிக்கல்களை இரத்தினச் சுருக்கமாக நீங்கள் யோசித்து வைத்திருக்கிறீர்கள். திரு. வாட்சன். தெரிந்து கொள்ள வேண்டியது இன்னும் நிறைய இருந்தாலும் முக்கியமான விஷயங்களில் நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். லெஸ்ட்ரேடின் கண்டுபிடிப்பு காவல் துறையைத் திசை திருப்புவதாக இருக்கிறது. சோஷலிசம் பற்றியும், இரகசியக் குழுக்கள் பற்றியும் அவர் ஏதேதோ சொல்கிறார். இந்தக் கொலையைச்

https://telegram.me/aedahamlibrary

செய்தவன் ஒரு ஜெர்மானியன் அல்ல. RACHE என்ற சொல்லில் A என்ற எழுத்து ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது போல் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் அது லத்தீன் மொழிக்குரியது. எனவே இதை எழுதியவன் ஒரு ஜெர்மானியன் அல்ல; அந்த மொழியில் எழுதியது போல் பாசாங்கு செய்திருக்கிறான். வழக்கை திசை திருப்பும் நோக்கத்தில் அவன் அவ்வாறு செய்துள்ளான். இந்த வழக்கைப் பற்றி இதற்கு மேல் நான் உங்களுக்கு எதுவும் சொல்லப்போவதில்லை. ஒரு மந்திரவாதி தான் காண்பிக்கும் வித்தையின் உண்மைத் தன்மையை வெளியே சொல்லிவிட்டால், அவனுக்குக் கிடைக்க வேண்டிய மரியாதை கிடைக்காது. அதுபோல் நான் கண்டுபிடித்த உண்மைகளை வெளியே சொல்லிவிட்டால் என்னையும் நீங்கள் ஒரு சாதாரண மனிதன் தான் என்று நினைத்து விடுவீர்கள்" என்றார் ஷெர்லக் ஹோம்ஸ்.

"நான் அவ்வாறு நினைக்க மாட்டேன். துப்பறிதல் என்ற தொழிலை உலகில் யாரும் செய்யாத அளவுக்கு நீங்கள் செய்துவிட்டீர்கள்" என்றேன் நான்.

நான் புகழ்வதைக் கேட்டு ஹோம்ஸ் முகம் சிவந்தார். ஒரு பெண் தன் அழகைப் புகழ்ந்தால் எவ்வாறு வெட்கப்படுவாளோ, அதே போன்று தான் திரு. ஹோம்ஸ் வெட்கப்பட்டார்.

"மெருகேற்றப்பட்ட கருமை நிறத் தோலால் செய்யப்பட்ட காலணிகள் அணிந்தவனும், சதுர வடிவ 'டோ' கொண்ட காலணிகள் அணிந்தவனும் ஒரே வண்டியில் தான் வந்திருக்கிறார்கள். வீட்டிற்குள் வரும் வரை அவர்கள் நண்பர்கள் போல் தோளுடன் தோள் சேர்ந்துதான் வந்துள்ளார்கள். வீட்டிற்குள் வந்தவுடன் கருமைநிற காலணிகள் அணிந்தவன் அசையாமல் நின்றிருக்கின்றான். சதுர வடிவ டோ கொண்ட காலணிகள் அணிந்தவன் அங்குமிங்கும்

https://telegram.me/aedahamlibrary

நடந்திருக்கின்றான். அவ்வாறு நடக்கும் போது அவன் உணர்ச்சி வசப்பட்டுள்ளான், கோபப்பட்டுள்ளான். அதன் பிறகு தான் அந்த துயரச் சம்பவம் நடந்திருக்கிறது. இதுவரை தான் என்னால் இப்போது சொல்ல முடியும். நாம் அவசரமாகச் செல்ல வேண்டும். பிற்பகல் நார்மன் நெருடாவின் வயலின் கச்சேரிக்குச் செல்ல வேண்டும். கச்சேரி ‘ஹேலி’ என்ற இடத்தில் நடக்கிறது” என்றார் ஹோம்ஸ்.

போகும் வழியில் தான் வெளிச்சமில்லாத, மங்கலான ‘ஆட்லிகோர்ட் கேட்’ உள்ளது. அந்த இடம் தான் காவலர் ஜான் ரான்ஸ் தங்கியிருக்கும் இடம். “நீங்கள் சென்று வாருங்கள். நான் இங்கேயே உங்களுக்காகக் காத்திருக்கிறேன்” என்று சொன்னான் குதிரை வண்டிக்காரன். அதற்குமேல் வண்டி போகாது என்று பார்க்கும் போதே தெரிந்தது. அழுக்கு உடையணிந்த குழந்தைகள் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். எண் 46 என்ற வீட்டைக் கண்டு பிடித்துவிட்டோம். வெளியே ‘ரான்ஸ்’ என்று எழுதப்பட்டிருந்தது. விசாரித்துப் பார்த்ததில் அந்தக் காவலர் உள்ளே படுத்திருக்கிறார் என்று தெரிந்தது. முன் புறமிருந்த அறையில் அவருக்காகக் காத்திருதோம்.

ரான்ஸ் வந்தார். “நான் முன்பே என் அறிக்கையைக் காவல் நிலையத்தில் கொடுத்துவிட்டேன்” என்று கூறுகிறார். ஹோம்ஸ் ஒரு அரை ஷில்லிங் நாணயத்தை எடுத்து அவரிடம் கொடுத்துவிட்டு “உங்கள் வாயால், நீங்கள் பார்த்தவற்றைச் சொல்ல வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்” என்றார்.

“என்னால் என்ன முடியுமோ அதைச் சொல்கிறேன்”என்று ஹோம்ஸ் கொடுத்த அரை ஷில்லிங் நாணயத்தைப் பார்த்துவிட்டுச் சொன்னார் ரான்ஸ்.

“என்ன நடந்தது என்பதை உங்கள் வாயால் கூறுங்கள்” என்றார் ஹோம்ஸ்.

https://telegram.me/aedahamlibrary

ரான்ஸ் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு, புருவங்களை உயர்த்திக் கொண்டு, நடந்தவற்றை ஒன்றுவிடாமல் சொல்லிவிட வேண்டுமென்ற எண்ணத்தில் பேச ஆரம்பித்தார்.

“நான் ஆரம்பத்திலிருந்து ஒன்று விடாமல் கூறிவிடுகிறேன். எனது பணி நேரம் இரவு 10 மணியிலிருந்து காலை 6 மணி வரை. 11 மணிக்கு ஒயிட் ஹார்ட் என்ற இடத்தில் ஒரு சண்டை. அதைத் தவிர வேறு ஒன்றும் நடக்கவில்லை. எல்லாம் அமைதியாகத் தான் இருந்தது. இரவு 01 மணிக்கு மழை பெய்ய ஆரம்பித்தது. ‘ஹாலன்ட் குரோவ்’ என்ற இடத்தில் பணியில் இருந்த என் தோழன் ஹேரி மர்ச்சர் என்பவனிடம் ஹென்ரிட்டா சாலை வரை பேசிக்கொண்டு சென்றேன். இரவு இரண்டு மணி இருக்கும். பிரிக்ஸ்ட்டன் சாலையில், எல்லாம் சரியாக உள்ளதா என்று பார்த்து வரச் சென்றேன். சாலை தனிமையாகவும், அழுக்காகவும் இருந்தது. சாலையில் யாருமில்லை. ஓரிரு குதிரை வண்டிகள் மட்டும் சென்று வந்து கொண்டிருந்தன. நானும் என் நண்பனும் ஜின் சாப்பிட்டு வரலாம் என்று நினைத்தோம். சம்பவம் நடந்த வீட்டில் திடீரென்று விளக்கு எரிவதைப் பார்த்தேன். லாரிஸ்டன் தோட்டத்தில் இரு வீடுகள் காலியாக இருப்பது எனக்குத் தெரியும். அந்த இருவீடுகளில் ஒன்றில் குடியிருந்தவர் டைஃபாய்ட் ஜுரத்தில் இறந்துவிட்டார். இரு வீடுகளில் ஒன்றில் திடீரென்று விளக்கு எரிவதை ஜன்னல் வழியாகப் பார்த்த நான் ஏதாவது தவறு நடைபெற்றிருக்கலாம் என்று சந்தேகித்தேன். கதவருகே சென்றேன்.” சொல்லி முடித்தார் காவலர் ரான்ஸ்.

“நீங்கள் கதவருகே சென்றுவிட்டு, தோட்டக் கதவு வரை திரும்பவும் வந்தீர்கள். எதற்காக அப்படிச் செய்தீர்கள்?” என்றார் ஹோம்ஸ்.

ஆச்சரியத்தால் அதிர்ந்து போய்விட்டார் காவலர் ரான்ஸ். “அது உண்மைதான் ஐயா. நான் கதவருகே சென்றதும், தனிமையாக இருப்பதை உணர்ந்தேன். என் நண்பனிடம்

https://telegram.me/aedahamlibrary

லாந்தர் விளக்கு இருந்தது. அதை வாங்கிக்கொண்டு வரலாம் என்று தோட்டக் கதவருகில் வந்தேன். ஆனால் அங்கு நண்பர் மர்ச்சரைக் காணவில்லை. வீட்டில் இருந்தவர் சமீபத்தில் தான் டைஃபாய்ட் ஜுரத்தில் இறந்தார். ஆனாலும் எனக்கு அச்சம் ஒன்றும் இல்லை. துணைக்கு ஒருவரைத் தேடிக் கொண்டு வந்தேன்" என்றார் ரான்ஸ்.

"தெருவில் நீங்கள் ஒருவரையும் பார்க்கவில்லையா?" என்று ரான்சிடம் கேட்டார் ஹோம்ஸ்.

"ஒரு ஈ, காக்காய் கூட தெருவில் எங்கும் தென்படவில்லை. பின் வீட்டின் கதவைத் தள்ளிக்கொண்டு நான் உள்ளே சென்றேன். எங்கும் அமைதியாக இருந்தது. பின் மெழுகுத் திரி எரிந்து கொண்டிருந்த இடத்திற்குச் சென்றேன். சிவப்பு நிற மெழுகுத் திரி ஒன்று அடுப்பங்கரை தண்டகப் பலகை மீது வைக்கப்பட்டிருந்தது. அது எரிந்துகொண்டும் இருந்தது. அந்த மெழுகுத் திரியின் ஒளியில் நான் பார்த்தது...." நிறுத்தினார் ரான்ஸ்.

"நீங்கள் என்ன பார்த்தீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் அந்த அறையைப் பலமுறை சுற்றி வந்தீர்கள். குனிந்து இறந்து கிடந்த மனிதரின் உடலருகில் சென்றீர்கள். அதன் பிறகு அடுப்பங்கரைக் கதவைத் திறக்க முயற்சி செய்தீர்கள். அதன் பிறகு..." என்றார் ஹோம்ஸ்.

காவலர் ரான்ஸ் ஆச்சரியத்தில் துள்ளிக் குதித்தார். சந்தேகக் கண்களுடன் ஹோம்ஸ் அவர்களைப் பார்த்தார். "எங்கே ஒளிந்து கொண்டு நீங்கள் இவற்றை யெல்லாம் பார்த்தீர்கள். தெரிந்து கொள்ள வேண்டியதைவிட அதிகமாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்" என்று உரக்கக் கத்தினர் காவலர் ரான்ஸ்.

ஹோம்ஸ் சிரித்துக் கொண்டே தன் முகவரி அட்டையை எடுத்து ரான்சிடம் நீட்டினார். "என்னை கொலைக்காக கைது செய்ய முற்பட வேண்டாம். நான் வேட்டை நாய்களில் ஒருவன்; ஓநாய் அல்ல. கிரக்சனும்,

https://telegram.me/aedahamlibrary

லெஸ்ட்ரேடும் நீங்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்வார்கள்” என்று சொன்ன ஹோம்ஸ் “அதன் பிறகு என்ன செய்தீர்கள்?” என்று ரான்சிடம் கேட்டார்.

ஆச்சரியத்தில் அதிர்ந்துபோன ரான்ஸ் மீண்டும் நாற்காலியில் அமர்ந்து கொண்டார். பின் பேச ஆரம்பித்தார். “நான் வாயிலுக்குச் சென்றேன். என் ஊது குழலை எடுத்து ஊதினேன். அப்படிச் செய்ததால் நண்பர் மர்ச்சரும், வேறு இரண்டு நபர்களும் அந்த இடத்திற்கு வந்தார்கள்” -என்றார் ரான்ஸ்.

“அந்த சமயத்தில் தெருவில் வேறு யாரும் இல்லையா? சாலை வெறிச்சோடிக் கிடந்ததா?” என்று ரான்சிடம் கேட்டார் ஹோம்ஸ்.

ரான்சின் ஆச்சரியம் இப்போது சிரிப்பாக வெளிப்பட்டது.

“அது போன்ற ஒரு குடிகாரனை இதுவரை நான் என் வாழ்நாளில் கண்டதில்லை. அந்தக் குடிகாரன் தோட்டத்தின் வாயில் கதவருகே நின்று கொண்டிருந்தான். கொலம்பியா அல்லது நியூ ஃபவுன்லேன்ட் கொடியுடன் காணப்பட்டான். நிதானத்தில் இல்லாததால் அவனால் நிற்க முடியவில்லை” என்றார் ரான்ஸ்.

“அவன் எப்படிப்பட்ட மனிதன்?”.

“அதிகமாகக் குடித்திருந்தான்.”

“அவனது முகத்தைப் பார்த்தீர்களா? அவனது உடையை கவனித்தீர்களா?” பொறுமையிழந்து கேட்டார் ஹோம்ஸ்.

“அவன் ஓர் உயரமான மனிதன். அவனது முகம் சிவப்பாக இருந்தது. தன்னுடைய வீட்டிற்குப் போகச் சித்தமாக இருந்தான்” என்றார் ரான்ஸ்.

“அவன் எவ்வாறு உடையணிந்திருந்தான்?”

“அவன் பழுப்புநிற ஓவர்கோட் அணிந்திருந்தான்.”

“அவன் கையில் குதிரை சவுக்கு வைத்திருந்தானா?” என்று கேட்டார் ஹோம்ஸ்.

https://telegram.me/aedahamlibrary

“இல்லை.”

“அவன் அதை வைத்துவிட்டு வந்திருக்க வேண்டும்.”

“அவனைத் தொடர்ந்து வண்டிச்சத்தம் ஏதாவது உங்களுக்குக் கேட்டதா?”.

“இல்லை.”

“இதோ அரை பவுன் தங்கக்காசு” என்று சொன்ன ஹோம்ஸ் தனது தொப்பியை எடுத்துக்கொண்டார். ஒரு சார்ஜெண்டுக்கு உரிய பட்டையை நீங்கள் நேற்று இரவே பெற்றிருக்க வேண்டும். அந்தக் குடிகாரனை தப்பிச் செல்ல விடாமல் இருந்திருந்தால் அவன்தான் இந்த வழக்கின் முக்கியப் புள்ளி. அவனுக்குத் தான் இந்த வழக்கின் மர்மங்கள் தெரியும்” என்று ரான்சிடம் சொன்ன ஹோம்ஸ் என்னைப் பார்த்து “வாருங்கள் டாக்டர், நாம் போகலாம். இதற்கு மேல் இங்கு விவாதித்துக் கொண்டிருப்பதால் பலன் இல்லை”

நாங்கள் எங்களுக்காகக் காத்திருந்த குதிரை வண்டியில் ஏறிக் கொண்டோம். ‘இந்த ரான்ஸ் ஒரு முட்டாள்’ என்று வண்டியில் சென்று கொண்டிருந்தபோதே குறிப்பிட்டுச் சொன்னார் ஹோம்ஸ். ‘நல்ல அதிர்ஷ்டம் இருந்தும் அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டான்’ என்று மேலும் சொன்னார் ஹோம்ஸ்.

“இன்னும் இருள் விலகவில்லை. இந்த அடையாளங்கள், நீங்கள் சொன்ன இரண்டாம் மர்ம நபருடன் ஒத்துப் போகின்றன. ஆனால் புறப்பட்டுச் சென்ற பின் அவன் எதற்காகத் திரும்பி வீட்டிற்கு வரவேண்டும்? அது குற்றவாளிகளின் குணம் அல்லவே?” என்றேன் நான்.

“அந்த மோதிரம் இருக்கிறதே மோதிரம், அதற்காகத் தான் அவன் திரும்பி வந்தான். அவனைப் பிடிக்க நமக்கு வேறு வழியில்லாவிட்டால், அந்த மோதிரத்தையே நாம் தூண்டில் புழுவாகப் பயன்படுத்துவோம். நான் அவனைப் பிடித்து விடுவேன் டாக்டர். நான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். நீங்கள் இல்லாவிட்டால் நான் இந்த அளவுக்கு இந்த வழக்கில் நாட்டம் செலுத்தியிருக்க

https://telegram.me/aedahamlibrary

மாட்டேன். ஒரு சிவப்பு வண்ணநூல் வாழ்வெனும் நூற்கண்டில் சிக்கியுள்ளது. அந்த இழையை நாம் தேட வேண்டும். நூற்கண்டின் முடிச்சுகளை அவிழ்த்து, அங்குலம், அங்குலமாகத் தேட வேண்டும். இப்போது நமக்கு சாப்பாட்டிற்கு நேரமாகி விட்டது. அதன் பிறகு நார்மன் நெருடாவின் வயலின் கச்சேரி.

குதிரை வண்டியில் சாய்ந்து கொண்டே ஷெர்லக் ஹோம்ஸ் என்ற நம் வேட்டை நாய் எதையோ சிந்தித்துக் கொண்டே வந்தது.

###

https://telegram.me/aedahamlibrary

விளம்பரத்தால் வந்த பார்வையாளர்

எங்களது காலைநேரப் பணிகள் என் உடலுக்கு ஏற்றவையாக இல்லை. மதிய நேரத்தில் மிகவும் களைப்பாக இருந்தது. வயலின் கச்சேரிக்கு ஹோம்ஸ் புறப்பட்டுச் சென்றவுடன் நான் சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஓய்வெடுக்க விரும்பினேன். இரண்டு மணி நேரம் ஓய்வெடுத்தால் உடற்சோர்வு நீங்கி விடும். ஆனால் அது ஒரு வீண் முயற்சியாக எனக்குப் பட்டது. நடந்த நிகழ்ச்சிகள் யாவும் என் மனக் கண்களில் நிழலாடின. ஒவ்வொருமுறை நான் கண்களை மூடும்போதும், கொலையுண்ட மனிதனின் மனிதக் குரங்கு போன்ற தோற்றம் என் மனதில் தோன்றி ஒருவித அச்சத்தைக் கொடுத்தது. என் மனதில் ஓர் உருவம் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது என்றால் அது கிளீவ்லன்ட்-ஐச் சேர்ந்த ஈனேக் ஜெ. டிரப்பர் என்பவரது உருவம்தான். ஒருவன் கொலை செய்யப்பட்டு விட்டான் என்பதற்காக அவன்மீது இரக்கம் காட்ட வேண்டுமென்பதில்லை. சட்டத்தின் முன்பு அனைவரும் சமம்தான்.

எனது நண்பர், இறந்து போன டிரப்பரின் உதடுகளை முகர்ந்து பார்த்தே அந்த மனிதர் விஷம் வைத்துக் கொல்லப்பட்டார் என்பதைக் கண்டுபிடித்துவிட்டார். விஷம் வைத்துக் கொல்லப்படும் அளவுக்கு, அவருடைய சாவிற்கு என்ன காரணம் இருக்க முடியும்? அதே சமயம் தரையில் உறைந்து கிடந்த இரத்தம் யாருடைய இரத்தம்? வன்முறை நடந்ததற்கான தடையம் ஏதும் இல்லை; ஆயுதமும் இல்லை. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை கண்டுபிடிக்காமல் எனக்கோ, நண்பர் ஹோம்ஸ் அவர்களுக்கோ தூக்கம் வராது. ஹோம்ஸ் மிகவும் தெளிவாக இருந்தார். ஒரு கோட்பாட்டை முன்பே அவர் மனதிற்குள் உருவாக்கி விட்டார். அது என்ன என்பது எனக்குத் தெரியவில்லை.

வயலின் கச்சேரிக்குச் சென்ற நண்பர் ஹோம்ஸ் மிகவும் தாமதமாகத்தான் திரும்பி வந்தார். வயலின் கச்சேரி தான்

https://telegram.me/aedahamlibrary

அவரைக் கட்டிப்போட்டு வைத்திருந்தது என்று கூறுவதற்கில்லை. இரவு உணவு அவர் வருவதற்கு முன்பே மேஜை மீது காத்திருந்தது.

“கச்சேரி மிகவும் நன்றாக இருந்தது. டார்வின் சங்கீதத்தைப் பற்றி என்ன கூறியிருக்கிறார் என்று உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? சங்கீதமும், அதைப் பாராட்ட வேண்டும் என்ற உணர்வும், மனிதன் பேசும் ஆற்றலை பெறுவதற்கு முன்பே இருந்திருக்கிறது என்றார் டார்வின். அதனால் தான் நாம் சங்கீதத்தால் உந்தப்படுகிறோம். நமது ஆன்மாவில் சங்கீத ஞாபகங்கள், குழந்தைப் பருவத்திலிருந்தே இருந்து வருகின்றன” என்றார் ஹோம்ஸ்.

“அது ஒரு மேற்போக்கான எண்ணம் தான்” & என்றேன் நான்.

“ஒருவருடைய எண்ணம் இயற்கையைப் போன்று விசாலமாக இருக்க வேண்டும். அப்போது தான் இயற்கையை நம்மால் விமர்சிக்க முடியும். என்ன சங்கதி? உங்கள் முகத்தைப் பார்த்தால் குழப்பமடைந்தவர் போல் தெரிகிறது. பிரிக்ஸ்டன் சாலையில் நடந்த சம்பவம் உங்களை மிகவும் பாதித்துவிட்டதா?” என்று கேட்டார் ஹோம்ஸ்.

“அது உண்மை தான். நான் எனது ஆப்கான் அனுபவத்திற்குப் பின் மனதை திடப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். ‘மைவான்ட்’ என்ற இடத்தில் நடைபெற்ற போரில் என் நண்பர்களே சுக்கு சுக்காக நொறுங்கிப் போனதை நான் நேரில் பார்த்தேன்” என்றேன் நான்.

“எனக்குப் புரிகிறது. இந்த வழக்கில் ஒரு மர்மம் அடங்கியுள்ளது. அது நம் கற்பனையைத் தூண்டுகிறது. கற்பனை எங்கு இல்லையோ அங்கு திகில் என்பதும் இல்லை. இன்று மாலைப் பத்திரிக்கையை நீங்கள் பார்த்தீர்களா?” என்றார் ஹோம்ஸ்.

“இல்லை.”

https://telegram.me/aedahamlibrary

லாரிஸ்ட்டன் தோட்டத்து சம்பவம் அதில் ஓரளவுக்குத் தெளிவாக வந்துள்ளது. ஆனால் இறந்து கிடந்த மனிதரைத் தூக்கிய போது ஒரு பெண்ணின் திருமண மோதிரம் கீழே விழுந்து உருண்டோடியது என்று பத்திரிகைச் செய்தியில் இல்லை.”

“ஏன்?”

“இந்த விளம்பரத்தைப் பாருங்கள். நடந்த சம்பவத்திற்குப் பிறகு ஒவ்வொரு செய்தித்தாளிலும் நான் இந்த விளம்பரத்தைக் கொடுத்துள்ளேன்” என்று சொல்லிவிட்டு, செய்தித் தாள்களை மேஜை மீது பரப்பினர் ஹோம்ஸ். விளம்பரம் இதுதான்.

“பிரிக்ஸ்டன் சாலையில், ஒரு தங்க மோதிரம் ‘ஒயிட் ஹார்ட் டாவர்ன்’ என்ற இடத்திற்கும் ‘ஹோலன் குரோவ்’ என்ற இடத்திற்குமிடையே கிடைத்தது. அது ஒரு பெண்ணின் திருமண மோதிரம். அதை இன்று மாலை 8 மணியிலிருந்து 9 மணிக்குள் 221 B, பேக்கர் தெருவில் வசிக்கும் மருத்துவர் வாட்சன் என்பவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.”

“உங்கள் பெயரைப் பயன்படுத்தியதற்கு என்னை மன்னிக்க வேண்டும். நான் என் பெயரைக் கொடுத்திருந்தால் யாராவது ஒரு முட்டாள், என் பெயரை பார்த்துவிட்டு சற்று விளையாடியிருப்பான்” என்றார் ஹோம்ஸ்.

“அதனால் பரவாயில்லை. ஆனால் யாராவது தேடிவந்து கேட்டால் கொடுப்பதற்கு என்னிடம் மோதிரம் இல்லையே” & என்றேன்.

“ஓ, இதோ இருக்கிறது மோதிரம். சம்பவ இடத்தில் நாம் பார்த்த மோதிரத்தின் மாதிரி இது. அதைப் போலவே இருக்கும்” & என்று கூறிய ஷெர்லக்ஹோம்ஸ் என் கையில் ஒரு மோதிரத்தை வைத்தார்.

“இந்த விளம்பரத்தின் மூலம் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?” என்று நான் ஹோம்ஸிடம் கேட்டேன்.

https://telegram.me/aedahamlibrary

“அந்தப் பழுப்பு நிற ஓவர் கோட் அணிந்தவனும், செக்கச் சிவந்த முகமுடையவனும், சதுர வடிவ டோ கொண்ட காலணிகள் அணிந்தவனும் நம்மைத் தேடி வரலாம். அல்லது அவன் வேறு ஒருவரை அனுப்பி வைக்கலாம்”.

“நம்மைத் தேடி வருவது ஒரு மிகவும் ஆபத்தான முயற்சி என்று அவன் நினைக்க மாட்டானா?”.

“நினைக்கவே மாட்டான். இந்த வழக்கில் என்னுடைய யூகம் சரியாக இருக்குமேயானால் தீங்கிற்கு ஆளாகும் எந்த நிலைப்பாட்டையும், எதை வேண்டுமானாலும், இந்த மோதிரத்திற்காக எடுக்க அவன் தயங்க மாட்டான். நான் நினைப்பது சரியாக இருந்தால், அந்த மோதிரத்தை டிரப்பரின் உடல்மீது, அவன் குனிந்த சமயத்தில் போட்டிருப்பான். அதை அப்போது அவன் கவனிக்கத் தவறிவிட்டான். வீட்டை விட்டு வெளியேறிய பிறகு தான் அவன் மோதிரத்தை கவனித்திருக்க வேண்டும். அதை எடுப்பதற்கு அவன் மீண்டும் வந்தான். ஆனால் அதற்குள் காவல் துறையினர் அங்கு வந்து உடலைக் கைப்பற்றி விட்டனர். தன்னுடைய முட்டாள் தனத்தால் மெழுகுத் திரியை எரிய விட்டுவிட்டு அப்படியே வெளியில் வந்துவிட்டான். தன் மீது சந்தேகம் வந்துவிடக் கூடாது என்பதற்காக ஒரு குடிகாரனைப் போல் நடித்துள்ளான். நீங்கள் அவனது இடத்தில் உங்களை வைத்துப் பாருங்கள். மோதிரத்தை சாலையில் தொலைத்ததாகக் கூட அவன் நினைத்திருக்கலாம். அப்படி இருந்தால் அவன் என்ன செய்வான்? தொலைந்த பொருட்களைப் பற்றிய விளம்பரம் ஏதாவது செய்தித் தாளில் வந்திருக்கிறதா என்று பார்ப்பான். இந்த விளம்பரம் அவன் கண்ணில் படும். பொறியில் சிக்க வைக்கத்தான் இந்த ஏற்பாடு என்று அவனுக்கு எப்படித் தெரியும். அவன் கண்டிப்பாக வருவான். நீங்கள் இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் அவனை இங்கு பார்க்கலாம்.”

“அதன் பிறகு என்ன நடக்கும்?”

“அவனை சமாளிக்க, என்னிடம் அவனை விட்டு விடுங்கள். உங்களிடம் ஆயுதம் ஏதாவது உள்ளதா?”

https://telegram.me/aedahamlibrary

“நான் இராணுவத்தில் பணிபுரிந்த போது கொடுத்த கைத் துப்பாக்கியும், சில ரவைகளும் என்னிடம் இருக்கின்றன.”

“அதை நன்றாகச் சுத்தம் செய்து, இரவைகளை அதனுள் நிரப்பி என்னிடம் தாருங்கள். நாம் எதற்கும் தயாராக இருப்பது நல்லது.”

நான் என்னுடைய படுக்கை அறைக்குச் சென்று, அவருடைய ஆலோசனைப்படி என் கைத்துப்பாக்கியை சுத்தம் செய்து, இரவைகளை நிரப்பி ஹோம்ஸிடம் கொடுப்பதற்கு வந்தேன். நான் கைத்துப்பாக்கியு-டன் வந்தபோது மேஜை சுத்தமாக இருந்தது. ஹோம்ஸ் வயலின் வாசித்துக் கொண்டிருந்தார்.

“வழக்கு மேலும் சிக்கலாகிக் கொண்டிருக்கிறது”.

ஹோம்ஸ் நான் படுக்கை அறையிலிருந்து வெளியே வந்தவுடன், “இப்போதுதான் நான் கொடுத்த தந்திக்கு அமெரிக்காவிலிருந்து பதில் வந்தது. என்னுடைய யூகம் சரி தான்” என்றார். அவர் மேலும் தொடர்ந்தார். “உங்கள் கைத்துப்பாக்கியை சட்டைப் பைக்குள் வைத்துக் கொள்ளுங்கள். அவனிடம் அச்சுறுத்தும் தொனியில் பேசாதீர்கள். நிதானமாகப் பேசுங்கள். மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்.”

“இப்போது மணி எட்டாகிறது” என்றேன் நான் என்னுடைய கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே.

“ஆம் இன்னும் சில நிமிடங்களில் அவன் இங்கு வந்து விடுவான். கதவை இலேசாகத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள். சாவியை உட்புறமாகத் தொங்க விடுங்கள். இது ஒரு வினோதமான பு-த்தகம். நேற்றுதான் கடையில் இதை வாங்கினேன். லத்தீன் மொழியில் பதிப்பிக்கப்பட்டது. “De Jure inter Gentes” என்பது புத்தகத்தின் பெயர். 1642ஆம் ஆண்டில் இது வெளிவந்தது. மன்னர் சார்லஸ் காலத்துப் புத்தகம்” என்றார் ஹோம்ஸ்.

“புத்தகத்தின் வெளியீட்டாளர் யார்” என்றேன் நான்.

https://telegram.me/aedahamlibrary

"Philippe de croy" முதல் பக்கத்தில் Ex libris Guliolmi whyte என்று எழுதியிருந்தது. William whyte யார் என்று எனக்குத் தெரியவில்லை. அவரது எழுத்துகள் சட்ட முக்கியத்துவம் வாய்ந்தவை. அவர் ஒரு 7ஆம் நூற்றாண்டு எழுத்தாளர். 'நமது ஆள் வருகிறான்' என்று நினைக்கிறேன்" என்றார் ஹோம்ஸ்.

அவர் பேசிக்கொண்டிருந்த போதே மணியடிக்கும் ஓசை கேட்டது. ஷெர்லக் ஹோம்ஸ் தன் நாற்காலியை கதவுப் பக்கமாகத் தள்ளிக் கொண்டு உட்கார்ந்தார். பணியாளர், கூடத்தில் நடந்து வருவதை நாங்கள் பார்த்தோம். தாழ்ப்பாளைத் திறந்து கொண்டு ஒரு பெண் உள்ளே நுழைந்தாள்.

"டாக்டர் வாட்சன் இங்கு தான் வசிக்கிறாரா?" என்று ஒரு குரல் கேட்டது. அதற்கு எங்கள் பணியாளர் சொன்ன பதில் எங்கள் காதுகளில் விழவில்லை. கதவு மூடிக்கொள்ளும் ஓசை கேட்டது. யாரோ ஒருவர் படியேறி மேலே வரும் சப்தம் கேட்டது. கதவு இலேசாகத் தட்டப்பட்டது.

"உள்ளே வாருங்கள்" என்றேன் நான்.

நாங்கள் எதிர்பார்த்தது மிகவும் கொடுமையான ஒரு மனிதனை. அதற்கு மாறாக தோல் சுருக்கம் விழுந்த ஒரு மூதாட்டி உள்ளே நுழைந்தாள். எங்களைப் பார்த்து விழித்துக் கொண்டே நின்றாள். நடுங்கும் விரல்களை தன் சட்டைப் பைகளில் மறைத்துக் கொண்டாள்.

ஒரு மாலை செய்தித்தாளைக் காண்பித்து, அதில் வந்திருக்கும் விளம்பரம் நீங்கள் கொடுத்தது தானா என்று கேட்டாள். இதைப் பார்த்துதான் தான் இங்கு வந்திருப்பதாகக் கூறினாள். "ஒரு தங்க மோதிரம். திருமணத்திற்கென்று வாங்கியது. அது என்னுடைய பெண் சாலி என்பவளுக்குரியது ஓராண்டுக்கு முன் வாங்கியது. அவருடைய கணவர் கப்பலில் பணியாற்றுகிறார். அவர் வரும் போது திருமண மோதிரத்தை அணிந்து கொள்ளாமல், வெறுங்கையுடன் அவள் இருப்பது தெரிய வந்தால் கோபித்துக் கொள்வார்.

https://telegram.me/aedahamlibrary

அதுவும் குடித்திருந்தால் கோபம் அதிகமாக இருக்கும். சர்கஸ் காட்சிக்குச் செல்லும் வழியில் என் மகள் அதைத் தொலைத்து விட்டாள்” என்று அந்த மூதாட்டி கூறினாள்.

“இதுதான் அந்த மோதிரமா?” என்று நான் கேட்டேன். “அதே தான். சாலி மிகவும் மகிழ்ச்சியடைவாள். கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்” என்றாள் அந்த மூதாட்டி.

“உங்களது விலாசம் என்ன?” என்று நான் விசாரித்தேன்.

“13, டன்க்கன் தெரு, ஹவுன்ட்ஸ்டிச். இங்கிருந்து செல்வது சற்று கடினம்” என்றாள் மூதாட்டி.

“பிரிக்ஸ்ட்டன் தெரு சர்கஸ் நடக்கும் இடத்திற்கும், ஹவுன்ட்ஸ்டிச் என்ற இடத்திற்கும் நடுவில் இல்லையே” என்றார் ஹோம்ஸ்.

அந்த மூதாட்டி ஹோம்&ஜ நன்றாகக் கவனித்துப் பார்த்தாள்.

“அந்த கனவான் என் விலாசம் கேட்டதால் சொன்னேன்” என்று பதிலுரைத்தாள் மூதாட்டி.

“சாலி ஒரு குடியிருப்பில் வசித்து வருகிறாள். அவளது விலாசம் 3, மே:ஃபீல்ட் பிளேஸ், பேக்ஹேம்” என்றாள் மூதாட்டி.

“உங்கள் பெயர் என்ன?” & இது என் அடுத்த கேள்வி.

என் பெயர் சாயர். அவளது பெயர் டென்னிஸ். அவள் கணவரது பெயர் டாம் டென்னிஸ். டாம் டென்னிஸ் என்பவர் என் மகளை மணந்து கொண்டவர். மிகவும் நல்ல பையன் & அவர் கடலில் இருக்கும் வரை. கரைக்கு வந்து விட்டால் குடிப்பதும், பெண்களுடன் கூத்தடிப்பதுமாக இருப்பான்” என்றாள் மூதாட்டி. என் நண்பரின் சைகைக்கு இணங்க “இதோ உங்கள் மகளின் திருமண மோதிரம். இது உங்கள் மகளுக்குரியது தான். இதைத் திரும்ப உங்களிடம் ஒப்படைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்” என்று சொல்லி மோதிரத்தைக் கொடுத்தேன்.

https://telegram.me/aedahamlibrary

எனக்குப் பலமுறை நன்றி தெரிவித்துவிட்டு அந்த மூதாட்டி படிகளில் இறங்கிச் சென்றாள். ஷெர்லக் ஹோம்ஸ் தன் நாற்காலியிலிருந்து துள்ளி எழுந்து அவருடைய அறைக்குச் சென்றார். சென்றவர் அரைக் கையுடன் கூடிய ஒரு நீண்ட மேலங்கியும், கழுத்துப் பட்டையும் அணிந்து கொண்டு வெளியே வந்தார். “வந்தவள் கொலைக்காரனின் கூட்டாளியாக இருக்கலாம். இவளைப் பின் தொடர்ந்தால் அவனிருக்குமிடம் தெரிந்துவிடும்” என்று கூறிவிட்டு அவளைப் பின் தொடர்ந்து சென்றார். ஜன்னல் வழியாக கவனித்த போது மூதாட்டி சாலையின் மறுபக்கம் மெதுவாகச் சென்று கொண்டிருப்பது தெரிந்தது. ஹோம்ஸ் அவளுக்குத் தெரியாமல் அவளைப் பின் தொடர்ந்து சென்றார். “வழக்கில் நாங்கள் பின்பற்றும் பாதை, ஒன்று தவறாக இருக்க வேண்டும் அல்லது சிக்கலின் மையப் பகுதிக்கு நம்மை இது கொண்டு செல்லவேண்டும்” என்று மனதிற்குள் நான் நினைத்துக் கொண்டேன். எனக்காகக் காத்திருங்கள் என்று ஹோம்ஸ் என்னிடம் சொல்ல வில்லை. அதற்கு அவசியமும் இல்லை. வழக்கின் சிக்கல் அவிழும்வரை எனக்குத் தூக்கம் வரப் போவதில்லை.

ஹோம்ஸ் எங்கள் வீட்டை விட்டுச் செல்லும் போது மணி ஒன்பது. திரும்பிவர அவர் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வார் என்பது எனக்குத் தெரியவில்லை. என்னுடைய புகைக் குழாயை எடுத்து பற்ற வைத்துக்கொண்டேன். ஹென்ட்ரி மர்ஜெரி எழுதிய “டீ பொஹிமி” என்ற புத்தகத்தை எடுத்துப் புரட்டினேன். எங்கள் வேலைக்காரப் பெண்மணி இரவு 10 மணிக்கு உறங்கச் சென்று விட்டாள். இரவு 11 மணிக்கு வீட்டு உரிமையாளரும் படுக்கைக்குச் சென்று விட்டாள். இரவு 12 மணிக்கு தாழ்ப்பாள் திறக்கப்படும் ஓசை கேட்டது. மூதாட்டியைப் பின் தொடர்ந்து சென்ற ஷெர்லக் ஹோம்ஸ் திரும்பி வந்துவிட்டார். அவரது பயணம் வெற்றி பெறவில்லை என்பதை அவர் முகத்தைப் பார்த்தே நான் தெரிந்து கொண்டுவிட்டேன். மகிழ்ச்சியும் ஏமாற்றமும் போட்டி போட்டுக் கொண்டதில் மகிழ்ச்சியே

https://telegram.me/aedahamlibrary

மேலோங்கி நின்றது. ஷெர்லக் ஹோம்ஸ் வாய்விட்டுச் சிரித்தார்.

"ஸ்காட்லன்ட் யார்டில் இருப்பவர்களுக்கு விஷயம் தெரிந்து விடக் கூடாது" என்று கூறிய ஹோம்ஸ் தன்னுடைய நாற்காலியில் பொத்தென்று விழுந்தார். "நான் அவர்களை ஏளனமாகப் பேசியுள்ளேன். முடிவைத் தெரிந்து கொள்ளாமல் அவர்கள் என்னை விடமாட்டார்கள். இருந்தாலும் நான் தான் அவர்களுடன் கடைசியில் இருப்பேன்" என்றார் ஹோம்ஸ்.

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?" என்று நான் ஹோம்ஸை கேட்டேன்.

"எனக்கு எதிரான ஒரு கதையை நான் சொல்லப் போகிறேன். அந்த மூதாட்டித் தன் கால்களில் ஆணி இருப்பது போல் நொண்டி, நொண்டி நடந்தாள். பின் ஒரு குதிரை வண்டியில் ஏறிக் கொண்டாள். என்ன விலாசத்தைச் சொல்கிறாள் என்பதைக் கேட்கும் நான் அவள் அருகில் இருந்தேன். சாலையின் மறுபு-றம் இருப்பவருக்குக் கேட்கும் அளவு உரத்த குரலில் "வண்டியை, என் 13, டன்கன் தெரு, ஹவுன்ட்ஸ்டிச் என்ற விலாசத்திற்கு ஓட்டு" என்று கூறினாள். உண்மையான விலாசத்தைத் தான் கொடுக்கிறாள் என்று எனக்குப்பட்டது. குதிரை வண்டியின் கிருசுக்கட்டையில், பின்னால் நான் ஏறிக் கொண்டேன். ஒவ்வொரு துப்பறியும் நிபுணனும் இப்படி யாருக்கும் தெரியாமல் வண்டியில் ஏறும் கலையில் வல்லவனாக இருக்க வேண்டும். வழியில் வண்டியை எங்கேயும் நிறுத்தவில்லை. நாங்கள் செல்ல வேண்டிய இடத்தில் தான் வண்டி நின்றது. நான் வண்டியிலிருந்து குதித்து, சாலையின் மறுபுறத்திற்குத் தாவிச் சென்று விட்டேன். வண்டி வீட்டு வாசலில் நிறுத்தப்பட்டது. வண்டியை ஓட்டி வந்தவன் வீட்டுக்கதவைத் திறந்தான்; நான் என் கண்களால் பார்த்தேன். எதிர்பார்த்துக் காத்திருந்தேன். யாரும் வண்டியிலிருந்து வெளியே வரவில்லை. நான் அருகே சென்று பார்த்த போது வண்டிக்காரன் யோட்டி காலியாக

https://telegram.me/aedahamlibrary

இருந்த வண்டியில், இருட்டில் எதையோ தேடிக் கொண்டிருந்தான். ஒரு பயணியை ஏற்றிக் கொண்டு வந்ததற்கான அடையாளமே தெரியவில்லை. வண்டி வாடகையை அவன் முன்பே வாங்கியிருப்பான் என்று நினைத்துக் கொண்டேன். 13ஆம் எண் வீட்டில் விசாரித்துப் பார்த்ததில் அந்தவீடு, சுவற்றில் வண்ணச் சித்திரங்கள் ஒட்டும் ஒருவரின் வீடு என்று தெரிய வந்தது. அவர் பெயர் கெஸ்விக். சாயர் என்ற பெயரிலோ, அல்லது டென்னிஸ் என்ற பெயரிலோ அங்கு எவருமேயில்லை” என்றார் ஹோம்ஸ்.

“அப்படியென்றால், உங்களுக்கும் வண்டியோட்டிக்கும் தெரியாமல் அந்த மூதாட்டி, ஓடும் வண்டியிலிருந்து குதித்து வெளியே சென்றிருக்க வேண்டும் என்று சொல்ல வருகிறீர்களா?” என்று நான் கேட்டேன்.

“நாம் தான் வந்தது ஒரு மூதாட்டி என்று நினைத்து ஏமாந்து போய் விட்டோம். வந்தது மூதாட்டியல்ல. ஓர் இளம் வயதுக்காரன். ஒரு நல்ல நடிகன். நான் பின் தொடர்கிறேன் என்பதை அவன் தெரிந்து கொண்டு விட்டான். ஏதோ ஒரு வழிமுறையைப் பின்பற்றி நழுவி விட்டான். நான் நினைத்தது போல் கொலையாளி தனி நபர் அல்ல. அவனுக்கு உதவி செய்ய நண்பர்கள் இருக்கிறார்கள். ஆபத்தான நிலையைக் கூடப் பொருட்படுத்த மாட்டார்கள். டாக்டர் நீங்கள் சோர்ந்து போயிருக்கிறீர்கள். நான் சொல்வதைக் கேட்டு உள்ளே சென்று ஓய்வெடுங்கள்” என்றார் ஹோம்ஸ்.

நான் சோர்ந்து போய்விட்டேன். எனவே ஹோம்ஸ் பேச்சைக் கேட்டு ஓய்வெடுக்கச் சென்று விட்டேன். கனப்பின் எதிரே உட்கார்ந்து ஹோம்ஸ் குளிர் காய்ந்து கொண்டிருந்தார். அவருடைய வயலினிலிருந்து சோக கீதம் இசைக்கப்படும் ஒலி கேட்டது. சிக்கலை அவிழ்க்க அவர் முயற்சி செய்கிறார் என்பது அதிலிருந்து தெரிந்தது.

###

https://telegram.me/aedahamlibrary

டோபியாஸ் கிரக்சன் ‘தன்னால் என்ன முடியும்’ என்று காட்டுகிறார்:

அடுத்த நாள் செய்தித் தாள்களில் “பிரிக்ஸ்ட்டன் மர்மம்” என்ற தலைப்பிட்டு முழு விளக்கங்களுடன் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. ஒவ்வொரு பத்திரிகையிலும் ஒவ்வொரு விதமாக இருந்தன. மிக நீண்ட செய்திகளாக துணைத் தலைப்புகளும் கொடுக்கப்பட்டிருந்தன. சில செய்திகள் எனக்குப் புதுமையாத் தெரிந்தன. என்னுடைய குறிப்பேட்டில் செய்திகளைக் குறிப்பெடுத்துக் கொண்டேன். இது தான் பத்திரிகைகளில் வந்திருந்த செய்திகளின் சுருக்கம்:

குற்ற வழக்குகளின் வரலாற்றில் இதுபோன்றதோர் துயரச் சம்பவம் எப்போதாவதுதான் நடைபெறும் என்று “டெய்லி டெலி கிராஃப்” என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. கொலை செய்யப்பட்டவரின் பெயர் ஒரு ஜெர்மன் பெயர் என்றும், கொலையின் நோக்கம் தெரியவில்லை என்றும், சுவரில் எழுதப்பட்டிருந்த வாசகம் அகதிகளையும், புரட்சியையும் சுட்டிக் காட்டுகிறது என்றும் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. பொதுவுடைமை வாதிகள் அமெரிக்க நாட்டில் பல பிரிவுகளாகக் காணப்படுகிறார்கள் என்றும், கொலை செய்யப்பட்டவர் பொதுவுடைமை வாதிகளின் எழுதப்படாத சட்டத்தை மீறியுள்ளார் என்றும் நடந்த கொலை சுட்டிக் காட்டுகிறது என்று பத்திரிக்கை செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ரெட்கிளிஃப் நெடுஞ்சாலைக் கொலைகள் போன்றவற்றை எடுத்துக்காட்டிய பத்திரிகையின் கட்டுரை, இங்கிலாந்தில் வெளிநாட்டவர் சரியாகக் கண்காணிக்கப்படாததற்கு அரசைக் கடிந்து கொண்டது.

லிபரல் நிர்வாகத்தில் சட்டம் ஒழுங்கு சரிவரப் பராமரிக்கப்படுவதில்லை என்று “ஸ்டான்டர்ட்” பத்திரிக்கை அரசாங்கத்தைக் குற்றம் சாட்டியது.

https://telegram.me/aedahamlibrary

இத்தகைய குற்றங்கள் மக்களின் ஸ்திரத் தன்மையற்ற மனங்களைக் காட்டுவதாகவும், அதனால் அரசின் அதிகாரம் சீர் குலைவதாகவும் அந்தப் பத்திரிக்கை அரசைக் குறை கூறியது. இறந்து போனவர் ஓர் அமெரிக்கக் குடிமகன்; சில வாரங்களாக அவர் லண்டன் மாநகரில் தங்கியிருக்கிறார். அவர் மேடம் சார்ப்பெண்டியர் நடத்தும் விடுதியில் கேம்பர் வெல்லிஸ் இருக்கும் டார்க்குவே டெர்ரஸ் என்ற இடத்தில் தங்கியுள்ளார்.

தனது நேர்முக உதவியாளர் திரு. ஜோசப் ஸ்டேகர்சன் என்பவரை உடன் அழைத்து வந்துள்ளார். தங்களது விடுதி உரிமையாளரிடம் விடைபெற்றுக் கொண்டு இருவரும் 4ஆம் தேதி செவ்வாய்க்கிழமை யூஸ்ட்டன் இரயில் நிலையத்திற்குச் சென்றுள்ளனர். அவ்வாறு பு-றப்பட்டுச் சென்றதன் நோக்கம் லிவர்பூல் செல்லும் விரைவு வண்டியைப் பிடிப்பதற்காக. அவர்கள் இருவரும் யூஸ்ட்டன் இரயில் நிலையத்தின் நடைமேடையில் நின்றிருந்தனர். அதற்குமேல் என்ன நடந்ததென்று தெரியவில்லை. திரு. டிரப்பரின் உடல் யூஸ்ட்டன் இரயில் நிலையத்திலிருந்து பல மைல்கள் தள்ளியிருக்கும் பிரிக்ஸ்ட்டன் சாலையில், காலியாகக் கிடந்த ஒரு வீட்டினுள் கண்டு பிடிக்கப்பட்டது. அவர் எப்படி அங்கு வந்தார்? அவருக்கு அந்த கதி எப்படி நேர்ந்தது போன்றவை புரியாத மர்மங்களாக உள்ளன. ஸ்டேகர்சன் என்பவர் என்ன ஆனார், அவர் எங்குள்ளார் என்பதும் தெரியவில்லை. ஸ்காட்லண்ட் யார்டின் திரு. லெஸ்ட்ரேடும், திரு. கிரக்சனும் இந்த வழக்கில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. விரைவில் அவர்கள் உண்மையைக் கண்டுபிடித்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம். மேற்கண்ட செய்திகள் யாவும் ‘ஸ்டான்டர்ட்’ பத்திரிக்கையில் வெளிவந்தவை.

‘டெய்லி நியூஸ்’ என்ற பத்திரிக்கை கீழ்க்கண்ட செய்தியை வெளியிட்டிருந்தது. ‘இந்த வழக்கு அரசியல் தொடர்பான ஒரு வழக்கு என்பதில் சந்தேகமில்லை. சர்வாதிகாரம்,

https://telegram.me/aedahamlibrary

முற்போக்கு எண்ணம் கொண்டவர்களிடம் வெறுப்பு போன்றவை மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து நம் நாட்டிற்குள் நல்ல குடிமக்கள் வருவதை ஊக்கப்படுத்துகிறது. மற்ற நாடுகளில் தூக்குத் தண்டனை பெற்றுத் தரக் கூடிய குற்றங்கள் கூட நம் நாட்டில் பொறுத்துக் கொள்ளப்படுகிறது. கொலை செய்யப்பட்டவரின் செயல்பாடுகள் பற்றித் தெரிந்துக் கொள்ள உதவியாளர் ஸ்டேகர்சன் எங்குள்ளார் என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். அவர் எங்கு சென்றார் என்ற விவரம் திறமையாகச் செயல்படும் ஸ்காட்லன்ட் யார்டின் திரு. கிரக்சன் அவர்களின் முயற்சியால் கிடைத்துள்ளது.

இது போன்ற பத்திரிகைச் செய்திகளை காலை உணவு பரிமாற்றப்படும் போது நாங்கள் படித்தோம். பத்திரிகைச் செய்திகள் ஷெர்லக் ஹோம்ஸ்&இன் மனதிற்கினிய செய்திகளாக இருந்திருக்க வேண்டும்.

“நடப்பவை யாவற்றிற்கும் உரிய பாராட்டுகளை லெஸ்ட் ரேடும், கிரக்சனும் தான் பெறப் போகிறார்கள் என்று நான் முன்பே உங்களிடம் கூறினேன்” என்றார் ஹோம்ஸ்.

கொலையாளி பிடிபட்டால் அது அவர்களின் முயற்சியால் நடந்தது என்று கூறுவார்கள்; பிடிபடாமல் தப்பிச் சென்று விட்டால் அவர்களின் முயற்சி பலன் தரவில்லை என்று இதே பத்திரிக்கையாளர்கள் கூறுவார்கள். ‘தலை விழுந்தால் நான் வெற்றியடைவேன, பூ விழுந்தால் நான் வெற்றி வாய்ப்பை இழந்தவனாவேன்.’

தன்னைப் போற்றுவதற்கு ஒரு முட்டாள் எப்போதும் அவனைப் போன்ற ஒரு பெரிய முட்டாளைக் கண்டுகொள்கிறான்.

அந்த சமயத்தில் மாடிப்படிகளில் சிலர் ஏறிவரும் ஓசை கேட்டது. எங்கள் வீட்டு உரிமையாளர் சலித்துக் கொள்ளும் குரலும் கேட்டது.

“பேக்கர் வீதியின் ‘ஸ்காட்லன்ட் யார்ட்’ வருவது போல் தோன்றுகிறது” என்று சொன்னார் ஹோம்ஸ். அவர்

https://telegram.me/aedahamlibrary

சொல்லி வாய் மூடுவதற்குள் ஐந்தாறு அரேபிய இளைஞர்கள் ஹோம்ஸ் அவர்களைக் காண வந்து நின்றார்கள். “இனிமேல் நீங்கள் யாரும் உள்ளே நுழையக் கூடாது. உங்கள் சார்பாக விக்கின்ஸ்&ஐ மட்டும் உள்ளே அனுப்ப வேண்டும். மற்றவர்கள் தெருவில் தான் காத்திருந்த வேண்டும். என்ன நான் சொல்வது புரிகிறதா, விக்கின்ஸ்?” என்றார் ஹோம்ஸ்.

“நாங்கள் ஏதும் சொல்லவில்லை ஐயா” என்று வந்திருந்த அரேபிய இளைஞர்களில் ஒருவன் பதில் சொன்னான். “இதோ இருக்கிறது. உங்களுக்குரிய சம்பளம்” என்று சொல்லி ஆளுக்கொரு ஷில்லிங் கொடுத்தனுப்பினார் ஹோம்ஸ். ஹோம்ஸ் கையசைத்தார். வந்திருந்த அரேபிய இளைஞர்கள் யாவரும் மூடியைத் திறந்துவிட்ட எலிகளைப் போல் ஓடிச் சென்று மறைந்து விட்டனர்.

“பத்துப் பன்னிரெண்டு காவலர்கள் செய்யும் பணியை, இங்கு வந்திருந்த இளைஞர்களில், ஒருவன் செய்து விடுவான். இவர்கள் எங்கு வேண்டுமானாலும் செல்வார்கள்; எதை வேண்டுமானாலும் விசாரித்துக் கொண்டு வருவார்கள். காவல் துறையைச் சேர்ந்தவர்களிடம் பொதுமக்கள் வாய் திறந்து பேசமாட்டார்கள். இவர்களிடம் பேசுவார்கள். இந்த இளைஞர்கள், ஊசியைப் போன்று கூர்மையானவர்கள். இவர்களிடம் சரியான ஒருங்கிணைப்பு இல்லாதுதான் ஒரு குறை” என்றார் ஹோம்ஸ்.

“பிரிக்ஸ்ட்டன் வழக்கிற்காகத் தான் இந்த இளைஞர்களை நீங்கள் பணியில் அமர்த்தியிருக்கிறீர்களா?” என்று நான் கேட்டேன்.

“ஆம். இந்த வழக்கு எவ்வளவு காலம் எடுத்துக் கொள்ளப் போகிறது என்பதுதான் கேள்வி. பழி வாங்குதல் தொடர்பாக இப்போது நாம் மற்றுமொரு செய்தியைத் தெரிந்து கொள்ளப் போகிறோம். இதோ கிரக்சன் வந்து கொண்டிருக்கிறார். அவர் முகத்தில் பேரின்பம் தாண்டவமாடுகிறது. வந்த கிரக்சன் நம் வீட்டருகில் நின்று

https://telegram.me/aedahamlibrary

விட்டார். இதோ உள்ளே வருகிறார்" சொல்லி முடித்தார் ஷெர்லக் ஹோம்ஸ்-.

மணியடிக்கும் ஓசை கேட்டது. மூன்று மூன்று படிகளாகத் தாவி துப்பறியும் நிபுணர் கிரக்சன் உள்ளே நுழைந்தார்.

"நீங்கள் என்னைப் பாராட்ட வேண்டும், ஹோம்ஸ். நான் இந்த வழக்கின் அனைத்துக் குழப்பங்களையும் நீக்கி விட்டேன்" - என்றார் கிரக்சன்.

ஒரு எதிர்பார்ப்பு- என் நண்பரின் கண்களில் தெரிந்தது.

"நீங்கள் சரியான பாதையில் தான் சென்று கொண்டிருக்கிறர்களா?" என்று கிரக்சனிடம் கேட்டார் ஹோம்ஸ்.

"நாங்கள் கொலைகாரனைக் கைது செய்து விட்டோம்."

"அவன் பெயர் என்ன?"

"ஆர்தர் சார்ப் பெண்டியர்; அவன் கடற்படையில் ஒரு சப் லெ.ஃப்டினன்ட்" என்று கைகளைத் தேய்த்துக் கொண்டே பதில் சொன்னார் கிரக்சன்.

ஹோம்ஸ் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார். அவர் முகத்தில் புன்னகை தோன்றியது.

"நாற்காலியில் அமருங்கள். இந்த சுருட்டை எடுத்துப் புகைத்துப் பாருங்கள். நீங்கள் அந்த மனிதனை எப்படிப் பிடித்தீர்கள். உங்களுக்கு விஸ்கி வேண்டுமா?" என்று கிரக்சனிடம் கேட்டார் ஹோம்ஸ்.

"கொடுத்தால் நன்றாக இருக்கும். இரண்டு, மூன்று தினங்களாக எனக்குக் கடினமான வேலை. வேலையென்றால் உடல் உழைப்பு அல்ல; மன உளைச்சல் தான் அதிகம். நீங்கள் என்னைப் பாராட்ட வேண்டும். திரு. ஹோம்ஸ், நம்மைப் போன்றவர்கள் மூளைக்கு அதிக வேலை கொடுப்பவர்கள்" என்றார் கிரக்சன்.

"நீங்கள் என்னை மிகவும் பெருமைப்படுத்துகிறீர்கள். இது போன்ற பாராட்டத்தக்க முடிவுக்கு நீங்கள் எப்படி

https://telegram.me/aedahamlibrary

வந்தீர்கள்?” என்று கிரக்சனிடம் கேட்டார் ஷெர்லக் ஹோம்ஸ்.

கிரக்சன் நாற்காலியில் அமர்ந்துகொண்டு, புகையை நன்றாக இழுத்து விட்டார். பின் மகிழ்ச்சியில் தன் தொடைகளைத் தட்டிக் கொண்டார்.

“இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த முட்டாள் லெஸ்ட்ரேட் இருக்கிறானே அவன் தன்னைப் பற்றி மிகவும் உயர்வாக நினைத்துக் கொண்டிருந்தான். அவன் சென்ற வழி மிகவும் தவறான வழி. அவன் ஸ்டேகர்சன்&ஐத் தேடிக்கொண்டு சென்றுள்ளான். ஸ்டேகர்சன்&க்கு இந்த வழக்கில் இனி எந்தத் தொடர்பும் இல்லை. அவர் பிறக்காத ஒரு குழந்தை தான். இவ்வளவு நேரம் லெஸ்ட்ரேட் ஸ்டேகர்சன்&ஐப் பிடித்திருப்பான் என்று நினைக்கிறேன்” என்று தான் சொல்ல வந்ததை சொல்லி முடித்தார் கிரக்சன்.

“உங்களுக்குத் தடயம் எங்கிருந்து கிடைத்தது?”

“நான் உங்களுக்கு எல்லாவற்றையும் சொல்கிறேன் டாக்டர் வாட்சன். இது நமக்குள் இருக்கட்டும். முதலில் நமக்கிருந்த சிக்கல், வழக்கிலிருக்கும் அமெரிக்க முன் வரலாற்றைத் தெரிந்து கொள்வதுதான். கொடுத்த விளம்பரத்திற்கான பதில் வரட்டும் என்று சிலர் காத்திருப்பார்கள். வேறு சிலர் யாராவது முன்வந்து தாங்களாகவே செய்திகளைச் சொல்ல மாட்டார்களா என்று காத்திருப்பார்கள். அது டோபியாஸ் கிரக்சனின் பாணியல்ல. உங்களுக்கு இறந்துபோனவரின் அருகில் இருந்த தொப்பி ஞாபகத்தில் உள்ளதா?” என்று கேட்டார் கிரக்சன்.

“ஆம். உள்ளது” என்று சொன்ன ஹோம்ஸ். “அது ஜான் அன்டர்வுட் அன்ட் சன்ஸ், 129 கேம்பர்வெல் சாலையிலுள்ள கடையில் வாங்கப்பட்டது” என்றார் கிரக்சனிடம்.

இந்தப் பதிலைக் கேட்டதும் கிரக்சனின் முகம் தொங்கிப் போய்விட்டது.

https://telegram.me/aedahamlibrary

“நீங்கள் அதிலிருந்த விலாசத்தை கவனித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் அங்கு சென்று விசாரித்தீர்களா?” என்று ஹோம்ஸிடம் கேட்டார் கிரக்சன்.

“இல்லை” என்றார் ஹோம்ஸ்.

“நீங்கள் எந்த சந்தர்ப்பத்தையும் நழுவவிட்டு விடக் கூடாது. அது எவ்வளவு சிறிய விஷயமாகவும் இருக்கலாம்.”

“சரியான மூளைக்கு எந்த விஷயமும் சிறிய விஷயமில்லை.”

“நான் அன்டர்வுட் நிறுவனத்திற்குச் சென்று விசாரித்தேன். அந்தத் தொப்பியை யாருக்கு விற்பனை செய்தீர்கள் என்று விசாரித்தேன். அந்தக் கடை நிறுவனர் உடனே தன் பில் புத்தகத்தைப் பார்த்து விட்டு, ‘டார்குவே டெர்ரஸ்’ என்ற இடத்தில் இயங்கி வரும் சார்ப்பென்டியர் விடுதியில் தங்கியிருக்கும் திரு. டிரெப்பர் என்பவருக்குக் கொடுத்ததாகத் தெரிவித்தார். அப்படித் தான் நான் டிரப்பர் தங்கியிருந்த விடுதியின் விலாசத்தைக் கண்டு பிடித்தேன்.

“நன்று, மிக நன்று” என்று பாராட்டினார் ஹோம்ஸ். கிரக்சன் தொடர்ந்து பேசினார்.” அதன் பிறகு நான் மேடம் சார்ப்பென்டியரை சென்று சந்தித்தேன். அந்த அம்மையாரின் முகம் வெளிறிப் போயிருந்ததையும், அவர் ஏதோ சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளார் என்பதையும் அவர் முகம் காட்டிக் கொடுத்தது. நான் சென்ற போது அந்த அம்மையாருடன் மகளும் அங்கிருந்தாள். மிகவும் அழகான பெண். நான் அந்த அம்மையாரிடம் பேசியபோது அவரது உதடுகள் நடுங்கின. அது என் பார்வையிலிருந்து தப்பவில்லை. ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டது என்பதை என்னால் உணர முடிந்தது. திரு. ஷெர்லக் ஹோம்ஸ்! சரியான ஒன்றை மோப்பம் பிடித்துவிட்டால் உங்கள் உடல் முழுவதும் ஒரு திகில் பரவுமல்லவா? “உங்கள் அறையில் தங்கியிருந்த,

https://telegram.me/aedahamlibrary

கிளீவ்லண்டைச் சேர்ந்த திரு. யூனோக் ஜெ. டிரப்பர் என்பவர் மர்மமான முறையில் இறந்துவிட்டார் என்பது உங்களுக்குத் தெரியுமா-?" என்று மேடம் சார்ப்பெண்டியர் அவர்களிடம் கேட்டேன். அந்த அம்மையாரின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. மகள் துக்கம் தாங்கமுடியாமல் பொங்கி அழுதாள். இவர்களுக்கு ஏதோ விஷயம் தெரியுமென்பதை நான் கண்டுபிடித்துவிட்டேன். "எத்தனை மணிக்கு திரு. டிரப்பர் தொடர் வண்டியைப் பிடிக்க உங்கள் இல்லத்திலிருந்து கிளம்பினார்?" என்று நான் கேட்டேன்.

"எட்டு மணிக்கு" என்று துக்கத்தை விழுங்கிக் கொண்டே அந்த அம்மையார் பதில் அளித்தார். அவருடைய காரியதரிசி திரு. ஸ்டேகர்சன் இரண்டு தொடர்வண்டிகள் இருப்பதாகவும், ஒன்று 9.15 மணிக்குப் புறப்படும் என்றும், மற்றொன்று 11.00 மணிக்குப் புறப்படும் என்றும் கூறினார்."

"அதுதான் நீங்கள் அவரைக் கடைசியாகப் பார்த்ததா?" என்று நான் திருமதி. சார்ப்பெண்டியரிடம் கேட்டேன்.

"நான் அந்தக் கேள்வியைக் கேட்டதும் அந்த அம்மையாரின் முகத்தில் அச்சம் தரும் ஒரு தோற்றம் தெரிந்தது. "ஆம்" என்று சொல்வதற்குள் அவள் தடுமாறிப் போனாள். இயற்கைக்கு மாறான ஒரு குரலில் அந்த அம்மையார் "ஆம்" என்று கூறினார். ஒரு சில நிமிட அமைதிக்குப் பின் அந்த அம்மையாரின் மகள் தெளிவான குரலில் பேசினாள்.

"இந்தக் கனவானிடம் எதையும் மறைக்க வேண்டாம். ஒளிவு மறைவின்றி இவரிடம் கூறி விடுவோம். நாங்கள் திரும்பவும் திரு. டிரப்பரைப் பார்த்தோம்" என்றாள் மகள்.

"கடவுள் தான் உன்னை மன்னிக்க வேண்டும். நீ உன் சகோதரனைக் காட்டிக் கொடுத்துவிட்டாய், ஆலிஸ்" என்றாள் மகளிடம்.

"ஆர்தர் உண்மையை ஒப்புக் கொண்டு விடுவான்" என்றாள் மகள் ஆலிஸ்.

https://telegram.me/aedahamlibrary

“உண்மையைக் கூறிவிடுங்கள். அரைகுறையாக நம்பிக்கை வைப்பது, வைக்காததற்குச் சமம். எங்களுக்கு இந்தக் கொலை பற்றி எவ்வளவு தெரியும் என்பது உங்களுக்குத் தெரியாது” என்றார் கிரக்சன்.

ஐயா, நான் உண்மை அனைத்தையும் உங்களிடம் கூறிவிடுகிறேன் என்று சொன்ன மேடம் சார்ப்பென்டியர் கிரக்சனிடம் தொடர்ந்து பேசினாள். “இந்தக் கொலையில் என் மகனுக்குத் தொடர்புள்ளது என்று நினைத்து நான் பயப்படவில்லை. என் மகன் ஆர்தர் ஒரு நிரபராதி. உங்கள் கண்களுக்கும், மற்றவர் கண்களுக்கும் அவன் குற்றவாளியாக இருக்கலாம். அவனுடைய உயர்வான குணமும், அவன் வகிக்கும் பதவியும் அதற்கு இடம் தராது” என்றாள் மேடம் சார்ப்பென்டியர்.

“எல்லா உண்மைகளையும் சொல்லிவிடுவது நல்லது. உங்கள் மகன் நிரபராதி என்றால் நீங்கள் ஏன் பயப்பட வேண்டும்?” என்றார் கிரக்சன்.

தன் மகளை உள்ளே போகச் சொல்லிவிட்டு மீண்டும் கிரக்சனிடம் பேசினாள் மேடம் சார்ப் பென்ட்டியர். “நான் முதலில் உங்களிடம் பேசுவதாக இல்லை. என் மகள் சிலவற்றை உங்களிடம் கூறி விட்டாள். இப்போது நான் பேசித்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. உண்மையைச் சொல்லி விடுவது என்று ஆன பிறகு, ஒன்று விடாமல் நான் சொல்லி விடுகிறேன்” என்றாள் மேடம் சார்ப்பென்டியர்.

“அது தான் நல்ல முடிவு” என்றார் கிரக்சன்.

சார்ப்பென்ட்டியர் தொடர்ந்தாள். “மூன்று வாரங்களாக திரு. டிரப்பர் எங்களுடன் தான் இருந்து வந்தார். அவரும் அவரது காரியதரிசி திரு. ஸ்டேகர்சன் என்பவரும் ஐரோப்பாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்கள். அவர்கள் இருவரது பெட்டிகளிலும் ‘கோப்பன் ஹேகன்’ என்ற அடையாளச் சீட்டு ஒட்டப்பட்டிருந்தது. அதை வைத்து அவர்கள் இருவரும் கோப்பன்ஹேகனிலிருந்து வருகிறார்கள் என்று அறிந்து கொண்டேன். அதுதான்

https://telegram.me/aedahamlibrary

அவர்கள் சென்று வந்த கடைசி நகரம். காரியதரிசி ஸ்டேகர்சன் மிகவும் அமைதியான மனிதர். ஆனால் அவரது முதலாளியான திரு. டிரப்பர் அதற்கு நேர்மாறானவர். வந்த நாளன்று இரவே அவர் குடித்துவிட்டுத்தான் வந்தார். பகல் 12 மணிக்கு மேல் அவர் நிதானத்தில் இருந்ததேயில்லை. பெண் ஊழியர்களிடம் அவர் நடந்து கொண்ட முறை சரியே அல்ல. இதில் கேவலமான விஷயம் என்னவென்றால் என் மகள் ஆலிஸிடமும் அவர் அவ்வாறே நடந்து கொண்டார். ஒரு முறை அவர் என் மகளின் கையைப் பிடித்திழுத்து அவளை அப்படியே அணைத்துக் கொண்டுவிட்டார். இதைப் பார்த்த அவருடைய காரியதரிசியே அவரைக் கடிந்து கொண்டார்."

பேச்சை நிறுத்திய சார்ப்பென்ட்டியரிடம் கிரக்சன் கேட்டார். "இப்படியெல்லாம் அவர் நடந்து கொள்கிறார் என்றால், அவர்கள் இருவரையும், நீங்கள் வெளியேற்றியிருக்கலாமே?"

முகம் சிவந்த மேடம் சார்ப்பென்டியர் "எல்லாம் ஒரு சபலம் தான் காரணம். ஒவ்வொருவரும் தலைக்கு ஒரு பவுண்ட் வாடகை தருகிறார்கள். வாரத்திற்கு 14 பவுண்ட் கிடைக்கிறது. அதிக ஓட்டமில்லாத இந்தப் பருவத்தில் யார் இவ்வளவு வாடகை கொடுப்பார்கள்-? நான் ஒரு விதவை. என் மகன் கடற்படையில் பணிபுரிகிறான். எனக்குக் கிடைக்கும் வருவாயை விடுவதற்கு மனமில்லை. பொருத்துக் கொள்ள முடியாமல், கடைசியில் நான் அவர்களுக்கு போகச் சொல்லி நோட்டீஸ் கொடுத்துவிட்டேன்."

"அவர்களை போகச் சொன்ன பிறகுதான் என் மனம் இலேசானது. என் மகன் விடுமுறையில் இங்கு வந்துள்ளான். அவன் ஒரு முன்கோபக்காரன். தங்கையிடம் பாசம் உள்ளவன். என் துரதிர்ஷ்டம் வெளியில் சென்ற டிரப்பர் மீண்டும் வந்துவிட்டார். குடித்துவிட்டுத்தான் வந்தார். எங்களைத் தள்ளிக் கொண்டு அவர் தங்கியிருந்த அறைக்குச் சென்றார். நான்

https://telegram.me/aedahamlibrary

என் மகளுடன் என் அறையில் இருந்தேன். என் கண் முன்பாகவே என் மகளிடம், அவரைத் திருமணம் செய்து கொள்ளும்படி ஏதேதோ கூறினார். தொடர் வண்டியை விட்டுவிட்டதாகக் கூறினார். அவ்வாறு கூறிய டிரப்பர் என் மகளின் கையைப் பிடித்திழுத்தார். கிளம்பி வருமாறு அவளை வற்புறுத்தினார். நான் “ஓ” & என்று அலறினேன். என் குரல் கேட்டு என் மகன் ஆர்தர் அங்கு வந்தான். பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டிருக்க வேண்டும். தலையைத் தூக்கிப் பார்க்கவே எனக்கு பயமாக இருந்தது. நான் பார்த்தபோது என் மகன் கையில் ஒரு தடியுடன் நின்று கொண்டிருந்தான். “அந்த மனிதன் இனி எந்த வம்புக்கும் வர மாட்டான். என்ன செய்கிறான் என்று பார்த்துவிட்டு வருகிறேன்” என்று சொல்லிவிட்டு என் மகன் போய் விட்டான். டிரப்பரும் தன் தொப்பியுடன் தெருவில் நடந்து சென்று விட்டார். அடுத்த நாள் காலையில் திரு. டிரப்பரின் மர்மமான சாவைப் பற்றி நான் பத்திரிகையில் படித்தேன்” என்று சொல்லித் தன் பேச்சை முடித்தான் மேடம் சார்ப்பென்ட்டியர்.

“அவள் பேசும்போது மிகவும் உணர்ச்சி வசப்பட்டவளாகக் காணப்பட்டாள். தொடர்ந்து அவளால் பேச இயலவில்லை; விட்டு விட்டுப் பேசினாள். அவள் பேசியது அனைத்தையும் நான் சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்துக் கொண்டேன். எனவே தவறு ஏற்பட வாய்ப்பேயில்லை” என்றார் கிரக்சன்.

“அதற்குப் பின் என்ன நடந்தது?” என்று கேட்டார் ஹோம்ஸ்.

வெளியில் சென்ற மகன் எத்தனை மணிக்குத் திரும்பி வந்தான் என்று திருமதி. சார்ப்பென்ட்டியரிடம் கேட்டதாகச் சொன்னார் கிரக்சன்.

“எனக்குத் தெரியாது” என்று சொன்னாள்

திருமதி. சார்ப்பென்ட்டியர். “உங்களுக்குத் தெரியாதா?” & கிரக்சன் கேட்டார்.

https://telegram.me/aedahamlibrary

“அவன் தனக்கென்று தனியாக ஒரு சாவி வைத்திருக்கிறான்” என்றாள் திருமதி சார்ப்பென்ட்டியர்.

“நீங்கள் படுக்கைக்குச் சென்ற பிறகுதான் உங்கள் மகன் ஆர்தர் வந்தானா?”

“ஆம்.”

“நீங்கள் எத்தனை மணிக்குப் படுக்கச் சென்றீர்கள்-?”

“சுமார் 11 மணிக்கு.”

“எனவே இரண்டு மணி நேரமாக உங்கள் மகன் வெளியில் சென்றிருந்தான்.”

“ஆம்”

“மூன்று அல்லது நான்கு மணி நேரம் கூட இருக்கலாமா?”

“ஆம்.”

“அவ்வளவு நேரம் அவன் என்ன செய்து கொண்டிருந்தான்?” “எனக்குத் தெரியாது.” அவ்வாறு கூறும்போது திருமதி சார்ப்பெண்ட்டியர் உதடுகள் வெளிறிப் போயிருந்ததாக கிரக்சன் கூறினார்.

இதற்குமேல் தெரிந்து கொள்ளப்போவது ஒன்றுமில்லை. லெ∴ப்ட்டினன்ட் சார்ப்பென்ட்டியர் எங்கேயிருக்கிறான் என்று கண்டுபிடித்து, இரண்டு அதிகாரிகளுடன் சென்று அவனைக் கைது செய்தேன். “டிரப்பர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக நீங்கள் என்னைக் கைது செய்கிறீர்கள். அவன் ஓர் அயோக்கியன்” என்றான் லெ∴ப்டினன்ட் சார்ப்பென்ட்டியர். “நாங்கள் கைது செய்த போது கூட அந்த லெ∴ப்டினன்ட் ஒரு குண்டாந்தாடியை வைத்துக் கொண்டிருந்தான். அது ஓர் ஓக் மரக்கட்டை. அவனது தாயார் சொன்னது போன்றே அந்தக் கட்டை காணப்பட்டது” என்றார் கிரக்சன்.

“அப்படியென்றால் உங்கள் யூகம் என்ன?” என்று கிரக்சனிடம் கேட்டார் ஹோம்ஸ்.

“இது தான் என்னுடைய யூகம். லெ∴ப்ட்டினன்ட் சார்பென்ட்டியர், டிரப்பரின் பின்னால் பிரிக்ஸ்ட்டன்

https://telegram.me/aedahamlibrary

சாலை வரை வந்துள்ளான். அந்த இடத்தில் மறுபடியும் டிரப்பருக்கும், லெஃப்ட்டினன்ட்டுக்கும் இடையே புதிய சண்டை ஏற்பட்டுள்ளது. லெஃப்ட்டினன்ட் தான் வைத்திருந்த கட்டையால் டிரப்பரைத் தாக்கியிருக்கிறான். டிரப்பரின் வயிற்றுப் பகுதியில் தாக்கியிருக்கிறான். அந்தத் தாக்குதல் எந்த அடையாளமும் இன்றி அவரின் உயிரைக் குடித்துள்ளது. அன்று இரவு மழை பெய்து தரை ஈரமாக இருந்தது. இறந்துபோன டிரப்பரின் உடலை காலியாகக் கிடந்த வீடு வரை லெஃப்ட்டினன்ட் சார்ப்பான்ட்டியர் இழுத்துக் கொண்டே வந்துள்ளான். மெழுகுத்திரி, திருமண மோதிரம், தரையில் படிந்திருந்த இரத்தக்கரை, சுவற்றில் எழுதப்பட்டிருந்த வாசகம் போன்றவை காவல்துறையை திசை திருப்பப் பயன்படுத்திய தந்திரங்கள்” என்று சொல்லி முடித்தார் கிரக்சன்.

“மிக நன்றாகப் புலனாய்வு செய்துள்ளீர்கள்

திரு. கிரக்சன். உங்கள் பணி இதுவரை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை என்று நினைக்கிறேன்” என்றார் ஹோம்ஸ்.

“என்னைப் பற்றியே நான் பெருமையாகப் பேசக் கூடாது.

இதுவரை நான் நன்றாகத் தான் புலனாய்வு செய்துள்ளேன். அந்த லெஃப்டினன்ட் தானாகவே முன்வந்து ஒரு வாக்கு மூலம் அளித்துள்ளான். லெஃப்டினன்ட் தன்னைப் பின் தொடர்வதை உணர்ந்த டிரப்பர் குதிரைவண்டி ஒன்றை அமர்த்திக் கொண்டு அதில் ஏறிச் சென்று விட்டார்; லெஃப்டினன்ட்டைத் தவிர்ப்பதற்காக அவ்வாறு செய்தார். இவ்வாறு அந்த வாக்குமூலத்தில் லெஃப்டினன்ட் அந்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளான். தன் வீட்டிற்குத் திரும்பும்போது லெஃப்டினன்ட் ஒரு பழைய நண்பனைப் பார்த்ததாகவும், அவருடன் நீண்ட தூரம் நடந்து வந்ததாகவும் அவன் அளித்த வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளான். அந்த நண்பர் எங்கே வசிக்கிறார் என்ற கேள்விக்கு

https://telegram.me/aedahamlibrary

திருப்திகரமான பதிலை அவனால் தர இயலவில்லை. லெஸ்ட்ரேட் எங்கே போனார் என்பதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது” இதைச் சொல்லி முடிக்கு முன்பே லெஸ்ட்ரேட் அங்கு வந்துவிட்டார்.

நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோதே

திரு. லெஸ்ட்ரேட் படியேறி வந்துவிட்டார். அவருடைய உடை கலைந்திருந்தது; அழுக்காகவும் இருந்தது. அவர் வழக்கமாகக் காணப்படுவது போல் இல்லை. அவருடைய முகத்தில் கலவரம் தெரிந்தது. ஷெர்லக் ஹோம்ஸ்&ஐப் பார்த்து ஏதோ கேட்க வேண்டுமென்று வந்தவர் போல் தெரிந்தது. எங்கள் அறையில் மையப் பகுதியில் நின்றுகொண்டிருந்த லெஸ்ட்ரேட் “இந்த வழக்கு புரிந்து கொள்ள முடியாத ஒரு வழக்கு” என்றார். கிரக்சன் அங்கு இருப்பார் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. கிரக்சனின் வருகை லெஸ்ட்ரேடுக்கு ஒரு முட்டுக் கட்டையாகத் தெரிந்தது.

“கண்டுபிடித்து விட்டீர்களா லெஸ்ட்ரேட். திரு. ஜோசப் ஸ்டேசர்சன் அவர்களைக் கண்டுபிடித்து விட்டீர்களா?” என்று கேட்டார் கிரக்சன்.

“காரியதரிசி, ஸ்டேகர்சன் ‘லிட்டில் ஜாமஜ்’ வீதியில் இருக்கும் ‘ஹேலிடே’ என்ற தனியார் விடுதியில், இன்று காலை 6 மணிக்குக் கொலை செய்யப்பட்டு விட்டார்” என்றார் லெஸ்ட்ரேட்.

###

https://telegram.me/aedahamlibrary

இருளில் ஓர் ஒளி

லெஸ்ட்ரேட் துப்பறிந்து கண்டுபிடித்த செய்தி நாங்கள் எதிர்பாராத ஒன்று. அந்தச் செய்தி எங்களை வாயடைத்துப் போகச் செய்துவிட்டது. கிரக்சன் தன் நாற்காலியிலிருந்து துள்ளிக் குதித்தெழுந்து மீதமிருந்த விஸ்கியைக் காலி செய்தார். நான் ஷெர்லக் ஹோம்ஸை நன்றாக விழித்துப் பார்த்தேன். அவருடைய உதடுகள் ஒட்டிப் போயிருந்தன; இமைகள் கண்களை மூடியிருந்தன.

“ஸ்டாகர்சன் கூடவா. அப்படியென்றால் வழக்கின் முடிச்சு இன்னும் சிக்கலாகிறது” என்றார் ஹோம்ஸ்.

“முன்பே அது சிக்கலாகித்தான் இருக்கிறது,” என்று கூறிய லெஸட்ரேட் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அதில் அமர்ந்தார். “உங்களது மந்திராலோசனைக் கூட்டத்தில் நான் இடையில் வந்து புகுந்து விட்டேனா?” என்று வினா எழுப்பினார்.

“இந்தச் செய்தி உண்மைதானா?” என்று மீண்டும் கேட்டார் கிரக்சன். “நான் நேராக ஸ்டேகர்சன் தங்கியிருந்த அறையிலிருந்து தான் வருகிறேன். அவர் கொலை செய்யப்பட்டதை முதலில் கண்டு பிடித்தவன் நான்தான்” என்றார் லெஸ்ட்ரேட்.

“கிரக்சன் இந்த வழக்கைப் பற்றி என்ன நினைக்கிறார் என்று கேட்டுக் கொண்டிருந்தோம் திரு. லெஸ்ட்ரேட். நீங்கள் என்ன பார்த்தீர்கள், என்ன செய்தீர்கள் என்பதை தயவு செய்து கூற இயலுமா?” என்று லெஸ்ட்ரேட்டைப் பார்த்துக் கேட்டார் ஹோம்ஸ்.

“நான் நேரில் பார்த்தவற்றைச் சொல்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஸ்ட்டேகர்சன் தான் டிரப்பரைக் கொலை செய்து விட்டார் என்று நான் தவறாக நினைத்துவிட்டேன். இப்போது நடந்த கொலை நான் தவறிழைத்து விட்டேன் என்பதை உறுதி செய்கிறது. டிரப்பரின் காரியதரிசியான ஸ்டேகர்சன் என்ன ஆனார் என்பதைக் கண்டுபிடிக்கும் பொருட்டே நான் புறப்பட்டுச்

https://telegram.me/aedahamlibrary

சென்றேன். 3ஆம் தேதி இரவு 8.30 மணிக்கு ஸ்டேகர்சனும், டிரப்பரும் யூஸ்ட்டன் தொடர்வண்டி நிலையத்தில் ஒன்றாக இருந்துள்ளனர். அதிகாலை 2 மணிக்கு டிரப்பர், பிரிக்ஸ்ட்டன் சாலையில் காலியாக இருந்த ஒரு வீட்டில் பிணமாகக் கிடந்தார். என்னைக் குழப்பும் ஒரு கேள்வி 3ஆம் தேதி இரவு 8.30 மணியிலிருந்து, 4ஆம் தேதி அதிகாலை 2&மணி வரை ஸ்டேகர்சன் என்ன செய்து கொண்டிருந்தார்? என்பது தான். அதன் பிறகு அவர் என்ன ஆனார்-? நான் லிவர்பூலுக்குத் தந்தி கொடுத்து ஸ்டேகர்சன் பற்றிய விவரங்களை அதில் அனுப்பி, அமெரிக்காவிற்குப் புறப்பட்டுச் செல்லும் கப்பல்களை கவனிக்கச் சொன்னேன். அதன் பிறகு யூஸ்ட்டன் தொடர்வண்டி நிலையத்தின் அருகில் இருக்கும் தங்கும் விடுதிகளைத் தேடிச் சென்றேன். டிரப்பரும், ஸ்டேகர்சனும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருந்தால், ஸ்டேகர்சன் அன்று இரவு யூஸ்டன் தொடர்வண்டி நிலையத்தின் அருகில் தான் எங்காவது தங்கியிருக்க வேண்டும்."

"டிரப்பரும், ஸ்டேகர்சனும் திரும்பவும் எங்கே சந்திப்பது என்று முன்பே முடிவு செய்திருக்க வேண்டும்" என்றார் குறுக்கிட்டுப் பேசிய ஹோம்ஸ்.

"நேற்று இரவு முழுவதும் நான் யூஸ்ட்டன் தொடர்வண்டி நிலையத்தின் அருகில் உள்ள தங்கும் விடுதிகள் ஒவ்வொன்றுக்கும் சென்று விசாரித்துப் பார்த்தேன். பலன் கிடைக்கவில்லை. இன்று அதாவது 4ஆம் தேதி காலை விரைவாகப் புறப்பட்டு விட்டேன். 8 மணிக்கு லிட்டில் ஜார்ஜ் வீதியில் உள்ள 'ஹேலிடே' என்ற தங்கும் விடுதிக்குச் சென்று விசாரித்தேன். ஸ்டேகர்சன் அந்த விடுதியில் தான் தங்கியிருந்தார். "உங்களுக்காகத் தான் இரண்டு நாட்களாகக் காத்துக் கொண்டிருக்கிறார்" என்று கூறினார் விடுதியின் மேலாளர்."

"இப்போது அவர் எங்கே?" என்று விசாரித்தேன்.

"மேல் மாடியில் இருக்கிறார்; சரியாக ஒன்பது மணிக்குத் தன்னை எழுப்புமாறு என்னிடம் கூறினார்" என்றார்

https://telegram.me/aedahamlibrary

விடுதியின் மேலாளர்.

“இப்போதே சென்று அவரைப் பார்ப்போம்” என்று நான் கூறினேன்.

“என்னுடைய திடீர்த் தோற்றம் ஸ்டேகர்சனுக்கு திகிலை ஏற்படுத்தலாம். அவர் ஒன்று கடக்க ஒன்று பேசக் கூடும். பூட்ஸ் என்ற விடுதி மேலாளர் தானாக முன் வந்து ஸ்டேகர்சன் தங்கியிருக்கும் அறையைக் காண்பிப்பதாகக் கூறினார். மாடியில் இரண்டாவது தளத்தில் ஸ்டேகர்சன் தங்கியிருக்கும் அறை இருந்தது. ஒரு தாழ்வாரம் அறையுடன் இணைந்திருந்தது. அறையின் கதவுகளை பூட்ஸ் காட்டினார். அறைக் கதவின் கீழ்ப்புற இடுக்கிலிருந்து இரத்தம் தோய்ந்த ஒரு செந்நிற நாடா சுருண்டு வெளிவந்தது. இதுபோன்ற ஒரு அனுபவத்தை என்னுடைய இருபது ஆண்டு அனுபவத்தில் நான் பெற்றதில்லை. கீழேயிறங்கி ஓடலாமா என்று தோன்றியது. அறைக்கதவு உட்புறம் தாழிட்டிருந்தது. செந்நிற நாடாவைப் பார்த்து நான் கூச்சல் போட்டு விட்டேன். என்னுடைய கூச்சல் சப்தம் இறங்கிப் போன பூட்சை மீண்டும் மேலே வரவழைத்தது. நானும் பூட்சும் சேர்ந்து எங்கள் தோள்களின் வலிமையால் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றோம். ஜன்னல் கதவுகள் திறந்திருந்தன. அறையினுள் இரவு உடையில் ஸ்டேகர்சன் இறந்து கிடந்தார். அவர் இறந்து வெகுநேரம் ஆகியிருக்க வேண்டும். கைகால்கள் விறைத்து விட்டன. குப்புறக் கிடந்த உடலை நேராகப் புரட்டிப் போட்டோம். உடனே பூட்ஸ் அவரை அடையாளம் கண்டு கொண்டு விட்டார். ஜோசப் ஸ்டேகர்சன் என்ற பெயரில் அறையைப் பதிவு செய்தது அவர்தான் என்று கூறினார். கத்தியால் குத்தப்பட்டதுதான் அவர் இறந்து போனதற்குக் காரணம். இடதுபுறம் விழுந்த கத்திக்குத்து ஸ்டேகர்களின் இதயத்தைத் துளைத்திருக்க வேண்டும். இப்போதுதான் இந்த வழக்கின் முக்கியமான கேள்வி எழுகிறது. கொலை செய்யப்பட்ட மனிதனைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?” லெஸ்ட்ரேட் பேசி முடித்தார்.

https://telegram.me/aedahamlibrary

"இரத்தம் தோய்ந்த நாடாவில் 'RACHE' - என்று எழுதப்பட்டிருந்ததா?" என்று கேட்டார் ஹோம்ஸ்.

"ஆம்" என்று வியப்பு மேலிடக் கூறினார் லெஸ்ட்ரேட். நாங்கள் யாவரும் சற்றுநேரம் மௌனமானோம்.

கொலைகாரனின் செயல்பாடுகளில், குற்றம் புரிவதில் ஒரு கோரத்தன்மை தென்படுகிறது. போர்க்களத்தில் ஸ்திரத்தன்மையுடன் இருந்த என் நரம்புகள் கூட இத்தகைய கோரத்தன்மையைக் கேள்விப்படும் போது கூசுகிறது.

லெஸ்ட்ரேட் தொடர்ந்து பேசினார். "தங்கும் விடுதியின் பின்புறம் குதிரைக் கொட்டகை ஒன்று உள்ளது. அதற்குச் செல்ல ஒரு சந்தும் உண்டு. அதன் வழியாகக் கொலைகாரன் வருவதை ஒரு பால்காரப் பையன் பார்த்துள்ளான். வழக்கமாகக் கீழே வைக்கப்பட்டிருக்கும் ஏணி விடுதி அறையில் ஜன்னலில் சாற்றப்பட்டிருந்ததையும், அதிலிருந்து ஒரு மனிதன் இறங்கி வருவதையும் பால்காரப் பையன் பார்த்துள்ளான். அவன் அமைதியாக இறங்கி வருவதைப் பார்த்த பையன், கொலைகாரன் தச்சுவேலை பார்க்கும் ஒரு தொழிலாளி அல்லது குழாய் இணைப்பு கொடுப்பவன் என்று நினைத்து விட்டான். அதற்குமேல் அவன் சிந்தனை ஓட வில்லை. பால்காரப் பையன் தன்னுடைய பணிக்குச் செல்லும் நேரமும் நெருங்கிவிட்டது. பால்காரப் பையனின் கணிப்பில் கொலைகாரன் நல்ல உயரத்துடனும், செந்நிற முகத்துடனும், பழுப்பு நிறக் கோட் அணிந்து கொண்டும் இருந்தான். கொலைகாரன் கொலைச் செய்து விட்டு சிறிதுநேரம் அங்கேயே இருந்திருக்க வேண்டும். ஏனெனில் கை கழுவும் பேசினில் இரத்தக் கறை காணப்பட்டது. அவன் கொலை செய்யப் பயன்படுத்திய கத்தியை பேசினில் கழுவி பின் படுக்கை விரிப்பில் துடைத்திருக்க வேண்டும்."

இந்தக் கொலைகாரனின் வர்ணனையைக் கேட்ட போது அது டிரப்பரைக் கொலை செய்தவனின் வர்ணனையோடு

https://telegram.me/aedahamlibrary

ஒத்துப் போவது தெரிந்தது. ஆனால் ஹோம்ஸ் முகத்தில் எந்தத் திருப்தியும் ஏற்படவில்லை.

“இந்தக் கொலையைக் கண்டுபிடிக்க உதவும் தடயம் ஏதாவது அறையில் கிடைத்ததா?” என்று லெஸ்ட்ரேட்டிடம் கேட்டார் ஹோம்ஸ்.

“ஏதும் கிடைக்கவில்லை. ஸ்டேகர்சன், டிரப்பரின் பணப் பையைத் தன் கோட்டில் வைத்திருந்தார். அது வழக்கமானது தான். டிரப்பரின் காரியதரிசி என்ற முறையில், பணம் கொடுக்க வேண்டியவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கும். பணப் பையில் 80 பவுண்ட் மற்றும் கொஞ்சம் சில்லறை இருந்தது. எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே கொலை செய்ததற்குப் பணம் தான் காரணம் என்று சொல்ல முடியாது.”

“வேறு ஏதாவது துண்டுச் சீட்டு ஸ்டேகர்சனின் பையில் இருந்ததா?”

“வேறு ஏதும் துண்டுச் சீட்டுகள் ஸ்டேகர்சனின் பையில் இல்லை. கிளீவ்லன்டிலிருந்து பெறப்பட்ட ஒரு தந்தி மட்டும் இருந்தது. அதுவும் ஒரு மாதத்திற்கு முன்பு வந்த தந்தி. அதில் J.H.ஐரோப்பாவில் இருக்கிறார் என்று எழுதப்பட்டிருந்தது. வேறு எந்தக் குறுந்தகவலும் இல்லை”

“வேறு முக்கியமானவை எதுவுமே இல்லையா?”

“ஒன்றுமேயில்லை. அவர் படித்துக் கொண்டிருந்த புதினம் ஒன்று படுக்கையில் கிடந்தது. அவர் புகை பிடிக்கும் குழாய் நாற்காலியில் வைக்கப்பட்டிருந்தது. மேஜைமீது ஒரு குவளையில் தண்ணீர் இருந்தது. மருந்துப் பெட்டியில் இரண்டு மாத்திரைகள் இருந்தன”

லெஸ்ட்ரேட் சொல்லி முடித்ததும், ஹோம்ஸ் தன் இருக்கையிலிருந்து துள்ளிக் குதித்து எழுந்தார். “இந்த வழக்கின் கடைசி இணைப்பு. இந்த வழக்கு முடிந்துவிட்டது” என்று கூறினார்.

https://telegram.me/aedahamlibrary

இரண்டு துப்பறியும் நிபுணர்களும் ஷெர்லக் ஹோம்ஸ்&ஐ ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

“சிக்கல் விழுந்த இழைகள் பிரிக்கப்பட்டு விட்டன. சில இடங்களில் மட்டும் இடர்பாடுகள் இருக்கின்றன. அது பரவாயில்லை. டிரப்பர், ஸ்டேகர்சன் இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் புகைவண்டி நிலையத்தில் பிரிந்தது, ஸ்டேகர்சன் உடல் லெஸ்ட்ரேட்டால் கண்டுபிடிக்கப்பட்டது போன்ற அனைத்து விவரங்களும் தெரிந்துவிட்டன. லெஸ்ட்ரேட், நீங்கள் சொன்ன அந்த மாத்திரைகளை இப்போது காண்பிக்க முடியுமா?” என்றார் ஹோம்ஸ்.

“அந்த மாத்திரைகள் என்னிடம் தான் இருக்கின்றன” என்று கூறிய லெஸ்ட்ரேட் ஒரு வெள்ளை நிற டப்பாவைக் காண்பித்தார். “பணப்பையும், தந்தியும் காவல் நிலையக் பொறுப்பில் உள்ளன.” “மருந்துப் பெட்டி என்னிடம் உள்ளது. சந்தர்ப்ப வசத்தால் தான் அதற்கு அதிக முக்கியத்துவம் நான் கொடுக்கவில்லை” என்றார் லெஸ்ட்ரேட்.

“அந்த மாத்திரைகளைக் கொடுங்கள்” என்று கூறிய ஹோம்ஸ் என்னைப் பார்த்து, “அவை சாதாரண மாத்திரைகள் தானா-?” என்று கேட்டார்.

அவை சாதாரண மாத்திரைகள் இல்லை. சாம்பல் நிறத்தில் முத்துபோன்று காணப்பட்டன. மாத்திரைகள் சிறிதாகவும், உருண்டையாகவும், ஒளி ஊடுறுவும் தன்மையுடனும் இருந்தன.

“மாத்திரைகளின் இலேசுத்தன்மை, ஒளி ஊடுறுவும் தன்மை போன்றவற்றைப் பார்க்கும் போது இம்மாத்திரைகள் நீரில் கரையும் தன்மையுடையவை” என்றேன் நான்.

“என் பொருட்டு நீங்கள் கீழ்த் தளத்திற்குச் சென்று, அதிகமாகத் தொந்தரவு கொடுக்கிறது என்று நம் வீட்டு உரிமையாளர் சொன்ன உங்கள் நாயை, மேலே கொண்டு வர முடியுமா?” என்று என்னிடம் கேட்டார் ஹோம்ஸ்.

https://telegram.me/aedahamlibrary

நான் கீழே சென்று என் நாயைத் தூக்கிக் கொண்டு மேல்தளத்திற்கு வந்தேன். அது மூச்சுவிட சிரமப்படுவதையும், அதன் ஒளிரும் கண்களையும் பார்த்த போது & இது நீண்ட நாட்களுக்கு உயிருடன் இருக்கப் போவதில்லை என்று எனக்குத் தெரிந்தது. தூக்கி வந்த நாயை கம்பளத்தின் மீது வைத்தேன்.

“நான் இப்போது இந்த மாத்திரையில் ஒன்றைப் பாதியாக வெட்டுகிறேன்” என்று சொன்ன ஷெர்லக் ஹோம்ஸ் அவ்வாறே செய்தார். மீதமுள்ள அரைமாத்திரையை பிற்காலத்திற்கு உதவட்டும் என்று மாத்திரை டப்பாவிலேயே வைத்துவிட்டார். வெட்டியெடுத்த மாத்திரையை ஒரு ஒயின் கிளாஸில் போட்டு அதில் சிறிது தண்ணீர் ஊற்றினார். நான் கூறியபடி மாத்திரை தண்ணீரில் கரைந்து விட்டது.

“இது ஆர்வத்தைத் தூண்டும் ஒரு சோதனை தான். ஆனால் இதற்கும் ஜோசப் ஸ்டேகர்சனின் மரணத்திற்கும் என்ன சம்பந்தம்?” என்று கேட்டார் லெஸ்ட்ரேட்.

“பொறுமை, பொறுமை! இந்தக் கரைசலுடன் சிறிது பால் சேர்த்து அதைக் குடிப்பதற்கு ஏதுவாக மாற்றுகிறேன். இதை இப்போது இந்த நாய்க்குக் கொடுக்கிறேன்.” அவ்வாறு சொல்லிக் கொண்டே பாலை ஒரு தட்டில் ஊற்றி நாய்க்கு வைத்தார் ஹோம்ஸ். பாலைக் குடித்த பிறகும் நாய்க்கு ஒன்றும் ஆகவில்லை. தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தார் ஹோம்ஸ். நேரம் சென்று கொண்டே இருந்தது. ஆனால் நாய்க்கு ஒன்றும் நேரவில்லை. ஹோம்ஸ் தன் பற்களால் உதடுகளைக் கடித்துக் கொண்டார். மேஜையின்மீது தாளம் போட்டார். அந்த அளவுக்கு அவர் உணர்ச்சி வசப்பட்டிருந்தார்.

“இது சந்தர்ப்பவசத்தால் நேர்ந்ததல்ல என்று சொன்ன ஹோம்ஸ் இருந்த இடத்தை விட்டு எழுந்து அங்குமிங்கும் நடந்தார். டிரப்பரின் சாவுக்கு எது காரணமாக இருக்குமென்று நான் நினைத்தேனோ அதே மாத்திரை தான் ஸ்டேகர்சன் சாவுக்கும் காரணமாக இருந்திருக்க வேண்டும். இருந்தும் மருந்து எந்த வேலையும்

https://telegram.me/aedahamlibrary

செய்யவில்லை. எனது யோசனை என்றும் வீண் போனதில்லை. இந்த நாய்க்கு மட்டும் அந்த மருந்தால் எந்தப் பாதிப்பும் இல்லை. இப்போது கண்டுபிடித்துவிட்டேன்” என்று சொன்ன ஹோம்ஸ் மற்றொரு முழு மாத்திரையை மாத்திரைப் பெட்டியிலிருந்து எடுத்து, அதையும் இரண்டாக வெட்டி, அதனுடன் பால் சேர்த்து, தட்டில் ஊற்றி நாய்க்குக் கொடுத்தார் ஹோம்ஸ். அதை நக்கிய மறுநிமிடமே நாய்க்கு வலிப்பு வந்து, மின்னல் வேகத்தில் நாய் இறந்துவிட்டது.

ஷெர்லக் ஹோம்ஸ் நீண்ட பெருமூச்சு விட்டார். தன் முகத்திலிருந்து வியர்வையைத் துடைத்துக் கொண்டார். “ஒரு மாத்திரை வேலை செய்யா விட்டால் அடுத்தது செய்யும் என்று நான் நினைத்திருக்க வேண்டும். அந்தப் பெட்டியில் இருந்த இரண்டு மாத்திரைகளில், ஒன்று சாதாரண மாத்திரை. மற்றது கொடிய நச்சுத்தன்மை வாய்ந்த மாத்திரை. மாத்திரைப் பெட்டியைப் பார்த்த உடனேயே நான் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்” என்றார் ஹோம்ஸ்.

“இந்த நடவடிக்கைகள் எல்லாம் உங்களுக்கு வினோதமாகத் தெரியலாம். ஆனால் மாத்திரை என்ற இந்தத் தடயத்தை நீங்கள் முதலில் கண்டு கொள்ளவேயில்லை. ஆனால், நான் மட்டும் இவ்வாறு இருக்கலாம் என்று சந்தேகப்பட்டேன். நான் சந்தேகப்பட்டது இப்போது உறுதி செய்யப்பட்டு விட்டது. சாலையோரத்தில் இந்தக் கொலை நடந்திருந்தால் கண்டுபிடிப்பது கடினமாக இருந்திருக்கும்” என்றார் ஹோம்ஸ்.

திரு. கிரக்சன் பொறுமையிழந்து ஹோம்ஸ் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தார். பின் அவர் பேச ஆரம்பித்தார். “இதோ பாருங்கள். திரு. ஷெர்லக் ஹோம்ஸ், நீங்கள் ஒரு புத்திசாலி மனிதர் என்பதையும், குற்றங்களைக் கண்டுபிடிக்க உங்களுக்கென்று ஒரு தனி பாணி இருப்பதையும் நாங்கள் அறிவோம். பிரசங்கம்

https://telegram.me/aedahamlibrary

செய்வதற்கான நேரமல்ல இது-. நான் எனது வழியில் சென்றேன்; முயன்றேன். எனது வழியில் நான் தோற்று விட்டேன் என்று தெரிகிறது-. எங்களுக்குத் தெரியாத விஷயங்கள் உங்களுக்குத் தெரிந்துள்ளது. ஸ்டேகர்சன்-&ஐத் தேடிக் கொண்டு லெஸ்ட்ரேட் சென்றார். அவர் எடுத்த முடிவும் சரியில்லை என்று ஆகிவிட்டது. உங்களுக்குக் கொலையாளியைத் தெரியுமா?” & என்று ஹோம்ஸ்ஸை இடம் கேட்டார்.

“நாங்கள் இருவரும் எங்கள் வழியில் சென்றோம். இருவரும் தவறி விட்டோம். எல்லா சாட்சியங்களும் உங்களிடம் இருப்பதாகக் கூறுகிறீர்கள். இனி மேலும் அவற்றை மறைக்க வேண்டாம்” என்று கூறினரிர் லெஸ்ட்ரேட்.

நாம் தாமதித்தால் கொலைகாரன் வேறு ஒரு குற்றத்தில் ஈடுபட வாய்ப்புள்ளது என்றேன் நான்.

நாங்கள் கொடுத்த அழுத்தம் ஹோம்ஸ் மௌனத்தைக் கலைத்தது. அறையில் அங்குமிங்கும் அலைந்தார். தன் கண்களை மூடிக் கொண்டார். சிந்தனை இழந்த நிலையில் ஹோம்ஸ் அப்படித்தான் செய்வார் என்பது எனக்குத் தெரியும்.

“இனிமேல் எந்தக் கொலையும் நடக்காது” என்று எங்களை நோக்கி உறுதிபடக் கூறினார் ஹோம்ஸ். “உங்களுக்கு யார் குற்றவாளி என்று தெரியுமா என்று என்னைக் கேட்டீர்கள் “எனக்குத் தெரியும். தெரிந்திருப்பதால் மட்டும் எந்தப் பயனும் இல்லை. அவனைப் பிடிக்கவேண்டும். அவன் இன்னும் சற்று நேரத்தில் பிடிபட்டு விடுவான். நான் செய்திருக்கும் பணிகளில் எனக்கு நம்பிக்கையிருக்கிறது. கொலைகாரன் அவனைப் போன்றே ஒரு அதிபுத்திசாலி. அவனுக்குத் தன்னைத் தேடுகிறார்கள் என்ற சந்தேகம் வரும் வரை அவனைப் பிடிப்பது சுலபம். அவனுக்குத் தன்னை தேடுகிறார்கள் என்ற சந்தேகம் வந்து விட்டால், தன் பெயரை மாற்றிக் கொண்டு இந்த இடத்திலிருந்து மறைந்து விடுவான். லண்டன் மாநகரில் வசிக்கும் நான்கு மில்லியன் மக்களில்

https://telegram.me/aedahamlibrary

அவனும் ஒருவனாகக் கலந்து விடுவான். எனக்காகப் பணி செய்பவர்கள் உங்கள் காவல்துறையைச் சேர்ந்தவர்களை விட எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல. நான் உங்கள் உதவியை எதிர்பார்க்கவில்லை. என்னுடைய முயற்சி பயன் தராவிட்டால் அதற்கான பழியை நானே ஏற்றுக் கொள்கிறேன்” என்றார் ஹோம்ஸ்.

கிரக்சனும், லெஸ்ட்ரேடும் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை. மேலும் துப்பறியும் அலுவலர்களை ஹோம்ஸ் குறைத்து மதிப்பிட்டதும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இருவரும் பேசுவதற்கு ஏதும் நேரமில்லை. அதற்குள் கதவை யாரோ தட்டினார்கள். திறந்து பார்த்தபோது அரேபிய இளைஞன் விக்கின்ஸ் அங்கே நின்று கொண்டிருந்தான். தன்னை அங்கிருந்தவர்களுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டான்.

ஹோம்ஸ் அணிந்திருந்த கோட்டை இலேசாகத் தொட்டுவிட்டு, “ஐயா நான் குதிரை வண்டி கொண்டு வந்திருக்கிறேன்” என்றான்.

ஹோம்ஸ் தன் மேஜை டிராயரைத் திறந்து ஒரு ஜோடி கை விலங்குகளை வெளியே எடுத்தார். “இதிலிருக்கும் ஸ்பிரிங் எப்படி வேலை செய்கிற தென்று பாருங்கள். ஸ்காட்லன்ட் யார்டுகூட இதுபோன்ற கை விலங்குகளுக்கு ஆர்டர் கொடுக்கலாம்; தொட்டவுடன் மாட்டிக் கொள்கிறது” என்றார் ஹோம்ஸ்.

“பழைய மாதிரி கை விலங்குகள் நன்றாகத் தான் இருக்கின்றன. அதை மாட்டுவதற்குத்தான் ஆள் தேவைப்படுகிறது” என்றார் லெஸ்ட்ரேட்.

“வண்டிக்காரன் நமக்கு உதவி செய்வான், விக்கின்ஸ். அவனை உடனே மேலே வரச் சொல்” என்றார் ஷெர்லக் ஹோம்ஸ்.

பெட்டியைத் தூக்கிச் செல்ல வண்டிக்காரனை உள்ளே வரச் சொன்னதும் நான் அதிர்ந்து போய் விட்டேன். தான் பயணம் மேற்கொள்ளப் போவதாகத் திரு. ஹோம்ஸ் என்னிடம் எதுவுமே சொல்லவில்லை. பயணம் செய்யப்

https://telegram.me/aedahamlibrary

பயன்படும் தோல் பெட்டி ஒன்று அங்கேயிருந்தது. வண்டிக்காரன் உள்ளே வந்ததும் அதன் வார்களை நன்றாக இழுத்துக் கட்டுமாறு அவனிடம் சொன்னார் ஹோம்ஸ்.

உள்ளே வந்த வண்டிக்காரன் வார்களைக் கட்டுவதற்குக் குனிந்தான். அப்போது “கிளிக்” என்று ஒரு சப்தம் கேட்டது. உலோகம் உரசுவதும் கேட்டது. ஹோம்ஸ் துள்ளிக் குதித்து வண்டிக்காரன் அருகில் சென்றார்.

கூடியிருக்கும் கனவான்களே! திரு ஜெ.ஃபர்சன் ஹோம் அவர்களை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப் போகிறேன். இவர் தான் யூனோக் டிரப்பரையும் அவர்களையும், ஜோசப் ஸ்டேகர்சனையும் கொலை செய்தவர்” என்றார் ஹோம்ஸ்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அனைத்தும் நடந்து முடிந்துவிட்டன. ஹோம்ஸ் வெற்றிக் களிப்பில் இருக்கிறார் என்பதை அவர் முகம் காட்டியது. கொலைகாரன் மின்னிக் கொண்டிருக்கும் தன் கை விலங்குகளைப் பார்த்தான். ஏதோ மந்திர சக்தியால் அது அவன் கைகளில் தானாக வந்து மாட்டிக் கொண்டது போல் தோன்றியது-. கைது செய்யப்பட்டவன் ஹோம்ஸ் பிடியிலிருந்து தப்பி ஜன்னல் வழியாக ஓடிச் செல்ல முயற்சி செய்தான். மர வேலைப்பாடுகளையும், கண்ணாடியையும் உடைத்துவிட்டு ஜன்னல் வழியாகக் குதித்து ஓடிவிடலாம் என்று முயற்சித்தான். ஹோம்ஸ், கிரக்சன், லெஸ்ட்ரேட் போன்றோர் தாவிச் சென்று பிடித்து, அவன் தப்பிச் செல்லும் முயற்சி பலன் அளிக்காமல் செய்துவிட்டனர். அவனை மீண்டும் அறைக்குள் இழுத்து வந்துவிட்டனர். அவன் மிகவும் கொடூரமாக இருந்தான். நானும், ஹோம்ஸ், லெஸ்ட்ரேட், கிரக்சன் போன்றவர்களும் அவன் தப்பிச் செல்ல வழியில்லாமல் செய்துவிட்டோம். தப்பிச் செல்லும் முயற்சியில் அவனுக்கு இரத்தக் கசிவு ஏற்பட்டது. நாங்கள் அவன் கைகளையும், கால்களையும் கட்டிவிட்டோம்.

https://telegram.me/aedahamlibrary

“கொலைகாரன் கொண்டுவந்த வண்டியிலேயே நாம் அனைவரும் ஸ்காட்லன்ட் யார்டுக்குச் சென்றுவிடலாம். கனவான்களே! நாம் இப்போது ஒரு மர்மத்தின் முடிச்சுகளை அவிழ்த்துவிட்டோம். நீங்கள் விரும்பிய கேள்விகளைத் தாராளமாக இப்போது கேட்கலாம். நான் மறுப்பேதும் சொல்லமாட்டேன்” என்றார் ஷெர்லக் ஹோம்ஸ்.

###

https://telegram.me/aedahamlibrary

ஒரு சிவப்பு நிறத் தேடல்

பகுதி - 2

https://telegram.me/aedahamlibrary

துறவிகளின் நாடு மாபெரும் உவர் நிலப் பரப்பு

வட அமெரிக்கக் கண்டத்தின் மையப் பகுதியில், ஒரு வறண்ட, வெறுப்பூட்டும் பாலைவனப் பகுதி காணப்படுகிறது. நாகரீகம் நெருங்க முடியாத அளவுக்கு அந்தப் பாலைவனம் ஒரு தடையாக உள்ளது. சியாரா நிவேதா மலைத் தொடரிலிருந்து நெப்ராஸ்கா வரை, வடக்கில் எல்லோஸ்டோன் நதியிலிருந்து, தெற்கே கொலாரடோ வரை, இருப்பதனைத்தும் பாழ் நிலம் தான். பனி படர்ந்த உயரமான மலைகளும், பயணச் சோர்வை உண்டாக்கும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த பகுதி அது. வேகமாக ஓடிவரும் ஆறுகளும், ஆழ்கிடங்குப் பள்ளத்தாக்குகளும் அங்கு உண்டு. அங்கிருக்கும் மிகப்பெரிய சம வெளிப்பகுதிகள், குளிர் காலத்தில் பனியாலும், கோடை காலத்தில் உவர் தன்மையுடைய தூசியாலும் மூடப்பட்டிருக்கும். பொதுவாகப் பார்க்குமிடம் அதனைத்தும் தரிசு நிலம்; அது மனித வாழ்க்கைக்கு ஏற்ற இடமல்ல.

அந்தப் பாழ் நிலப்பரப்பில் யாரும் வசிக்கவில்லை. அட மானத்திற்குப் பணம் கொடுக்கும் அமெரிக்க செவ்விந்திய மரபினர், ஒரு குழுவாக எப்போதாவது அந்த இடத்தைக் கடந்து செல்வார்கள்; வேறு ஏதாவது வேட்டையாடத் தகுந்த இடம் கிடைக்கிறதா என்று தேடிச் செல்வார்கள். பாலைவன ஓநாயின் மண்டை ஓடுகள் ஆங்காங்கே தென்படும். வண்டுகள் பறக்கும். பள்ளத்தாக்குகளில் கொடிய கரடிகள் தங்கள் இரையைத் தேடிக்கொண்டு வரும். அங்கு காணப்படும் தனிமையைக் கெடுக்கும் விலங்குகள் அந்தக் கரடிகள் தான்.

அகில உலகத்திலும் வெறுக்கத்தக்க ஒரு காட்சி இருக்குமேயானால் அது சியாரா பிளாக்கோ மலைத் தொடரின் வடபுறச் சரிவுதான். உவர் நிலச் சமவெளிகளும் பசுமை மாறா குறுமரப் புதர்காடுகளும் ஆங்காங்கே தென்படும். மலை உச்சிகளில் பனிபடர்ந்து காணப்படும்.

https://telegram.me/aedahamlibrary

அடிவானத்தின் விளிம்புவரை இதே காட்சி தான். எந்த இடத்திலும் உயிரினங்கள் இருக்காது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மயான அமைதி குடிகொண்டிருக்கும். எந்த சப்தமும் கேட்காது. அமைதி! அமைதி! எங்கும் அமைதிதான்.

இப்படிப்பட்ட ஒரு சமவெளியில் உயிர்கள் வாழாது என்று சொல்வார்கள். அது உண்மைக்குப் புறம்பானது. சியாரா பிளான்க்கோ மலைத்தொடரின் உச்சியிலிருந்து கீழே பார்க்கும் போது, பாலைவனப் பகுதியில், பாதையொன்று வளைந்து, வளைந்து செல்வதைப் பார்க்க முடியும். இந்தப் பாதையில் வண்டிகள் சென்றதற்கான தடங்களும், மனிதர்களின் காலடிச் சுவடுகளும் தென்படும். ஆங்காங்கே சில வெண்மையான பொருட்கள் வெளியே நீட்டிக்கொண்டு சூரிய ஒளியில் ஒளிரும். அருகே சென்று பார்க்கும் போது தான் அவை எலும்புகள் என்பது தெரியவரும். பெரிதாகத் தெரிபவை காளை மாடுகளின் எலும்புகள்; சிறிதாகத் தெரிபவை மனிதர்களின் எலும்புகள். ஆயிரத்து ஐநூறு மைல்களுக்கு இந்தக் காட்சியைத்தான் காண முடியும்.

இத்தகையப் பாலைவனப் பகுதியில், 1847ஆம் ஆண்டு மே மாதம் நான்காம் நாள், ஒரு மனிதன் தனியாக வந்து கொண்டிருந்தான். பார்ப்பதற்கு அந்த இடத்திற்கே உரிய பேய் போன்று காட்சியளித்தான். அவனது தோற்றத்தை வைத்து அவனுக்கு வயது அறுபதா அல்லது நாற்பதா என்று கூற முடியவில்லை. எலும்பும், தோலுமாக இருந்தான். தோலில் எலும்புகள் முட்டிக்கொண்டு நின்றன. பழுப்பு நிற முடியுடனும், நீண்ட தாடியுடனும் காணப்பட்டான். கண்கள் முகத்தில் புதைந்திருந்தன. கையில் ஒரு நீண்ட துப்பாக்கி வைத்திருந்தான். மிகவும் ஒல்லியாகக் காணப்பட்ட அந்த மனிதன் துப்பாக்கியின் பலத்தில் அதன் மீது சாய்ந்து கொண்டிருந்தான். ஒல்லியாக இருந்தாலும் அவன் பலசாலிதான். அவன் அணிந்திருந்த ஆடை துவண்டு போய்த் தோள்களில் தொங்கிக் கொண்டிருந்தது; பசியுடனும், தாகத்துடனும் உயிர்போகும் நிலையில் அவன் இருந்தான்.

https://telegram.me/aedahamlibrary

குறுகிய மலையிடுக்கு வழியாக நீண்ட தூரம் பயணித்து வந்தவன் சற்று உயரமான இடத்தில் நின்றுகொண்டு, அங்குத் தண்ணீர் கிடைக்குமா என்று தேடினான். உவர் நிலம் பல மைல்களுக்கு அவன் கண் முன்னால் தெரிந்தது. மரம், செடி கொடிகள் எங்கேயும் தென்படவில்லை; ஈரப் பசையே இல்லை. நான்கு திசைகளிலும் தேடிப்பார்த்த அவன் கண்களுக்கு தண்ணீர் இருப்பதற்கான தடயமே தெரியவில்லை. தான் சாவின் விளிம்பிற்கு வந்துவிட்டதாக நினைத்தான் அந்த மனிதன். ஒரு பெரிய பாறையின் மீது அமர்ந்துகொண்டு தனது கடந்த கால, வசதியான வாழ்க்கையை நினைத்துப் பார்த்தான்.

பாறையின் மீது உட்காருமுன், தன் துப்பாக்கியையும், தோள்களில் சுமந்து வந்த, போர்வையால் கட்டப்பட்ட ஒரு மூட்டையையும் கீழே இறக்கி வைத்தான். தூக்க முடியாமல் தூக்கி வந்த அந்த மூட்டையை ‘பொத்’தென்று தரையில் இறக்கி வைத்தான். அந்த மூட்டைக்குள்ளிருந்து, பயத்தால் மிரண்டு போன கண்களுடனும், கூச்சல் போட்டுக் கொண்டும், ஐந்து வயது மதிக்கத்தக்க ஒரு சிறுமி வெளிப்பட்டாள். அந்த மனிதன் மூட்டையின் முடிச்சுகளை அவிழ்த்துவிட்டான். மூட்டையிலிருந்து வெளிப்பட்ட சிறுமியின் முகம் வெளிறிப் போயிருந்தாலும், கை, கால்கள் நல்ல ஆரோக்கியத்துடன் தான் இருந்தன. சட்டையும், பாவாடையும் அணிந்திருந்தாள் அந்தப் பெண்; கால்களில் காலணிகள் காணப்பட்டன. ஒரு தாயின் கவனிப்பில், அவள் இருந்திருக்கிறாள் என்பதை, அந்த அளவுக்கு அந்தச் சிறுமி துன்புறவில்லை என்பதும் தெரிந்தது. அவன் மூட்டையை அவிழ்ப்பதற்கு முன்பாக அந்தச் சிறுமி அவனைப் பார்த்து “நீ என்னை துன்புறுத்திவிட்டாய்” என்று கூறினாள். “அப்படியா?” என்று கேட்டான் அந்த மனிதன்.

அந்தப் பெண், பொன் நிறமாகவும், சுருண்டும் இருந்த தன் தலை முடியைத் தேய்த்து விட்டுக் கொண்டாள். அதைப் பார்த்த அந்த மனிதன், “இப்போது எப்படி இருக்கிறது?” என்று கேட்டான். தலையில் காயம்பட்ட இடத்தைக்

https://telegram.me/aedahamlibrary

காண்பித்த அந்தச் சிறுமி, அந்த மனிதனை, அந்த இடத்தில் முத்தமிடும்படி கேட்டுக் கொண்டாள். “அப்படித்தான் அம்மா செய்வாள். அம்மா இப்போது எங்கே?” என்று அந்த மனிதனைப் பார்த்துக் கேட்டாள்.

“அம்மா போய்விட்டாள். இனி நீ அவளைக் காண்பதற்கு நீண்ட நாட்கள் ஆகும்” என்று சிறுமிக்குப் பதில் சொன்னான் அந்த மனிதன்.

“அம்மா போய்விட்டாளா? போய் வருகிறேன் என்று என்னிடம் சொல்லவே இல்லையே. அவள் சென்று மூன்று நாட்கள் சென்றுவிட்டன. தேனீர் குடித்துவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனாள். இங்கு தண்ணீர் கூட இல்லை. சாப்பிட உணவு கிடைக்குமா-?” என்று அந்த மனிதனிடம் கேட்டாள் சிறுமி.

“இங்கு ஒன்றும் கிடைக்காது அருமை மகளே! நீ சற்று பொறுமையாக இருக்க வேண்டும். எல்லாம் சரியாகி விடும். உதடுகள் வறண்டு போயிருக்கும் போது பேசுவது எளிதல்ல. உன்னிடம் என்ன இருக்கிறதென்று காட்டு” என்றான் அந்த மனிதன்.

சிறுமி, மிகுந்த உற்சாகத்துடன் அவளிடமிருந்த மின்னும் இரு மைக்காத் துண்டுகளை எடுத்துக் காண்பித்தாள். “வீட்டிற்குச் சென்றவுடன் இதைத்தான் சகோதரன் ‘பாப்’ இடம் கொடுப்பேன்” என்று கூறினாள்.

“இதைவிட அருமையான பொருட்களை நீ விரைவில் காண்பாய்” என்று அந்த மனிதன் உறுதியாகக் கூறினான். “கொஞ்சம் காத்திரு. நான் நதிக்கரையிலிருந்து வரும்போது உன்னிடம் கூறியதை நினைவில் வைத்துள்ளாயா?” என்று சிறுமியிடம் கேட்டான் அந்த மனிதன்.

“ஓ, நன்றாக ஞாபகம் இருக்கிறது” என்றாள் சிறுமி. “விரைவில் நாம் மற்றொரு நதியைக் காண்போம். காம்பஸ் கருவியில், அல்லது வரைபடத்தில் ஏதாவது தவறு நடந்திருக்க வேண்டும். தண்ணீர் தீர்ந்துவிட்டது.

https://telegram.me/aedahamlibrary

இன்னும் ஒரு சொட்டு தான் இருக்கிறது” என்றார் அந்த மனிதன்.

“அப்போது முகம் கழுவிக்கொள்ள முடியாதா?” என்று கேட்டாள் சிறுமி.

“குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லை. முதலில் போய்ச் சேர்ந்தவன் திரு. பெண்டர்; அவனைத் தொடர்ந்து இந்தியனான பீட்; பின் திருமதி. மெக்கிரிகர்; தொடர்ந்து ஜானி ஹோன்ஸ்; கடைசியாக உன் அம்மா” என்று சொல்லித் தன் பேச்சை நிறுத்தினான் அந்த மனிதன்.

“அம்மா இறந்துவிட்டாளா?” என்று கேட்டுத் தன் உடையில் முகம் புதைத்து அழத் தொடங்கினாள் அந்தச் சிறுமி.

“உன்னையும், என்னையும் தவிர எல்லோரும் போய்ச் சேர்ந்து விட்டார்கள். கொஞ்ச தூரத்தில் தண்ணீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உன்னை என் தோள்களில் சுமந்து கொண்டு இங்கு வந்தேன். கடவுள் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையும் இப்போது போய் விட்டது” என்று கூறினான் அந்த மனிதன்.

“அப்போது நாமும் இறந்து விடுவோமா?” என்று முகத்தில் வழிந்த கண்ணீருடன் கேட்டாள் சிறுமி.

“அப்படித்தான் நினைக்கிறேன்” என்றான் அவன்.

“இதை ஏன் முன்பே நீங்கள் என்னிடம் சொல்லவில்லை?” என்று கேட்டுவிட்டு மகிழ்ச்சியுடன் சிரித்தாள் அந்தச் சிறுமி. “நாம் இறந்துவிட்டால் அம்மா இருக்குமிடத்திற்குச் சென்றுவிடுவோம். பின் ஏன் பயப்பட வேண்டும்” & என்றாள் சிறுமி. “நீ எப்படி எல்லாம் என்னுடன் ஒத்துழைத்தாய் என்று அம்மாவிடம் நான் சொல்வேன். சொர்க்கத்தின் வாயிலில் குடிக்கத் தண்ணீருடன் நின்று கொண்டு அவள் நம்மை வரவேற்பாள். உனக்கும், பாப்&க்கும் பிடித்த கோதுமை கேக் தயாரித்து நமக்குக் கொடுப்பாள். அதற்கு இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும்?” என்று அவளிடம் கேட்டாள் சிறுமி.

https://telegram.me/aedahamlibrary

“எனக்குத் தெரியாது; ஆனால் இன்னும் அதிக நேரம் பிடிக்காது” என்று பதில் கூறிய அந்த மனிதன் தொடுவானத்தைப் பார்த்தான். அங்கு மூன்று புள்ளிகள் தெரிந்தன. அந்தப் புள்ளிகள் வரவரப் பெரிதாகிக் கொண்டே வந்தன. பின் அவை பறவைகள் உருவெடுத்து ஒரு கல்லில் வந்து அமர்ந்தன. அந்தப் பறவைகள் கழுகுகள்; சாவை முன் கூட்டியே அறிவிக்கும் திறனுடையவை.

“ஆண் பறவையும், பெண் பறவையும்” என்று தீய சகுனமான பறவைகளைப் பார்த்து மகிழ்ச்சியுடன் கூறிய சிறுமி, அவை பறந்து போகட்டும் என்று தன் கைகளைத் தட்டினாள். பின் தன்னுடன் வந்தவனைப் பார்த்து “கடவுள் தான் இந்த இடத்தைப் படைத்தானா?” என்று கேட்டாள். ‘ஆம்’ என்று அவள் கேட்ட கேள்விக்கு விடை பகர்ந்தான் உடன் வந்தவன்.

“இல்லினாய், மிசௌரி போன்ற இடங்களையும் அந்தக் கடவுள் தான் படைத்தார். இந்த இடத்தை வேறு யாரோ படைத்திருக்க வேண்டும். இந்த இடம் சரியாக உருவாக்கப்படவில்லை. உருவாக்கியவர்கள், தண்ணீரையும், மரங்களையும் மறந்துவிட்டார்கள்” என்றாள் சிறுமி.

“கடவுளிடம் பிரார்த்தனை செய்யலாமா?” என்று சிறுமியைப் பார்த்துக் கேட்டான் அந்த மனிதன்.

“இது இரவு நேரமல்ல” என்று பதில் கூறினாள் சிறுமி.

“அதனால் பரவாயில்லை. கடவுள் ஒன்றும் நினைத்துக் கொள்ள மாட்டார். நீ வண்டிக்குள் இருக்கும் போது கடவுளை நினைத்துப் பிரார்த்திப்பாய். சமவெளியில் இருக்கும் போதும் அவரிடம் வேண்டிக் கொள்வாய்” என்றான் சிறுமியுடன் வந்த மனிதன்.

“நீ ஏன் பிரார்த்தனையை ஆரம்பித்து வைக்கக் கூடாது?” என்று கேட்டாள் சிறுமி.

“நான் கடவுளைத் தொழும் முறையை மறந்து போய் விட்டேன். இந்தத் துப்பாக்கியின் அரை அளவு உயரம்

https://telegram.me/aedahamlibrary

இருக்கும் போது நான் பிரார்த்தனை செய்திருக்கிறேன். அதற்குப் பின் கடவுளை வழிபட்ட தில்லை. நீ வழிபாட்டுப் பாடல்களைக் கூறு. நான் திரும்பக் கூறுகிறேன்" என்றான் சிறுமியின் தோழன்.

"அப்படியென்றால், நீ மண்டியிட்டுக் கைகளை மேலே உயர்த்த வேண்டும்" என்று கூறிய சிறுமி போர்வையைக் கீழே விரித்தாள்.

அவர்கள் பிரார்த்தனை செய்தபோது, காற்றில் பறந்து கொண்டிருந்த வண்டுகளைத் தவிர வேறு யாரும் அங்கில்லை. சதைப் பற்றுள்ள கன்னங்களையுடைய அந்தக் குழந்தையும், எலும்பும் தோலுமான அந்த மனிதனும் மட்டுமே வழிபாடு நடத்தினார்கள். வழிபாடு முடிந்தவுடன் தாங்கள் முன்பு அமர்ந்திருந்த பாறையின்மீது மீண்டும் வந்து அமர்ந்து கொண்டார்கள். சிறிது நேரத்தில் சிறுமி உறங்கி விட்டாள். அவ்வாறு உறங்கும் போது தன்னைக் காப்பவன் மீது தன் தலையைச் சாய்த்துக் கொண்டாள் சிறுமி. அவ்வாறு உறங்கும் போது தன்னைக் காப்பவன் மீது தன் தலையைச் சாய்த்துக் கொண்டார்கள். சிறிது நேரத்தில் சிறுமி உறங்கி விட்டாள். அவள் உறங்குவதை அந்த மனிதன் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அவர் ஓய்வெடுத்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன. காலையில் அவன் தலை கீழே தொங்கிவிட்டது. கண் இமைகள் மூடிவிட்டன. அவனுடைய தடி சிறுமியின் கூந்தலுடன் கலந்துவிட்டது. இருவரும் கனவுகள் ஏதுமின்றி ஆழ்ந்த உறக்கத்தை அனுபவித்தனர்.

அவன் மட்டும் உறங்காமல் இன்னும் ஒரு அரை மணி நேரம் இருந்திருந்தால், ஒரு வினோதமான காட்சியைக் கண்டிருப்பான். உவர் நிலப் பரப்பின் விளிம்பில் புழுதிப்படலம் ஒன்று தென்பட்டது. அந்தப் புழுதிப்படலம் பெரிதாகிப், பெரிதாகி மேகம் போல் மாறியது. அந்த மேகமும் பெரிதாகி, தூரத்தில் வருவது ஒரு மிருகக் கூட்டம் என்று நிரூபித்தது. அந்த மனிதன் மட்டும் உறங்காமல் விழித்துக் கொண்டிருந்தால், காட்டெருமைக்

https://telegram.me/aedahamlibrary

கூட்டத்தில் ஏதோ ஒரு காட்டெருமைத் தன்னை நோக்கி வருகிறதென்று நிச்சயம் நினைத்திருப்பான். ஆனால் அவன் தான் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தானே! வந்து கொண்டிருந்தது குதிரைகள் பூட்டப்பட்ட கூண்டு வண்டிகளும், குதிரை வீரர்களும் தான். வண்டிகள் மேற்கு திசை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. எவ்வளவு பெரிய கூட்டம்? எவ்வளவு வண்டிகள்! சொல்லி மாளாது அவற்றின் எண்ணிக்கை. வண்டிகள் மலையடிவாரத்திலிருந்து, தொடுவானம் வரைத் தென்பட்டன. இந்தப் பெருங்கூட்டம், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லும் வழக்கமான கூட்டம் போன்று இல்லை. ஓரிடத்திலிருந்து சந்தர்ப்ப வசத்தால் துரத்தப்பட்ட பெருங்கூட்டம்! வண்டிச் சக்கரங்கள் உராயும் ஒலியும், குதிரைகளின் கனைப்பும் பயங்கரமான ஓசையை எழுப்பின. கரங்களில் துப்பாக்கி ஏந்திய வீரர்கள் வண்டிகளின் அணிவகுப்பை வழிநடத்திச் சென்றனர்.

“வலது புறம் திரும்பினால் கிணறுகள் இருக்கின்றன” என்றான் தடித்த உதடுகளையுடைய, நன்றாக முகத்தை மழித்துக் கொண்டிருந்த ஒருவன்.

“சியாரா பிளான்கோ மலைத் தொடருக்கு வலதுபுறம் நாம் இருக்கிறோம்; விரைவில் ரியோ கிராண்டியை அடைந்துவிடுவோம்” என்றான் மற்றொருவன்.

“தண்ணீருக்காகக் கவலைப்படாதீர்கள். பாறையிலிருந்தே தண்ணீர் பெற்றுத் தருபவரான கடவுள் அவருடைய மக்களைத் தவிக்க விடமாட்டார்” என்றான் மூன்றாவது மனிதன்.

“ஆமென்! ஆமென்!” என்று அந்தக் குழுவில் இருந்தவர்கள் யாவரும் குரல் கொடுத்தார்கள்.

அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். ஆனால் கூர்மையான பார்வையுடைய ஓர் இளைஞன் உயரத்தில் இருந்த பாறையின் கூர்முகட்டைக் காட்டினான். அதில் விரிக்கப்பட்டிருந்த கம்பளம் காற்றில் அசைந்தாடியது. அந்த இடத்தில் உறங்கிக் கொண்டிருந்த மனிதனும்,

https://telegram.me/aedahamlibrary

சிறுமியும் அவர்களின் கண்களில் பட்டுவிட்டார்கள். “செவ்விந்தியர்கள்” என்ற சொல் எல்லோருடைய உதடுகளிலிருந்தும் வெளிப்பட்டது.

“நாங்கள் அடமானத்திற்குப் பணம் தரும் செவ்விந்தியர்களை வழியில் பார்த்தோம். அவர்களைத் தவிர வேறு பழங்குடிகள். யாரும் இந்த மணற் பகுதியில் நம் கண்களில் படவில்லை” என்றான் ஓர் இளைஞன்.

“சகோதரர் ஸ்டேகர்சன் அவர்களே! நான் சென்று யாரென்று தெரிந்து வரவா?” என்று கேட்டான் குழுவிலிருந்த மற்றொருவன்.

“நான் சென்று பார்த்து வருகிறேன்” என்றான் வேறு ஒரு இளைஞன்.

“உங்கள் குதிரைகளை இங்கேயே விட்டுவிட்டுச் செல்லுங்கள்” என்றான் வயதில் மூத்தவனாகத் தெரிந்த ஸ்டேகர்சன் என்பவன்.

அடுத்த நிமிடமே வந்திருந்தவர்கள், தங்கள் குதிரைகளை விட்டுக் கீழேயிறங்கி, ஓசையின்றி பாறையின் கூர் முகட்டை நோக்கிச் சென்றனர். நாம் முதலில் குறிப்பிட்ட இளைஞன் மற்றவர்களுக்குத் தலைமையேற்றுச் சென்றான்.

அங்கிருந்த பீட பூமியின்மீது ஒரு ராட்சசப் பாறை காணப்பட்டது. அதன் மீது, மிகவும் ஒல்லியான, நீண்ட தாடி வைத்த ஒரு மனிதன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனை அணைத்துக் கொண்டு ஒரு சிறுமியும் உறங்கிக் கொண்டிருந்தாள். அந்தச் சிறுமி வெள்ளை நிறக் காலுறை அணிந்திருந்தாள். அவளுடைய உதடுகள் செந்நிறமாக இருந்தன; கூந்தல் சுருண்டு காணப்பட்டது. அவள் அணைத்துக் கொண்டு தூங்கிய மனிதனின் தோற்றத்திற்கும், சிறுமியின் அழகான தோற்றத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அந்த மனிதனுக்கும், சிறுமிக்கும் மேலேயிருநத பாறைமீது மூன்று பருந்துகள் அமர்ந்திருந்தன. புதிதாக மனிதர்கள் வருவதைப் பார்த்ததும் அப்பருந்துகள் பறந்து சென்று விட்டன.

https://telegram.me/aedahamlibrary

பறவைகள் எழுப்பிய ஒலி தூங்கிக் கொண்டிருந்தவர்களை, எழும்பச் செய்து விட்டது. உறக்கத்திலிருந்து எழுந்தவன் தன்னைச் சுற்றி நிற்கும் மனிதர்களைப் பார்த்து “இதுதான் ஜன்னி” என்பதா என்றான் குழப்பத்துடன். அந்தச் சிறுமி, தன் தோழனின் உடையைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். அவர்கள் இருவரும் தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்று பிரமித்துப் போய் நின்றார்கள்.

வந்தவர்கள், அந்த மனிதன் பார்ப்பது மருட்சியல்ல என்று கூறி நம்ப வைத்தார்கள். வந்திருந்தவர்களில் ஒருவன் தன் தோளின் மீது சிறுமியைத் தூக்கிக் கொண்டான். மற்ற இருவர் அந்த மனிதன் நடந்து வருவதற்கு உதவி செய்தார்கள். அந்த மனிதனையும், சிறுமியையும் தங்களுடைய வண்டிகள் நிற்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

“என் பெயர் ஜான் ஃபெர்ரியர் என்று தன் பெயரைச் சொன்னான் உறக்கத்திலிருந்து எழுந்த மனிதன். மொத்த மிகுந்த நபர்கள் இருபத்தொன்றில் எஞ்சியிருப்பது நாங்கள் இருவர் மட்டும் தான். மற்றவர்கள் பசியாலும், தாகத்தாலும் இறந்துவிட்டவர்கள்” என்று மேலும் கூறினான்.

“இவள் உன் மகளா?” என்று கூட்டத்திலிருந்த ஒருவன் கேட்டான்.

“அப்படித்தான் நான் நினைக்கிறேன். அவள் என்னுடையவள் தான். நான் அவளைக் காப்பாற்றிவிட்டேன். யாரும் அவளை என்னிடமிருந்து பிரித்துவிட முடியாது. அவள் லூசி ஃபெர்ரியர். நீங்கள் யார்? நீங்கள் எவ்வளவு பேர் வந்திருக்கிறீர்கள்-? உங்களைப் பார்த்தால் பலம் வாய்ந்தவர்கள் போல் தெரிகிறது” என்று வந்திருந்தவர்களைப் பார்த்துக் கேட்டான் ஜான் ஃபெர்ரியர்.

“நாங்கள் பத்தாயிரம் பேர்களுக்கு மேல் இருக்கிறோம். நாங்கள் கடவுளால் தண்டிக்கப்பட்டவர்கள். ஆனால்

https://telegram.me/aedahamlibrary

தேவதை ‘மெரோனா’வால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்” என்றான் கூட்டத்தில் ஒருவன். “நான் அந்தப் பெயரைக் கேள்விப் பட்டதில்லையே. உங்களில் பலரை அந்தத் தேவதை தேர்ந்தெடுத்திருப்பது போல் தோன்றுகிறது” என்றான் ஜான் ஃபெர்ரியர்.

“எது புனிதமானதோ அதை கேலி செய்யாதே. நாங்கள் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட புனித எழுத்துக்களில் நம்பிக்கை கொண்டவர்கள். தங்கத் தட்டில் எகிப்திய எழுத்துக்களில் எழுதப்பட்டது அந்த எழுத்து. ஜோசப் ஸ்மித் என்பவருக்கு பல்மைராவில் அந்தத் தட்டு வழங்கப்பட்டது. நாங்கள் “நவ்வூ” என்ற இடத்திலிருந்து வருகிறோம். அந்த இடம் இல்லினாய் மாகாணத்தில் உள்ளது. அங்குதான் நாங்கள் ஸ்தாபித்த கோயில் உள்ளது. நாங்கள் வன்முறையாளர்களிடமிருந்து தப்பித்து அகதிகளாக வந்துள்ளோம். கடவுள் இல்லாத, கடவுளுக்கு பயப்படாத காட்டு மிராண்டிகளிடமிருந்து தப்பித்து வந்துள்ளோம்; அகதிகளாக வந்துள்ளோம். இந்த இடம் பாலைவனமாக இருந்தாலும் பரவாயில்லை” என்று கூட்டத்திலிருந்த ஒருவன் கூறினான்.

‘நவ்வூ’ என்றதும் ஜான் ஃபெர்ரியருக்கு ஒன்று நினைவுக்கு வந்தது. நீங்கள் மோர்மோன்களா என்றான் கூட்டத்தினரைப் பார்த்து.

“ஆம். நாங்கள் மோர்மோன்கள் தான்.”

“நீங்கள் எங்கே செல்கிறீர்கள்?”

“அது எங்களுக்குத் தெரியாது. நாங்கள் எங்கள் “புனிதரின்” வழிகாட்டுதல் படி, அவர் காட்டும் இடத்திற்குச் சென்று கொண்டிருக்கிறோம்” என்றான் கூட்டத்திலிருந்து ஒருவன்.

அவர்கள் பேசிக்கொண்டே மலையடிவாரத்திற்கு வந்து விட்டார்கள். அப்படி வந்தவர்களை மற்ற பயணிகள் சூழ்ந்து கொண்டார்கள். பயணிகளுள் வெளிறிய முகங்களையுடைய, அடக்க ஒடுக்கமான பெண்களும் இருந்தனர். குழந்தைகளும் இருந்தனர். சிலர் ஜான்

https://telegram.me/aedahamlibrary

ஃபெர்ரியரும், லூசி ஃபெர்ரியரையும் பார்த்து பரிதாபப்பட்டார்கள். சிலர் வியப்பால் கூச்சலிட்டனர். மோர்மோன்களால் சூழப் பட்ட ஜான் ஃபெர்ரியரும், லூசி ஃபெர்ரியரையும், ஆறு குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு கூண்டு வண்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். வண்டியோட்டியைத் தவிர, முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு மனிதரும் அந்த வண்டிக்குள் இருந்தார். பழுப்பு நிற அட்டையுடன் கூடிய ஒரு புத்தகத்தை அந்த மனிதர் படித்துக் கொண்டிருந்தார். கூட்டத்தினரின் வருகையைப் பார்த்துவிட்டு தான் படித்துக் கொண்டிருந்த அந்தப் புத்தகத்தை அவர் கீழே வைத்தார். கூட்டத்தினர் சொன்னதைப் பொறுமையுடன் கேட்டார். பின், ஜான் ஃபெர்ரியரிடம் பேசினார். “நான் உன்னையும், இந்தச் சிறுமியையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். நாங்கள் எங்கள்மீது நம்பிக்கை வைப்பவர்களைத் தான் எங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்வோம். எங்கள் மீது நம்பிக்கையில்லாவிட்டால் இந்தப் பாலைவனத்திலேயே நீங்கள் இருவரும் அழிந்து போக வேண்டியது தான். எங்கள் கூட்டத்தில் ஓநாய்களுக்கு இடமில்லை. நீ எங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளத் தயாரா?”

“நீங்கள் சொல்லும் எந்த நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ள நாங்கள் தயார். அது எந்த நிபந்தனையாக இருந்தாலும் சரி.” இப்படி ஃபெர்ரியர் கூறியதைக் கேட்டு கூட்டத்திலிருந்த மூத்தவர்கள் புன்னகை பூத்தார்கள். கூட்டத்தின் தலைவர் மட்டும் வீராப்புடன் காணப்பட்டார்.

“சகோதரர் ஸ்டேகர்சன் அவர்களே! இவர்களை ஏற்றுக் கொள்ளுங்கள். வந்திருக்கும் அந்த மனிதனுக்கும், அந்த சிறுமிக்கும் உணவு கொடுங்கள்; தண்ணீர் கொடுங்கள். பின்னர் நமது புனித மதத்தின் கொள்கைகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுங்கள். இப்போதே நாம் மிகவும் தாமதித்து விட்டோம். பயணத்தைத் தொடர்வோம். “ஸியான்” இருக்குமிடம் செல்வோம் என்றார் கூட்டத்தினரின் தலைவர்.

https://telegram.me/aedahamlibrary

“ஸியானை நோக்கிச் செல்வோம்” என்று ‘மோர்மோன்’ கூட்டத்தினர் பதிலுக்கு உரக்கக் குரல் கொடுத்தனர். அவர்களின் குரல் மலைத் தொடரில் எதிரொலித்தது. வண்டிச் சக்கரங்கள் கிரீச்சிட, குதிரை சவுக்குகளின் ஒலி மேலோங்க, மோர்மோன்களின் பயணம் தொடர்ந்தது. வண்டிக்குள் ஜான் ஃபெர்ரியருக்கும், லூசி ஃபெர்ரியருக்கும் உணவு காத்திருந்தது.

ஃபெர்ரியரையும், அவன் மகளையும் பார்த்து சகோதரர் ஸ்டேகர்சன் என்பவர் பேசினார். “நீங்கள் இங்கேயே இருங்கள். உங்கள் களைப்பு நீங்கட்டும். இந்தத் தருணத்திலிருந்து நீங்கள் எங்கள் மதத்தைச் சேர்ந்தவர்கள். பிரிகாம் யங் அதைத்தான் சொன்னார். அவர் ஜோசப் ஸ்மித் என்ற தலைவருக்காகப் பேசினார். அவருடைய வார்த்தை கடவுளின் வார்த்தை.

###

https://telegram.me/aedahamlibrary

உட்டாவின் மலர்

தங்களின் கடைசி புகலிடத்திற்கு வருவதற்கு முன், 'மோர்மோன்கள்' அனுபவித்தத் துன்பங்களையும், இழப்புகளையும், சொல்லுவதற்கு இது இடமல்ல. மிசிசிப்பி நதியின் கரைகளில் ஆரம்பித்து ராக்கி மலைத் தொடரின் சரிவு வரை அவர்கள் உழைத்த உழைப்பிற்கு ஈடு இணையாக வரலாற்றில் வேறு எதையும் நம்மால் கூற முடியாது. பசி, தாகம், நோய், களைப்பு போன்ற இயற்கை தரும் இன்னல்கள் யாவற்றையும் ஆக்கிலோ ஸாக்சன் இனத்திற்கேயுரிய வலிமையுடன் அவர்கள் எதிர் கொண்டார்கள். உடல் வலிமையுடைய மனிதர்களைக் கூட அவர்கள் அனுபவித்தத் துயரம் உலுக்கியெடுத்து விட்டது. 'உட்டா' என்ற மாநிலத்தில் அந்த மக்கள் கடைசியாக வந்து குடியேறினார்கள். அதுதான் தங்களுக்கான பூமியென்று மண்டியிட்டு கடவுளுக்கு நன்றி செலுத்தினார்கள். இதுவரை உழுது பண்படுத்தப்படாத அந்த நிலம்தான் அவர்களுக்கென்று இறைவனால் கொடுக்கப்பட்டதென்று தங்கள் தலைவரின் வாயால் கேட்டறிந்தார்கள்.

பிரிகாம் யங் தன்னை ஒரு திறமையான நிர்வாகி என்று நிரூபித்தார். தாங்கள் அமைக்கப் போகும் மாநகருக்கான வரைபடத்தை மக்கள் தயாரித்தார்கள். ஒவ்வொருவருக்கும் அவர்களின் தகுதிகளுக்கேற்ப நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டது. வணிகர்கள் வாணிபம் செய்வதில் ஈடுபட்டார்கள். கை வினைஞர்கள் அவர்களுக்கேற்ற தொழிலை மேற்கொண்டார்கள். மந்திர ஜாலம் போன்று வீதிகளும், சதுக்கங்களும் தோன்றின. வேலியமைத்தல், மரம் நடுதல், வீதிகளை சுத்தம் செய்தல் போன்ற வேலைகள் தங்குதடையின்றி நடைபெற்றன. அடுத்து வந்த பருவத்தில் கோதுமை அமோகமாக விளைந்தது. ஒவ்வொரு தொழிலும் செழித்து வளர்ந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் கட்டிய கோயில் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே சென்றது. விடியற் காலையில் ஆரம்பித்து பொழுது சாயும்

https://telegram.me/aedahamlibrary

நேரம் வரை சுத்தியல் எழுப்பும் ஒலியும், இரம்பத்தால் அறுக்கும் ஒலியும் கேட்டுக் கொண்டேயிருந்தன. குடியேறிய மக்கள் அந்த அளவுக்கு உழைத்துத் தங்களைக் காப்பாற்றிய கடவுளுக்கு ஒரு கோயில் கட்டி முடித்தனர்.

அகதிகளாக வந்து சேர்ந்த ஜான் ஃபெர்ரியரும் அவனுடைய சுவீகாரப் புதல்வி லூசி ஃபெர்ரியரும் கடைசி வரை மோர்மோன்கள் கூட்டத்திலேயே இருந்து வந்தனர். மூத்தவர் ஸ்டேகர்சனின், கான்வாஸ் துணியால் மூடப்பட்ட பாரவண்டியில், ஸ்டேகர்சனின் மூன்று மனைவியருடனும், பன்னிரெண்டு வயது மதிக்கத் தக்க அவருடைய மூத்த மகனுடனும் ஒற்றுமையாக வாழத் தொடங்கிவிட்டாள். தன் தாயை இழந்த அந்தச் சிறுமிக்கு ஸ்டேகர்சனின் மூன்று மனைவிகளும் துணையாக இருந்து அவளை நன்றாகக் கவனித்துக் கொண்டார்கள். ஜான் ஃபெர்ரியர் தான் ஒரு நல்ல வேட்டைக்காரன் என்பதை நிரூபித்தான். மோர்மோன்களுக்கு ஓர் வழிகாட்டியாக இருந்தான். அவர்களிடம் நல்ல பெயர் வாங்கி விட்டான். செழிப்பான நிலத்தில், அவனுக்கும் ஒரு பங்கு தருவது என்று முடிவு செய்யப்பட்டது. யங், ஸ்டேகர்சன், கெம்பால், ஜான்ஸ்டன், டிரப்பர் ஆகியோருக்குக் கூடுதலாக நிலம் ஒதுக்கப்பட்டது.

தனக்கென்று ஒதுக்கப்பட்ட நிலத்தில் ஜான் ஃபெர்ரியர் மரத்தாலான பெரிய வீடு ஒன்றைக் கட்டிக் கொண்டான். ஆண்டுகள் செல்லச் செல்ல அவனுடைய வீடும் வளர்ந்து கொண்டே வந்தது. எஃகு போன்ற அவனுடைய உடல் வாகு, காலை முதல் மாலை வரை உழைப்பதற்கு இடம் கொடுத்தது. தன் உழைப்பால் அவன் தன்னை உயர்த்திக் கொண்டான். மூன்று ஆண்டுகளில், தன்னைச் சுற்றியிருப்பவர்களைக் காட்டிலும் நன்கு முன்னேறி விட்டான் ஜான் ஃபெர்ரியர்; ஆறு ஆண்டுகளில் அவன் வசதி படைத்தவனாக மாறினான். ஒன்பது ஆண்டுகளில் பணக்காரனாக மாறிவிட்டான். பன்னிரெண்டு ஆண்டுகளில் சால்ட் லேக் நகரில் விரல் விட்டு எண்ணக்கூடிய நபர்களில் தானும் ஒருவனாக அடையாளம் காணப்பட்டான். உள்நாட்டுக்

https://telegram.me/aedahamlibrary

கடற்கரையிலிருந்து (ஏரி), வாசாட்ச் மலைத் தொடர்வரை ஜான் ஃபெர்ரியரைப் பற்றித் தெரியாதவர்களே இல்லை.

ஒரே ஒரு விஷயத்தில் மட்டும்தான் ஃபெர்ரியர் தன் சக மதத்தவர்களைத் திருப்திப்படுத்தவில்லை; அவன் தனக்கென்று ஒரு குடும்பத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அவன் திருமணம் செய்து கொள்ளவில்லை. அந்த ஒரு விஷயத்தில் மட்டும் பிறர் சொல்வதை அவன் கேட்கவில்லை. அதற்கான காரணத்தையும் அவன் சொல்லவில்லை. திருமணம் வேண்டாம் என்ற தன்னுடைய கொள்கையில் அவன் கடைசிவரை உறுதியாக நின்று விட்டான். புதிய மதத்தின் கோட்பாடுகளை கடைபிடிப்பதில் அவன் மந்தமாக இருக்கிறான் என்று மற்றவர்கள் அவன் மீது குற்றம் சாட்டினார்கள். சிலர் அவன் செலவிற்கு அஞ்சுகிறான் என்றார்கள். வேறு சிலர் அவன் எப்போதோ ஒரு பெண்ணைக் காதலித்ததாகக் கூறினார்கள். எது எப்படியோ, ஃபெர்ரியர் தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து விட்டான். மற்றபடி அவன் குடியேற்றக்காரர்களின் மதத்தைப் பின்பற்ற என்றுமே தவறியதில்லை.

லூசி ஃபெர்ரியர், தன் சுவீகாரத் தந்தையால் கட்டப்பட்ட மரவீட்டில் இருந்து கொண்டே ஃபெரியருக்கு உதவிகள் செய்து வந்தாள். மலைகளிலிருந்து வீசும் காற்றும், பைன் மரங்களின் வாசமும் அந்த இளம் பெண்ணை, செவிலியாகவும், தாயாகவும் வளர்த்தன. நாட்கள் செல்லச் செல்ல லூசி உயரமாகவும், பலசாலியாகவும் வளர்ந்தாள். அவள் தன் தந்தையின் குதிரை மீதேறி கோதுமை வயல்களில் வலம் வந்தபோது, மற்றவர்கள் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தார்கள். வழிப்போக்கர்களும் அவளைப் பார்த்தார்கள். மொட்டு மலரானது. அவள் தந்தை விவசாயிகளிலேயே ஒரு பணக்காரனாக மாறிவிட்டான்.

தன் மகள் பருவமடைந்துவிட்டாள், அவள் உடலிலும் குரலிலும் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன என்பதை தந்தை

https://telegram.me/aedahamlibrary

கவனிக்கவேயில்லை. அந்த மாற்றம் படிப்படியாக ஏற்பட்ட மாற்றம். ஒரு தந்தையால் அவற்றை கவனித்திருக்க முடியாது. ஒரு சிறு நிகழ்வு அவளுடைய வாழ்க்கையில் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதை அவர் உணரவில்லை.

அது ஒரு வெப்பம் மிகுந்த ஜூன் மாதத்தின் காலைப் பொழுது. 'பிந்தைய நாள் புனிதர்கள்' (Latter Day saints) என்று சொல்லப்படுவோர் அனைவரும் தேனீக்கள் போல் சுறுசுறுப்பாக இருந்தார்கள். கோவேறு கழுதைகளில் சுமைகளை ஏற்றிக் கொண்டு கேலி்ஃபோர்னியா நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அங்கு தான் தங்கப் புதையல் அவர்களுக்குக் காத்துக் கொண்டிருந்தது. வயல்வெளிகளிலிருந்து ஆட்டு மந்தைகளும், எருதுகளும் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தன. லூசி ஃபெர்ரியரும் தன் குதிரையின் மீதமர்ந்து, தன்னுடைய செந்தவிட்டு நிறக் கூந்தல் தலைக்குப் பின்னால் அசைய, கூட்டத்தில் வந்து கொண்டிருந்தாள். தன் தந்தையின் கட்டளையை ஏற்று அவள் வந்து கொண்டிருந்தாள். அவளை, மற்றக் குதிரை வீரர்கள் வியப்பு மேலிடப் பார்த்தார்கள். செம்மறியாட்டின் தோல் பேர்ர்த்திய இந்தியர்கள் கூட அவள் அழகை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

நகரின் புற எல்லைக்கு வந்தவுடன் சாலை அடைபட்டிருப்பதைப் பார்த்தாள் லூசி. வயல்வெளிகளிலிருந்து ஆடு மாடுகளை ஓட்டி வந்தவர்களால் அந்த இடையூறு ஏற்பட்டிருந்தது. பொறுமையிழந்த லூசி, ஒரு சிறு இடுக்கு வழியாகச் சென்றுவிடலாம் என்று யோசித்து, தன் குதிரையை செலுத்தினாள். சற்றும் எதிர்பாராமல் ஆடுமாடுகள் நாலாபுறமும் அவளைச் சூழ்ந்து கொண்டன. இதுபோன்ற ஒரு நிலைமையை சமாளிக்கத் தெரிந்தவள் தான் லூசி. திடீரென்று ஒரு பசு தன் கொம்புகளால் லூசி ஏறிவந்த குதிரையை முட்டிவிட்டது. லூசி குதிரையின்

https://telegram.me/aedahamlibrary

கடிவாளத்தைத் தளர்த்தும்படி அதனால் செய்துவிட்டது. அவள் கீழே விழுந்திருந்தால் எருதுகள் அவளைத் தன் குளம்புகளால் மிதித்திருக்கும்; அவள் உயிருக்கே ஆபத்து நேர்ந்திருக்கும். ஆனால் ஒரு பழுப்பு நிறக்கரம் பயந்து போன லூசியின் குதிரையைப் பிடித்துக் கொண்டது. லூசி கீழே விழாமல் அவளைக் காப்பாற்றியது. “உங்களுக்கு ஒன்றும் அடிபடவில்லையே?” என்று மிகவும் மரியாதையுடன் கேட்டான் லூசியைக் காப்பாற்றியவன்.

அவனுடைய கரிய, முரட்டுத்தனமான முகத்தைப் பார்த்து லூசி சிரித்துக் கொண்டாள். “நான் மிகவும் பயந்து போய் விட்டேன். என் குதிரை ‘போன்க்கோ’ இந்த அளவுக்கு பசுக்களைப் பார்த்து பயப்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை” என்றாள் அந்த இளைஞனைப் பார்த்து.

“நல்ல வேளையாக நீங்கள் குதிரையின் மீது உட்கார்ந்த நிலையிலிருந்து அசையவில்லை” என்றான் லூசியைக் காப்பாற்றிய அந்த இளைஞன்.

அந்த இளைஞன் வேட்டைக்காரனைப் போன்று உடை அணிந்திருந்தான். பார்ப்பதற்கு முரட்டுத் தனமாகத் தோன்றினான். கையில் துப்பாக்கி வைத்திருந்தான். “நீங்கள் ஜான் ஃபெர்ரியரின் மகள் தானே?” நீங்கள் அவர் வீட்டிலிருந்து இறங்கி வருவதை நான் பார்த்தேன். நீங்கள் உங்கள் தந்தையைப் பார்க்கும் போது ‘செயின்ட் லூயி’ என்ற இடத்திலிருக்கும் “ஜெபர்சன் ஹோப்” என்பவனை உங்களுக்கு நினைவிருக்கிறதா என்று கேளுங்கள். என் தந்தையும், உங்கள் தந்தையும் நெருங்கிய நண்பர்கள்” என்றான் இளைஞன்.

“நீங்களே வந்து என் தந்தையிடம் இந்தக் கேள்வியைக் கேளுங்களேன்” என்றாள் லூசி. எனது அவனுக்கு திருப்தியளித்தன.

“அவ்வாறே செய்கிறேன். நாங்கள் இருவரும் மலைமீது இரண்டு மாதங்கள் ஒன்றாக இருந்தோம். இன்னும் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டுதான் இருக்கிறோம்.

https://telegram.me/aedahamlibrary

என்னைப் பார்த்தால் உங்கள் தந்தை என்னை ஏற்றுக் கொள்வார்” என்றான் பதிலுக்கு.

“தந்தை உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளார். நானும் தான்” என்றாள் லூசி. “பசுக்கூட்டம் மட்டும் என்னை மிதித்திருந்தால் நான் மீண்டு வந்திருக்க முடியாது. என் தந்தை என்னை மிகவும் நேசிக்கிறார்” என்று மேலும் கூறினாள் லூசி.

“இதுவரை நீங்கள் எங்கள் நண்பர் கூட இல்லை” என்றாள் லூசி. லூசி இவ்வாறு கூறியதும் அந்த இளைஞனின் முகம் சுருங்கியது. லூசி ஃபெர்ரியர் உரக்கச் சிரித்தாள்.

“நான் ஒன்றும் பெரிதாக எடுத்துக் கொள்ள வில்லை. நீங்கள் இனியாவது வந்து எங்களைப் பார்க்க வேண்டும். இப்போதுதான் நாம் நண்பர்களாகி விட்டோமே? தந்தை என்னை நம்ப மாட்டார். இனி நான் தாமதிக்கக் கூடாது. சென்று வருகிறேன்” என்று சொல்லிவிட்டுத் தன் குதிரையைத் திருப்பிக் கொண்டு சென்று விட்டாள் லூசி ஃபெர்ரியர்.

போய் வாருங்கள் என்று தன் தொப்பியைத் தூக்கி அசைத்து லூசிக்கு விடை கொடுத்தான் ஜெபர்சன் ஹோப் என்ற அந்த இளைஞன்.

ஜெபர்சன் ஹோப்பும், தன் சகாக்களுடன் குதிரையேறிச் சென்று விட்டான். ஹோப்பும் அவனுடைய நண்பர்களும் நிவேதா மலைத் தொடரில் கிடைக்கும் வெள்ளியை நாடிச் சென்றார்கள். அப்படிச் சென்றவர்கள் சால்ட் லேக் நகருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய நோக்கம் தாங்கள் கொண்டு வந்துள்ள வெள்ளியை விற்றுப் பணமாக்குவது. நடந்த சம்பவம் அவனை மாற்றுப் பாதையில் செல்லத் தூண்டிவிட்டது-. லூசி என்ற இளம் பெண் அவன் நெஞ்சத்தில் எரிமலையாகப் புகுந்துவிட்டாள். லூசி தன் பார்வையிலிருந்து மறைந்ததும் அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான் ஹோப். வெள்ளியை விற்றுப் பணமாக்குவது அவனுக்கு இரண்டாம் பட்சமாகப்

https://telegram.me/aedahamlibrary

போய் விட்டது-. லூசி மீது அவன் வைத்திருந்த காதல் திடீரென்று ஏற்பட்டதல்ல. அது என்றும் மாறாத, தணியாத காதல். தன் காதலுக்காக அவன் எதையும் செய்யத் தயாராக இருந்தான்.

அன்று இரவே அவன் ஜான் ஃபெர்ரியரை சென்று சந்தித்தான். சந்திப்புகள் மீண்டும் தொடர்ந்தன. ஜான் ஃபெர்ரியர் கடந்த 12 வருட காலமாக வெளியுலகத் தொடர்பே இல்லாமல் இருந்து விட்டான். ஜெப்பர்சன் ஹோப் தன் மனதில் இருந்ததை ஜான் ஃபெர்ரியரிடம் தெரிவித்தான். தான் அவரையும் அவர் மகளையும் விரும்புவதாகக் கூறினான். கேலஃபோர்னியாவில் தான் சாதித்தவற்றையும், தோற்றத்தையும் ஒன்று விடாமல் ஜான் ஃபெர்ரியரிடம் கூறினான். தான் செய்த சாகசச் செயல்கள் பற்றியும் கூறினான். லூசி இதுபோன்ற சமயங்களில் மௌனமாக இருந்தாள். இருந்தாலும் அவள் வெட்கப்படுவதைப் பற்றி அறிந்து கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் தன் மகள் லூசி ஜெபர்சன் ஹோப்&பை நேசிக்கிறாள் என்பது ஃபெர்ரியருக்குப் புரிந்தது.

ஒரு கோடைகால மாலைப் பொழுதில் ஜெபர்சன் ஹோப் தன் குதிரையின் மீதேறி லூசியின் வீட்டிற்கு வந்தான். லூசி வாயிலுக்கருகே நின்று கொண்டிருந்தாள். வந்தவனை வரவேற்றான். குதிரையின் கடிவாளத்தை இழுந்து வேலியின் மீது தொங்கப் போட்டுவிட்டு நடைபாதையில் நின்று கொண்டான் ஹோப்.

“நான் போகப் போகிறேன் லூசி. நீ என்னுடன் வரவேண்டுமென்று நான் கூறவில்லை. ஆனால் அடுத்தமுறை நான் வரும்போது, நீ என்னுடன் வருவதற்குத் தயாராக இருக்க வேண்டும்” என்று லூசியின் இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு கூறினான் ஹோப்.

“அது எப்போது நடக்கும்” என்று, வெட்கத்தில் சிரித்துக் கொண்டே கேட்டாள் லூசி.

https://telegram.me/aedahamlibrary

“இரண்டு மாதங்கள் கழித்து உன்னை எனக்குத் தரும்படி உரிமையு-டன் கேட்டேன், என் அன்பே!” என்றான் ஹோப்.

“என் தந்தையை எப்படி சமாளிப்பீர்கள்?” என்று கேட்டாள் லூசி.

“உன் தந்தை அவருடைய சம்மதத்தைத் தெரிவித்து விட்டார்” என்றான் ஹோப். ஆனால் ஒன்று, வெள்ளிச் சுரங்கங்கள் வேலை செய்ய வேண்டும்” ஹோப் மேலும் தொடர்ந்தான்.

“நீங்களும், தந்தையும் சேர்ந்து ஏற்பாடு செய்து விட்டால், சொல்வதற்கு ஒன்றுமேயில்லை” என்று லூசி கூறினாள். ஜெபர்சன் ஹோப்பின் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

“கடவுளுக்கு நன்றி” என்று கூறிய ஹோப் குனிந்து லூசியை முத்தமிட்டான். “இங்கு இருக்க, இருக்க நிலைமை இன்னும் சிக்கலாகி விடும். நண்பர்கள் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் சென்று வருகிறேன். இன்னும் இரண்டு மாதங்கள் சென்று உன்னை வந்து சந்திக்கிறேன்” என்றான் ஹோப்.

லூசியிடமிருந்து தன்னை விலக்கிக் கொண்ட ஹோப் தன் குதிரை மீதேறி விரைவாகச் சென்றுவிட்டான். லூசி அவன் உருவம் மறையும் வரை வாயிற்படியிலேயே நின்று பார்த்துக் கொண்டிருதாள். பின் ‘உட்டா’-விலேயே மகிழ்ச்சியான ஒரு பெண்ணாக வீட்டினுள் சென்றான்.

###

https://telegram.me/aedahamlibrary

ஜான் ஃபெர்ரியர் புனிதருடன் பேசுகிறான்

ஜெபர்சன் ஹோப் தன் சகாக்களுடன் சால்ட் லேக் நகரத்தை விட்டுச் சென்று மூன்று வாரங்கள் சென்றுவிட்டன. ஜான் ஃபெர்ரியர் தன் சுவீகாரப் பு-தல்வி தன்னை விட்டுப் பிரிந்து சென்று விடுவாளே என்று மனதிற்குள் ஏங்கினான். இருந்தாலும் தன் மகளின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி அவன் மனதிற்கு சற்று ஆறுதலாக இருந்தது. தன் மகளை ஒரு ‘மோர்மோன்’ மணந்து கொள்வதில் ஃபெர்ரியருக்கு உடன்பாடு இல்லை. அப்படி ஒருத் திருமணம் நடந்தால் அது திருமணமே அல்ல என்றும், அது தனக்கு பெருத்த அவமானம் என்றும் நினைத்தான் ஃபெர்ரியர். ஜெபர்சன் ஹோப் ஒரு மோர்மோன் அல்ல என்பதில் அவனுக்கு மனதிற்குள் ஒரு திருப்தி. ஆனால் மோர்மோன்களின் மதத்திற்கு எதிராகப் பேச ஃபெர்ரியர் அச்சப்பட்டான். புனிதர்களின் மண்ணில் அவர்களை எதிர்த்துப் பேசுவது ஒரு குற்றம்.

ஆம் அப்படிப் பேசுவது ஓர் ஆபத்தான விஷயம். அப்படிப் பேசுபவர்கள் கூட தங்களுக்குள் இரகசியமாகத்தான் பேசிக் கொள்வார்கள். மோர்மோன்களின் மதத்தை எதிர்த்துப் பேசிவிட்டால் அது மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்தும். கடவுளால் விலக்கி வைக்கப்பட்ட மோர்மோன்கள் தற்போது தாங்கள் மற்றவர்களை விலக்கி வைத்தார்கள். ஸ்பெயின் நாட்டில் ‘செவில்லியில்’ இருந்த மாற்றுமதக் கோட்பாடு, ஜெர்மனியின் ‘வெம்மெரிட்’, இத்தாலியில் செயல்பட்ட இரகசிய சங்கங்கள் போன்ற அனைத்து சங்கங்களையும் விட உட்டாவில் செயல்பட்ட மோர்மோன்களின் சபை மிகவும் கொடுமையானது-.

கண்களுக்குப் புலனாகாத ஒரு புதிர், மோர்மோன்களின் சபையில் மறைந்திருந்தது; அந்தச் சபையை கொடுமையான ஒரு சபையாக அது மாற்றியது. அது எங்கும் நிறைந்த, சர்வ வல்லமை படைத்த ஒரு சபையாக காணப்பட்டது. மோர்மோன்களின் திருச்சபையைத்

https://telegram.me/aedahamlibrary

தோற்றுவித்தவர் திடீரென்று காணாமல் போய்விட்டார். அவர் எங்கு சென்றார், எங்கிருக்கிறார் என்பது யாருக்கும் தெரியாது. அவருடைய மனைவியும், மக்களும் அவருக்காகக் காத்திருந்தனர். இரகசிய நீதிபதிகள் அவரை என்ன செய்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது. பரபரப்புடைய ஒரு செயலோ, அல்லது ஒரு சொல்லோ, ஒருவரைப் பூண்டோடு அழிக்கப்படும் அளவுக்கு ஒரு விளைவை ஏற்படுத்தி விடும். எனவே மோர்மோன்களின் கொள்கையை எதிர்த்து யாருமே பேசத் துணியமாட்டார்கள்.

ஆரம்பத்தில், மோர்மோன்களை முதலில் ஏற்றுக் கொண்டு, பின்னர் கீழ்ப்படிய மறுப்பவர்களை மட்டும் தான் சபையைச் சேர்ந்தவர்கள் துன்புறுத்தினார்கள். பின்னர் மோர்மோன்களை விட்டு, அவர்கள் கொள்கைகளையும் விட்டு விலகிச் செல்பவர்களும் துன்புறுத்தப்பட்டார்கள்; அல்லது ஒடுக்கப்பட்டார்கள். வயது வந்த பெண்கள் எண்ணிக்கையில் குறைவாகவே கூட்டத்தில் இருந்தார்கள். பலதார மணம் என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விஷயமாக இருந்தது. பின் புதிதாகப் பெண்கள் வந்து முதியவர்களின் அந்தப்புரங்களில் புகுந்தார்கள். அவ்வாறு வந்து சேர்ந்த பெண்களின் முகங்களில் அச்சம் குடி கொண்டிருந்தது. அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். ஆயுதம் தாங்கிய அடியாட்களால் அவர்கள் இழுத்து வரப்பட்டிருக்கலாம். இன்று வரை 'டே னைட் பேன்ட்' (Day night band) அவென்ஜிங் ஏஞ்ஜெல்ஸ் போன்ற சொற்கள் தீய சகுனத்திற்குரிய சொற்களாகவே கருதப்படுகின்றன. இரக்கமற்ற இந்த மோர்மோன்களின் கூட்டத்தை யார் வழி நடத்துகிறார்கள் என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. சமயத்தின் பெயரால் இந்தக் கொடுமை நடந்து கொண்டிருந்தது. யார் நண்பர், யார் பகைவர் என்று கூட்டத்தில் ஒருவருக்கும் தெரியாது. புனிதர் (Prophet)

https://telegram.me/aedahamlibrary

என்பவரைப் பற்றியும் அவரது கொள்கைகள் பற்றியும் பேசுவதற்கே மக்கள் பயப்பட்டார்கள். எந்தச் செய்தியாக இருந்தாலும், அதை தங்கள் மனதிற்குள்ளேயே வைத்துக் கொள்வார்கள்.

ஒரு நாள் காலை வேளையில் ஃபெர்ரியர் தன் கோதுமை வயலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அப்போது யாரோ தாழ்ப்பாளைத் திறக்கும் சப்தம் கேட்டது. ஃபெர்ரியர் ஜன்னல் வழியாகப் பார்த்தான். தடியான, மத்திய வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதன் பாதையில் நடந்து வருவது தெரிந்தது. ஃபெர்ரியரின் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. வந்தது பிரிகாம் யங். அவர்தான் மோர்மோன்களின் தலைவர். அவர் வந்தது நல்லதற்கல்ல என்பது ஃபெர்ரியருக்குத் தெரியும். தலைவரை அழைக்க வாயிலுக்கு ஓடி வந்தான் ஃபெர்ரியர். பிரிகாம் யங் கடுமையான முகத்துடன் காணப்பட்டார்.

“சகோதரர் ஃபெர்ரியர் நமது இயக்கத்தில் முழு நம்பிக்கை வைத்திருப்பவர்கள், உங்களுக்கு நெருங்கிய நண்பர்களாகத் தான் இருந்து வருகிறார்கள்” என்று கூறிய பிரிகாம் யங் நாற்காலியில் அமர்ந்து ஃபெர்ரியரைக் கூர்ந்து நோக்கினார். “நாங்கள் உங்களைப் பாலைவனத்தில் சந்தித்தோம். உங்கள் பசியைப் போக்கி இந்தத் தேர்ந்தெடுத்த பள்ளத்தாக்குக்கு அழைத்து வந்தோம். உங்களுக்கு நிலத்தையும் பிரித்துக் கொடுத்து, தக்க பாதுகாப்பும் அளித்தோம். “அது உண்மை தானே” என்று கேட்டார்.

“உண்மை தான்” என்று பதிலுக்குக் கூறினான். ஃபெர்ரியர். “அதற்குப் பிரதி பலனாக ஒரு நிபந்தனை விதித்தோம். அதாவது நீங்கள் எங்கள் சமயத்தின் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்தோம். அதற்கு நீங்கள் சம்மதித்தீர்கள். ஆனால் நீங்கள் நிபந்தனைகளை மீறிவிட்டீர்கள் என்று வந்திருக்கும் அறிக்கை கூறுகிறது” என்று கூறினார் பிரிகாம் யங்.

https://telegram.me/aedahamlibrary

“நான் நிபந்தனைகளை மீறிவிட்டேனா? நான் நன்கொடைகள் கொடுக்கத் தவறிவிட்டேனா? அல்லது கோயிலுக்கு வராமல் இருந்தேனா?” என்று யங் அவர்களிடம் கேட்டான் ஃபெர்ரியர்.

“உங்களது மனைவியர் எங்கே? கூப்பிடுங்கள். அவர்களை நான் வாழ்த்த வேண்டும்” என்றார் யங்.

“நான் திருமணம் செய்து கொள்ளவில்லை. திருமணம் செய்து கொள்ள நினைத்தபோது பெண்கள் குறைவாகவே இருந்தார்கள். இருந்த பெண்களுக்கு வேறு தகுதியான மாப்பிள்ளைகளும் இருந்தார்கள். இப்போது நான் ஒன்றும் தனியாக இல்லை. என்னை நன்கு கவனித்துக் கொள்ள என் மகள் இருக்கிறாள்” என்று பதில் கூறினான் ஃபெர்ரியர்.

“நான் உங்கள் மகளிடம் தான் பேச வேண்டும். அவள் நன்கு வளர்ந்து விட்டாள். ‘உட்டாவின் மலர்’ போல் தோன்றுகிறாள். அவளைத் திருமணம் செய்து கொள்ள பலர் விரும்புகின்றனர்; பலருக்கு அவள் மீது ஒரு கண்” என்றார் மோர்மோன்களின் தலைவர்.

ஜான் ஃபெர்ரியர் மனதிற்குள் புழுங்கினான். “அவளைப் பற்றி கதைகள் நிறையக் கேள்விப்படுகிறேன். என்னால் நம்பாமல் இருக்க முடியவில்லை. அவள் நமது சமயத்தைச் சாராத வேறு சமயத்தைச் சேர்ந்த ஒருவனை விரும்புவதாகக் கேள்விப்பட்டேன்-. அது புரளியாகக் கூட இருக்கலாம். புனிதர் ‘ஜோசப் ஸ்மித்’ எழுதி வைத்துள்ள 13&வது விதி என்ன சொல்கிறது. உண்மையான மத நம்பிக்கையுள்ள ஒருவனைத் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றும், வேற்று மதத்தைச் சேர்ந்த ஒருவனைத் திருமணம் செய்து கொண்டால் அது மிகப் பெரிய பாவம் என்றும் அந்த விதி சொல்கிறது. அப்படியிருக்கும் போது நீங்கள் எப்படி வேற்று மதத்தில் நம்பிக்கை கொண்ட ஒருவனுக்கு உங்கள் மகளைத் திருமணம் செய்து கொடுக்க சம்மதிக்கலாம்? என்று கேட்டார் பிரகாம் யங்.

https://telegram.me/aedahamlibrary

ஜான் ஃபெர்ரியர் பதில் ஏதும் சொல்லவில்லை. பிரிகாம் யங்கின் சொற்படி நடந்து கொள்வதாகக் கூறினான்.

“உங்கள் உண்மையான மத நம்பிக்கையை, உங்கள் செயல் மூலம் தான் நிரூபிக்க வேண்டும். இது புனிதர் நால்வர் குழுவின் தீர்ப்பு. உங்கள் மகளுக்கு வயது மிகவும் குறைவு. நாங்கள் ஒன்றும் அவளை நரைத்த முடியுடைய ஒருவனுக்குத் தரவேண்டும் என்று வற்புறுத்தவில்லை. அவளுக்குத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை வழங்குகிறோம். வயதில் முதிர்ந்த எங்களுக்கு பல மனைவியர் இருக்கின்றார்கள். அதுபோல் இளைஞர்களுக்கும் நாங்கள் தக்க ஏற்பாடு செய்து தரவேண்டும். ஸ்டேகர்சன் அவர்களுக்கு ஒரு மகன் இருக்கிறான். டிரப்பர் அவர்களுக்கும் ஒரு மகன் இருக்கிறான். இருவருமே உங்கள் மகளை அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லத் தயாராக இருக்கிறார்கள். அவர்களில் யாரை வேண்டுமானாலும் உங்கள் மகள் தேர்வு செய்யட்டும். இருவரும் வசதி படைத்தவர்கள்; நமது சங்கத்தின் மீது நம்பிக்கை உடையவர்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?” என்றார் பிரிகாம் யங்.

ஃபெர்ரியர் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். பின் “சற்று அவகாசம் கொடுங்கள். என் மகளுக்கு இன்னும் வயதாகவில்லை. மேலும் அவள் திருமணம் செய்து கொள்ள அச்சப்படுகிறாள்” என்றான்.

“அவளுக்கு இன்னும் ஒரு மாதம் அவகாசம் தருகிறேன். அதற்குள் அவள் பதில் சொல்ல வேண்டும்” என்று கூறிவிட்டு நாற்காலியிலிருந்து எழுந்து கொண்டார் பிரிகாம் யங்.

யங் வாயிலுக்கு வந்தார். வந்தவர் ஃபெர்ரியரை பார்த்து “நீங்களும், உங்களுடைய மகளும் சியாரா பிளான்க்கோ-வின் வெளிறிய எலும்புக் கூடுகள். ‘புனித நால்வரின்’ ஆணையை மீறி உங்களால் எதுவும் செய்ய இயலாது” என்று எச்சரித்து விட்டு வெளியே சென்று விட்டார்.

https://telegram.me/aedahamlibrary

இந்தச் செய்தியை எப்படி மகளிடம் தெரிவிப்பது என்று ஃபெர்ரியர் யோசித்துக் கொண்டிருந்த போதே ஒரு மென்மையான கரம் அவனைத் தொட்டது. லூசி பின்னால் நின்று கொண்டிருந்தாள். பீதியடைந்திருந்த அவளது முகத்தைப் பார்த்ததுமே யங் பேசியதை லூசி கேட்டுக் கொண்டுதான் இருந்திருக்கிறாள் என்பதை ஃபெர்ரியர் யூகித்து விட்டான்.

“நாம் இப்போது என்ன செய்வது?” என்று கேட்டாள் லூசி.

“எதற்கும் பயப்படாதே” என்று தன் மகளிடம் கூறினான் ஃபெர்ரியர், அவளது தலைமுடியைக் கோதிவிட்ட படியே.

லூசி விம்மியழுதாள்; கைகளைப் பிசைந்து கொண்டாள்.

“ஜெபர்சன் ஹோப்புக்கு செய்தியனுப்புவோம். அவன் ஒரு கிறித்தவன். நிவேதாவுக்கு இங்கிருந்து சிலர் பயணம் செய்கிறார்கள். அவர்கள் மூலமாக அவனுக்கு செய்தியனுப்பினால், மின்னல் வேகத்தில் இங்கு வந்துவிடுவான்” என்றாள் ஃபெர்ரியர்.

அந்தச் சூழ்நிலையிலும் லூசிக்கு சிரிப்பு வந்தது. “அவன் இங்கு வந்தால் நல்ல ஆலோசனைகளைச் சொல்வான். உங்களுக்காகத் தான் நான் பயப்படுகிறேன். போதகரைப் பகைத்துக் கொண்டால் தீமைகள் தான் மிஞ்சும் என்று பலர் சொல்கிறார்கள்” என்றாள் லூசி.

“நாம் இன்னும் அவரைப் பகைத்துக் கொள்ளவில்லையே” என்று தந்தைக்குப் பதில் சொன்னாள் லூசி.

“நமக்கு இன்னும் ஒரு மாதம் கால அவகாசம் இருக்கிறது. அதற்குள் நாம் உட்டா&வை விட்டு வெளியே சென்று விடுவோம்” என்றான் ஃபெர்ரியர்.

“உட்டாவை விட்டுச் சென்று விடுவதா?”

“ஆம்”.

“நமது பண்ணை என்ன ஆவது?” என்று கேட்டாள் லூசி.

“நாம் போதிய அளவு பணத்தைச் சேர்த்துக் கொள்வோம். உட்டாவை விட்டுப் போய் விட வேண்டும் என்று முதன்

https://telegram.me/aedahamlibrary

முறையாக நான் இப்போது யோசிக்க வில்லை. முன்பே எனக்கு அந்த எண்ணம் இருந்தது. நான் எந்த போதகரைப் பற்றியும் கவலைப்படவில்லை. நான் ஒரு சுதந்திரமான அமெரிக்கன்” என்றான் ஜான் ஃபெர்ரியர்.

“ஆனால் அவர்கள் நம்மைப் போக விட மாட்டார்கள்” என்றான் லூசி.

“ஜெபர்சன் வரும்வரை காத்திருப்போம். நீ கண்ணீர் விடாதே. எந்த ஆபத்தும் அதற்குள் வராது” என்றான் ஃபெர்ரியர்.

எந்த ஆபத்தும் வராது என்று ஜான் ஃபெர்ரியர் உறுதியாகச் சொன்னான். ஆனால் அவன் கதவுகளைத் தாழ்ப்பாள் போட மறக்கவில்லை. துருபிடித்துப் போன தன் துப்பாக்கியை வெளியே எடுத்து, சுத்தம் செய்து, ரவைகளை நிரப்பி வைத்துக் கொண்டான்.

###

https://telegram.me/aedahamlibrary

உயிருக்கு பயந்து ஓட்டம்

பிரிகாம் யங்கை சந்தித்த மறுதினம் ஜான் ஃபெர்ரியர் சால்ட் லேக் நகருக்குச் சென்று, நிவேதா மலைகளுக்குச் செல்லும் குழுவினரை சந்தித்து, ஜெபர்சன் ஹோப்புக்குச் செய்தி அனுப்பி வைத்தான். அந்தச் செய்தியில் தானும் தன் மகளும் ஆபத்தில் இருப்பதாகவும், ஹோப் இங்கு உடனே திரும்பி வர வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தான். செய்தியனுப்பிய பின் திருப்தியடைந்து தன் வீட்டிற்குத் திரும்பி வந்தான் ஜான் ஃபெர்ரியர்.

வந்தவனுக்குத் தன் வாயிலில், ஒவ்வொரு தூணிலும் ஒரு குதிரை இடையூறாகக் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்ததும் அதிர்ச்சியாக இருந்தது. அதற்கும் மேலாகத் தன் வீட்டுக் கூடத்தில் இரண்டு இளைஞர்கள் வந்து காத்திருந்தது அதற்கும் மேலான அதிர்ச்சியைக் கொடுத்தது. நீண்ட வெளிறிய முகமுடைய ஓர் இளைஞன் ஆடும் நாற்காலியில் அமர்ந்து தன் கால்களை கணப்பின் மீது வைத்துக் கொண்டிருந்தான். எருதுக் கழுத்துடைய மற்றுமொரு இளைஞன் ஜன்னல் அருகே நின்று கொண்டிருந்தான். அவன் தன் காற் சட்டைப் பைகளில் கைகளை நுழைத்துக் கொண்டு ஏதோ ஒரு பாடலை முணுமுணுத்துக் கொண்டிருந்தான். இருவரும் தலையசைத்து ஃபெர்ரியரை வரவேற்றனர். ஆடும் நாற்காலியில் அமர்ந்திருந்த இளைஞன் முதலில் பேசத் தொடங்கினான்.

“உங்களுக்கு எங்களைத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இதோ இங்கு நின்று கொண்டிருப்பவன் முதியவர் டிரப்பரின் மகன். நான் தான் ஜோசப் ஸ்டேகர்சன். நாங்கள் தான் பாலைவனத்திலிருந்து உங்களை இங்கு அழைத்துக் கொண்டு வந்து எங்களுடன் சேர்த்துக் கொண்டோம்.”

“கடவுள் அனைவருக்கும், நல்ல நேரத்தில், நல்லதே செய்வார்” என்று மற்றொருவன் தன் மூக்கு வழியாகப் பேசினான். “கடவுள் எதையும் மெதுவாகத்தான்

https://telegram.me/aedahamlibrary

அரைப்பார்; ஆனால் மிகவும் பொடியாக அரைத்து விடுவார்" என்றான். மேலும் அவன்,

ஜான் ஃபெர்ரியர் இருவருக்கும் தலை குனிந்தான். அவனுக்கு வந்திருப்பவர்கள் யாரென்று தெரிந்து விட்டது.

ஸ்டேகர்சன் தொடர்ந்து பேசினான். "நாங்கள், எங்கள் தந்தையரின் சொற்படி உங்களிடம் பெண் கேட்டு வந்திருக்கிறோம். எனக்கு நான்கு மனைவிகள். என் சகோதரர் டிரப்பருக்கு ஏழு மனைவிகள். எனவே எனக்குத் தான் உங்கள் பெண்ணை மணந்து கொள்ள அதிக உரிமை உள்ளது"

அவனை இடை மறித்துப் பேசினான் டிரப்பர். "சகோதரர் ஸ்டேகர்சன் அவர்களே! யாருக்கு எத்தனை மனைவிகள் என்பது முக்கியமல்ல. எத்தனை மனைவிகளை வைத்து சமாளிக்க முடியும் என்பதுதான் கேள்வி. என் தந்தை முதியவர் டிரப்பர் எனக்கு ஓர் ஆலையைக் கொடுத்துள்ளார். நான் உங்களைக் காட்டிலும் பணக்காரன்."

இப்போது ஸ்டேகர்சன் பேசினான். "எனக்குத் தான் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. கடவுள் என் தந்தையை விரைவில் அழைத்துக்கொண்டு விட்டால் அவர் பராமரிப்பில் உள்ள தோல் தொழிற்சாலை முழுவதுமாக எனக்குக் கிடைத்துவிடும். அதுமட்டுமல்ல, வயதில் உங்களைக் காட்டிலும் நான் தான் மூத்தவன். நமது திருச்சபையில், நான் தான் உங்களைக் காட்டிலும் உயர் இடத்தில் இருப்பவன்."

"முடிவை நாம் மணப் பெண்ணிடமே விட்டு விடுவோம். அவளே யாரை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கட்டும்-" என்றான் டிரப்பர்.

இவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு கொந்தளித்துப் போய் நின்று கொண்டிருந்தான் ஜான் ஃபெர்ரியர். "இதோ பாருங்கள்! என் மகள் கூப்பிடும் போது நீங்கள் வரலாம். அதுவரை உங்கள் முகத்தைப் பார்க்கவே நான் விரும்பவில்லை."

https://telegram.me/aedahamlibrary

வந்திருந்த இரு மோர்மோன்களும் ஃபெர்ரியரை வியப்புடன் பார்த்தார்கள். அவர்களைப் பொருத்தவரை பெண்ணை அடைவதற்கான போட்டி ஒரு கௌரவப் பிரச்சனையாகிவிட்டது.

“வெளியே செல்வதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று தெருக்கதவு; மற்றொன்று ஜன்னல். நீங்கள் எப்படிச் செல்ல விரும்புகிறீர்கள்?” என்று கத்தினான் ஃபெர்ரியர்.

“உங்களுக்குள் யார் என்பதைத் தீர்மானித்துவிட்டு பிறகு வாருங்கள்.”

“நீங்கள் புனிதரையும், நால்வர் குழுவையும் அவமதித்து விட்டீர்கள். இதற்காகப் பின்னால் நீங்கள் வருத்தப்பட வேண்டியிருக்கும்” என்று கோபமாகக் கத்தினான் ஸ்டேகர்சன். “கடவுள் உங்களுக்குக் கொடுக்கப் போகும் அடி பலமாக இருக்கும். கடவுள் எழுவார்; உங்களை அடிப்பார்” என்றான் டிரப்பர்.

“நான் உங்களை இப்போது அடிக்கப் போகிறேன்” என்று ஃபெர்ரியர் மிகவும் கோபமாகப் பேசினான். லூசி மட்டும் தடுக்காமல் இருந்திருந்தால் அவன் தன் துப்பாக்கியை எடுத்திருப்பான். வந்திருந்த இருவரும் ஓடி விட்டார்கள். குதிரைகளின் குளம்படி ஓசையிலிருந்து அது தெரிந்தது.

“அயோக்கியர்கள். இவர்களுக்கு உன்னைத் திருமணம் செய்து கொடுப்பதை விட, உன்னை மண்ணில் புதைத்து விடுவதே சிறந்தது” என்றான் ஃபெர்ரியர் உணர்ச்சிவசப்பட்டு.

“அதுதான் நல்லதென்று எனக்குப் படுகிறது. ஆனால் ஜெபர்சன், விரைவில் வந்துவிடுவார்” என்றாள் லூசி.

“ஆம், அவன் விரைவில் வந்துவிடுவான். அவன் எவ்வளவு விரைவாக வருகிறானோ அவ்வளவு நல்லது நமக்கு. வந்து சென்றவர்களின் அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்குமென்று நமக்குத் தெரியாது” என்றான் ஃபெர்ரியர்.

https://telegram.me/aedahamlibrary

ஃபெர்ரியருக்கும், அவனுடைய மகளுக்கும் ஆலோசனை கூறுவதற்கும், உதவி செய்வதற்கும் ஒருவர் இத்தருணத்தில் தேவை. மூத்தவர்களை எதிர்ப்பதென்பது இதுவரை மோர்மோன்களின் வரலாற்றில் இல்லை. தன்னுடைய சொத்துகளும், அவனுக்கு சமுதாயத்தில் உள்ள உயரிய இடமும், இப்போது உதவப் போவதில்லை என்பது ஃபெர்ரியருக்கு நன்றாகத் தெரியும். அவனைப் போன்று இருப்பவர்கள் யாராவது எதிர்ப்பு தெரிவித்தால் அவர்களுடைய சொத்துகள் யாவும் திருச்சபைக்குச் சேர்ந்துவிடும் என்பது அவனுக்குத் தெரியும். அவன் ஒரு துணிச்சலான மனிதனாக இருந்தாலும் இப்போது நடுங்கிக் கொண்டிருக்கிறான். எந்த ஆபத்தையும் அவனால் சமாளிக்க முடியும். ஆனால் எதிர்பாராத ஒரு அதிர்ச்சியை எப்படி சமாளிப்பது? தன்னுடைய பயத்தைத் தன் மகளிடமிருந்து மறைக்கப் பார்த்தான் ஃபெர்ரியர். ஆனால் அவன் மறைப்பதை லூசி தெரிந்து கொண்டு விட்டாள்.

தன் நடத்தைக்கு பிரகாம் யங்கிடமிருந்து ஒரு செய்தி வருமென்று எதிர்பார்த்தான் ஃபெர்ரியர். அந்தச் செய்தி மறைமுகமாக வந்தது. மறுநாள் காலையில் அவன் எழுந்திருக்கும் போது ஒரு தாளில் எழுதப்பட்டு குண்டூசி மூலம் படுக்கையில் இணைக்கப்பட்டிருந்தது. அந்தச் செய்தி கொட்டை எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்தது.

> "இன்னும் இருபத்தி ஒன்பது நாட்கள், உன்னைத் திருத்திக்கொள்ள, உனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது"

என்று செய்தியில் காணப்பட்டது.

வேறு எந்த செய்தியும் ஃபெர்ரியருக்கு இவ்வளவு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்க முடியாது. இந்தச் செய்தி எப்படி வந்திருக்க முடியும்? அவனுடைய பணியாட்கள் ஒரு வெளிவீட்டில் படுத்திருந்தார்கள். வீட்டுக் கதவுகளும், ஜன்னல்களும் மூடியிருந்தன. அவ்வாறு இருக்கும் போது இந்தச் செய்தியை யார் கொண்டு வந்து வைத்திருக்க முடியும்? அவனுக்கு இரத்தம்

https://telegram.me/aedahamlibrary

உறைந்துவிடும் போல் இருந்தது. வந்திருந்த செய்தியைப் பற்றி அவன் லூசியிடம் எதுவும் சொல்லவில்லை. செய்தி எழுதப்பட்டிருந்த தாளைக் கசக்கி எறிந்தான் ஃபெர்ரியர். 29 நாட்கள் யங் அளித்திருந்த நாட்களில் மீதமிருந்தன. மிக மர்மமான ஆற்றலை பெற்றிருக்கும் ஒரு விரோதியிடமிருந்து அவன் தன்னை எப்படிக் காத்துக் கொள்ள முடியும். அந்தக் குண்டூசியைக் குத்தி வைத்தது யாராக இருப்பார்கள்? அந்த நிகழ்வு தன் இதயத்தையே துளைத்துவிட்டது போல் இருந்தது. ஃபெர்ரியருக்கு.

மறுநாள் காலையில் நடைபெற்ற சம்பவம், முதல் நாள் நடைபெற்ற சம்பவத்தை விட திடுக்கிட வைக்கும்படி இருந்தது. காலை உணவைச் சாப்பிட ஃபெர்ரியரும், லூசியும் வந்து அமர்ந்தனர். கூச்சலிட்ட லூசி மேலே ஏதோ ஒன்றை சுட்டிக் காட்டினாள். கூரையின் அடிப்புறம், மையப்பகுதியில் கரிக் குச்சியால் “28” என்ற எண் எழுதப்பட்டிருந்தது. அவளுக்கு எதுவுமே புரியவில்லை. ஃபெர்ரியருக்கும் அதைப் பற்றி எதுவும் தெரியவில்லை. அன்றைய இரவு ஃபெர்ரியர் தன் துப்பாக்கியுடன் வீட்டைக் காவல் காத்தான். அன்று இரவு முழுவதும் அவன் எதையும் பார்க்கவில்லை; எதையும் கேட்கவும் இல்லை. அப்படியிருந்தும் அவன் வீட்டுக் கதவில் ‘27’ என்ற எண் எழுதப்பட்டிருந்தது.

நாட்கள் நகர்ந்தன. அவனுடைய விரோதிகள் ஒரு மாதக் காலக் கெடுவில் மீதம் இருந்த நாட்களை ஏதாவது ஒரு வழியில் தெரிவித்துக் கொண்டேயிருந்தனர். சில சமயங்களில் எஞ்சியிருக்கும் நாட்களைக் குறிக்கும் எண் சுவற்றில் எழுதப்பட்டிருக்கும்; சில சமயங்களில் தரையில் எழுதப்பட்டிருக்கும். வேறு சில சமயங்களில் சுற்று வேலியில் எழுதப்பட்டிருக்கும். இது எப்படி நடைபெறுகிறது என்பதை ஃபெர்ரியரால் கண்டுபிடிக்க இயலவில்லை. எண்களைப் பார்க்கும் போது ஃபெர்ரியரின் மனதில் திகில் ஏற்படும். தான் வேட்டையாடப்படுபவன் போல் அவன் உணர்ந்தான். அவனுக்கிருந்த ஒரே நம்பிக்கை நிவேதாவிலிருந்து ஹோப் என்ற

https://telegram.me/aedahamlibrary

வேட்டைக்காரன் எப்படியும் வந்து விடுவான் என்பது தான்.

இருபது, பதினைந்தானது; பதினைந்து பத்தானது. ஆனால் நிவேதாவிலிருந்து செய்தி எதுவும் வரவில்லை. எண்கள் மட்டும் குறைந்து கொண்டே வந்தன. ஏதாவது ஒரு குதிரை வீரன் போகும் சப்தம் கேட்டாலோ வண்டிக்காரனின் குரல் கேட்டாலோ, தனக்கு உதவி வந்து சேர்ந்துவிட்டது என்ற நம்பிக்கையில் ஃபெர்ரியர் ஓடி வந்து எட்டிப் பார்ப்பான். ஐந்து என்ற எண் நான்கானது; நான்கு மூன்றானது. ஃபெர்ரியர் நம்பிக்கையிழந்து விட்டான். அப்பகுதிகளில் இருந்த மலைகளின் விவரம் எதுவும் அவனுக்குத் தெரியாது. மக்கள் அதிகமாக நடமாடும் சாலைகள் யாவும் கண்காணிக்கப்பட்டன. குழுவின் அனுமதியின்றி யாரும் அங்கே வந்துவிட முடியாது. தன் உயிரே போனாலும் தன் மகளின் மானத்தைக் காப்பது என்பதில் ஃபெர்ரியர் உறுதியாக இருந்தான்.

ஒரு நாள் மாலைப் பொழுதில் தப்பிக்கும் வழி பற்றி ஃபெர்ரியர் யோசித்துக் கொண்டிருந்தான். அன்று காலை தான் சுவற்றில் ‘2’ என்ற எண் எழுதப்பட்டிருந்தது. மறுநாள் அவனுக்கு அளிக்கப்பட்டிருந்த அவகாசத்தின் கடைசி தினம். எதை, எதையோ எண்ணி மனதுக்குள் நடுங்கிக் கொண்டிருந்தான் ஃபெர்ரியர். அவன் சென்ற பிறகு அவனுடைய மகளுக்கு என்ன ஆகும்? தன்னை சுற்றியிருக்கும் இரகசிய வலைப் பின்னலில் இருந்து தப்பிக்க வழியே இல்லையா? சாப்பாட்டு மேஜையின் மீது தன் முகத்தைப் புதைக் கொண்டு, தன்னுடைய கையாலாகாத் தனத்தை நினைத்து நொந்துகொண்டு அமர்ந்திருந்தான் ஜான் ஃபெர்ரியர்.

அன்று இரவு, அமைதியைக் கிழித்துக் கொண்டு, எதையோ சுரண்டுவது போன்று ஒரு சப்தம் கேட்டது. வீட்டுக் கதவிலிருந்துதான் அந்த ஓசை வந்தது. ஃபெர்ரியர் ஊர்ந்து சென்று சப்தம் எங்கிருந்து வருகிறதென்று பார்த்தான். வீட்டுக் கதவிலிருந்துதான் அந்த ஓசை வந்தது. சற்றுநேர

https://telegram.me/aedahamlibrary

அமைதிக்குப் பின் மீண்டும் அந்த சுரண்டும் ஒலி கேட்டது. யாரோ ஒருவர் வீட்டுக் கதவைத் தட்டுகிறார் என்று புரிந்தது. கடைசி நாளை அறிவிக்க யாராவது எதையோ செய்கிறார்கள் என்று நினைத்தான் ஃபெர்ரியர். எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பதை விட உடனடியாக ஏற்படும் மரணம் மேலானது என்று முடிவு செய்தான். எழுந்து சென்று கதவின் தாழ்ப்பாளைத் திறந்தான்.

வெளியில் எங்கும் அமைதி நிலவியது. அன்றைய இரவுப் பொழுது மிகவும் நன்றாக இருந்தது. தனக்கு மேல், வானில் நட்சத்திரங்கள் மினுக்கிக் கொண்டிருந்தன. முன்பக்கத் தோட்டத்திலும், தோட்டத்தின் வாயில் புறத்திலும் மனித அரவமே இல்லை. ஃபெர்ரியர் தனது வலப்புறத்திலும், இடப்புறத்திலும் நன்றாகக் கவனித்தான். தன்னுடைய காலுக்கடியில், தன் முகத்தைப் பார்த்துக் கொண்டு, ஆயுதங்களுடன் ஒரு மனிதன் படுத்திருப்பதைப் பார்த்தான்.

சுவற்றைப் பிடித்துக் கொண்டு யாரையாவது உதவிக்குக் கூப்பிடலாமா என்று யோசித்தான். வந்திருப்பவன் ஒரு அடிபட்ட மனிதனாக இருக்க வேண்டும்; அல்லது உயிர்போகும் தருவாயில் இருக்க வேண்டும். வந்தவன் பாம்புபோல் ஊர்ந்து நடுக் கூடத்திற்கு வந்தான். வந்தவன் முதலில் திறந்திருந்த கதவை மூடினான். அப்படி வந்தவன் ஜெஃபர்சன் ஹோப்.

“கடவுளே! நீ என்னை மிகவும் அச்சப்பட வைத்து விட்டாய். எதற்காக இவ்வாறு வந்தாய்?” என்று கேட்டான் ஃபெர்ரியர்.

“முதலில் எனக்கு உண்பதற்கு ஏதாவது கொடுங்கள். கடந்த நாற்பத்தெட்டு மணி நேரமாக நான் எந்த உணவும் உட்கொள்ள வில்லை” என்று கூறிய ஜெஃபர்சன் ஹோப் மேஜைமீது விறைத்துக் கிடந்த இறைச்சித் துண்டுகளையும், ரொட்டித் துண்டுகளையும் வேகவேகமாக சாப்பிட்டான். “லூசி நலமாக

https://telegram.me/aedahamlibrary

இருக்கிறாளா?" என்று கேட்டான் தன்னுடைய பசியடங்கியவுடன்.

"நலமாக இருக்கிறாள். வந்திருக்கும் ஆபத்தைப் பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியாது" என்றான். ஃபெர்ரியர் "மிகவும் நல்லது. ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் உங்கள் வீடு கண்காணிக்கப்படுகிறது-. அதனால் தான் நான் இப்படி வரும்படி நேர்ந்து விட்டது. அவர்கள் எவ்வளவு எச்சரிக்கையாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் ஓர் அமெரிக்க வேட்டைக்காரனை அவ்வளவு எளிதாகக் கண்டுபிடித்து விட முடியாது" என்றான் ஜெஃபர்சன் ஹோப்.

ஃபெர்ரியர் இப்போது ஒரு மாறுபட்ட மனிதனாகக் காணப்பட்டான். தனக்கு ஒரு நெருங்கிய கூட்டாளி இருப்பதை இப்போது உணர்ந்தான். ஹோப்பின் கரங்களைப் பற்றிக் கொண்டு "எங்களுக்கு வந்திருக்கும் இந்த ஆபத்தைப் பங்கிட்டுக் கொள்ள வேறு எவரும் எங்களுக்கில்லை" என்று கூறினான்.

"சிறுத்தையைப் போன்றவரே! உங்களிடம் நான் மதிப்பு வைத்திருக்கிறேன். ஆனால் நீங்கள் மட்டும் தனியாக இருந்திருந்தால் உங்களது அலுவலில் நான் தலையிட்டிருக்க மாட்டேன். நீங்கள் லூசியுடன் இருக்கிறீர்கள். லூசி தான் என்னை இங்கு அழைத்து வந்திருக்கிறாள். அவளுக்கு எந்தத் தீங்கும் ஏற்படுவதற்கு முன்னால் நாம் இங்கிருந்து தப்பிச் சென்றுவிட வேண்டும்" என்றான் ஹோப்.

"நாம் என்ன செய்ய வேண்டும்?" என்றார் ஃபெர்ரியர்.

"நாளை தான் உங்களுக்கான கடைசி நாள். இன்று இரவே நீங்கள் ஏதாவது செய்தாக வேண்டும். இல்லையென்றால் தொலைந்தீர்கள். தான் ஒரு கோவேறு கழுதையையும், இரு குதிரைகளையும் ஈகிள் மலையிடுக்கில் மறைத்து வைத்திருக்கிறேன். நீங்கள் எவ்வளவு பணம் வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான் ஹோப்.

https://telegram.me/aedahamlibrary

“இரண்டாயிரம் டாலர்கள் மதிப்புள்ள தங்கமும், ஐநூறு டாலர்கள் பணமாகவும் வைத்திருக்கிறேன்” என்றான் ஃபெர்ரியர்.

“நீங்கள் வைத்திருப்பதுடன் சேர்த்துக் கொள்ள என்னிடமும் நிறைய இருக்கின்றது-. நாம் மலைகளின் ஊடே சென்று முதலில் கார்சன் நகரை அடைய வேண்டும். நீங்கள் சென்று லூசியை எழுப்புங்கள். பணியாளர்கள் வீட்டில் தூங்கிக் கொண்டிருக்க வேண்டாம்” என்றான் ஹோப்.

ஃபெர்ரியர் லூசியைத் தயார்படுத்தும் வரை காத்திராமல், ஜெஃபர்சன் ஹோப் பயணத்திற்கு வேண்டிய உணவுப் பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டான். தண்ணீரை ஒரு ஜாடியில் நிரப்பிக் கொண்டான். மலைப் பிரதேசத்தில் தண்ணீர் கிடைக்காதென்பது, தன் அனுபவத்தால் முன்பே அவனுக்குத் தெரியும். உணவுப் பொருளையும், தண்ணீரையும் ஹோப் எடுத்து வைப்பதற்கும், ஃபெர்ரியர் தன் மகளை அழைத்து வருவதற்கும் சரியாக இருந்தது. காதலர்களின் சந்திப்பு மிகவும் சுருக்கமாக இருந்தது. அவர்களுக்கு நேரமில்லை.

“நாம் உடனடியாகக் கிளம்ப வேண்டும். மிக மெல்லிய குரலில் பேசிய ஹோப் தன் பேச்சில் உறுதியாகவும் இருந்தான். வீட்டின் முன்வாயிலும், பின்வாயிலும் கண்காணிக்கப்படுகின்றன. மிகவும் எச்சரிக்கையாக, நாம் பக்கங்களில் இருக்கும் ஜன்னல் வழியாகச் செல்ல வேண்டும். வயல்களைக் கடந்து செல்ல வேண்டியிருக்கும். சாலைக்கு வந்துவிட்டால் நாம் மலையிடுக்கிற்குச் செல்ல இரண்டு மைல்கள்தான் இருக்கும். அங்கு தான் குதிரைகள் நமக்காகக் காத்திருக்கின்றன. பொழுது விடிவதற்குள் நாம் மலையில் பாதி தூரத்தைக் கடந்து விட வேண்டும்” என்றான் ஜெஃபர்சன் ஹோப்.

“வழியில் நாம் நிறுத்தப்பட்டால் என்ன செய்வது?” என்று கேட்டான் ஃபெர்ரியர்.

https://telegram.me/aedahamlibrary

ஹோப் தன் காற்சட்டைப் பைக்கு மேல் துருத்திக் கொண்டிருந்த கைத் துப்பாக்கியைக் காட்டினான். “அவர்கள் நிறைய பேர் இருந்தால் அதில் ஓரிருவரை நாம் அழைத்துச் செல்வோம்” என்றான் ஹோப் ஒரு ஏளனப் புன்னகையுடன்.

வீட்டிலிருந்த விளக்குகள் யாவும் அணைக்கப்பட்டன. இருட்டாக இருந்த ஜன்னல் வழியாக தான் விட்டுச் செல்லவிருக்கும் வயல் வெளியைப் பார்த்தான். ஃபெர்ரியர். இப்படியெல்லாம் நடக்குமென்று அவன் எதிர்பார்க்கவில்லை. தன் மகளின் நலனுக்காக எல்லாவற்றையும் விட்டுச் செல்வதற்குத் தயாராக இருந்தான் ஃபெர்ரியர். எங்கும் அமைதியாக இருந்தது; மகிழ்ச்சியாகவும் இருந்தது. சலசலக்கும் மரங்கள், அமைதியான கோதுமை வயல்வெளி போன்றவற்றைப் பார்க்கும் போது ஒரு கொலைவெறி அங்கே மறைந்து கிடப்பதை நம்ப முடியவில்லை. ஹோப்பின் வெளிறிய முகம் அவன் லூசியின் வீட்டிற்கு வந்த போது அனுபவித்த சங்கடங்களுக்கு சாட்சியாக விளங்கியது.

ஃபெர்ரியர் தங்கம் நிரம்பிய பையையும், பணப் பையையும் தூக்கிக் கொண்டான். ஜெஃபர்சன் ஹோப் சாப்பாட்டையும், தண்ணீரையும் சுமந்து வந்தான். லூசி தன் மதிப்பு மிக்க உடைமைகளைக் கையில் எடுத்துக் கொண்டாள். மூவரும் ஜன்னல் கதவை மெதுவாகத் திறந்து, நிலவொளி மேகத்தால் மறைக்கப்படும் வரை காத்திருந்தனர். மேகம் நிலவொளியை மறைத்தவுடன் ஒருவர், ஒருவராக ஜன்னல் வழியாகக் கீழே இறங்கித் தங்களது சிறிய தோட்டத்திற்கு வந்தார்கள். பின் மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கப் பதுங்கிப் பதுங்கித் தட்டுத் தடுமாறி சோளக் கொல்லைக்குச் செல்லும் ஒரு சிறிய இடைவெளிக்கு வந்தார்கள். தட்டுத் தடுமாறி வந்த ஃபெர்ரியரையும், லூசியையும் வேகமாக இழுத்துக் கொண்டு வந்து ஒரு நிழற்பாங்கான இடத்தில் மறைத்து வைத்தான் ஹோப். இருவரும் மௌனமாகத் தடுமாறிக் கொண்டிருந்தார்கள்.

https://telegram.me/aedahamlibrary

மரமற்ற அகன்ற புல்வெளிப் பரப்பில் எடுத்துக் கொண்ட பயிற்சி ஜெ்ஃபர்சன் ஹோப்பிற்கு, சிவிங்கிப் பூனையின் காதுகளைப் போன்று, முணுக்கென்ற சப்தத்தைக் கூட கேட்டறியும் அளவுக்கு ஆற்றலைக் கொடுத்திருந்தது. அவனும், அவனைச் சேர்ந்தவர்களும் பதுங்கிப், பதுங்கி வந்து சேர்ந்த உடனேயே, ஆந்தை அலறுவதைப் போன்ற ஓர் ஒலி ஹோப்பின் காதுகளுக்குக் கேட்டது. அதே சமயம் ஒரு நிழல் உருவம் தென்பட்டது. அந்த நிழல் உருவம் அதே போன்று ஒரு சப்தத்தை மீண்டும் எழுப்பியது. அந்த சப்தம் வேறு ஒரு மனிதனை மறைவிலிருந்து வரவழைத்தது.

"நாளை நள்ளிரவு நான் மூன்று முறை ஒலி எழுப்புவேன்" என்று அந்த உருவம் கூறியது. "நான் இதை சகோதரர் டிரப்பர் அவர்களிடம் கூறட்டுமா? என்று நிழல் உருவம் கேட்டது. அவரிடம் அதைக் கூறு. மற்றவர்களுக்கும் தெரியப்படுத்தி விடு. "ஒன்பதுக்கு ஏழு" என்ற இரகசியச் சொல்லில் பேச்சு முடிந்தது.

"ஏழுக்கு ஐந்து" என்று பதிலுக்குக் கூறிவிட்டு அந்த இரு உருவங்களும் வெவ்வேறு திசையில் சென்று மறைந்து விட்டன. அவர்கள் பேசியது இரகசியச் சொல்லாகவும், அதற்குப் பதில் கொடுக்கும் சொல்லாகவும் இருக்க வேண்டும். அந்த இரு உருவங்களின் காலடிச் சப்தம் மறைந்தவுடன், ஜெ்ஃபர்சன் ஹோப் துள்ளி எழுந்தான். ஃபெர்ரியரை இழுத்துக் கொண்டு, லூசியைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வயல் வெளியிலிருந்து வெளியே வந்தான்.

"விரைந்து வாருங்கள், விரைந்து வாருங்கள். நீங்கள் விரைந்து வருவதில் தான் எல்லாம் அடங்கியுள்ளது" என்று ஃபெர்ரியரையும், லூசியையும் பார்த்துக் கூறினான்.

நெடுஞ்சாலைக்கு வந்ததும் அவர்கள் மூவரும் வேகமாக நடக்க ஆரம்பித்தார்கள். ஒரே ஒரு முறை தான் அவர்கள் வழியில் மாட்டிக் கொள்வார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் ஒருவரும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு வயலில் இறங்கி மறைந்து கொண்டார்கள்.

https://telegram.me/aedahamlibrary

நகரத்தை அடைவதற்கு முன்பாகவே, நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து சென்ற ஓர் ஒற்றையடிப் பாதையில் ஹோப் மற்ற இருவரையும் அழைத்துக் கொண்டு சென்றான். எந்தத் தடங்கலுமின்றி, வழி தவறி விடாமல், பாராங் கற்களுக்கு மத்தியில் அவர்களை அழைத்துக் கொண்டு, கோவேறு கழுதையும், குதிரைகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மலையிடுக்கிற்கு வந்து சேர்ந்தான் ஹோப். லூசி கோவேறு கழுதையின் மீது அமர்த்தப்பட்டாள். ஜான் ஃபெர்ரியர் தங்கப் பையுடனும், பணப் பையுடனும் ஒரு குதிரையின் மீது ஏறிக் கொண்டான். ஜெஃபர்சன் ஹோப் உணவுப் பொருட்களுடனும், தண்ணீருடனும் மற்றொரு குதிரையின் மீது அமர்ந்து கொண்டான். மூவரும் ஆபத்தான தங்கள் பயணத்தைத் தொடங்கினார்கள்.

அவர்கள் தேர்ந்தெடுத்த பாதை மற்றவர்களைத் தடுமாறச் செய்யும் ஒரு பாதை. ஒரு பக்கம் பல்லாயிரம் அடி உயரமுடைய பாறைக் கூர் முகடுகள் தென்பட்டன. அவை பார்ப்பதற்குக் கரிய நிறத்துடனும், தொல்லுயிர்களின் விலா எலும்புகள் போன்றும் இருந்தன. மறுபக்கம் பயணத்திற்கு இடையூறாக இருக்கும் பாறைகள். முன்னேறிச் செல்வதே கடினமாக இருந்தது. இரண்டிற்கும் நடுவே ஒரு வளைந்து செல்லும் பாதை. பாதை எவ்வளவு தான் கடினமானது என்றாலும் 'புனித நால்வரின்' எதேச்சாதிகாரத்திலிருந்து தப்பி வந்தது மூன்று நாடோடிகளுக்கும் நிம்மதியைத் தந்தது.

ஆனாலும் அந்த மூவரும் இன்னும் 'பு-னிதர்களின்' பிடியில் தான் இருக்கிறார்கள் என்பதைக் கீழ்க்கண்ட சம்பவம் நிரூபித்தது. மனித வாடையற்ற, தனிமையான, பயங்கரமான ஓரிடத்திற்கு அவர்கள் வந்திருந்தாலும், லூசியின் பார்வைக்கு, உயரத்தில் நின்று கொண்டிருந்த ஒரு காவலன் தென்பட்டான். அவன் மூவரையும் பார்த்து விட்டான். இராணுவ மிடுக்குடன் அந்தக் காவலன் அவர்களைப் பார்த்துக் கேட்டான், "யார் நீங்கள்?" என்று.

https://telegram.me/aedahamlibrary

துப்பாக்கியின் மீது ஒரு கை வைத்துக் கொண்டே “நாங்கள் நிவேதாவுக்குச் செல்லும் பயணிகள்” என்று பதில் அளித்தான் ஜெஃபர்சன் ஹோப்.

அந்தக் காவலன் ஹோப் கூறிய பதிலில் திருப்தியடையாமல் துப்பாக்கியைக் குறி வைப்பது தெரிந்தது. “யாருடைய அனுமதியில் நீங்கள் செல்கிறீர்கள்” என்று கேட்டான், காவலன். “புனித நால்வரின்” அனுமதியுடன் தான் செல்கிறோம் என்று பதிலளித்தான் ஃபெர்ரியர். மோர்மோன்களிடம் பழகியவன் என்பதால் புனித நால்வருக்கு மேல் அதிகாரம் செலுத்த யாரும் இல்லை என்று அவனுக்குத் தெரியும்.

“ஒன்பதிலிருந்து ஏழு” என்றான் காவலன்.

“ஏழிலிருந்து ஐந்து” என்று கூறினான் ஜெஃபர்சன் ஹோப். இது காவலன் கூறிய குறியீட்டிற்கு எதிர் குறியீடு.

“நீங்கள் செல்லலாம். கடவுள் உங்களுக்குத் துணையாக இருக்கட்டும்” என்று மேலிருந்து குரல் கொடுத்தான் காவலன்.

காவலன் நின்றிருந்த இடத்திலிருந்து பாதை சற்று அகலமாக மாறியது. குதிரைகள் வசதியாகச் செல்வதற்கு இடமளித்தது. தூரத்திலிருந்து பார்க்கும் போது காவலன் தன் துப்பாக்கியின் மீது சாய்ந்து கொண்டு நிற்பதை அவர்கள் பார்த்தார்கள். “தேர்ந்தெடுக்கப்பட்ட” மக்களின் பிடியிலிருந்து மூவரும் தப்பித்து விட்டார்கள். சுதந்திரம் அவர்கள் முன்னால் தெரிந்தது.

###

https://telegram.me/aedahamlibrary

பழிவாங்கும் தேவதைகள்

இரவு முழுவதும் கரடுமுரடான பாதையில் பயணம் செய்தார்கள் அந்த மூவரும். பல தடவைகள் அவர்கள் பாதை மாறி வந்து விட்டனர். இருப்பினும் ஹோப்புக்கு மலைப்பாதைகள் பற்றி நன்கு தெரிந்திருந்ததால் தவறிய பாதையிலிருந்து மீண்டும் சரியான பாதைக்கு வந்து விட்டார்கள்.

பொழுது புலர்ந்தது! காலைக் காட்சி மிகவும் ரம்யமாக இருந்தாலும் அதில் கொடூரமும் கலந்திருந்தது. பனி படர்ந்த மலைகள் நாலாபுறங்களிலும் தெரிந்தன. எங்கு பார்த்தாலும் பாறைகள்; கிடுகிடுவென்று கீழிறங்கும் பள்ளத்தாக்கு; ஆழம் மிகவும் அதிகம். எங்கு நோக்கினும் பைன் மரங்கள் தலைக்கு மேல் தெரிந்தன. வேகமாகக் காற்றடித்தால் போதும்; அவர்கள் கீழே விழுந்து விடுவார்கள். அவர்களுக்கிருந்த அச்சம் ஒரு மாயை அல்ல; அது நிஜமான அச்சம்தான்.பயணம் செய்து கொண்டிருந்த போதே இடியோசையுடன் ஒரு பாறை உருண்டு வந்து கீழே விழுந்தது. அதைப் பார்த்து குதிரைகள் மிரண்டன.

காலைக் கதிரவன் கீழ்த்திசையில் முழுவதுமாகத் தோன்றியவுடன் மலை உச்சிகள் விளக்கேற்றி வைத்ததுபோல் ஜொலித்தன. அந்தக் காட்சி நமது நாடோடிகளின் நெஞ்சங்களில் ஒரு புதுத் தெம்பை வரவழைத்தது. ஒரு நீரோட்டம் மலையிடுக்கில் தெரிந்தவுடன் அவர்கள் பயணத்தை சற்றே நிறுத்தி குதிரைகளுக்குத் தண்ணீர் காண்பித்தார்கள். அவர்களும் தங்கள் காலை உணவை முடித்துக் கொண்டார்கள். ஃபெர்ரியருக்கும், லூசிக்கும் களைப்பு மேலிட்டது. ஜெஃபர்சன் ஹோப் எதையும் தாங்கிக் கொள்பவன் போல் காணப்பட்டான். “அவர்கள் இப்போது நம்மைத் தேட ஆரம்பித்திருப்பார்கள். எல்லாம் நாம் விரைந்து செல்வதில் தான் இருக்கிறது. கார்சன் நகரை அடைந்து

https://telegram.me/aedahamlibrary

விட்டால் நாம் வாழ்க்கை முழுவதும் ஓய்வெடுத்துக் கொள்ளலாம்" என்றான் ஜெஃபர்சன் ஹோப்.

நாள் முழுவதும் மூவரும் மிகவும் சிரமப்பட்டு ஒருவர் பின் ஒருவராகப் பயணித்தார்கள். அவர்கள் கணிப்பில் அந்த மூவரும் தங்கள் விரோதிகளிடமிருந்து முப்பது மைல்கள் தள்ளியிருந்தார்கள். இரவு நேரத்தில், கவிந்து காணப்படும் பாறைக் கூர் முகடுகளில் உறங்கினார்கள். அந்த இடம் குளிர்க்காற்றிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பைக் கொடுத்தது. மீண்டும் அதிகாலையில் எழுந்து தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அவர்களைப் பின்தொடர்ந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரை யாரும் வரவில்லை. ஜெஃபர்சன் ஹோப் தாங்கள் மூவரும் தங்களின் எதிரிகளிடமிருந்து தப்பி விட்டதாகவே நினைத்தான். எதிரிகளின் இரும்புப் பிடித் தங்களை எப்படி நசுக்கப் போகிறது என்று அவன் நினைத்துப் பார்க்கவில்லை.

பயணத்தின் இரண்டாவது நாள் மதியத்திற்குள் அவர்களுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு விட்டது. தன் துப்பாக்கியைப் பயன்படுத்தி, ஹோப், வேட்டையாடித்தான் உணவுக்கான இறைச்சியைப் பெற வேண்டும். மலைப் பயணங்களில் அது போன்ற முன் அனுபவம் அவனுக்கிருந்தது. மரங்களின் காய்ந்து போன கிளைகளை ஒன்றாகச் சேர்ந்து அதற்குத் தீ மூட்டி மூவரும் குளிர் காய்ந்தார்கள். கடல் மட்டத்திலிருந்து சுமார் ஐயாயிரம் அடி உயரத்தில் அப்போது அவர்கள் இருந்தார்கள். லூசியிடம் விடைபெற்றுக் கொண்டு வேட்டையாடுவதற்கு ஏதாவது வாய்ப்புகள் கிடைக்குமா என்று தக்க இடத்தைத் தேடிக் கொண்டு சென்றான் ஹோப். வெகு தூரம் சென்று திரும்பிப் பார்த்த போது, லூசியும், ஃபெர்ரியரும் குளிர் காய்ந்து கொண்டிருப்பது அவன் கண்களுக்குத் தெரிந்தது. அவர்கள் பயணம் செய்த கோவேறு கழுதையும், குதிரைகளும் நின்று கொண்டிருப்பதையும் அவனால் பார்க்க முடிந்தது. பின் பாறைகள் குறுக்கிட்டதால் லூசியும், ஃபெர்ரியரும், ஹோப்பின் பார்வைக்குப் புலனாகவில்லை.

https://telegram.me/aedahamlibrary

மலையிடுக்குகள் ஒவ்வொன்றாகத் தேடிக் கொண்டே சென்றான் ஹோப். வேட்டையாட எந்த விலங்கும் சிக்கவில்லை. ஆனால் அந்த இடங்களில் கரடிகள் நிறைய இருப்பதை மரப்பட்டைகளின் மீதிருந்த அடையாளங்களை வைத்து அவர் தீர்மானித்தான். இரண்டு அல்லது மூன்று மணி நேரத் தேடலுக்குப் பின் திரும்பிச் சென்று விடலாம் என்று கூட அவன் யோசித்தான். அவன் திருப்பிச் செல்ல எத்தனித்த போது, தன் தலையைத் தூக்கி நிமிர்ந்து பார்த்தான். அவனுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. அவனிருந்த இடத்திலிருந்து முன்னூறு அல்லது நானூறு அடி உயரத்தில், ஒரு பாறை விளிம்பில் இரண்டு நீண்ட கொம்புகளையுடைய ஓர் ஆடு நின்று கொண்டிருந்தது. அந்த ஆடு தனக்குப் பின்னால் ஆட்டு மந்தை ஒன்றைக் காவல் காத்து நின்றிருக்க வேண்டும். அந்த ஆடு ஹோப் இருந்த திசைக்கு எதிர் திசையில் சென்று கொண்டிருந்தது. தன் துப்பாக்கியை ஒரு பாறையின் மீது ஊன்றிக் கொண்டு, குறி பார்த்து அந்த ஆட்டைச் சுட்டான் ஹோப். அந்த விலங்கு துள்ளிக் குதித்து பள்ளத்தில் விழுந்தது.

தூக்குவதற்கு மிகவும் கனமாக இருந்தது அந்த ஆடு. விலா எலும்பிற்கும், தொடை எலும்பிற்கும் இடைப்பட்ட சதைப் பற்றுள்ள பகுதியை பிய்த்து எடுத்துக் கொண்டான் ஹோப். அது போதுமென்று நினைத்து, அதைத் தன் தோள்களில் சுமந்து கொண்டு வந்த வழியே விரைவாகத் திரும்பச் செல்ல முயற்சி செய்தான். அதற்குள் மாலை நேரம் நெருங்கி விட்டது. ஏதோ ஓர் ஆர்வத்தில் மலையிடுக்குகள் ஒவ்வொன்றாகத் தேடிக்கொண்டு சென்றானே தவிர திரும்பி வருவதற்கான பாதையைத் தவற விட்டுவிட்டான். ஒரு மைல் தூரம் வந்த பிறகுதான் அது அவனுக்குத் தெரிந்தது. சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பதற்குள் இரவு நெருங்கி விட்டது. லூசிக்கு உணவு கொண்டு செல்கிறோம் என்ற மன நிறைவு அவனை வழி நடத்திச் சென்றது.

https://telegram.me/aedahamlibrary

லூசியையும், ஃபெர்ரியரையும் எந்த இடத்தில் விட்டுச் சென்றானோ அந்த இடத்தை அடைந்து விட்டான் ஹோப். அவர்களை விட்டுச் சென்று ஐந்து மணி நேரத்திற்கு மேல் ஆகி விட்டது. நின்ற இடத்திலிருந்து வேகமாக ஒலி எழுப்பித் திரும்பவும் மறு ஒலி ஏதாவது வருகிறதா என்று பார்த்தான். மறுபடியும் சற்று வேகமாக ஒலி எழுப்பிப் பார்த்தான். மறுபுறத்திலிருந்து எந்த சப்தமும் வரவில்லை. அவனை அச்சம் கவ்விக்கொண்டது. தான் கொண்டு வந்த மாமிசத் துண்டை கீழே போட்டுவிட்டு வேகமாக ஓடினான்.

ஒரு மூலையில் திரும்பியவுடன், லூசியையும், ஃபெர்ரியரையும் விட்டுச் சென்ற இடத்தைக் கண்டுபிடித்து விட்டான். சுப்பிகளை ஒடித்துத் தீமூட்டிய இடத்தில் இன்னும் அந்தத் தீ கனிந்து கொண்டுதான் இருந்தது. அது முழுமையாக அணையவில்லை. எங்கு பார்த்தாலும் ஒரு மயான அமைதி நிலவியது. தீ மூட்டிய இடத்திற்கு அருகில் எந்த ஒரு உயிரும் தென்படவில்லை. விலங்குகள், மனிதன், மங்கை என்று யாரையும் காண முடியவில்லை. அனைவரும் அங்கிருந்து சென்று விட்டார்கள். தான் இல்லாத சமயத்தில் ஏதோ தீயது நடந்திருக்க வேண்டுமென்று நினைத்தான் ஹோப். சென்றவர்கள் எந்தத் தடயத்தையும் விட்டுச் செல்லவில்லை.

தடுமாறி, திகிலடைந்த ஹோப்பிற்கு தலை சுற்றுவது போல் இருந்தது. தன் துப்பாக்கியின் மீது சாய்ந்து, கீழே விழுவதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டான். தனக்கு வந்த தற்காலிகமான மந்தத் தனத்திலிருந்து, மீண்டும் செயலாற்றும் திறனைப் பெற்றுவிட்டான் ஹோப். அங்கு காணப்பட்ட, குதிரைகளின் குளம்படித் தடங்களிலிருந்து லூசியையும், ஃபெர்ரியரையும் திரும்பவும் சால்ட்லேக் நகருக்குப் பகைவர்கள் கொண்டு சென்று விட்டார்கள் என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டான் ஜெபர்சன் ஹோப். அப்போது அந்த இடத்தில் அவன் கண்ட காட்சி அவன் நரம்புகளை சுண்டி இழுப்பது போல் இருந்தது. அவர்கள் மூவரும் தங்கியிருந்த இடத்திற்குப்

https://telegram.me/aedahamlibrary

பக்கத்தில் செம்மணற் குவியல் ஒன்று தென்பட்டது. கண்டிப்பாக யாரோ கல்லறைக் குழி தோண்டியிருக்கிறார்கள் என்று முடிவு செய்து விட்டான். அவன் அருகே சென்று பார்த்த போது அந்த செம்மணற் குவியலின் மீது ஒரு குச்சி நடப்பட்டிருப்பதைப் பார்த்தான். அந்தக் குச்சியைப் பிளந்து, பிளவுபட்ட இடத்தில் தான் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்த வாசகம் மிகத் தெளிவாகவும், சுருக்கமாகவும் இருந்தது.

ஜான் ஃபெர்ரியர்

சால்ட் லேக் நகரின் முன்னாள் குடிமகன் மறைந்த நாள் ஆகஸ்ட் 4, 1860.

தான் சற்று நேரத்திற்கு முன் அந்த இடத்தில் விட்டு விட்டு வந்த, நல்ல உடல்வாகு கொண்ட ஒரு முதியவர் இறைவனடி சேர்ந்து விட்டார். ஹோப், ஃபெர்ரியரின் கல்லறைக்கருகே வேறு ஏதாவது கல்லறைத் தென்படுகிறதா என்று தேடிப் பார்த்தான். ஆனால் அதற்கான அடையாளம் எதுவும் தென்படவில்லை. லூசி யாரோ ஒருவரின் மகனுடைய அந்தப்புறத்தில் சேர்க்கப்படுவதற்காக அங்கிருந்து கொண்டு செல்லப்பட்டு விட்டாள். தானும், ஃபெர்ரியருடன் சேர்ந்து இறந்து போயிருக்க வேண்டுமென்று விரும்பினான் ஹோப்.

நம்பிக்கையிழந்த ஜெஃபர்சன் மறுபடியும் உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டான். தான் அடைந்திருந்த மனச் சோர்விலிருந்து வெளியே வந்தான். தன் வாழ்க்கை முழுவதையும் பழிவாங்குதலுக்குச் செலவிட வேண்டும் என்று உறுதி பூண்டான். பழிக்குப் பழி என்ற செயலை அவன் இந்தியர்களிடமிருந்து கற்றுக் கொண்டான். அதுவும் தன் கைகளாலேயே விரோதிகளைப் பழிவாங்க வேண்டும் என்று உறுதி பூண்டான். தன் வெளிறிய முகத்துடன் முன்பு வந்த பாதையில் சற்று தூரம் சென்றான். அவன் முன்பு போட்டுவிட்டு வந்த இறைச்சித் துண்டு கீழேயே கிடந்தது. தீமூட்டி அந்த இறைச்சித் துண்டை வாட்டி நன்றாக சமைத்து உண்டான். இப்போது அவனுக்கு இழந்த தெம்பு மீண்டும் வந்துவிட்டது.

https://telegram.me/aedahamlibrary

மீதமிருந்த இறைச்சியை சேமித்து மூட்டை கட்டி வைத்துக் கொண்டான். நடை பயணமாக மலைகளிலிருந்து இறங்கிச் சென்றான். பழி வாங்கிய தேவதைகளைத் தேடிச் சென்றான். வந்த வழியிலேயே திரும்பவும் சென்று சில மணி நேரம் படுத்துறங்கி ஓய்வெடுத்துக் கொண்டான். ஆறாவது நாள் அவன் ‘ஈகிள் கேனான்’ என்ற இடத்தை அடைந்தான். அதுதான் அவர்கள் மூவரும் அதிர்ஷ்டம் கெட்ட அந்தப் பயணத்தைத் தொடங்கிய இடம். ‘புனிதர்களின் இல்லத்தை’ மேலிருந்து கீழ் நோக்கிப் பார்த்தான். அகன்று விரிந்த ‘சால்ட் லேக் நக்ரைப் பார்த்தான். முக்கிய வீதிகளில் கொடிகள் நடப்பட்டிருந்தன. ஏதோ திருவிழா நடக்கப் போகிறது என்று தோன்றியது. அவன் யோசித்துக் கொண்டிருந்த போதே குதிரையின் குளம்படிச் சப்தம் கேட்டது. அவனை நோக்கி ஒரு குதிரை வீரன் வந்து கொண்டிருந்தான். வந்தவன் கௌப்பர். ஜெபர்சன் ஹோப் அந்த மோர்மோனுக்கு முற்காலத்தில் சேவை செய்துள்ளான்.

“நான்தான் ஜெபர்சன் ஹோப்; உனக்கு என்ன ஞாபகம் இருக்கிறதா?” என்று கேட்டான்.

வந்த மோர்மோன் கௌப்பர், ஹோப்பை ஆச்சரியத்துடன் பார்த்தான். கலைந்து போயிருந்த உடையில் ஹோப் என்ற வேட்டைக்காரனை எளிதில் அடையாளம் காண இயலவில்லை. பின் எப்படியோ அவன் காண்பது ஜெபர்சன் ஹோப் தான் என்று கண்டு பிடித்து விட்டான். கண்டுபிடித்தபின் அவனுடைய அதிர்ச்சி பீதியாக மாறியது.

“இங்கு வருவதற்கு உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? உன்னோடு பேசினால் என் உயிர் போய் விடும். உனக்கு எதிராக பிடிவாரண்ட் கொடுத்திருக்கிறார்கள் ‘புனித நால்வர்.’ ஜான் ஃபெர்ரியர் தப்பிச்செல்ல நீ உதவி செய்திருக்கிறாய் என்றான் கௌப்பர்.

“அவர்களைப் பற்றியோ, அவர்கள் கொடுத்திருக்கும் ‘பிடிவாரன்ட்’ பற்றியோ நான் பயப்படவில்லை. நீ

https://telegram.me/aedahamlibrary

முதலில் என் கேள்விகளுக்கு பதில் சொல். நாம் எப்போதுமே நண்பர்களாகத்தான் இருந்துள்ளோம். தயவு செய்து நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல மறுத்துவிடாதே" என்றான் ஜெபர்சன் ஹோப்.

"கேட்க வேண்டியதை விரைவாகக் கேள். இங்கிருக்கும் பாறைகளுக்கும் காதுகள் இருக்கின்றன; மரங்களுக்குக் கண்கள் இருக்கின்றன."

"லூசி ஃபெர்ரியருக்கு என்ன ஆயிற்று?"

"அவளுக்கும் இளைஞன் டிரப்பருக்கும் திருமணம் நடந்து விட்டது. சற்று நிதானமாக இரு. உன் உடலில் உயிர் இல்லையென்று எனக்குத் தெரியும்."

இதைக்கேட்ட ஹோப் அதிர்ச்சியில் உறைந்து போய் விட்டான். "திருமணம் நடந்து விட்டதா?"

நேற்றுதான் திருமணம் நடந்தது. இந்தக் கொடிகள் அதைக் காட்டத்தான் நடப்பட்டுள்ளன. இரு இளைஞர்களும் ஃபெர்ரியரைத் தேடிச் சென்ற குழுவில் இருந்தனர். யார் லூசியை மணப்பது என்று ஸ்டேகர்சனுக்கும், டிரப்பருக்கும் வாக்குவாதம் நடந்தது. ஸ்டேகர்சன் தான் லூசியின் தந்தையைச் சுட்டுக் கொன்றது. அதனால் ஸ்டேகர்சனுக்கு அவளை மணந்து கொள்ள முன்னுரிமை இருந்தது. ஆனால் குழுவின் தீர்மானம் டிரப்பருக்குச் சாதகமாகப் போய்விட்டது. எனவே 'புனிதர்' லூசியை டிரப்பர் மணந்து கொள்ளுமாறு செய்து விட்டார். யாராக இருந்தாலும் அவளை வைத்து வெகுநாட்களுக்குக் காப்பாற்ற முடியாது. ஏனெனில் நான் அவளிடம் சாவின் அறிகுறியைப் பார்த்தேன். அவள் ஒரு பெண் போல் தோன்றவில்லை; பேய் போல் தோன்றினாள்" என்று கூறினான் கௌப்பர் என்ற அந்த மோர்மோன்.

"சரி நான் கிளம்புகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான் ஹோப். அவன் முகம் செதுக்கப்பட்ட பளிங்கு போல் தோற்றமளித்தது. கண்கள் துன்பத்திற்கான அறிகுறிகளைக் காட்டின.

https://telegram.me/aedahamlibrary

“எங்கே போகிறாய்” என்று கௌப்பர் ஹோப்பிடம் கேட்டான். “நான் எங்கேயாவது போகிறேன். அதைப் பற்றி நீ கவலைப்படாதே” என்று சொல்லிவிட்டு, துப்பாக்கியைத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டு, தான் நின்று கொண்டிருந்த பள்ளத்தாக்கிலிருந்து மலையையும், காட்டையும் நோக்கிக் கிளம்பிவிட்டான் ஹோப்.

கௌப்பர் சொன்ன ஆரூடம் வீண் போகவில்லை. தன் தந்தையின் பயங்கர சாவும், தனக்கு பலவந்தமாக செய்து வைக்கப்பட்ட திருமணமும் லூசியைத் தலைதூக்க முடியாமல் செய்துவிட்டன. ஒரு மாதத்திற்குள் லூசி இறந்துவிட்டாள். இளைஞன் டிரப்பர் அவளது மரணத்திற்காக கொஞ்சமும் கவலைப்படவில்லை. லூசியை டிரப்பர் மணந்து கொண்டதே அவள் தந்தை சேர்த்து வைத்திருந்த சொத்துக்களுக்காகத் தான். டிரப்பர் அவள் மறைவுக்கு அழக்கூட இல்லை. அவனுடைய மற்ற மனைவியர்கள் மட்டும், மோர்மோன்களின் வழக்கப்படி, உடல் வைக்கப்பட்டிருந்த பாடையைச் சுற்றி வந்து அழுதார்கள். அவர்கள் அழுது கொண்டிருக்கும் போது கதவைத் தள்ளிக் கொண்டு பயங்கரமான ஒரு மனிதன் உள்ளே நுழைந்தான். சுற்றுச் சூழலால் பாதிக்கப்பட்டவனாகவும், கிழிந்த உடையணிந்தவனாகவும் அவன் காணப்பட்டான். சுற்றி நின்று கொண்டிருந்த மகளிரைத் தள்ளிவிட்டுவிட்டு லூசி ஃபெர்ரியரின் நெற்றியில் மரியாதையுடன் முத்தமிட்டான். பின் லூசியின் விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொண்டு “அவளை இந்த மோதிரத்துடன் புதைக்கக் கூடாது” என்று சொல்லி, அதைக் கையில் எடுத்துக்கொண்டு சென்று விட்டான். லூசி போட்டிருந்த தங்க மோதிரம் தான் அவள் மணப் பெண் என்பதற்கான அடையாளமாக இருந்தது. வந்த மர்ம மனிதன் அதையும் கழற்றி எடுத்துக் கொண்டு போய்விட்டான். அவன் செயலை சுற்றி நின்றவர்கள் விநோதமாகப் பார்த்தார்கள். எச்சரிக்கை செய்வதற்கு முன்பே அந்த மனிதன் கீழே இறங்கிப் போய் விட்டான்.

https://telegram.me/aedahamlibrary

எப்படியும் பழிவாங்கி விட வேண்டும் என்ற எண்ணத்தை மனதிற்குள் உறுதி செய்து கொண்டு, ஜெபர்சன் ஹோப் மலைகளிலேயே சுற்றித் திரிந்தான். விசித்திரமான ஓர் உருவம் பள்ளத்தாக்குகளில் சுற்றித் திரிவதாக ஊர் முழுவதும் ஒரு பேச்சு அடிபட்டது. ஒரு சமயம் ஒரு துப்பாக்கிக் குண்டு ஸ்டேகர்சன் வீட்டு ஜன்னலைத் துளைத்துக் கொண்டு உள்ளே வந்தது. ஸ்டேகர்சன் சற்று விலகியிருந்ததால் தப்பித்துக் கொண்டான். வேறு ஒரு சமயம் டிரப்பர் ஒரு பாராங்கல்லால் நசுக்கப்படுவதிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினான். அந்த இருவரும், இது போன்ற நிகழ்வு-கள் ஏன் ஏற்படுகின்றன என்பதற்கான காரணம் புரியாமல் இல்லை. அவர்கள் மலைப்பகுதிகளில் அடுத்தடுத்து தேடுதல் வேட்டை நடத்தினார்கள். அந்த நிகழ்வுகளுக்குக் காரணமான மனிதனை ஒன்று பிடிப்பது அல்லது கொன்று விடுவது என்பதில் குறியாக இருந்தார்கள். இருவரும் இரவு நேரங்களில் தனியாக எங்கும் செல்வதில்லை; முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டார்கள். தங்கள் வீடுகளுக்குக் காவல் காக்கும் ஆட்களை நியமித்தார்கள். சிறிது காலம் கழித்து, புதிதாக எந்த நிகழ்வும் நடைபெறாததால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைச் சற்றுத் தளர்த்திக் கொண்டார்கள்.

மலைகளில் சுற்றித்திரிந்த ஜெபர்சன் ஹோப்புக்கு, ஸ்டேகர்சன்னையும், டிரப்பரையும் பழிவாங்கிவிட வேண்டும் என்ற எண்ணம் சற்றும் குறையவே இல்லை. என்னதான் அவன் ஓர் இரும்பு மனிதனைப் போல் இருந்தாலும், காட்டில் அவனுக்குச் சரியான உணவு கிடைக்கவில்லை. ஒரு நாயைப் போல் பசியில் இறந்துவிட்டால் அவனது பழிவாங்கும் எண்ணம் என்னாவது? இப்படியே பசியுடன் இருந்தால் அவன் சாகப் போவது திண்ணம். எனவே நிவேதா வெள்ளிச் சுரங்கத்திற்குத் திரும்பச் செல்வது என்றும், தன்னுடைய ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது என்றும், நிறைய பணம் சம்பாதிப்பது என்றும் தீர்மானித்தான்.

https://telegram.me/aedahamlibrary

முதலில் ஓராண்டிற்கு ஒதுங்கியிருப்பது என்று நினைத்தவனை சூழ்நிலை ஐந்து ஆண்டுகள் தனித்திருக்கும்படி செய்து விட்டது. ஆனால் பழி வாங்க வேண்டும் என்ற அவனுக்கிருந்த வன்மம் மட்டும் குறையவேயில்லை. ஜான் ஃபெர்ரியரின் சமாதியில் அவன் எடுத்துக் கொண்ட உறுதிமொழி அவனுள் கனன்றுகொண்டே இருந்தது. தன் உருவத்தை மறைத்துக் கொண்டு, வேறு ஒரு பெயரில் ஜெபர்சன் ஹோப், சால்ட் லேக் நகருக்குத் திரும்பி வந்தான். சில பொதுச் செய்திகள் அவனுக்காகக் காத்திருந்தன. “தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்கள்” (மோர்மோன்கள்) என்பவர்களிடம் பிளவு ஒன்று ஏற்பட்டு விட்டது. ‘மோர்மோன் திருச்சபை’ உறுப்பினர்களுக்குள் பிளவு ஏற்பட்டு, சிலர் பிரிந்து சென்றுவிட்டனர். அவர்கள் திரும்பவும் கிறித்தவ சமயத்திற்கே திரும்பி விட்டார்கள். மோர்மோன்களில் பலர் மதம் மாறி உட்டாவை விட்டுச் சென்று விட்டார்கள். அவர்கள் திரும்பவும் கிறித்தவ மதத்திற்குத் திரும்பி விட்டார்கள். அப்படிச் சென்றவர்களில் டிரப்பரும், ஸ்டேகர்சன்னும் அடங்குவார்கள். டிரப்பர் தன் சொத்துக்களை முன்பே விற்று பணமாக மாற்றிக் கொண்டு விட்டான். ஸ்டேகர்சன் அவனைக் காட்டிலும் ஏழையாகவே இருந்தான். இருவரும் எங்கு சென்றார்கள் என்பது தெரியவில்லை.

எப்படிப்பட்டவனாக இருந்தாலும் இதுபோன்ற ஒரு சூழ்நிலையில் தன்னுடைய பழிவாங்கும் எண்ணத்தை மாற்றிக் கொண்டிருப்பான். ஆனால் ஜெபர்சன் ஹோப் தன்னுடைய வஞ்சம் தீர்க்கும் எண்ணத்தை மாற்றிக் கொள்ளவேயில்லை. அவனுக்கிருந்த சொற்ப வருமானத்தை வைத்துக் கொண்டு தன்னுடைய எதிரிகளை அமெரிக்க தேசம் முழுவதிலும் தேடிக் கொண்டு சென்றான். ஊர் ஊராக அலைந்து திரிந்தான். ஆண்டுகள் ஓடின. அவன் முடி நரைத்து விட்டது. ஆனால் பழிவாங்க வேண்டுமென்ற உணர்ச்சி மட்டும் மறையவே இல்லை. கடைசியில் அவனுக்கு பொறுமைக்கான பரிசு கிடைத்தது. ஓஹியோ மகாணத்தில் உள்ள கிளீவ்லன்ட்

https://telegram.me/aedahamlibrary

என்ற ஊரில் தன்னுடைய எதிரிகள் இருப்பதைக் கண்டுபிடித்து விட்டான், ஜெ்ஃபர்சன் ஹோப். டிரப்பரையும், ஸ்டேகர்சன்னையும் எப்படியும் பழிவாங்கி விடுவது என்று எண்ணிக் கொண்டு தன் இருப்பிடம் வந்து சேர்ந்தான் ஹோப். ஆனால் ஜன்னல் வழியாக எப்படியோ ஹோப்பைப் பார்த்து விட்ட டிரப்பர் எச்சரிக்கையடைந்து விட்டான். தன் சகாவான ஸ்டேகர்சன்னையும் அழைத்துக் கொண்டு கிளீவ்லன்டின் நீதியரசரைச் சென்று பார்த்து ஒரு புகார் மனு அளித்தான். ஸ்டேகர்சன், டிரப்பரின் நேர்முக உதவியாளனாக மாறிவிட்டான். தனது எதிரியான ஹோப், பழைய வன்மத்தின் காரணமாகத் தன்னை கொன்றுவிடத் திட்டமிட்டுள்ளான் என்று டிரப்பர் தன் புகார் மனுவில் தெரிவித்திருந்தான். அன்று மாலையே ஜெ்ஃபர்சன் ஹோப் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டான். அவனுக்கு ஜாமீன் கொடுப்பதற்கு அந்த ஊரில் ஆட்கள் இல்லை. எனவே சில வாரங்கள் வரை ஜெபர்சன் ஹோப் காவலிலேயே இருக்கும்படி நேரிட்டது. கடைசியாக விடுவிக்கப்பட்டவுடன் ஹோப், டிரப்பரின் வீட்டிற்குச் சென்று பார்த்தான். டிரப்பரின் வீட்டில் யாரும் இல்லை. அவனும் அவனது காரியதரிசியுமான ஸ்டேகர்சனும் ஐரோப்பாவுக்குச் சென்று விட்டார்கள் என்று அறிந்தான் ஹோப்.

பழிவாங்கும் திட்டம் ஈடேறவில்லை. ஆனால் வஞ்சம் தீர்க்கும் எண்ணம் ஹோப்பின் மனதில் அப்படியேதான் இருந்தது. ஜெ்ஃபர்சன் ஹோப்பு-க்கு பணம் தேவைப்பட்டது. கிடைத்த வேலையைப் பார்ப்பது என்று தீர்மானித்தான். வந்த வருமானத்தை சேமித்து வைத்துக் கொண்டான். பணம் போதுமான அளவு சேர்ந்தவுடன் ஐரோப்பாவிற்கு அவனும் சுற்றுப் பயணம் மேற்கொண்டான். பணம் தேவைப்பட்டால் கிடைத்த வேலையைச் செய்வான். இப்படியே பல நகரங்களுக்குச் சென்றான். தன் எதிரிகளைத் தேடி செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சென்ற போது எதிரிகள் இருவரும் பாரிஸ் நகருக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார்கள். அங்கு சென்றபோது

https://telegram.me/aedahamlibrary

அவர்கள் இருவரும் டென்மார்க்கின் தலைநகர் கோப்பன் ஹேகன் சென்று விட்டார்கள் என்று தெரிந்து கொண்டான். கடைசியாக டிரப்பரும், ஸ்டேகர்சனும் லண்டன் மாநகரில் இருப்பதை ஜெபர்சன் ஹோப் தெரிந்து கொண்டான். அவனும் லண்டனுக்கு வந்துவிட்டான். அதன் பிறகு நடந்தவற்றை நாம் டாக்டர் வாட்சனின் நினைவுக் குறிப்பிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

###

https://telegram.me/aedahamlibrary

ஜான் வாட்சன், M.D. அவர்களின் நினைவுக் குறிப்பிலிருந்து

எங்கள் கைதியின் எதிர்ப்பு அவனை எந்தவித வன்முறையிலும் ஈடுபடுத்தவில்லை. தன்னால் ஒன்றும் செய்ய இயலாதென்று அவனுக்குத் தெரியும். எனவே அவன் சுமுகமான முறையில் எங்களைப் பார்த்து முறுவலித்தான். நடந்த கைகலப்பில் அவன் எந்த விதத்திலும் காயப்படுத்தவில்லை. “என்னை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறீர்கள் என நினைக்கிறேன்” என்று ஹோம்ஸிடம் கூறினான்.

“என்னுடைய வண்டி காவல் நிலையத்தில் தான் நின்று கொண்டிருக்கிறது. என் கட்டுகளை அவிழ்த்து விட்டால் நான் நடந்துவர சுலபமாக இருக்கும். என்னை நீங்கள் எளிதில் தூக்கிச் செல்ல முடியாது” என்று அவன் மேலும் கூறினான்.

கிரக்சனும், லெஸ்ட்ரேட்டும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கட்டுகளை அவிழ்த்துவிடுவதென்பது ஒரு தைரியமான முடிவாக இருக்குமோ என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் ஹோம்ஸ் கைதியின் சொற்களை நம்பினார். அவனுடைய கணுக்கால்களில் ஒரு துண்டால் போடப்பட்டிருந்த கட்டுகளை அவிழ்த்துவிட்டார். அவன் எழுந்து நிமிர்ந்து நின்று கொண்டான். தான் மீண்டும் சுதந்திரமாக இருப்பதைப் போல் உணர்ந்தான். என்னைப் பொருத்தவரை அவன் வலிமையுள்ளவனாகத் தான் தெரிந்தான். அவன் முகம் மட்டும் சூரிய ஒளியால் கருகியிருந்தது.

“காவல் துறைத் தலைவர் பதவி ஏதாவது, காலியாக இருந்தால் அதற்குத் தகுந்த மனிதர் நீங்கள் தான்” என்று ஷெர்லக் ஹோம்ஸ்&ஸை பார்த்துக் கூறினான் ஜெபர்சன் ஹோப், என்ற அந்தக் கைதி.

கிரக்சனையும், லெஸ்ட்ரேட்டையும் பார்த்து “நீங்களும் என்னோடு வாருங்கள்” என்றார் ஹோம்ஸ்.

https://telegram.me/aedahamlibrary

“நான் வண்டியை ஓட்டி வருகிறேன்” என்றார் லெஸ்ட்ரேட்.

“நல்லது. கிரக்சன் என்னோடு வண்டியில் அமர்ந்து கொள்ளட்டும். டாக்டர் நீங்களும் தான். இந்த வழக்கு தொடர்பாக நீங்கள் மிகவும் ஆர்வம் காட்டி வந்திருக்கிறீர்கள்” என்றார் ஹோம்ஸ். நான் மகிழ்ச்சியுடன் காவல் நிலையத்திற்கு வர ஒப்புக் கொண்டேன். எங்கள் கைதி தப்பிச் செல்வதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை. எங்களுடன் வந்து அவனுடைய வண்டியில் ஏறிக் கொண்டான். நான், கிரக்சன், ஹோம்ஸ் ஆகிய மூவரும் ஏறிக் கொண்ட பின் லெஸ்ட்ரேட் வண்டியை ஓட்டினார். வந்து சேர வேண்டிய இடத்திற்கு, வெகு விரைவாக எங்கள் வண்டி வந்துவிட்டது. நாங்கள் காவல் நிலையத்தில் இருந்த ஓர் அறைக்குச் சென்றோம். ஒரு காவல் ஆய்வாளர் கைதியின் பெயர், கொலையுண்ட நபரின் பெயர் போன்றவற்றைக் குறித்துக் கொண்டார். காவல் ஆய்வாளர் தன் வெண்நிற முகத்தில், எந்த உணர்ச்சியையும் காட்டாமல், தன் போக்கிற்குச் செயல்பட்டார். “கைதி இன்னும் ஒரு வார காலத்திற்குள் குற்றவியல் நடுவர் முன் நிறுத்தப்படுவார்” என்று கூறிய காவல் ஆய்வாளர், நாங்கள் பிடித்து வந்த கைதியிடம், “திரு. ஜெபர்சன் ஹோப் நீங்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். ஆனால் நீங்கள் கூறப்போகும் வார்த்தைகள் பின்னர் உங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாம்” என்று கூறினார்.

“நான் நிறைய விஷயங்களைக் கூற விரும்புகிறேன்” என்று தன் பேச்சை ஆரம்பித்த ஹோப், “கனவான்களே, உங்கள் அனைவருக்கும் நான் நடந்தவை அனைத்தையும் கூற விரும்புகிறேன்” என்றான்.

“விசாரணையின் போது அதை வைத்துக் கொள்ளலாம்” என்றார் காவல் ஆய்வாளர்.

“நான் விசாரிக்கப்படாமலேயே இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. நீங்கள் அதிர்ச்சியடையலாம். நான்

https://telegram.me/aedahamlibrary

தற்கொலை செய்து கொள்வதைப் பற்றிக் குறிப்பிடவில்லை” என்று சொன்ன ஹோப் என்னைப் பார்த்து “நீங்கள் ஒரு மருத்துவர் தானே?” என்று கேட்டான்.

“ஆம் நான் ஒரு மருத்துவர்தான்” என்று பதிலளித்தேன். “அப்படியென்றால் என் மார்பில் கை வைத்துப் பாருங்கள்” என்றான் ஜெபர்சன் ஹோப்.

“நான் அவன் கூறியபடியே செய்தேன். அவன் மார்பினுள் ஒரு எந்திரம் வேலை செய்வது போன்ற ஒரு வேகம் தெரிந்தது. அமைதியான அந்தச் சூழலில் ஒரு “ஹம்மிங்” ஒலியை என்னால் கேட்க முடிந்தது.

“உனக்கு அயோர்டிக் அன்நூரிசம் இருக்கிறது” என்றேன் நான்.

“அப்படித்தான் எல்லோரும் சொல்கிறார்கள். நான் சென்ற வாரம் ஒரு மருத்துவரைச் சென்று சந்தித்தேன். எந்த நிமிடத்திலும் உன் இரத்தக் குழாய் வெடித்துவிடும் அபாயம் இருக்கிறது; நீண்ட நாட்கள் உன்னால் தாக்குப் பிடிக்க முடியாது” என்றார் என்னை பரிசோதித்த மருத்துவர். அதிகமாக வெளியில் அலைந்ததாலும், போதுமான ஆகாரம் இல்லாததாலும், குறிப்பாக சால்ட்லேக் நகரின் மலைகளில் சுற்றித் திரிந்ததாலும் தான் இந்த நோய் எனக்கு வந்தது. நான் என் வேலையைச் செய்துவிட்டேன். ஆனால் நான் ஏன் செய்தேன் என்பதைத் தெளிவு படுத்திவிட வேண்டும். மற்றவர்கள் என்னை ஒரு சாதாரண அயோக்கியன் என்று நினைத்துவிடக் கூடாது” என்றான் ஹோப்.

காவல் துறை ஆய்வாளரும், மற்ற இரு துப்பறியும் நிபுணர்களும், கைதியை மேற்கொண்டு பேச அனுமதிப்பது பற்றி தங்களுக்குள் விவாதித்தனர்.

“டாக்டர்! இந்தக் கைதிக்கு உடனடியாக ஏதாவது ஆபத்து ஏற்படலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?” என்று என்னைப் பார்த்துக் கேட்டார் காவல் ஆய்வாளர்.

“கண்டிப்பாக; அப்படி ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் நிறைய இருக்கின்றன” என்றேன் நான்.

https://telegram.me/aedahamlibrary

“அப்படியென்றால், நீதியை நிலைநாட்டும் பொருட்டு இந்தக் கைதியின் வாக்கு மூலத்தை நாம் பதிவு செய்தே ஆக வேண்டும்” என்றார் காவல் ஆய்வாளர். “நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லலாம்; ஆனால் நான் உங்களை எச்சரிக்கிறேன்; உங்கள் வாக்கு மூலம் பின்னர் உங்களுக்கு எதிராகக் கூடத் திரும்பலாம்” என்றார் ஜெபர்சன் ஹோப்பிடம்.

“சற்று அமர்ந்துகொள்ள என்னை அனுமதியுங்கள்” என்று சொன்ன ஹோப் தன் பேச்சை மேலும் தொடர்ந்தான். “எனக்கு வந்திருக்கும் அன்நூரிசம் என்ற இந்த நோயால் நான் எளிதில் களைப்படைந்து விடுகிறேன். நான் சாவின் விளிப்பில் இருக்கிறேன்.

நான் பொய் சொல்ல விரும்பவில்லை. நான் சொல்லப் போகும் வார்த்தைகள் யாவும் உண்மை. அதை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்வீர்கள் என்பது உங்களைப் பொருத்தது” என்று கூறிய ஜெபர்சன் ஹோப், நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு, தனிச் சிறப்புடைய, குறிப்பிடத்தக்க தன் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தான். மிகவும் நிதானமாகப் பேசினான் ஹோப். அவன் சொன்னதை ஒன்று விடாமல் லெஸ்ட்ரேட் அப்படியே அவர் நோட்டுப் புத்தகத்தில் பதிவு செய்தார். அவர் பதிவு செய்வதை நான் அருகிலிருந்து பார்த்தேன்.

“டிரப்பரையும், ஸ்டேகர்சன்&னையும் நான் ஏன் வெறுத்தேன் என்பது இப்போது முக்கியமல்ல. அந்த இருவரும் ஜான்ஃபெர்ரியர், லூசி ஃபெர்ரியர் என்ற இருவரின் மரணத்திற்குக் காரணமானவர்கள் என்பதுதான் முக்கியம். தந்தை & மகள் என்ற இருவரின் மரணத்திற்கும் அவர்களே காரணம். எனவே டிரப்பர், ஸ்டேகர்சன் ஆகிய இருவரும் இப்பூமியில் வாழும் உரிமையை இழந்துவிட்டார்கள். எந்த நீதிமன்றத்திலும் அவர்கள் செய்த கொலைக்கான தண்டனையை வாங்கித் தர என்னால் முடியவில்லை. அவர்கள் தீங்கிழைத்தார்கள். எனவே நானே விசாரணை செய்யும் ஜூரியாகவும், நீதிபதியாகவும், தண்டனையை

https://telegram.me/aedahamlibrary

செயல்படுத்துபவனாகவும் இருக்கும்படி நேரிட்டது. நீங்கள் மனிதர்களாக இருந்தால், நீங்கள் நானிருக்கும் இடத்தில் இருந்தால் அப்படித்தான் செயல்பட்டிருப்பீர்கள்."

"அந்தப் பெண் லூசியை இருபது ஆண்டுகளுக்கு முன்பே நான் மணந்திருக்க வேண்டும். அவள் டிரப்பரை மணந்து கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டாள். டிரப்பரால் அவள் இதயம் சுக்குநூறாக நொறுங்கிப் போய்விட்டது. லூசியின் இறந்த உடலிலிருந்து, அவள் போட்டிருந்த திருமண மோதிரத்தை நான் தான் கழற்றிச் சென்றேன். டிரப்பரின் கண்கள் அவன் சாவதற்கு முன்பாக அந்த மோதிரத்தைப் பார்க்க வேண்டும். தான் செய்த குற்றத்திற்காகத் தான் அவன் தண்டிக்கப்படுகிறான் என்பதை அவன் எண்ணிக் கொண்டே சாக வேண்டும் என்பதுதான் என் நோக்கம். அந்த மோதிரத்தை நான் என்னிடம் வைத்துக் கொண்டு, அந்த இருவருக்காகவும் நான் இரண்டு கண்டங்களைச் சுற்றி வந்தேன். என்னைக் களைப்படையச் செய்ய வேண்டுமென்று அந்த இருவரும் நினைத்தார்கள். ஆனால் அது அவர்களால் முடியவில்லை. நாளை நான் இறந்தால் நிம்மதியாக இறப்பேன். என் பணியை நல்ல முறையில் செய்து முடித்துவிட்ட திருப்தியில் இறப்பேன். அவர்கள் இருவரும் மடிந்து விட்டார்கள். அதுவும் என் கைகளாலேயே அவர்கள் மடிந்துவிட்டார்கள். வேறு ஒன்றும் இனி நான் செய்வதற்கில்லை."

"அவர்கள் பணம் படைத்தவர்கள். நான் ஏழை. அவர்களைப் பின்தொடர்ந்து செல்வது எனக்கு அவ்வளவு எளிமையாக இல்லை. நான் லண்டன் மாநகர் வந்து சேர்ந்த போது என் சட்டைப் பையில் சல்லிக் காசு கூட இல்லை. நான் வேலை பார்த்து தான் என் பிழைப்பை ஓட்ட வேண்டும் என்ற நிலை. வண்டி ஓட்டுவதும், குதிரை சவாரி செய்வதும் எனக்கு இயற்கையாகவே பழகிப் போன தொழில்கள். எனவே இங்கு வந்தவுடன் வண்டி உரிமையாளர்களின் அலுவலகம் சென்று ஒரு மனு கொடுத்தேன். எனக்கு வேலை கிடைத்தது. ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட தொகையை வண்டி

https://telegram.me/aedahamlibrary

உரிமையாளருக்குக் கொடுத்துவிட வேண்டும். மீதமிருப்பதை நான் வைத்துக் கொள்ளலாம். அதிகமாக ஒன்றும் மீராது. எப்படியோ இருப்பதை வைத்துக் கொண்டு காலம் தள்ளினேன். லண்டனில் எந்த இடம் எங்கேயிருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதுதான் கடினம்; மிகவும் குழப்பமாக இருக்கும். நான் சென்ற இடங்களிலேயே அதிகக் குழப்பம் வாய்ந்த நகரம் லண்டன் மாநகரம்தான். எனக்கென்று ஒரு வரைபடம் வைத்துக் கொண்டேன். முக்கியமான தங்கும் விடுதிகள், பிரதான சாலைகள் போன்றவற்றை விசாரித்துத் தெரிந்துகொண்டேன். பின் காலம் தள்ளுவது எளிமையாக இருந்தது."

"சிறிது காலம் சென்றபின் என் எதிரிகள் எங்கேயிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன். விசாரித்து, விசாரித்து அவர்கள் தங்கியிருக்கும் விலாசத்தைத் தெரிந்து கொண்டு விட்டேன். அவர்கள் கேம்பர்வெல் என்ற இடத்தில், ஆற்றங்கரையருகே ஒரு தங்கும் விடுதியில் இருந்து வந்தார்கள். அவர்களின் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்ட பிறகு என்னை நான் மாற்றிக் கொண்டேன். அவர்கள் என்னை அடையாளம் கண்டுகொள்ளாமல் இருப்பதற்காக தாடி வைத்துக் கொண்டேன். மறுபடியும் அவர்கள் என்னிடமிருந்து தப்பித்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தேன்."

"லண்டன் நகரில் அவர்கள் சென்ற இடங்களுக்கெல்லாம், நானும் சென்றேன். சில நேரங்களில் நடந்து சென்றேன்; சில நேரங்களில் வண்டியில் சென்றேன். வண்டியில் செல்வதையே நான் தேர்ந்தெடுத்தேன். ஏனெனில் அவர்கள் என்னை விட்டு எங்கும் சென்று விட முடியாது. காலைநேரத்திலோ, அல்லது இரவு வெகுநேரம் கழித்தோ தான் நான் என் எஜமானரிடமிருந்து வருமானத்தைப் பெற முடியும். அதை ஒரு பொருட்டாக நான் எடுத்துக் கொள்ள வில்லை. என் எதிரிகள் என் கண்பார்வையில் இருக்க வேண்டும் என்பதே என் நோக்கம். அதுவே எனக்குப் போதுமானது. என் எதிரிகள் கபடம் நிறைந்தவர்கள். யாராவது தங்களைப் பின்தொடர்ந்து வரக் கூடும்

https://telegram.me/aedahamlibrary

என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். ஆகவே எங்கு சென்றாலும் இருவரும் சேர்ந்தே செல்வார்கள். இரண்டு வாரங்களாக நான் பின்தொடர்ந்து சென்று பார்த்ததில் அவர்கள் இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியவே இல்லை. டிரப்பர் பாதிநேரம் குடிபோதையில் தான் இருப்பான். ஆனால் ஸ்டேகர்சன் எப்போதும் விழித்திருப்பான். தக்க சமயத்தை எதிர்பார்த்து நான் காத்திருந்தேன். அந்த நேரம் வந்துவிட்டது என்பதை உணர்ந்தேன். நான் பயந்தது ஒன்றுக்காக மட்டும் தான். அன்நூரிசத்தினால் என் இரத்தக் குழாய் வெடித்து நான் திடீரென்று இறந்துவிடுவேனோ என்று பயந்தேன்."

"ஒரு நாள் நான் வண்டியில் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றபோது டார்குவே டெர்ரஸ் என்ற இடத்தில் அவர்கள் தங்கியிருந்த வீட்டு வாயிலில் வண்டி ஒன்று அவர்களுக்காகக் காத்திருப்பதைப் பார்த்தேன். சில பெட்டிகள் வண்டியில் ஏற்றப்பட்டன; உடன் டிரப்பரும் ஸ்டேகர்சனும் வந்தார்கள். வண்டி புறப்பட்டுச் சென்றது. நான் என் குதிரையை விரட்டினேன். அவர்கள் என் கண்பார்வையிலிருந்து விலகிப் போய்விடக் கூடாது என்பதற்காக. அவர்கள் இருக்குமிடத்திலிருந்து வேறு எங்கோ இடம் பெயர்கிறார்கள் என்று நினைத்தேன். இருவரும் யூஸ்ட்டன் தொடர் வண்டி நிலையத்தில் இறங்கினார்கள். நான் பையனிடம் என் குதிரையைப் பார்த்துக் கொள்ளும்படிச் சொல்லிவிட்டு, யூஸ்ட்டன் தொடர் வண்டி நிலையத்திற்குள் நுழைந்தேன். நடைமேடைக்கும் சென்றுவிட்டேன். லிவர்பூல் செல்லும் தொடர்வண்டி எப்போது வருமென்று அவர்கள் விசாரித்தார்கள். அங்கிருந்த அலுவலர் ஒருவர், ஒரு வண்டி புறப்பட்டுச் சென்று விட்டதாகவும், அடுத்த வண்டி வருவதற்கு சில மணி நேரம் ஆகும் என்றும் கூறினார். ஸ்டேகர்சனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. ஆனால் டிரப்பருக்கு அது மகிழ்ச்சியளிக்கும் விஷயமாக இருந்தது. அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள மிகவும் அருகில் சென்றேன்.

https://telegram.me/aedahamlibrary

டிரப்பர் தனக்கு நகரில் வேறு முக்கியமான அலுவல் ஒன்று இருப்பதாகவும், தான் வரும்வரை ஸ்டேகர்சன் தனக்காகக் காத்திருக்க வேண்டும் என்றும் கூறினான். ஸ்டேகர்சன் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தான். எங்கு சென்றாலும் இருவரும் ஒன்றாகத்தான் செல்ல வேண்டும் என்று டிரப்பருக்கு நினைவூட்டினான். ஆனால் டிரப்பர், விஷயம் மிகவும் நுட்பமானது என்றும், தான் தனியாகத்தான் செல்லவேண்டுமென்றும் கூறினாள். அதற்கு ஸ்டேகர்சன் 'நான் உன்னிடம் சம்பளம் வாங்கும் ஓர் ஊழியன் தான். உன்னை அதிகாரம் செய்யும் உரிமை எனக்கில்லை. கடைசி தொடர் வண்டியையும் நீ விட்டுவிட்டால் 'ஷேலிடே' தனியார் தங்கும் விடுதியில் நான் இருப்பேன்; அங்கு வந்து என்னுடன் சேர்ந்து கொள்' என்று கூறினான். நான் 11 மணிக்குள் வந்து விடுவேன் என்று கூறிவிட்டு, தொடர்வண்டி நிலையத்தை விட்டுச் சென்றுவிட்டான்."

"நான் எதற்காகக் காத்திருந்தேனோ அந்த நேரம் இப்போது வந்துவிட்டது. எதிரிகள் இருவரும் ஒன்றாக இருந்தால், ஒருவரை ஒருவர் காத்துக் கொள்ளலாம். நான் முன்பே திட்டமிட்டு விட்டேன். எல்லாம் அதன்படிதான் நடந்தது. டிரப்பர் செய்த பாவம் அவனுக்கு அதற்கான தண்டனையைக் கொடுத்துவிட்டது. தற்செயலாக, பிரிக்ஸ்டன் சாலையில் வாடகைக்கு வீடு தேடிவந்த ஒருவர் தவறுதலாக அவர் வீட்டுச் சாவியை என் குதிரை வண்டியில் விட்டுச் சென்றுவிட்டார். அன்றைக்கே மாலை வேளையில் என்னைத் தேடி வந்து சாவியைத் திரும்பப் பெற்றுச் சென்று விட்டார். ஆனால் எனக்குக் கிடைத்த கால அவகாசத்தில் அவர் விட்டுச் சென்ற சாவியைப் போன்றே ஒரு கள்ளச் சாவியைத் தயாரித்து வைத்துக் கொண்டேன். பிரிக்ஸ்டன் சாலையில் காலியாக உள்ள ஒரு வீட்டினுள் நுழையும் ஒரு சந்தர்ப்பத்தை நான் ஏற்படுத்திக் கொண்டேன். அந்த வீட்டினுள் டிரப்பரை எப்படி நுழைய வைப்பது என்பதுதான் நான் யோசிக்க வேண்டியதாக இருந்தது."

https://telegram.me/aedahamlibrary

“யூஸ்ட்டன் தொடர் வண்டி நிலையத்திலிருந்து வெளியே வந்த டிரப்பர் ஒரு சாராயக் கடையில் நுழைந்தான். கடைசியாக நுழைந்த சாராயக் கடையில் ஓர் அரை மணி நேரம் இருந்தான்; தள்ளாடிக் கொண்டே வெளியே வந்தான். ஒரு இரு சக்கர வாடகை வண்டி என் முன்னால் இருந்தது. டிரப்பர் அந்த வண்டியைக் கூப்பிட்டான். நான் என்னுடைய குதிரையை அவன் அமர்த்தியிருக்கும் வண்டிக்கு அருகாமையில், ஒரு கஜ தூரத்தில் இருக்குமாறு பார்த்துக் கொண்டேன். வாட்டர்லூ பாலம் வழியாக, பல வீதிகளைத் தாண்டி ‘டார்க்யூ டெர்ரஸ்’ என்ற இடத்தில், அதாவது டிரப்பர் முன்பு இருந்த இடத்திலேயே வண்டி நின்றது. அதே இடத்திற்குத் திரும்பிப் போக வேண்டிய நோக்கம் என்ன வென்று எனக்குப் புரியவில்லை. நான் என் வண்டியை சுமார் ஒரு நூறு கஜ தூரத்தில் நிறுத்திக் கொண்டேன். டிரப்பர் தான் வந்த வண்டியிலிருந்து இறங்கி உள்ளே சென்றான். அவன் வந்த வண்டி சென்றுவிட்டது.”

இந்த இடத்தில் ஜெபர்சன் ஹோப் தன் பேச்சை நிறுத்தி விட்டு, குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டான். நான் அவனுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்தேன். “இப்போது நன்றாக இருக்கிறது” என்று சொல்லி மறுபடியும் தன் வாக்குமூலத்தைத் தொடர்ந்தான் ஹோப்.

“நான் ஒரு கால் மணி நேரம் காத்திருந்தேன். உள்ளேயிருந்து யாரோ சண்டை போடும் சப்தம் கேட்டது. அடுத்த நொடி கதவைத் திறந்து கொண்டு இரண்டு மனிதர்கள் வெளியே வந்தார்கள். ஒருவன் டிரப்பர்; மற்றொருவர் ஓர் இளைஞர். கையில் ஒரு குண்டாந்தடி வைத்திருந்தார். டிரப்பரை நோக்கி அந்தக் குண்டாந்தடியை அசைத்தபடியே அவர் வேகமாகக் கத்தினார். ‘வேட்டை நாயே! ஒரு நேர்மையான பெண்ணிடம் இப்படியா நடந்து கொள்வது?’ என்று கூச்சல் போட்டார். டிரப்பர் சாலையில் இறங்கி ஓடி வந்து விட்டான். இல்லாவிட்டால் அந்த இளைஞர் டிரப்பரை அடித்துச் சாய்த்திருப்பார். டிரப்பர் தெரு முனைவரை ஓடி வந்தான். என் குதிரை வண்டி நிற்பதைப் பார்த்து அதில்

https://telegram.me/aedahamlibrary

தாவி ஏறிக் கொண்டான். "ஹேலிடே தனியார் தங்கும் விடுதிக்கு வண்டியை ஓட்டு" என்று கூறினான்.

அவன் என் வண்டிக்குள் ஏறி அமர்ந்ததும் என் மனம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது; என் அன்னூரிசம் அதற்குள் என்னை ஒன்றும் செய்யாமல் இருக்க வேண்டுமே, என்ற கவலையும் எனக்குள் இருந்தது. நான் வண்டியை மெதுவாக ஓட்டினேன். என் திட்டத்தை எப்படித் திறம்பட நடத்துவது என்று யோசித்தேன். நான் அவனை சந்தடியற்ற ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்வது என்று தீர்மானித்தேன். அதற்குள் பிரச்சனைக்கு அவனே ஒரு முடிவைத் தந்தான். அவனுக்கிருந்த குடிப் பைத்தியம் ஒரு ஜின் விற்கும் கடைக்கு முன்னால் என் வண்டியை நிற்கச் செய்தது-. என்னைக் காத்திருக்குமாறு கூறிவிட்டு அவன் ஜின் கடைக்குள் நுழைந்தான். கடை மூடும் வரை அங்கேயே இருந்தான். அவன் வெளியே வரும் போது தள்ளாடிக் கொண்டே வந்தான். அப்போதே என் காரியம் நிறைவேறிவிட்டது என்று எனக்குத் தெரியும்."

"அவனைக் குத்தி கொலை செய்து விடுவேன் என்று நீங்கள் கற்பனை செய்து விடாதீர்கள். அப்படிச் செய்தால் அது முரட்டுத்தனமான நீதியாகிவிடும். அப்படி எதுவும் அவனை செய்துவிடக் கூடாது என்று முடிவு செய்தேன். அவனுக்கும் வாழ ஒரு சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும். நான் அமெரிக்காவில் சுற்றித் திரிந்த போது போர்வீரர்கள் தங்குமிடங்களுக்குச் சென்றிருக்கிறேன். அதுபோன்ற ஒரு சந்தர்ப்பத்தில் யார்க் கல்லூரியின் சோதனைச் சாலையில் காவலர், ஓட்டுனர் என்று யாரும் இல்லாத சமயம் பார்த்து நான் உள்ளே நுழைந்தேன். அன்று பேராசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ஆல்கலாய்ட் பற்றியும், தென் அமெரிக்கப் பூர்வ குடிகள் பயன்படுத்தும் அம்பு விஷம் பற்றியும் அவர் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த விஷங்கள் உடனடியாக மரணத்தை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார். அந்தக் கொடிய நஞ்சு வைக்கப்பட்டிருந்த சீசாவை நான் தள்ளிக் கொண்டு வந்து விட்டேன். மருந்துகள் தயாரிப்பது பற்றி

https://telegram.me/aedahamlibrary

எனக்கு ஓரளவு நன்றாகத் தெரியும். தண்ணீரில் கரையக் கூடிய நஞ்சு கலந்த ஒரு மாத்திரையைத் தயார் செய்தேன். கூடவே நஞ்சு கலக்காத ஒரு மாத்திரையையும் தயார் செய்தேன். இரண்டு மாத்திரைகளையும் ஒரு சேர ஒரு டப்பாவில் வைத்துக் கொண்டேன். அந்த டப்பாவை நான் எங்கு சென்றாலும் எடுத்துச் செல்வேன். என்னுடைய விரோதிகள் இந்த மாத்திரைகளில் ஒன்றை சாப்பிட வேண்டும். மற்றதை நான் சாப்பிடுவேன். ஒன்று என் விரோதி சாக வேண்டும்; அல்லது நான் சாக வேண்டும். மாத்திரைகளைப் பயன்படுத்தும் நேரம் வந்து விட்டது என்பதை உணர்ந்தேன்.”

“இரவு ஒரு மணிக்கு மேல் ஆகிவிட்டது. நன்றாக மழை பெய்து கொண்டிருந்தது. நான் இருபது வருடங்களுக்கு மேலாகக் காத்துக் கொண்டிருந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தேன். என்னுடைய இடத்தில் நீங்கள் இருந்து பார்த்தால் தான் அது உங்களுக்குப் புரியும். என் நரம்புகளை ஸ்திரப்படுத்திக் கொள்ள ஒரு சுருட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டேன். நான் வண்டியோட்டிக் கொண்டு சென்ற போது முதியவர் ஜான் ஃபெர்ரியரும், என் மனத்திற்கினிய லூசியும் இருட்டில் என்னைப் பார்த்து புன்னகை பூத்தார்கள். அவர்கள் இருவரும் என் குதிரைக்கு அருகில் பக்கத்திற்கு ஒருவராக கூடவே வந்தார்கள். பிரிக்ஸ்டன் சாலையில் இருக்கும் அந்த குறிப்பிட்ட வீட்டின் அருகில் வண்டியை நிறுத்தினேன்.”

“சாலையில் ஒரு ஈ, காக்கை கூட இல்லை; வெறிச்சோடிக் கிடந்தது. வண்டியின் சாளரம் வழியாக நான் உள்ளே பார்த்தபோது டிரப்பர் குடிபோதையில் தூங்கிக் கொண்டிருந்தான். நான் அவன் கைகளைப் பிடித்துக் குலுக்கி “வெளியே செல்வதற்கான நேரம் வந்துவிட்டது” என்றேன்.

“சரி வண்டிக்காரரே” என்று சொல்லி அவன் வண்டியை விட்டுக் கீழே இறங்கினான்.

https://telegram.me/aedahamlibrary

"அவன் சொன்ன தங்கும் விடுதிக்கு, நான் அவனை அழைத்து வந்து விட்டதாக அவன் எண்ணியிருக்க வேண்டும். எந்தப் பேச்சும் பேசாமல் அவன் வீட்டுத் தோட்டத்தில் இறங்கி நடக்க ஆரம்பித்தான். நான் அவன் அருகில் சென்றேன். அவன் நிதானத்தில் இல்லை. என்னுடைய துணை அவனுக்குத் தேவைப்பட்டது. நாங்கள் வீட்டின் கதவருகே வந்தபோது, நான் கதவைத் திறந்து டிரப்பரை முன் அறைக்கு வரும்படிச் செய்தேன். நான் உறுதியாகச் சொல்கிறேன்; நாங்கள் வரும் வரை தந்தையும் மகளும் எங்கள் கூடவே வந்தார்கள்; எங்கள் முன்னால் நடந்து சென்றார்கள்.

"மிகவும் இருட்டாக இருக்கிறது" என்று டிரப்பர் கூறினான்.

"வெளிச்சம் இப்போது வந்துவிடும்" என்று கூறிய நான் கையோடு கொண்டு வந்திருந்த மெழுகுத்திரியை ஏற்றினேன்.

"யூனோக் டிரப்பர்" இப்போது என்னை நன்றாகப் பார் என்று கூறி விளக்கை என் முகத்திற்கு அருகில் கொண்டு வந்தேன். "நான் யார் என்று தெரிகிறதா-?" என்று அவனைக் கேட்டேன்.

"என்னை அவன் உற்றுப் பார்த்தான். திகில் அவனைக் கவ்விக் கொண்டது. நான் யார் என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது. அவனுக்குப் பயத்தில் வியர்த்துக் கொட்டியது; பற்கள் தந்தியடித்தன. அந்த சமயத்தில் நான் கதவில் சாய்ந்து கொண்டு உரக்கச் சிரித்தேன். பழிவாங்குதல் இனிப்பாகத் தான் இருக்குமென்று எனக்குத் தெரியும். ஆனால் அதில் இருந்த ஆத்ம திருப்தியை அப்போதுதான் என்னால் உணர முடிந்தது."

"நாயே! சால்ட்லேக் நகரிலிருந்து, செயின் பீட்டர்ஸ்பர்க் வரை உன்னைத் தேடினேன். நீ தப்பி விட்டாய். சுற்றித் திரியும் நம் பிழைப்பு இப்போது ஒரு முடிவுக்கு வந்து விட்டது. நீயோ அல்லது நானோ வரப் போகும் சூரிய உதயத்தைப் பார்க்கப் போவதில்லை. நான் பேசிக் கொண்டிருந்த போதே அவன் என்னை விட்டு விலகி

https://telegram.me/aedahamlibrary

விட்டான். என்னை ஒரு பைத்தியக்காரன் என்று அவன் நினைத்து விட்டான். எனது நாடித் துடிப்பு என்னை எச்சரித்தது. மூக்கு வழியாக இரத்தம் வந்திருக்கா விட்டால், வலிப்பு வந்து நான் இறந்திருப்பேன். மூக்கு வழியே வந்த இரத்தம் என்னைக் காப்பாற்றியது.”

“லூசி ஃபெர்ரியரைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?” என்று அறைக் கதவின் சாவியை அவன் முகத்தருகே ஆட்டிக் கொண்டே டிரப்பரைப் பார்த்துக் கேட்டேன். தண்டனை மெதுவாகத் தான் வரும். இப்போது அது உன்னை விஞ்சி விட்டது. அவன் உதடுகள் துடிப்பதை என்னால் பார்க்க முடிந்தது. அவன் உயிர்ப்பிச்சை கேட்டிருக்கலாம். ஆனால் அது கிடைக்காது என்று அவனுக்குத் தெரியும். -

“நீ என்னை கொலை செய்யப் போகிறாயா?” என்று கேட்டான் டிரப்பர்.

“கொலை என்பதெல்லாம் இல்லை. ஒரு பைத்தியம் பிடித்த நாயை யார் கொல்வார்கள்” என் அன்புக்குரியவனை இழுத்து வந்து உன் அந்தப்புரத்தில் சேர்த்துக் கொண்டாய். அவளுடைய தந்தையைக் கொன்று புதைத்து விட்டாய்” என்றேன் நான்.

“அவளுடைய தந்தையை நான் கொல்லவில்லை” என்று கத்தினான் டிரப்பர்.

“ஆனால் நீ தான் அவளது இதயத்தை உடைத்தது” என்று கூறி என்னுடைய மாத்திரை டப்பாவை அவன் முன்னால் நீட்டினேன். நம்மில் யார் சாகப் போகிறார்கள் என்பதை அந்தக் கடவுளே நிச்சயிக்கட்டும். மாத்திரையில் ஒன்றை எடுத்து சாப்பிடு. ஒரு மாத்திரை வாழ்வுக்குரியது. மற்றது சாவுக்குரியது. நீ மீதம் வைப்பதை நான் சாப்பிடுகிறேன். நீதி இந்தப் புவியில் இருக்கிறதா அல்லது எல்லாம் சந்தர்ப்ப வசம்தானா என்பதைப் பார்த்து விடுவோம்” என்றேன்.

“மன்னித்து விடும்படிக் கூறி அவன் கூப்பாடு போட்டான். ஆனால் நான் என் கத்தியை எடுத்து அவன் குரல் வளை மீது வைத்து அழுத்தினேன். ‘என்னுடைய ஆணையை

https://telegram.me/aedahamlibrary

ஏற்றுக் கொள்' என்று அவனை வற்புறுத்தினேன். அவன் மாத்திரையை எடுத்து விழுங்கி விட்டான். நான் எஞ்சியதை எடுத்துக் கொண்டேன். மாத்திரையை சாப்பிட்டபின் மௌனமாக இருவரும் எதிர் எதிரே நின்றோம்; யார் வாழப் போகிறார்கள், யார் சாகப் போகிறார்கள் என்பதைப் பார்க்க. விஷம் அவன் உடலுக்குள் புகுந்து விட்டது என்பதை அவன் முகம் காட்டிக் கொடுத்தது. அந்தக் காட்சியை என்னால் மறக்க முடியாது. நான் சிரித்தேன். லூசியின் திருமண மோதிரத்தை எடுத்து அவன் கண்களுக்கருகே காட்டினேன். ஆல்கலாய்ட் தன் வேலையைக் காட்டி விட்டது. அவன் கைகளை முறுக்கிக் கொண்டு, கூச்சல் போட்டுத் தடுமாறி தரையில் விழுந்தான். நான் என் கால்களால் அவனைப் புரட்டினேன். அவன் இதயத்தில் கை வைத்துப் பார்த்தேன்; எந்த அசைவும் இல்லை. டிரப்பர் இறந்துவிட்டான்."

"என் மூக்கு வழியாக இரத்தம் கொட்டியது. அதை நான் கண்டு கொள்ளவில்லை. எது என்னை சுவற்றில் எழுத வைத்தது என்று சொல்ல முடியவில்லை. அது காவல் துறையைத் திசை திருப்ப நான் எடுத்த குறும்புத் தனமான முடிவாக இருக்கலாம். நான் அவ்வாறு எழுதியவுடன் என் மனதின் பாரம் குறைந்து விட்டது போல் தோன்றியது. நியூயார்க் நகரில் வாழ்ந்து வந்த ஜெர்மானியர் ஒருவர் 'ஸிகிசிபிணி'- என்ற சொல்லை தன் தலைக்கு மேல் எழுதி வைத்திருந்தது என் நினைவில் நின்றது. நகரில் செயல்பட்டு வரும் இரகசிய சங்கங்களில் ஏதாவது ஒரு சங்கம் தான் அப்படிச் செய்திருக்க வேண்டுமென்று பத்திரிக்கையில் செய்தி வெளியாகி யிருந்தது. நியூயார்க் நகர வாசிகளை வியப்பில் ஆழ்த்திய அந்தச் சொல், லண்டன் நகர வாசிகளையும் ஏன் வியப்பில் ஆழ்த்தக் கூடாது என்று நான் நினைத்தேன். என் விரலை என் சொந்த இரத்தத்தில் தோயத்து, சுவற்றில் ஒரு சௌகரியமான இடத்தில் எழுதினேன். பின்னர் நான் என் வண்டிக்கு வந்து விட்டேன். தெருவில் ஒருவரும் இல்லை. இரவு நேரம் பயங்கரமாகத்தான் இருந்தது. சிறிது

https://telegram.me/aedahamlibrary

தூரம் சென்றபிறகு என் சட்டைப் பையில் கை விட்டுப் பார்த்தேன். அதில் தான் நான் லூசியின் மோதிரத்தை எப்போதும் வைத்திருப்பேன். அது என் சட்டைப் பைக்குள் இல்லை. எனக்குத் தலையில் இடி விழுந்தது போல் இருந்தது-.

அந்த மோதிரம் மட்டும் தான் லூசியின் ஞாபகார்த்தமாக என்னிடம் இருந்த பொருள். டிரப்பரின் உடலைப் புரட்ட நான் குனிந்த சமயத்தில் அது கீழே விழுந்திருக்க வேண்டுமென்று நினைத்தேன். வந்த வழியே என் வண்டியில் திரும்பிச் சென்று, வண்டியை ஒரு பக்கத்துச் சந்தில் நிறுத்திவிட்டு தைரியமாக வீடு வரை வந்துவிட்டேன். அந்த மோதிரத்திற்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிந்தேன். வந்தவன் ஒரு காவல் அலுவலரிடம் மாட்டிக் கொண்டேன். அவரிடமிருந்து தப்பிக்க ஒரு குடிகாரனைப் போல் நடிக்க வேண்டியதாயிற்று.”

“ஈனோக் டிரப்பரின் கதை முடிந்துவிட்டது. அடுத்ததாக நான் ஸ்டேகர்சனின் கதையையும் முடித்து, ஜான் ஃபெர்ரியரின் கடனை அடைக்க வேண்டும். அவன் ஹேலிடே தனியார் தங்கும் விடுதியில் இருக்கிறான் என்று எனக்குத் தெரியும். ஆனால் அவன் வெளியே எங்கும் செல்வதில்லை. டிரப்பர் திரும்பி வராததால் ஸ்டேகர்சன்னுக்கு சந்தேகம் வந்துவிட்டது. அவன் ஒரு தந்திரக்காரன். தங்கியிருக்குமிடத்திலிருந்து வெளியே வராமல் இருந்தால் என்னைத் தவிர்த்து விடலாம் என்று அவன் நினைத்தான். அங்குதான் அவன் தவறிழைத்து விட்டான். அவன் படுக்கையறையின் ஜன்னல் எங்கேயிருக்கிறதென்று நான் கண்டுபிடித்தேன். அடுத்த நாள் அதிகாலையிலேயே அவன் தங்கியிருக்கும் விடுதியின் அறைக்கு நான் சென்று விட்டேன். அவன் தங்கியிருந்த விடுதியின் பின்புறம், கீழே ஓர் ஏணி தரையில் கிடந்தது. விடியற் காலையிலேயே நான் அந்த ஏணியின் துணை கொண்டு, மேலே ஏறி, ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்து ஸ்டேகர்சனை தூக்கத்திலிருந்து எழுப்பினேன். நீண்ட நாட்களுக்கு முன்பு

https://telegram.me/aedahamlibrary

அவன் பறித்துக் கொண்ட ஜான் ஃபெர்ரியரின் உயிருக்கு இன்று பதில் சொல்ல வேண்டுமென்று அவனிடம் கூறினேன். டிரப்பர் எப்படி இறந்தான் என்பதை அவனுக்கு விவரித்து, அவனும் அவனுடைய விருப்பத்திற்கிணங்க ஏதோ ஒரு மாத்திரையை சாப்பிட்டு என்ன நடக்கிறதென்று பார்க்கலாம் என்று கூறினேன். அவன் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்து என் குரல் வளையை நெரித்தான். வேறு வழியின்றி நான் அவன் மார்பில் குத்தும்படி நேரிட்டது. மாத்திரையை அவன் எடுத்துக் கொண்டிருந்தாலும் கடவுள் அவனுக்கு விஷ மாத்திரையைத் தான் கொடுத்திருப்பார். குற்றம் புரிந்த அவன் கரம் விஷத்தைத் தான் அவனுக்கு அடையாளம் காட்டியிருக்கும்.”

“இதற்கு மேல் சொல்வதற்கு ஏதுமில்லை. அதன் பிறகு ஓரிரு நாட்கள் நான் வண்டி ஓட்டினேன். நான் சம்பாதித்து திரும்பவும் அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டும். நான் என் வண்டியை வைத்துக் கொண்டு, குதிரை வண்டிகள் நிற்குமிடத்தில் நின்று கொண்டிருந்தேன். அப்போது கந்தல் ஆடை அணிந்த ஒரு வாலிபன் என்னை அணுகி “ஜெபர்சன் ஹோப் என்பது நீங்கள் தானா? உங்கள் வண்டி 221 ஙி பேக்கர் தெருவில் வசிக்கும் ஒரு கனவானுக்குத் தேவைப்படுகிறது” என்று கூறினான். நான் எந்த சந்தேகமும் படாமல் அந்த இளைஞன் கொடுத்த விலாசத்திற்கு என் வண்டியை ஓட்டிச் சென்றேன். அங்கு தான் இந்த விலங்கு என் கைகளில் மாட்டப்பட்டது. கனவான்களே! இதுதான் என் முழுக் கதை. நீங்கள் என்னை ஒரு கொலைகாரன் என்று அழைக்கலாம். ஆனால் நான் உங்களைப் போன்றே நீதியின் காவலன்” என்று கூறி தன் வாக்கு மூலத்தை முடித்தான் ஜெபர்சன் ஹோப்.

ஹோப்பின் கதை உணர்ச்சி பூர்வமாக இருந்தது. அவன் கதைசொன்ன விதம் எங்கள் மனதில் பதியும்படி இருந்தது. நாங்கள் மௌனமாக அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தோம். தொழில் முறை துப்பறியும் நிபுணர்கள் கூட அவனது ஆர்வமூட்டும் கதையை

https://telegram.me/aedahamlibrary

கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவன் சொன்னதைக் கேட்ட நாங்கள் அனைவரும் அப்படியே அமைதியாக உட்கார்ந்து விட்டோம். லெஸ்ட்ரேட் தன்னுடைய பென்சிலால் கிறுக்குவதை கேட்ட பிறகு தான் எங்கள் மௌனம் கலைந்தது.

“ஒரே ஒரு இடத்தில் மட்டும் எனக்கு ஒரு சிறு சந்தேகம்” என்று ஷெர்லக் ஹோம்ஸ் தன் பேச்சை ஆரம்பித்தார். “மோதிரத்தை வாங்க வந்த, உன்னுடைய சகாவாக நடித்த அந்த மூதாட்டி யார்?”

கைதி ஷெர்லக் ஹோம்ஸ்&ஸைப் பார்த்து வேடிக்கையாகக் கண் சிமிட்டினான். “என்னால் மற்றவர்களுக்குத் துன்பம் வந்துவிடக் கூடாது. நான் உங்கள் விளம்பரத்தை பத்திரிக்கையில் பார்த்தேன். அது மோதிரமாகவும் இருக்கலாம் அல்லது எனக்கு விரிக்கப்பட்ட வலையாகவும் இருக்கலாம். என் நண்பன் எனக்கு உதவி செய்ய அவனாகவே முன் வந்தான். அதை அவன் நன்கு நிறைவேற்றி விட்டான். நீங்களும் அதை ஒப்புக் கொள்வீர்கள்” என்றான் ஹோப்.

“சந்தேகமின்றி நல்ல முறையில் நிறைவேற்றி விட்டான்” என்றார் ஹோம்ஸ்.

காவல் ஆய்வாளர் இப்போது பேசினார். “கனவான்களே! சில சம்பிரதாயங்கள் இருக்கின்றன. அவற்றை நான் நிறைவேற்ற வேண்டும். வியாழக்கிழமை கைதி குற்றவியல் நடுவர் முன்பாக ஆஜர்படுத்தப்படுவார். அன்றைய தினம் உங்கள் வருகை மிக முக்கியம். அதுவரை கைதியைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு எங்களுடையது.” பின் மணியடித்து இரு காவலர்களை அழைத்தார். அவர்கள் ஜெபர்சன் ஹோப்பை அழைத்துச் சென்றனர். நானும் என் நண்பர் ஷெர்லக் ஹோம்ஸ்&ஸும் பேக்கர் வீதிக்கு வந்து சேர்ந்தோம்.

###

https://telegram.me/aedahamlibrary

முடிவு

வியாழக்கிழமை நடுவர் மன்றத்திற்கு வரவேண்டுமென்று நாங்கள் அழைக்கப்பட்டோம். வியாழக்கிழமையும் வந்தது. ஆனால் நாங்கள் சாட்சியம் அளிக்க வேண்டிய சந்தர்ப்பம் எழவில்லை. குற்றவியல் நடுவருக்குப் பதிலாக அவருடைய உயர் அதிகாரியாக இருக்கும் நீதிபதி முன்னால் ஜெபர்சன் ஹோப் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பிடிபட்ட அன்று இரவே இரத்தக் குழாயில் வெடிப்பு ஏற்பட்டு, காலையில் காவல் நிலையத்தின் தனியறையில் ஹோப் தரையில் விழுந்து கிடந்தான். அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. செய்ய வேண்டிய பணியை சரிவரச் செய்து முடித்துவிட்டோம் என்ற திருப்தி அவனுக்கு.

“கிரக்சனும், லெஸ்ட்ரேட்டும் அவனுடைய மரணத்திற்கு மிகவும் வருந்துவார்கள். அவர்கள் கொடுத்திருந்த மிகப்பெரிய விளம்பரம் என்னவாயிற்று?” என்றார் ஹோம்ஸ்.

“கைதி பிடிபட்டதில் அவர்களுக்கு எந்தப் பங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை” என்றேன் நான்.

“இந்த உலகில் நாம் என்ன செய்கிறோம் என்பது முக்கியமல்ல. நாம் செய்ததை மக்கள் நம்பும்படிச் செய்ய வேண்டும். இந்த வழக்கை விட ஒரு நல்ல வழக்கு எனக்குத் தெரிந்தவரை இல்லை. இதில் பல விஷயங்கள் நாம் புரிந்து கொள்வதற்கு இருக்கின்றன” என்றார் ஹோம்ஸ்.

‘மிக எளிமை’ என்று நான் உற்சாகத்துடன் கூறினேன்.

“எந்த உதவியுமின்றி, சில சாதாரண யூகங்களை வைத்தே குற்றவாளி யார் என்பதை மூன்று தினங்களுக்குள் நான் கண்டுபிடித்துவிட்டேன்” என்றார் ஹோம்ஸ்.

“ஆம் அது உண்மைதான்” என்றேன் நான்.

https://telegram.me/aedahamlibrary

“நான் முன்பே உங்களிடம் சொல்லியிருக்கிறேன். பொதுவானதல்லாமல் இருப்பது ஒரு தடையாக இருப்பதைவிட, ஒரு வழிகாட்டியாக இருக்கும். இது போன்ற ஒரு சிக்கலுக்கு வழி காண நாம் சற்று பின் நோக்கி சிந்திக்க வேண்டும். அது தான் எளிது. ஆனால் இதைப் பலர் பின்பற்றுவதில்லை. அன்றாட வாழ்வில் நாம் முன்நோக்கி சிந்திக்கிறோம். பின்நோக்கிப் பார்ப்பது உதாசீனம் செய்யப்படுகிறது. ஐம்பது பேர் செயற்கையாக யோசிக்கிறார்கள் என்றால் ஒருவர் மட்டுமே பகுப்பாய்வு செய்கிறார்” என்றார் ஹோம்ஸ்.

“நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை” என்றேன் நான்.

“நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று எதிர்பார்த்தேன். இப்போது எல்லாவற்றையும் நான் எளிமைப்படுத்துகிறேன். என்ன நடந்தது என்பதை வரிசைப்படுத்திச் சொல்லும் போது அடுத்தது என்ன என்பதை பலர் சரியாகச் சொல்லி விடுவார்கள். சிலர், விளைவுகளைச் சொல்லிவிட்டால் அது எப்படி நடந்திருக்கும் என்று யூகித்துச் சொல்லி விடுவார்கள். பின்னால் சொன்னதைத்தான் நான் பின்நோக்கி யோசிப்பது, அல்லது பகுப்பாய்வு செய்வது என்று கூறுகிறேன்” என்றார் ஹோம்ஸ்.

“இப்போது விளங்குகிறது” என்றேன் நான்.

“இந்த வழக்கில் முடிவு தெரிந்துவிட்டது. எப்படி ஏற்பட்டது என்று தெரியவில்லை. நான் செய்ததை படிப்படியாக விளக்குகிறேன். நான் கொலை நடந்த வீட்டிற்குச் சென்றேன். நடந்தே சென்றேன். என் மனதில் எந்தவித முன்கூட்டிய எண்ணங்களும் இல்லை. மனப்பதிவு என்பது ஏதும் இல்லை. நான் சாலையைப் பார்த்தேன். அங்கு வண்டி வந்து சென்றதற்கான அடையாளம் இருந்தது. வண்டி இரவு தான் வந்திருக்க வேண்டுமென்று விசாரித்துத் தெரிந்து கொண்டேன். அது ஒரு இரு சக்கர வண்டிதான். ‘கோச்’ வண்டி இல்லை என்பதையும் தெரிந்து கொண்டேன். அது இருசக்கர வண்டி என்பதை

https://telegram.me/aedahamlibrary

அதன் குறுகலான சக்கர அடையாளங்கள் எனக்குப் புரிய வைத்தன. லண்டனில் ஓடும் நான்கு சக்கர வண்டிகள், கனவான்கள் பயணிக்கும் ஒற்றைக் குதிரை பூட்டிய மூடுவண்டிகளை விட அகலம் குறைவாக இருக்கும்."

"இது முதலாவதாக நான் புரிந்து கொண்டது. அடுத்து நான் தோட்டப் பாதையில் நடந்து சென்றேன். தோட்டம் களி மண்ணால் நிரப்பப்பட்டிருந்த ஒரு தோட்டம். அது போன்ற இடத்தில் தடங்கள் சுலபமாகப் பதியும். அது சகதி நிரம்பியது என்று நீங்கள் நினைக்காதீர்கள். நன்கு தேர்ந்த என்னைப் போன்றவனின் கண்களுக்கு அந்த களிமண் பரப்பில் நிறைய அர்த்தங்கள் இருக்கின்றன. காலடித் தடங்களை பின்பற்றிச் செல்வது தான் துப்பறியும் கலையின் மிக முக்கியமான விஷயம். இது ஏனோ உதாசீனம் செய்யப்படுகிறது. நான் காலடித் தடங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பேன். நான் காவலர்கள் ஏற்படுத்திய ஆழமான காலடித் தடங்களைப் பார்த்தேன். அதே சமயத்தில் இரண்டு மனிதர்கள் நடந்து சென்றதற்கான காலடித் தடங்களையும் தோட்டத்தில் பார்த்தேன். அவர்கள் இருவரும் ஏற்படுத்திய காலடித் தடங்கள் காவலர்கள் ஏற்படுத்திய காலடித் தடங்களால் அழிக்கப்பட்டிருந்தன. இது எனக்குக் கிடைத்த இரண்டாவது தடயம். முன்னால் வந்தவர்கள் இருவர் என்பதை அவர்களின் காலடிச் சுவடுகள் எனக்குக் காண்பித்தன. அதில் ஒரு நபர் மிகவும் உயரமானவர் என்பதையும் அவர் காலடிச் சுவட்டை வைத்தே கண்டுபிடித்துவிட்டேன். உயரமான மனிதர்கள் சற்று எட்டக் காலடி வைத்து நடப்பார்கள். மற்றவர் நாகரீக உடையணிந்து, நேர்த்தியான காலணிகள் அணிந்து கொண்டு வந்திருக்கிறார். அவருடைய காலணிகள் ஏற்படுத்திய தடங்களிலிருந்து அதைக் கண்டுபிடித்தேன்."

"வீட்டினுள் நுழைந்தவுடன் என் கடைசி யூகம் சரிதான் என்று நிரூபணம் ஆனது. நேர்த்தியான காலணிகள் அணிந்த மனிதன் என் முன்னே வீழ்ந்து கிடந்தான். உயரமான மனிதன் தான் அவனைக் கொலை செய்திருக்க வேண்டும். கொலை என்று ஒன்று நடந்திருந்தால் இறந்து

https://telegram.me/aedahamlibrary

போன மனிதனின் மீது காயங்கள் ஏதும் தென்படவில்லை. அவன் முகத்தில் தெரிந்த அச்சக் குறியிலிருந்து, தன் சாவை அவன் முன் கூட்டியே தெரிந்து கொண்டு விட்டான் என்று புரிந்தது. இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களும், வேறு இயற்கைக் காரணங்களால் மரணமடைபவர்களும் முகத்தில் எந்த மாற்றத்தையும் காட்ட மாட்டார்கள். இறந்தவனின் உதடுகளை முகர்ந்து பார்த்த போது புளிப்பு வாசனை தெரிந்தது. உடனே, ஏதோ விஷத்தை அருந்தும்படி அவன் கட்டாயப் படுத்தப்பட்டிருக்கிறான் என்பதை அறிந்து கொண்டேன்.

“அந்த மனிதனின் முகத்தில் தெரிந்த வெறுப்பும், அச்சமும் அவன் விஷம் அருந்த கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறான் என்பதைக் காட்டின. ஒவ்வொன்றாக விலக்கிப் பார்க்கும் முறையைக் கையாண்டு நான் அந்த முடிவுக்கு வந்தேன். இது ஒன்றும் கேள்விப்படாத ஒரு கருத்து அல்ல. ஒருவனைக் கட்டாயப்படுத்தி விஷம் அருந்தச் செய்வதென்பது குற்ற வழக்குகளைப் பொறுத்தவரை சகஜம் தான். ஒடிசாவின் டால்ஸ்கி வழக்கு, மான்ட் பெல்லியரில் லெட்டூரியர் என்பவரது வழக்கு போன்றவை ஒரு விஷ மருந்து நிபுணருக்கு உடனடியாக நினைவுக்கு வருபவை.”

“இப்போதுதான் முக்கியமான கேள்வி எழுகிறது. கொலை செய்வதற்குக் காரணம் என்ன? திருட்டு ஒரு காரணமாக இருக்க முடியாது. ஏனென்றால் எந்தப் பொருளும் களவாடப்படவில்லை. அரசியல் காரணமாக இருக்கலாமா அல்லது ஒரு பெண் காரணமாக இருக்கலாமா என்பது அடுத்த கேள்வி. இந்த இரு கேள்விகளும் தான் எனக்கு சவாலாக இருந்தவை. அரசியல் கொலைகளைப் பொறுத்தவரை, கொலைகாரன் தன் வேலையைச் செய்துவிட்டு, மகிழ்ச்சியாக ஓடி விடுவான். இந்தக் கொலை வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ளது. குற்றவாளி அறை முழுவதும் தன் அடையாளங்களை விட்டுச் சென்றுள்ளான். எனவே அவன் முழு நேரமும் கொலை நடந்த இடத்தில்

https://telegram.me/aedahamlibrary

இருந்திருக்கிறான். எனவே இந்தக் கொலைத் தனிப்பட்ட ஒரு காரணத்திற்காகத் தான் செய்யப்பட்டுள்ளது.

அரசியல் காரணம் இருக்க வாய்ப்பில்லை. வஞ்சம் தீர்த்துக் கொள்ள கொலையாளி இந்தக் கொலையைச் செய்துள்ளான். சுவற்றில் எழுதப்பட்டிருந்த வாசகத்தைப் பார்த்தவுடன் நான் அதை அனுமானித்து விட்டேன். மோதிரம் கண்டு பிடிக்கப்பட்டவுடன் எல்லாம் தெளிவாகி விட்டன. உயிருடன் இருக்கும் அல்லது உயிருடன் இல்லாத ஒரு பெண் தான் காரணமாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகத் தெரிந்தது. அதனால் தான் கிளீவ்லன்ட்க்கு அனுப்பப்பட்ட தந்தியில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக அல்லது டிரப்பரைப் பற்றி அறிந்து கொள்ள அந்தத தந்தி அனுப்பப்பட்டதா என்று நான் கிரக்சனிடம் கேட்டேன். அவர் அப்படியெல்லாம் இல்லை என்று சொல்லி விட்டார். அதன் பிறகு கொலை நடந்த அறையை நான் மிகவும் நன்றாகச் சோதனை செய்தேன்.

அந்த சோதனை கொலைகாரனின் உயரம் பற்றியும், அவன் விரல் நகங்கள் பற்றியும், அவன் திருச்சிராப்பள்ளி சுருட்டைப் புகைக்கும் பழக்கமுடையவன் என்பது பற்றியும் எனக்குத் தெரிவித்தன. கொலைகாரனின் மூக்கிலிருந்துதான் தரையில் இருந்த இரத்தம் வழிந்திருக்க வேண்டும் என்று நான் முன்பே முடிவு செய்து விட்டேன். ஏனெனில் கொலை செய்யப்பட்டவனின் உடலில் எந்தக் காயங்களும் இல்லை. கொலையாளியினுடைய இரத்தத்தின் பாதை அவன் கால்களின் பாதையோடு ஒத்துப் போனது. எனவே கொலைகாரன் உடல் முழுவதும் இரத்தம் நிரம்பிய ஒரு மனிதனாக இருக்க வேண்டும். ஏதோ உணர்ச்சி வசப்பட்டு இந்தக் கொலையை செய்திருக்கிறான். அவன் வலுவான, சிவந்த முகமுடையவனாகத் தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். பின்னர் நடந்தவை என் யூகத்தை உறுதிப்படுத்தின.”

https://telegram.me/aedahamlibrary

“கொலை நடந்த வீட்டிலிருந்து சென்றதும், கிரக்சன் அலட்சியப்படுத்தியதை நான் செய்தேன். கிளீவ்லன்ட்டில் இருக்கும் காவல் துறையினருக்குத் தந்தி அனுப்பினேன். அந்தத் தந்தியில் ஈனோக் டிரப்பரின் திருமணம் பற்றி மட்டும் கேட்டிருந்தேன். எனக்கு விடை கிடைத்தது. டிரப்பர் தனக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்குமாறு கேட்டிருக்கிறான். டிரப்பரின் உயிருக்கு ஜெபர்சன் ஹோப் என்பவனால் ஆபத்து நேரலாம் என்றும், ஹோப் இப்போது ஐரோப்பாவில் தான் இருக்கிறான் என்றும் பதில் தந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனக்கு மர்மத்திற்கான பதில் கிடைத்துவிட்டது. அடுத்து நான் செய்ய வேண்டியது கொலைகாரனைப் பிடிப்பது தான்.”

“நான் முன்பே முடிவு செய்து விட்டேன். டிரப்பருடன், கொலை நடந்த வீட்டிற்குள் வந்தவன் குதிரை வண்டியை ஓட்டி வந்தவன்.

வண்டிக்காரன் இல்லாவிட்டால் குதிரை தன் விருப்பப்படி அங்குமிங்கும் சென்றிருக்கும். மேலும் மூளையுள்ள எந்த மனிதனும் மூன்றாவது ஆள் ஒருவனை அருகில் வைத்துக் கொண்டு ஒரு கொலையை செய்ய மாட்டான். அவன் பின்னால் தன்னைக் காட்டிக் கொடுத்துவிட மாட்டான் என்பது என்ன நிச்சயம்! கடைசியாக, ஒரு மனிதன் லண்டன் தெருக்களில் மற்றொரு மனிதனைப் பின் தொடர்ந்து செல்வதாக இருந்தால் வண்டிக்காரனைத் தானே தேடியாக வேண்டும். இதையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது ஜெபர்சன் ஹோப் நகரத்தில் குதிரைவண்டி ஓட்டுபவர்களுக்கு மத்தியில் தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். அவன் தான் தேர்ந்தெடுத்த, வண்டியோட்டும் தொழிலைத் தான் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டும்.”

அவன் வேறு ஒரு பெயரில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. லண்டனில் யார் அவனுக்குத் தெரிந்தவர்கள்? அவன் எதற்காகத் தன் பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும்? எனவே நான் என் தெருவில் உள்ள அரேபியத் துப்பறியும் நிபுணர்களை வைத்து குதிரை வண்டியை

https://telegram.me/aedahamlibrary

வாடகைக்குக் கொடுக்கும் முதலாளிகளைத் தேடச் சொன்னேன். அவர்கள் ஜெபர்சன் ஹோப்பைக் கண்டுபிடித்து விட்டார்கள்! என்னுடைய ஆட்கள் எப்படி செயல் பட்டார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஸ்டேகர்சன் கத்திக் குத்தால் கொலை செய்யப்பட்டது எதிர்பாராத ஒன்று. அதைத் தடுத்திருக்கவும் முடியாது. கோர்வையாக, இப்போது ஒவ்வொன்றாக உங்களுக்குப் புரிகிறதா?" என்று கேட்டார் ஹோம்ஸ்.

"அற்புதம்" என்று நான் கூச்சலிட்டேன். உங்கள் திறமைக்கு மக்கள் அங்கீகாரம் அளிக்க வேண்டும். இந்த வழக்கைப் பற்றி நீங்கள் பத்திரிக்கையில் எழுத வேண்டும். நீங்கள் எழுதாவிட்டால், நான் எழுதுவேன்" என்றேன் நான்.

"நீங்கள் உங்கள் விருப்பம் போல் செய்யலாம், டாக்டர்." இதைப் பாருங்கள் என்று சொல்லி ஒரு செய்தித்தாளை என்னிடம் நீட்டினார், ஹோம்ஸ்.

அவர் என்னிடம் நீட்டியது Echo (எதிரொலி) என்ற பத்திரிக்கை. அதில் ஜெபர்சன் ஹோப் பற்றிய செய்தி வந்திருந்தது.

"மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒரு கொலை வழக்கில் ஜெபர்சன் ஹோப் என்ற பெயருடைய, சந்தேகத்திற்குரிய ஒரு கொலையாளி இறந்து விட்டதால், பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். அவன்தான் திரு. ஈனோக் டிரப்பர் என்பவரையும், திரு. ஜோசப் ஸ்டேகர்சன் என்பவரையும் கொலை செய்துவிட்டதாக நம்பப்படுகிறது. இந்தக் கொலை பற்றிய உண்மை இப்போது வெளிவர வாய்ப்பில்லை. கொலைக்கான காரணம் காதல் சச்சரவு என்று கருதப்படுகிறது-. இந்தக் கொலையில் காதலும், மோர்மோனிசமும் நெருங்கிய தொடர்புடையவை. கொலையுண்ட இருவரும் தங்கள் இளமைப் பருவத்தில் "பிற்காலப் புனிதர்கள்" எனப்படும் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்துள்ளனர். கொலையாளியாகக் கருதப்படும் ஜெஃபர்சன் ஹோப், கொலை செய்யப்பட்ட திரு. ஈனோக் டிரப்பர், திரு. ஜோசப் ஸ்டேகர்சன் ஆகிய மூவரும் அமெரிக்காவில் இருக்கும் சால்ட் லேக் நகரைச்

https://telegram.me/aedahamlibrary

சேர்ந்தவர்கள். வழக்கை விசாரித்த 'ஸ்காட்லன்ட் யார்ட்' நிறுவனம் போற்றுதலுக்குரியது. அனைத்து வெளிநாட்டினரும் தங்கள் சச்சரவுகளைத் தங்கள் நாட்டில் தான் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு இங்கிலாந்து மண்ணைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. ஸ்காட்லன்ட் யார்டின்,

திரு. லெஸ்ட்ரேட், திரு. கிரக்சன் ஆகியோரின் திறமையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்கள் தான் இந்த வழக்கை விசாரித்து உண்மையைக் கண்டறிந்து, அவை வெளிவரக் காரணமாக இருந்தவர்கள். சந்தேகத்திற்குரிய மனிதர் திரு. ஜெபர்சன் ஹோப், திரு. ஷெர்லக் ஹோம்ஸ் என்பவரின் வீட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். திரு. ஷெர்லக் ஹோம்ஸ் தொழில் முறைசாரா ஒரு துப்பறியும் நிபுணர். திரு. லெஸ்ட்ரேட், திரு. கிரக்சன் ஆகியோருக்கு அவர்கள் சேவையைப் பாராட்டி 'பாராட்டுப் பத்திரங்கள்' வழங்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்."

ஹோம்ஸ் கூறினார்: "அது தான் சிவப்பு நிறத் தேடலின் முடிவு. அவர்களுக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்குவது!"

"வருத்தப்பட வேண்டாம் திரு. ஹோம்ஸ். அனைத்து விவரங்களும் எனக்குத் தெரியும். என்னுடைய சஞ்சிகையில் நான் அவற்றை வெளியிடுகிறேன். உரோமன் பழமொழி ஒன்றை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்" என்றேன் நான்.

"மக்கள் என்னை மறுத்து இகழலாம். சீற்றம் கொள்கின்றனர். ஆனால் நான் என்னுடைய சொந்த வீட்டில் புகழப்படுகிறேன். அதே சமயம் நினைவுகளை என் நெஞ்சில் சுமக்கிறேன்."

###